# தாய்மடி சேர்ந்த மலர்



ராதா கிருஷ்

# தாய்மடி சேர்ந்த மலர்

ராதா கிருஷ்

**அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email: arivunilayampathippagam@yahoo.com
செல்: 9003145746

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| ◆ நூல் தலைப்பு | **தாய்மடி சேர்ந்த மலர்** |
| ◆ ஆசிரியர் | ராதா கிருஷ் |
| ◆ மொழி | தமிழ் |
| ◆ முதற் பதிப்பு | ஏப்ரல், 2016 |
| ◆ உரிமை | ஆசிரியருக்கு |
| ◆ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ◆ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ◆ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ◆ மொத்தப் பக்கங்கள் | **364** |
| ◆ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 200.00**

வெளியிடுவோர் **அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# தாய்மடி சேர்ந்த மலர்

1

அமெரிக்க நாட்டின் பாஸ்டன் துறை முக நகரத்தில், சனிக்கிழமை அதிகாலைப் பொழுது ரம்மியமாக விடிந்து கொண் டிருந்தது, வீட்டின் பின்புறத்தில் உள்ள மரங்களில் தங்கியிருந்த பறவைகளின் சத்தத்தினாலோ அல்லது அந்தச் சாலையில் சென்ற காரின் இரைச்ச லாலோ தூக்கம் கலைந்து, கண் விழித்துத் தன்னைச் சுற்றும் முற்றும் பார்த்த முரளி, வரவேற்பறையில் படுத்து உறங்கியதை உணர்ந்து, எழுந்து தன்னுடைய அறைக்குச் சென்றான்.

அங்கே தன்னுடைய படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தவளைப் பார்த்து விட்டு, மெலிதாகச் சிரித்துக்

கொண்டே கட்டிலின் அருகில் இருந்த பெட்சைடு டேபிள் மேல் இருந்த இன்டர்காம் எடுத்து நம்பரை அழுத்தினான்.

"அக்கா, கொஞ்சம் என் ரூமுக்கு வாங்களேன்!"

சிறிது நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு வந்த பவானி, "குட் மார்னிங் முரளி, ஊர்ல இருந்து எப்போ வந்தே?"

"உஷ்! இங்கே பாருங்க!" செய்கையால் காண்பித்தான்.

"இன்னிக்கும் இங்கே வந்து படுத்துட்டாளா...? இருப்பா, அவளை எழுப்புறேன்!" என்ற பவானியிடம்,

"வேண்டாம் அக்கா... அவ தூங்கட்டும்."

"இல்லப்பா, அவளுக்கு இன்னிக்குக் கிளாஸ் கிடையாது.. சாதகம் பண்ணணும் என்று எழுப்பி விடச் சொன்னா!" என்று சொல்லிக் கொண்டே பவானி,

"இந்து... எழுந்திரும்மா, நேரம் ஆகுது பார்... சாதகம் பண்ணணும்னு சொன்னியே... எழுந்திரு!" என்று குரல் கொடுத்துக் கொண்டே அவளை லேசாக உலுக்கி எழுப்பி விட முயன்றார்.

தூக்கம் முழுவதும் விடுபடாத நிலையில் விழித்த பாதிக் கண் வழியே தெரிந்த பவானியைப் பார்த்து, "குட் மார்னிங் அக்கா!" என்றாள்.

"என்னடா, நேற்று நைட் பயந்துட்டியா...? இங்கே வந்து படுத்துட்டே...?" எங்கே காலையிலேயே அவளின்

மனநிலையைத் தன் கேள்வி பாதித்து விடுமோ என்று பயந்து மென்மையாகவே வினவியவளுக்குச் சட்டென்று பதில் வந்து விழுந்தது.

"இல்லைக்கா... முரளி ஊரில் இருந்து வந்துட்டானா என்று பார்க்க அவன் ரூமுக்கு வந்தேன். அப்படியே படுத்துட்டேன் போல, டயர்டா இருந்ததால். பயம் வந்தால், நேரா உங்களைத் தேடித்தானே வருவேன் என்று தெரியாதாக்கா...?"

"இந்து, உனக்கு வயசு இருபத்தி மூணு ஆயிடுச்சு... இன்னும் சரியான பயந்தாங்கொள்ளியாதான் இருக்கே... வெளியிலேதான் உன்னோட வாய் எல்லாம்... போ, ரெஃப்ரஷ் ஆகி சாதகத்தை ஆரம்பி. பேசிட்டு இருக்காதே!" என்று சொல்லிக் கொண்டே அவளின் தூக்கத்தைத் துரத்த விடாப்பிடியாக முயன்ற பவானிக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்து, முழுதாகக் கண்களைத் திறந்தவளுக்கு, அப்போதுதான் முரளியின் உருவம் புலப்பட்டது.

"என்ன சார்... நைட் வரேன் என்று சொல்லிவிட்டுக் காலையில் வந்து இருக்கீங்க...?" ராகத்துடன் கிளம்பிய கொட்டாவியை நாசுக்காக விரல்களின் பின்னே அடக்கியவளிடம்,

"வர கொஞ்சம் லேட் ஆச்சும்மா...! வந்து பார்த்தா நீ இங்கே தூங்கிட்டு இருந்தே... அதான் வெளியே படுத்துட்டேன்."

"அச்சச்சோ... எழுப்பி இருக்கலாமே முரளி...?"

"உனக்கே தெரியும், தூக்கத்தில் நான் யாரையும் தொந்தரவு படுத்த மாட்டேன் என்று. சரி, இப்போ ரெடியாகு. சாதகம் பண்ணப் போகலாம்... சீக்கிரம்!" என்று அவளைக் கிளப்பி விட்டவனிடம் பவானி,

"அவ எல்லாத்தையும் மறந்தாலும், சில சமயங்களில் மட்டும் அவளையே அறியாமல் ராத்திரி மட்டும் பயந்துக்கிறா... என்ன செய்ய, ஒண்ணும் புரிய மாட்டேங்குது."

"விடுங்க அக்கா... இன்னும் எட்டு மாசம்தானே...! நேத்திக்குக் கிளம்பும் போது கூட அப்பா சொன்னாங்க... வர்ற வருஷம் கல்யாணத்தை முடிச்சிடலாம்... அக்கா, வாய் தவறி கூட அவ கிட்டே நான் ஊருக்குப் (இந்தியா) போனதைச் சொல்லிடாதீங்க..." என்று படபடத்த முரளி யிடம் இதமாக,

"எனக்குத் தெரியாதா முரளி... நான் அவ கிட்டே சொல்ல மாட்டேன். போய் பில்டிங் பார்த்தியா? எப்படி வந்து இருக்கு...? அய்யா அங்கேயும் இங்கேயும் அலைந்து உடம்பைக் கெடுத்துக்கப் போறாங்க. அப்புறம், இன்னும் அவனுங்க இவளைத் தேடத்தான் செய்யறாங் களா...? நிலைமை எப்படி இருக்கு...?"

"அப்பா எப்பவாவதுதான் போறாங்க... மற்றபடி நம்ம அமுதா அக்காவும், ப்ரீதா அக்காவும்தான் அங்கே போய் அடிக்கடி பார்க்கிறாங்க. நானும் போய்ப் பார்த்

தேன். சூப்பரா வந்துக்கிட்டு இருக்கு... ஆனா, அதை நீங்க நினைக்கிறபடி நடத்தணும் என்றால் கொஞ்சம் கஷ்டம்தான் அக்கா. கட்டடம் கட்ட வாங்கின கடன் அடைக்கவே இன்னும் இரண்டு வருஷம் ஆகும். அதை மெயின்டெய்ன் பண்ண நமக்கு இன்னும் பத்து வருஷத்துக்கு எந்த விதமான வருமானமும் இருக்காது என்பதினால் எப்படியும் ஐம்பது லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் தேவைப்படும். அதுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்கன்னு தெரியலை. ஆமாம் அக்கா, இன்னும் அவனுங்க இவளைத் தேடத்தான் செய்யறாங்க... இவ பொன் முட்டையிடுற வாத்து இல்ல, சும்மா இருப்பானுங்களா அவனுங்க?"

"முரளி, முதல்ல ஆசை மட்டும்தான் இருந்தது. நான் இங்கே வந்து அதைச் செயல்படுத்த ஒரு கட்டடம் வரைக்கும் கொண்டு வந்தாச்சு. கடவுள் இருக்காரப்பா, ஏதாவது செய்வார். பார்க்கலாம். குறிப்பிட்ட காலம் வரைக்கும் இவ அவனுங்க கண்ல படாம இருந்தா போதும்... அதுக்குப் பிறகு அவனுங்களால் ஒண்ணும் செய்ய முடியாது. எல்லா வேதனைக்கும் ஒரு முடிவு வந்துடும். விடு, இந்து வர்ற சத்தம் கேட்குது."

உள்ளே வந்த இந்து இருவரையும் பார்த்து, "அக்கா, நான் சாதகம் பண்ணப் போறேன்... அழகி (அலெக்ஸ் சாண்டிரியா என்பது இவளது முழுப்பெயர். அழகி என்று இந்துவால் அழைக்கப்படுபவள். இந்து அமெரிக்கா வந்தது முதல் இருவரின் நட்பும் தொடங்கியது. வேறு

வேறு படிப்புகளில் இருந்தாலும் இருவரும் இன்றளவும் தோழிகள்தான்) போன் பண்ணுவா. கரெக்டா ஒன்பது மணிக்கு இங்கே வர்ற மாதிரி கிளம்பச் சொல்லுங்க. நானும் அவளும் சேர்ந்து போறோம். அவளே என்னை டிராப் பண்ணிடுவா!'' என்று சொல்லிக்கொண்டே போனவளின் பேச்சில் முரளி இடையிட்டு, "இரு இரு. அழகியோட எங்கே போகப் போறே...?"

"அதுவா...? இன்னிக்கு கனிட்டிகட் கன்சர்ன் ஹால்ல கர்நாடக சங்கீதத்தில் சிறந்தவர் யார் போட்டிக்கு ஜட்ஜாகப் போகணுமில்லை, அதுக்குத்தான் போகப் போறேன்!" சொன்ன இந்துவிடம்,

"இந்து, கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை? நீ ஜட்ஜா அங்கே போகப் போறே... அதுக்கு எதுக்கு அழகி உன் கூட வால் பிடிச்சிட்டு. எனக்குக் கூட இன்னிக்குப் பத்து மணியோட ராமகிருஷ்ண மடத்தில் யோகா கிளாஸ் முடிஞ்சிடும். என்னையும் ஒரு ஜட்ஜா இதே ப்ரோக்ராமுக்குக் கூப்பிட்டு இருக்காங்க.

"பன்னிரெண்டு முதல் இரண்டு மணி வரை. காலையில் அக்கா உன்னை அங்கே டிராப் பண்ணிட்டு கடைக்குப் போவாங்க... நீ என் கூட ரிட்டன் ஆகலாம். ஓ.கே.வா...? அக்கா, அந்த அலெக்ஸ்சாண்டிரியா போன் பண்ணினா இந்த மெசேஜ் கன்வே பண்ணிடுங்க... சரி, டைம் ஆகுது. வா, சாதகத்தை ஆரம்பிக்கலாம்!" என்று அவன் முன் செல்ல, அவனுக்குப் பின்னால் அவனை ஒழுங்கு காட்டிக் கொண்டே தொடர்ந்தாள்.

இவள் பாட ஆரம்பிக்க, அவன் மிருதங்கத்தில் அதை இசைக்க ஆரம்பித்தான். சாம்ராஜ உடையார் பகதூர் எழுதிய, 'ஸ்ரீ மகா கணபதிம் பஜேம்' என்ற அடாணா ராகத்தில் அமைந்த பாடலை இசைக்க ஆரம்பித்தனர்.

இந்து, பிரியா, தர்ஷினி, தர்பூஸ் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந்திரா பிரியதர்ஷினி, ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் சங்கீதத் துறையில் பிஎச்.டி. மாணவி. அபார சங்கீத ஞானம் உள்ளவள் என்பதினால் அமெரிக்காவில் நடக்கும் சங்கீதப் போட்டிகளில் ஒரு நடுவராக இருப்பாள். அமெரிக்க வாழ் இந்தியக் குழந்தைகளுக்கு, ராமகிருஷ்ண மடம், லக்ஷ்மி கோவில், விஜய துர்கா கோவில், ராதா பக்தி இயக்கம், சின்மயா மிஷன், போன்ற இடங்களில் பாட்டு வகுப்பு களும், பால விஹார் எனப்படும் பண்பாடு சார்ந்த கலை களும் கற்றுக் கொடுக்கிறாள்.

அவளோடு இணைந்து பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்துக் கொண்டு இருப்பவன், இந்துவுக்குக் கோபம் அல்லது எரிச்சல் ஏற்பட்டால் சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங் என்று அழைக்கப்படும் முரளி கிருஷ்ணன். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத் துறையில் ஆராய்ச்சிப் பட்டம் வாங்கியவன், பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் பத்திரிகை இயல் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிபவன்.

முரளியின் முப்பாட்டன் காலத்தில் தென் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது, இந்தியா

முழுவதும் முதன்மைப் பத்திரிகை என்று மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கும் 'ஹார்ட்பீட் ஆஃப் இந்தியா' பத்திரிகை மற்றும் நியூஸ் டி.வி.யின் ஏக போக வாரிசான ஹரிஹரனின் புதல்வன். தந்தையின் தொழிலுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய அடிக்கடி இந்தியா நோக்கிப் பறப்பவன், அதுவும் இந்துவுக்குத் தெரியாமல். அதுமட்டுமல்ல, இந்து செல்லும் அதே இடங்களில் யோகா, தியான மற்றும் மிருதங்க வகுப்புகளும் எடுப்பவன்.

பவானி, முரளி இந்தியாவை விட்டு அமெரிக்காவிற்குப் படிக்க வந்தபொழுது கூடவே வந்தவர். இந்துவின் நிழல் போல இருந்து கண் போலப் பாதுகாத்துத் தன் அன்பால் அவளை அரவணைத்து, அவளுக்கு முக்கிய மானவர்கள் பட்டியலில் ஒருவராகவும் இருப்பவர். ஹாவர்ட் ஸ்குயார்ல் ஸாஃப்ரன் என்ற பெயரில் ஒரு இந்திய உணவகத்தையும் நடத்தி வருகிறார்.

"தர்ஷினி, இந்தப் பென் டிரைவ்ல இருந்த பாட்டுகளைக் கேட்டு அதுக்கு என்ன கிரிட்டிக் கொடுக்கணுமோ எழுதி அப்பாவுக்கு மெயில் பண்ணிடு... ஈவ்னிங் மூணுலிருந்து நாலுக்குள் (அதாவது இந்திய நேரம் நடுச்சாமம் பன்னிரண்டரை முதல் ஒன்றரை வரை) இந்த கிரிட்டிக் அங்கே இருக்கணும். அப்போதான் பிரின்ட்டுக்கு அனுப்ப முடியும். கையிலே உன்னோட டேப் இல்லைன்னா ஐபாட் எடுத்துக்கோ... டிராவல் டைம்ல முடித்துவிடு. அக்கா, மணி ஏழரை ஆகுது... நான்

ராமகிருஷ்ணா மடத்துக்குப் போறேன்..." என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் முரளி.

மதியம் கன்சர்ன் ஹாலில் ஒரு சிறுவன் பாடிக் கொண்டிருந்தான். அங்கு ஜட்ஜ் ஆக அமர்ந்து இருந்த முரளி, இந்து, இன்னும் மூவர் தங்களுக்குள் ஒரு குழப்ப மான பார்வையை வீசிக் கொண்டனர். உடனே இந்து, "கொஞ்சம் பாட்டை நிறுத்துப்பா!" என்றாள்.

ஐவரும் ஒன்று கூடி விவாதித்தனர். அதில் ஒருவர் அந்தப் பக்கம் திரும்பி நிகழ்ச்சித் தயாரிப்பாளரை அழைத்து மீண்டும் அந்தப் பாடலைப் போடச் சொன்னார். இறுதியில் அவர் இந்துவைப் பார்த்து, "நீங்க சொன்னது சரிதான்," என்றார்.

இந்து, அந்தப் பையனிடம், "மாஸ்டர் விஹான்... நீங்கள் பாடிய பாடலைப் பத்திச் சொல்லுங்க!" என்றாள்.

"நான் பாடிய பாடல் 'ஸ்ரீ மகாலஷ்மி வரணும்' என்ற முத்துசுவாமி தீட்சிதர் கிருதி (பாட்டு), ஆதி தாளம், ஆபோகி ராகம்!" தான் பாடிய பாடலைப் பற்றி விவரித்தான்.

"நீங்க அதுலதான் பாடினீங்களா...?" விஹானின் பதிலுக்குப் பதில் கேள்வி எழுப்பினாள் இந்து.

"ஆமாம், அப்படித்தான் நினைக்கிறேன்!" அசட்டை யாகப் பதில் சொன்னான் அந்தச் சிறுவன்.

"ஓ... அஃப்படியா? ஆபோகியோட ஆரோகணம், அவரோகணம் சொல்லுங்க." அந்தச் சிறுவன் செய்த

தவறை உணர வேண்டும் என்பதற்காக மீண்டும் கேள்வி களைத் தொடுத்தாள் இந்து.

அந்தப் பையன் பாடிக் காட்ட, இந்து, "இது சரியாய்த் தான் பாடினீங்க... ஆனா இப்போ சில நிமிஷத்துக்கு முன்னாடி பாடிய பாட்டுல சரணத்துல இரண்டாவது லைன்ல இருந்து நான் நிறுத்தச் சொன்னது வரைக்கும் பாடியது ஸ்ரீ ரஞ்சனில... ஏன் இந்தத் தடுமாற்றம்? ஸ்ரீ ரஞ்சனிக்கும் ஆபோகிக்கும் என்ன ஒற்றுமை, என்ன வேற்றுமை தெரியுமா...?" அந்தச் சிறுவன் செய்த தவறை இந்து விவரித்தாள்.

அவன் தெரியாது என்று சொல்ல, "இரண்டுமே 22வது மேளகர்த்தவாகிய கரகரபிரியாவின் ஜன்ய ராகங்கள், இரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்னன்னா ஆபோகில நிஷதம் வராது, ஸ்ரீ ரஞ்சனியில கைசிக நிஷதம் வரும். நீங்க தவறாகப் பாடியதால் உங்களால் இனி இந்தப் போட்டியில் தொடர முடியாது," என்று சொன்னதை மற்றவர்களும் ஆதரிக்க, அந்தச் சிறுவன் அழுது கொண்டே சென்றான். உடனே பார்வையாளர் பக்கத்தில் இருந்து ஒரு ஆவேசமான ஆண் குரல் ஒலித்தது.

"என்ன சொல்றீங்க, இவனை விடக் கேவலமாகப் பாடின குழந்தைகளைக் கூட செலக்ட் பண்ணினாங்க... ஆனா என் பிள்ளை (ஒரு பிரபலமான சங்கீத பாடகரின் பெயரைச் சொல்லி) அவரின் நீஸ், அது மட்டுமில்லாமல் அவன் சங்கீதம் பயின்றதும்... மறுபடி ஒரு பிரபலத்தின்

பெயர்... அதுமட்டுமில்லை, போன வருடம் முடிந்த ஜூனியர் பாட்டுத்திறன் போட்டியில் இறுதியில் வந்த ஐந்து பேரில் இவனும் ஒருவன். அதில் வைக்கப்பட்ட கர்நாடக சங்கீதப் பாடலில் சிறந்த ஆளுமை பெற்றவன் என்ற பட்டத்தை வாங்கி இருக்கிறான். எப்படி நீங்கள் சிறு தவறு புரிந்தான் என்பதற்காக அவனை வெளியேற்றலாம்?" என்று சத்தம் போட,

இந்து, "இவன் பண்ணிய தவறை நாங்கள் பொறுத்துக் கொண்டு இவனை அனுமதித்தா, அந்தச் சங்கீத மும்மூர்த்திகள் கூட எங்களை மன்னிக்க மாட்டார்கள்."

"இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்க்கவும் அவன் கொஞ்சம் தடுமாறிட்டான். அவ்வளவுதானே... நீங்களா இருந்தா வாயைக் கூடத் திறந்து இருக்க மாட்டீங்க... என் பையன் பாடின பாட்டுல குத்தம் சொல்ல உங்களுக்கு என்ன தகுதி இருக்கு?" அந்தப் பையனின் தந்தை மிக இளவயதுடன் நடுவர் இருக்கையில் இருக்கும் இந்துவைப் பார்த்துக் கேட்க,

"என்ன தகுதி இருக்கா...? என்ன பேசுறீங்க...? மிஸ்டர், அவங்க இந்த சங்கீதத்துல பிஎச்.டி. பண்ற வங்க... அது மட்டுமில்லை, இங்கே உள்ள போட்டி களில் அந்தக் காலத்துலேயே கலந்துக்கிட்டு பெயர் வாங்கினவங்க... ஒரு போட்டியில், தான் செய்த சிறு தவறை அந்த நடுவர் கண்டு கொள்ளாத போது லேயர்

நோட்ல வரும்போது டெம்போ போயிடுச்சுன்னு அதுக் கான மார்க்கைக் குறைக்கச் சொன்னவங்க...

"நீங்க சொன்னீங்க இல்ல இரண்டு பிரபலமான வங்க... அவங்க இங்கே வந்தா இவங்களைப் பார்த்துப் பேசாமல் போகமாட்டாங்க, அதே போல தன்னோட கச்சேரி எப்படி இருந்தது. அதில் உள்ள குறைகள் என்ன என்று கேட்டுவிட்டுப் போவாங்க. உங்க பையன் பண் ணின தப்பை மறைக்க நீங்க என்ன என்னவோ பேசு றீங்க... இது சரியில்லை!" என்றார் அந்த மூன்று பெரிய வரில் ஒருவர்.

"இந்தம்மாவைப் பற்றி இவ்வளவு பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறீங்க இல்ல... இந்த அம்மாவுக்கு உண்மையான திறமை இருந்தால், இப்போ தமிழ்நாட்டில் நடக்க இருக்கும் 'ஜோடியாகப் பாடுங்கள்' நிகழ்ச்சியில் கலந்து வெற்றிபெறச் சொல்லுங்க, நான் ஒத்துக்கிறேன் இந்தம்மா ஜீனியஸ்னு... 'ஆலையில்லா ஊர்ல இலுப்பைப் பூ சர்க்கரை' என்கிற மாதிரி, சும்மா இந்த ஊர்ல ஒழுங்கா பாடத் தெரியாதவங்க என்ற காரணத்தினாலும் அந்த சாஸ்திரிய சங்கீதத்துல பிஹெச்.டி. பண்றாங்க என்ற ஒரு காரணத்துக்காகவும் நான் இவங்க ஜட்ஜ்மென்ட்டை ஏத்துக்க முடியாது."

இந்துவின் முகத்தில் தோன்றிய குழப்ப ரேகையைப் பார்த்த முரளி, "தர்ஷினி, வேண்டாம். இவன் சொல்றதைப் பெருசு பண்ணாதே. நீ இப்போ இந்தியாவுக்குப் போக முடியாது. அதனால் எந்த யோசனையும் வேண்டாம்.

பேசாமல் நாம ஹாலை விட்டு வெளியேறிடலாம்!" என்று முணுமுணுக்க...

பார்வையாளர் பக்கத்தில் இருந்த அனைவரின் கண்களும் தன்னைக் கூர்ந்து கவனிப்பதை உணர்ந் தவள், முரளியிடம், "நான் இந்தியாவுக்குப் போகணும்னு துடிச்சிக்கிட்டு இருக்கேன்... இந்தப் பதினொரு வருஷமா முடியலை... இப்போ கிடைச்சிருக்க சான்ஸை விட்டுக் கொடுக்க மாட்டேன்!" என்று முணுமுணுத்து விட்டு,

இந்து எழுந்து நின்று அனைவரையும் பார்த்து, "இவர் சொன்ன போட்டியில் பங்கேற்று வெற்றியோடு தான் திரும்பி மீண்டும் இந்த அரங்கத்திற்கு வருவேன்!" என்று சொல்ல, அரங்கம் அதிரக் கைத்தட்டுகள் எழுந்தன.

## 2

வேகமாக வீட்டின் வாசலில் காரை நிறுத்திய முரளி, கைப்பிடியாய் இந்துவை உள்ளே அழைத்துச் சென்றான்.

"இப்போ வரவர என் பேச்சைக் கேட் கிறது இல்லைன்னு முடிவு செய்திருக்கியா? இன்னிக்கு நைட் ஒன்பது மணிக்கு அப்பாகிட்ட பேசறோம். நான் அக்காகிட்டே நேர்லேயும் அப்பாகிட்டே போன்லை யும் சொல்லிடறேன்... நீ இப்போ ரெஸ்ட் எடு... நான் கடைக்குப் போயிட்டு, அப்படியே சின்மயா மிஷன் போறேன்..." என்றான்.

"டேட்..." என்று இந்து ஆரம்பிக்க,

அவளை முறைத்துக் கொண்டே முரளி, "எதுவும் இப்போ பேசாதே இந்து... கேட்கிற மூட்ல நான் இல்லை. ஏதாவது மனசு காயப்படுத்துற மாதிரி சொல்லிடுவேனோ என்று தெரியலை... ஆனால், இதை மட்டும் கேட்காமல் இருக்க முடியலை. தனியா முடிவெடுக்கும் அளவுக்கு பெரிய ஆளாயாச்சு இல்ல! அப்போ நாங்க எல்லாம் எதுக்கு உன் கூட இருக்கோம்?'' என்று கோபத்தை அடக்கினாலும், வார்த்தைகள் விழுந்துகொண்டே யிருந்தன.

"சாரி... சாரி... இங்கே நைட் ஒன்பது மணிக்கு என்றால் ஊருல (இந்தியா) நாளை காலை ஆறரை மணி. மாமா தூங்கப் போறதே காலையில மூன்றரை மணிக்குத் தான். அவர் எழுந்தார்னா திரும்பிப் போய்த் தூங்க மாட்டாரு... அதனால மாமாவோட தூக்கம் பாதிக்கும். அவரைக் கூப்பிடாத முரளி... நாம நமக் குள்ளே பேசித் தீர்த்துக்கலாம்."

"இது அங்கே வார்த்தையை விடும்போது தெரிந்து இருக்கணும்...? நான் எவ்வளவு சொன்னேன், கேட் டியா...? எனக்குத் தெரியாது, நீயே அவர்கிட்டே பேசிக்க. இப்போ நான் கிளம்பறேன்."

இரவு ஒன்பது மணிக்கு ஸ்கைப்பில் வந்தார் ஹரிஹரன்.

நடந்தவைகள் சொல்லப்பட, அதற்கு அவர், "இந்துவை அவ ரூமுக்கு அனுப்பு... ஸ்பீக்கர் மோடுல இருக்கிறதை ஹெட்செட்டுக்கு மாற்று!" என்று சொல்ல,

முரளி, இந்துவைப் பார்த்து, "நாளைக்கு உனக்கு சிகாகோ யுனிவர்சிட்டி செமினார் இருக்குல்ல... அதுக்கு சீக்கிரம் கிளம்பணும், போய்த் தூங்கு. உன்னை வழக்கம் போல அங்கே சுப்ரஜா வந்து பிக் அப் செய்வா."

ஹரிஹரன் பேச்சுக்கு எப்பவுமே எதிர்த்துப் பேசாத இந்துவிற்கு, அங்கே இருந்து கிளம்புவதைத் தவிர வேறு வழியில்லாமல் போக, விருப்பமில்லாமலே தன் அறைக்குக் கிளம்பினாள்.

முரளி ஹெட்செட்டின் ஒரு காதின் முனையை அவனும் மற்றொரு முனையை பவானியும் எடுத்துக் கொண்டனர். பின்பு அவரின் பேச்சைக் கவனிக்கத் தொடங்கினர்.

"எத்தனை நாள்தான் இப்படியே இருக்கிறது முரளி... இன்னும் எட்டு மாதத்துக்கு அப்புறமா வருவதைச் சமாளிச்சுதானே ஆகணும்...? அதை இப்போதே ஆரம்பிக்கலாம். நான் இந்தப் போட்டிக்கான விவரங்களைக் கேட்டு எல்லாம் செய்து வைக்கிறேன். என்ன செய்யலாம், எப்படிப் பண்ணலாம் என்ற விஷயத்தையும் அப்புறமா டீடெய்லா பேசலாம்... இப்போ இந்தப் போட்டிக்கு உங்க சைடுல என்ன முயற்சி எடுக்கணுமோ அதை எடுங்க."

ஹரிஹரன் பேசி முடித்து ஆப்லைன் சென்றவுடன், பவானி காதில் இருந்த ஹெட்செட்டைக் கழற்றியவாறு, "என்ன இது, அய்யா இப்படிச் சொல்றாரு. இதுக்காகவா

இவ்வளவு பாடுபட்டோம். அன்னிக்கு அவனுங்க கையிலே இவ மாட்டக் கூடாது என்றுதானே இவ அம்மாவை, இவளைக் கொல்லப் பார்த்தாங்க... அப்படி இருக்கும் போது, இப்போ நாமே இவளை அவனுங்க கையிலே கொண்டுபோய்க் கொடுக்கணுமா...?" கவலையுடன் முரளியைப் பார்த்துக் கேட்க,

"இல்லை அக்கா... அவ ஒளிஞ்சு வாழ்ந்தது போதும் என்று நினைக்கிறார் அப்பா. அவனுங்க முன்னாடி இவளை எந்த விதமான அடையாளம் எதுவுமே தெரியாமல் கொண்டு போய் உலாவ விடப் போறோம். அவனுங்களால் ஈசியா இவளைக் கண்டு பிடிக்க முடியாது. வெறும் மண்ணா நம்மகிட்ட வந்தவள், இப்போ சிற்பமா நிற்கிறா. அதுதவிர அவனுங்ககிட்டே இவ மாட்டாம இருக்க, அப்பா ஏதாவது ஐடியா பண்ணாம அங்கே வரச் சொல்ல மாட்டாரு.

"போனால்தான் தெரியும், என்ன மாதிரியான வியூகம் அமைச்சு இருக்கார் என்று. ஆனால், இப்போ மீடியா ரொம்ப நல்லா வளர்ந்து இருக்கு. அதுவும் இவ அந்த மீடியா முன்னாடி தானே போகப் போறா. அதனால பாதுகாப்பு அதிகமாக இருக்கும், கவலைப் பட வேண்டாம். அது தவிர, இவளுக்கு நம்மோட பாதுகாப்பும் உண்டு, சமாளிக்கலாம்!" என்றான் முரளி ஆறுதலாக.

**அ**டுத்த வார ஞாயிற்றுக் கிழமை இரவு எட்டு மணிக்குப் பவானி இந்துவுடன் வீட்டிற்குள் நுழைய, அங்கே சிவந்த முகத்துடன் கண்ணை மூடி சோபா மேல்

தலை சாய்த்து இருந்தான் முரளி. பார்த்தாலே தெரிந்தது அவன் மிகக் கோபத்தில் இருந்தது. அவன் அருகில் பிரேம் அமர்ந்து இருந்தான்.

"வாங்க பிரேம்!" என்று அவனை வரவேற்றவள், முரளியிடம், "என்னாச்சு...? ஏன் இந்த டென்ஷன்?" என்று வினவிய பவானியிடம்,

"அக்கா, எல்லாம் இவ செய்த வேலைதான்... நான் சின்மயா மிஷன் கிளாஸ் முடிச்சிட்டுக் கிளம்பினேன். அப்போ இந்துவின் பிரெண்டு அலெக்சாண்டிரியாவை அங்கே பார்த்தேன். எப்படி இருந்தா தெரியுமா? காப்பர் சல்பேட் கலர் பாவாடை, அதில் மெஜந்தா கலரில் பார்டரும் அதில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. மிக குறைவான அளவு கை வைத்துத் தைக்கப்பட்ட மயில் கழுத்துக் கலர் ப்ளவுஸ். அதுவும் மார்புக் கூட்டின் பாதியில் முடிந்து விட்டது. தாவணி மட்டும் மெஜந்தா கலர்.

"சுருள் முடியைப் பின்னல் இட்டு இருந்தாள். கைகளில் அதற்கு ஏற்றாற் போல் கண்ணாடி வளையல் காதில் பெரிய முத்துக் கெம்பு ஜிமிக்கி, கழுத்தில் ஒரு அட்டிகை, ஒரு நீள முத்துமாலை, நெற்றியில் கல் வைத்தப் பொட்டுடன் யாரையோ எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தாள்."

இந்தியாவிற்குச் சென்றபோது தேடித்தேடித் தனக்குப் பிடித்தமாதிரி, அதுவும் இந்துவை தேவதை யாகக் காட்டும் என்ற நம்பிக்கையுடன் தான் வாங்கிய

டிரெஸ்சில் அவளின் தோழியைப் பார்த்தவுடன், தலையில் கையை வைத்துக் கொண்டு காரில் அமர்ந்து, கூட வந்த நண்பன் பிரேமைக் கண்களால் தேடத் துவங்கினான்.

'இந்துவுக்கு வாங்கியது எப்படி அவளிடம் போச்சு...?' இன்னும் சமாதானமாகாத மனதுடன் பவானியிடமே கேள்வியைக் கேட்டான்.

"இதுக்காகவா மாமா நீ டென்ஷன் ஆனே?" பிரேம் சிரித்தபடியே முரளியைப் பார்த்துக் கேட்க...

"டேய்... நீ வேற...! அவளோட ப்ளௌஸுக்கும் பாவாடைக்கும் இடையில் ஒரு முழம் கேப்... இதுல உச்சக் கட்டம் என்னன்னா, அவ கட்டியிருந்த தாவணி நம்ம ஊர்ல ஐயர்மார் எல்லாம் பூணூல் போடுவாங்க இல்லே, அதுமாதிரி இருந்தது. மறைக்க வேண்டிய எதையும் அந்தத் தாவணி மறைக்கலை..." என்று படபடத்தான் முரளி. எல்லோரும் அவன் சொல்வதைக் கேட்டுச் சிரிக்க...

"அவ எப்படியோ போடட்டும்... நீங்க சொல்லுங்க அக்கா, இவளோட டிரஸ் எப்படி அவ கிட்டே போச்சு...? அடுத்தது, ஒரு பொண்ணுக்கு இப்படித்தான் மட்டமா டிரெஸ் பண்ணி விடறதா? பாவாடை அவிழ்கிற மாதிரி. அதைக் கேளுங்க மொதல்ல!" கோபத்துடன் முரளி கேட்க,

"இல்லை அக்கா, அது அழகிக்கு அழகா இருக்கும் என்று நான்தான் கொடுத்தேன்... போன தடவை பிரேம்

அண்ணா ஊருக்குப் போனப்போ வாங்கி வந்தார் இல்ல, அந்த டிரெஸ் தான்... இந்த அண்ணா வாங்கின பாவாடை அவளுக்கு லென்த் பத்தலை. அதனாலதான் அப்படிக் கட்டி விட்டேன்!" முரளியின் கேள்விக்குப் பதில் அளித்தாள் இந்து. ஐந்தடி உயர இந்துவுக்கு என்று வாங்கப்பட்ட துணி, ஆறரை அடி அலெக்ஸ்சான்டிரியாவுக்குப் பொருந் தாமல் போனதற்கு யாரைக் குற்றம் சொல்ல...?

"அடிப்பாவி! அதுக்காக அவ்வளவு கீழே இறக்கியா கட்டி விடுவே?" பதறியபடியே அடுத்த கேள்வி இந்துவை நோக்கி வீசினார் பவானி.

"அக்கா, நல்லா தொப்புளுக்குக் கீழே இறக்கிக் கட்டி விட்டேன். தொப்புளுக்கு மேலே கட்டினா ஸ்கர்ட் மாதிரி இருக்கு. அதனால தான் அப்படிக் கட்டி விட்டேன். ஆனால், கட்டும்போது ஒழுங்காகத்தான் இருந்தது. அதன் பிறகு விலகியதை எங்கே செருகணும் என்று அவளுக்குத் தெரியாமல் போய் இருக்கும்." இந்து, தான் செய்த செயல் பற்றி விளக்கினாள்.

பிரேம் திருதிரு என்று விழித்தவாறு முரளியின் காதில், "மாமா, நான் எப்போ ஊருக்குப் போனேன்... நான் எப்படா இந்துவுக்கு டிரெஸ் வாங்கி வந்தேன்?" என்று கிசுகிசுத்தான்.

பிரேமைப் பார்த்த முரளியின் பார்வை, 'ஏதாவது உளறினே... மவனே உனக்குச் சங்குதான். நான் அப்புறமா இதைப் பத்திச் சொல்றேன். கொஞ்ச

நேரத்துக்குக் கண்டுக்காதே!' என்று சொல்லாமல் சொல்லியது.

இவர்களை நோக்கிய பவானி, "என்ன விஷயம் பிரேம்?"

"ஒண்ணுமில்லை அக்கா. நீங்க எதுக்கும் மாமாவுக்குக் கொழு மோர் கலக்கிக் கொடுங்க... அது சரி, அந்தப் பொண்ணு ஏன் இப்படி டிரஸ் பண்ணிக்கிட்டு அங்கே வந்தாளாம்... என்ன மேட்டர்?" நடந்த விஷயத்தின் மூல காரணத்தை அறிய முயன்றான் பிரேம்.

"அதை அதோ நிக்கறாளே உன் தங்கச்சி, அவ கிட்டேயே கேளு... ஏன் என் கிட்டே வந்து கேட்கிறே...?" அவனுக்கும் இது ஏன் நடந்தது என்று நேரடியாக இந்துவிடம் கேட்க முடியாததால், குழப்பத்துடன் பிரேமின் கேள்விக்குப் பதில் அளித்தான் முரளி.

"அலெக்ஸ்சான்டிரியாவுக்கு, இன்னிக்கு இந்தியன் ஸ்டைல்ல டிரெஸ் போடணும் என்று கேட்டா... அதனால் நான் பண்ணி விட்டேன். எனக்குக் காரணம் எல்லாம் தெரியாது. வேணா கேட்டுச் சொல்றேன்... ஆனா எப்ப இருந்து அடுத்தவங்க விஷயத்தில் மூக்கை நுழைக்க ஆரம்பித்தீங்க...?" என்றவளை முறைத்துக் கொண்டே எழுந்த முரளி, பிரேமை இழுத்துக் கொண்டு சென்றான்.

பிரேமை இழுத்துச் சென்ற முரளி, "டேய்! உனக்குத் தான் தர்ஷினியைப் பத்தி எல்லாம் தெரியுமே. அப்படி இருந்தும் ஏன்டா வாயை விடப் பார்த்தே...? நான்

இந்தியாவுக்குப் போகும் போது எல்லாம் நீ போனதாகவும், அங்கு இருந்து அவளுக்கு வாங்கியதை நீ வாங்கி வந்ததாகவும்தான் சொல்லிக் கொடுப்பேன். இது உன் கிட்ட சொல்லித்தானே இருக்கேன்...? அப்புறம் ஏன்டா அவளுக்கு முன்னாடி உளறப் பார்த்தே?" என சண்டை யிடத் தொடங்கினான்.

"இல்லடா மாமா, ஏதோ வாய் தவறி வார்த்தையை விடப் பார்த்தேன். அதான் எதுவும் சொல்லலை இல்லே... பிரச்சினையில்லை, விடுடா பார்த்துக்கலாம்.

"உனக்கு என் பிரெண்ட் மெகன்னோட தம்பி ரென் தெரியுமில்லே...! அவனைத்தான் அலெக்சான்டிரியா லவ் பண்றா... ரென் சொந்தமா வீடு வாங்கின உடனே கல்யாணம் இருக்கும்... நான் கார் பார்க்ல அந்தப் பக்கம் ரென் கூடத்தான் பேசிக்கிட்டு இருந்தேன்... அவன் கூட வந்ததால் வித்தியாசமா இந்தியன் டிரெஸ் போடலாம் என்று போட்டு இருக்கலாம்... அதுக்குப் போய் ஏன்டா இப்படிச் சீன் போடறே... ஃப்ரீயா விடு!" என்று பிரேம் விடைபெற்றுச் செல்ல, அவன் சென்ற பாதையை யோசனையுடன் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான் முரளி.

தன் மன ஆதங்கத்தை ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை என்ற கடுப்பில் இருந்தவனுக்கே தன் மனதைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளை மட்டுமே அந்த உடையில் பார்க்க வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் நேரத்தில் தோன்றிய கற்பனை

உடைந்து போன கோபம் இன்னும் அடங்காமல், ஆட்டம் போடத் துவங்கியது மனதில்.

ஒரு வாரத்திற்குப் பிறகு... ஒரு நாள் இரவில்...

"தர்ஷினி... இன்னிக்கு அப்பா என்னைப் போன்ல கூப்பிட்டுச் சொன்னாங்க... ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சிக்கு செலக்ஷன் நடக்கப் போகுதாம்... நீ உன்னோட வாய்ஸ் மற்றும் உன்னோட ஜோடியா யார் பாடப் போறாங்களோ அவங்க வாய்ஸையும் அனுப்பச் சொன்னார். அது சரி, உன் கூட பாடப் போற இன்னொரு வாய்ஸ் யாரு...? வினய், சுகிர்தா, அபிஷ்...! என்று கூட சுத்துற உருப்படி இல்லாத அந்தக் கூட்டணியே வேண்டாம்!" தன் அப்பா அவனிடம் சொன்னதையும் சொல்லி, அவளின் நட்புகள் பற்றிய தன்னுடைய அபிப்பிராயத்தையும் வெளியிட்டான்.

"அதுக்கு எல்லாம் அவங்க சரியா வரமாட்டாங்க முரளி... என்னோட ஜோடியா பாடப் போற வாய்ஸ் நம்ம பவானி அக்காதான்!"

தன்னுடைய தீர்மானத்தைச் சொன்னாள் இந்து.

## 3

"**எ**ன்னது, அக்காவா?" முதலில் அதிர்ந்தாலும், பின்னால் தன்னைச் சமாளித்துக் கொண்டு, பவானியைப் பார்த்து, "அக்கா, உங்களுக்கு ஓ.கே.வா?"

"நானா...?" என்று கேட்ட பவானி, "நான் எப்படி இந்தும்மா...? அது எல்லாம் சரியா வராது. முதல்ல என்னை செலக்ட் பண்ணவே மாட்டாங்க!" தன்னால் அந்தப் போட்டியில் ஏன் பங்கு பெற முடியாது என்பதைத் தெளிவுபடுத்த முயன்றார் பவானி.

"ஏன் அக்கா, ஒரு ரியாலிட்டி புரோக்ராமையே உங்களைப் போல ஒருத்தவங்கதானே டி.வி.யிலே நடத்தினாங்க. அது உங்களுக்குத் தெரியும்தானே...? அதே போல் உங்களை மாதிரி ஆட்களை எல்லாம் இணைச்சு ஒரு ஷோவே இதுக்காக தனியா வைத்தார்கள். பார்த்தோம்தானே? இதுல ஏன் உங்களை ஏற்க மாட்டேன்னு சொல்லப் போறாங்க...? அது எல்லாம் ஏத்துப்பாங்க, வாங்க!" தன்னுடன் பவானி பாட வேண்டும் என்ற ஆசைக்கு டி.வி.யில் வந்த புரோக்ராமைச் சொல்லி வலுச் சேர்த்தாள் இந்து.

"இந்து, அது வேற ஒரு சூழல். இப்போ நீ போகப் போறது வேறு ஒரு சூழல். இதுக்கு நான் சரி வர மாட்டேன்... சொன்னாக் கேளு, வேற யாரையாவது யூஸ் பண்ணு."

"அக்கா, நீங்க மாட்டேன்னு சொன்னீங்க என்றால் எனக்கு இரண்டு ஆப்ஷன்தான் இருக்கு. ஒண்ணு என்னோட பிரெண்ட்ஸ்தான், இரண்டாவது முரளி. இதுல யாரா இருந்தாலும் எனக்கு ஓ.கே.தான். சொல்லுங்க, நான் யாரை யூஸ் பண்ண...?" தன்னுடைய குழப்பத்திற்கு விடை தேடினாள் இந்து.

“இந்த ஊர்ல இதுங்க அத்தனையும் சேர்ந்து செய்யற அமர்க்களம் போதாதுன்னு, நம்ம ஊர்ல வேற வந்து மானத்தைக் கப்பலேற்றுவா? போனாப் போகுது, நானே இவ கூடப் பாடுறேன்... அதுக்கு முன்னாடி நான் அப்பா கிட்டே பேசிட்டு வரேன்... அப்பா என்ன சொல்றார் என்பதைப் பார்த்துட்டு அதுப்படி செய்யலாம்.”

இரண்டு நாட்கள் சென்று, “அக்கா, அப்பா சொன்னாங்க; நம்ம கடையை பிரேம்கிட்ட சொல்லி ஒரு வருட லீஸுக்கு விட்டு... இங்கே இருக்கிற எல்லா வீட்டு உபயோக சாமான்களைக் கட்டி ஸ்டோரேஜ் போட்டு, இன்னும் ஒரு மாதத்திற்குள் நாம மூணு பேரையும் கிளம்பச் சொன்னார். தர்ஷினி! உன்னோட தீசிஸ் எப்போ வேணுமோ அப்போ இங்கே வந்து தொடர்ந்துக் கலாம். அதுக்கான ஏற்பாடு என்னன்னு உன் ஃப்ரொபசர் கிட்டே கேட்டு அதை முதல்ல முடி... அப்புறம் அக்கா, நீங்களும் தர்ஷினியும் தனியாகவும், நான் தனியாகவும் சென்னை ஏர்போர்ட்ல பிரியறோம்.

“உங்களை சவேரியார் அங்கிள் வந்து கூட்டிக் கிட்டுப் போவாங்க. அதேபோல் சென்னை போனதுக்கு அப்புறமா இவ யாரோ, நான் யாரோதான். எங்கேயும் என்னைத் தெரிந்த மாதிரி காட்டிக்கக் கூடாது. ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சிக்கு செலக்‌ஷன் சென்னையில் ஸ்டார்ட் ஆக இன்னும் ஒன்றரை மாதம் இருக்கு. அங்கே இவ கூட நான் எப்படி ஜோடியா சேர்ந்துக்கணும்னு எனக்குத் தெரியும். அதன்படி செய்வோம்.”

"அப்போ கல்யாணம் முரளி" பவானி இழுக்க...

"அதுக்கு இப்போ என்னக்கா அவசரம்...? அப்பா எப்படி எப்போ சொல்றாரோ, அப்போ இங்கே வந்து பண்ணிக்கிட்டாப் போச்சு!"

அதைப் பற்றி யோசிக்காத மாதிரியே பதில் சொன்னான்.

இவர்கள் மூவரும் எழுந்து சென்ற பொழுது பவானி பின்னால் சென்ற இந்து, "அக்கா, முரளிக்குக் கல்யாணமா? பொண்ணு யாருக்கா...? இந்த ஊரா, இல்லை நம்ம ஊரா?"

"என் கிட்டே ஏன் கேட்கிறே? அதை அவன் கிட்டேயே கேட்க வேண்டியதுதானே!"

"கேட்டா...? உடனே சொல்லிட்டுத்தான் மறு வேலை பார்க்கும். சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங்... உங்களுக்குத் தெரியும்தானே, நீங்களே சொல்லுங்களேன், ப்ளீஸ்!"

"இதோ பாரு, அவனை சிக்கந்தர் சிங்குன்னு சொல்றதை நிறுத்து... அவன் காதுல விழுந்தா கோபப் படுவான்... உனக்குத் தெரியும் தானே...?

"அப்புறம், சாரி இந்து... அவனோட ரகசியத்தை அவனுக்குத் தெரியாமல் நான் உன் கிட்டே சொல்லக் கூடாது. நீ என்கிட்ட கேட்டுத் தெரிந்து கொள்வதை விட, அவன்கிட்டேயே கேளு, சொல்லுவான்."

"போங்கக்கா, நீங்களும் சொல்ல வேண்டாம். அவனுக்குக் கல்யாணம் என்றால் என் கிட்டே மாமா சொல்லுவார் இல்லே... அப்போ தெரிஞ்சிக்கிறேன்..."

இவர்கள் அமெரிக்காவில் பேசிக் கொண்டிருந்த முதல் நாள் இரவு, இந்தியாவில் ஹரிஹரன் யாரோ ஒருவருக்குப் போன் செய்தார்.

அந்தப் பக்கம் எடுக்கப்பட்டதும்,

"ஹலோ சவேரியார்... நான்தான் ஹரிஹரன் பேசறேன். எப்படி இருக்கீங்க...? அம்மா, தங்கச்சி, தம்பி, அவங்க வீட்டுல எல்லோரும் எப்படி இருக்காங்க...?" என்று நலம் விசாரிப்புடன் பேச்சைத் தொடங்கினார்.

"வணக்கம் அண்ணே, நாங்க எல்லாம் சுகம் தாண்ணே... பின்னே, நீங்க எப்படி இருக்கீங்க, சொல்லுங்க...!"

"தங்கச்சி உடம்பு எப்படி இருக்கு...? ஏதாவது முன்னேற்றம் தெரியுதா?"

"எங்க அண்ணே... ஒரு முன்னேற்றமும் இல்லை. அவ அப்படியே தான்ணே இருக்கிறா..."

"அப்படியா? அடுத்த மாசம் இந்திரா அமெரிக்காவில் இருந்து வரப் போறா.... அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்...!" தான் எதற்குப் போன் செய்தாரோ, அதனைப் பற்றிச் சொன்னார் ஹரிஹரன்.

"ரொம்பச் சந்தோஷம்... ஆமா, இன்னும் கல்யாணம் முடிக்கலையே... ஏன் இவ்வளவு சீக்கிரமா

பாப்பாவை இங்கே வர வைக்கிறீங்க...? அவனுங்க கண்ணுல நம்ம பாப்பா தென்பட்டா, அவ்வளவுதான். ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்!"

குரலில் சந்தோஷமும் குழப்பமும் பயமும் ஒருசேரக் கலந்து ஒலித்தன.

"அவ இங்கே வர்றதை நாங்க முடிவு பண்ணலை... அவதான் இங்கே நடக்கிற ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகிறாள். எப்படியும் இன்னும் ஒரு எட்டு மாசம் கழிச்சு இங்கே வந்து, இருக்கிற பிரச்சினைகளை எதிர்நோக்கத்தானே வேண் டும்...? அதனாலதான் நானும் சரின்னு சொல்லிட்டேன். கல்யாணம், தங்கச்சி உடம்பு சரியாகாமல் செய்யறது நல்லது இல்லை. அதனாலதான் பிறகு பார்த்துக்கலாம்னு நினைக்கிறேன்!" என்று நிலைமையை விளக்கினார்.

"அப்போ இங்கே வந்தா உங்க வீட்டுலதான் தங்கப் போறாளா? அந்த ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சிக்கு பாப்பா கூட யார் பாடப் போறா...? இங்கே பாப்பாவை யார் பாதுகாப்பா பார்த்துக்க முடியும்? இதுக்கு எல்லாம் என்ன முடிவு எடுத்து இருக்கீங்க...?" தன் சந்தேகங்களைக் கேள்வியாக அடுக்கினார் சவேரியார்.

"உங்களையும் தம்பி ஸ்டீபனையும்விட ஒரு பாதுகாப்பை யார் தர முடியும்னு நினைக்கிறீங்க...? வேணுமின்னா சொல்லுங்க, பிரைவேட் செக்யூரிட்டி போடலாம்.... நீங்க நம்ம தங்கச்சியோட திருவான்மியூர்

வால்மீகி நகர் வீட்டுக்கு வந்துடுங்க... இந்திரா கூட பவானியும் இருக்கட்டும். இந்தப் போட்டிக்குப் பங்கேற்கப் போகும் போது நீங்களும் சித்தியும் கூடப் போங்க.

"நம்ம முரளிதான் அவ கூட இந்தப் போட்டியில் பாடப் போறான். அவளுக்குக் கார் ஓட்டத் தெரியும். ஆனால், அதற்காக அவளைக் கார் எடுக்க விடாதீங்க. தவிர்க்கப்பட வேண்டிய இடங்களைத் தவிர, மீதி இடங் களுக்கு நம்ம பவானி கூடப் போகட்டும். நீங்க சென்னைக்கு வாங்க, மீதியை நேர்ல பேசிக்கலாம்!" என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் ஹரிஹரன்.

**அ**மெரிக்காவில் இருந்து இவர்கள் கிளம்புவதற்கு ஒரு வாரத்திற்கு முன், "தர்ஷினி, இந்தியாவுல என்னோட கிளாஸ் மேட் இருந்தானே கேசவ் சுப்பிரமணியம்.... அதான்மா இங்கே என் கூட ஜர்னலிசம் படிச்சிட்டு இப்போ நம்ம டில்லி பிராஞ்ச் ஆபீஸ்ல ஃப்ரீலான்சஸ் எடிட்டரா இருக்கானே... எங்கப்பாவோட பத்திரிக்கையுலக வாரிசு, இந்தியாவில் நடக்கும் ஊழலை எல்லாம் ஆதாரப்பூர்வமா நம்ம பேப்பர்ல எழுதுவானே... அவன் உன்னோட போன் நம்பர் கேட்டான், கொடுத்து இருக்கேன்!" முரளி, இந்து விடம் விலாவாரியாகச் சொன்னான்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு இந்துவின் மொபைல் போன் அடிக்க, எடுத்தவளுக்கு அது இந்தியாவில் இருந்து வந்த அழைப்பு என்று காட்டியது.

"ஹாய் இந்திரா பிரியதர்ஷினி... நான்தான் கேசவ் சுப்பிரமணியம் பேசறேன்... எப்படி இருக்கே...? நீ இந்தியா

வரப் போறதா முரளி சொன்னான்!" என்றபடி பேச்சைத் துவக்கினான்.

"ஹாய் கேசவ் சுப்பிரமணியம்...! நீங்க எப்படி இருக்கீங்க...? நான் நல்லா இருக்கேன். ஆமாம், அடுத்த வாரம் இந்நேரம் இந்தியாவில் இருப்பேன். அப்புறம் உங்க வாய்ஸ் ஏற்கெனவே கேட்ட பழக்கமான குரல் மாதிரி இருக்கு... ஆனால், உங்களைப் பார்த்த மாதிரி ஞாபகம் இல்லையே...?"

"நீ இங்கே இருந்து போய் ரொம்ப வருடம் ஆச்சு. அதுவுமில்லாமல் ஸ்கூல் டேஸ்ல நீ முரளிகிட்டே மட்டும் தான் பேசுவே... உனக்கு என் முகம் கூட ஞாபகம் இருக்காது. உன் பேரு ரொம்ப நீளமா இருக்கு. நம்ம முரளி ஏற்கெனவே உன்னை தர்ஷினி தர்பூஸ்னு கூப்பிடுவான்... நான் உன்னை நம்ம ஸ்கூல் டேஸ்ல கூப்பிட்ட மாதிரி குடியான்னே கூப்பிடறேன்.

"என்ன, ஓ.கே.வா? ஆனா அப்போ விட இப்போ தான் உனக்கு இந்தப் பேரு ரொம்பப் பொருத்தமா இருக்கும். இன்னொரு விஷயம், நீ என்னை கேசவ் என்று கூப்பிடு. அந்தச் சுப்பிரமணியம் வேண்டாம்.

நான் அடிக்கடி முரளி கிட்டே பேச போன் பண்ணும்போது கேட்டு இருக்கிறதால பழக்கமானதாக இருக்கலாம். உன்னோட முயற்சிக்கு என்னோட வாழ்த் துக்கள். இந்தியா வந்த பிறகு உன்னோட மொபைல் நம்பரை இந்த நம்பருக்கு எஸ்எம்எஸ் பண்ணு."

"கேசவ்... அது என்ன குடியா? அதுக்கு என்ன மீனிங், சொல்லுங்க...?"

"உனக்கு அதுக்கு மீனிங் தெரியாதா?"

"ம்ஹூம்."

"இது ஒரு ஹிந்தி வார்த்தை. இப்போதைக்கு இது போதும். இதுக்கு என்ன மீனிங்கிறதை நேரம் கிடைக்கும் போது சொல்றேன்...!"

"ம்ம்... இருங்க, எங்கக்கா கிட்ட கேட்டா சொல்லப் போறாங்க. அவங்களுக்கு ஹிந்தி தெரியும்...!" என்ற படியே பவானியைத் தேடிக்கொண்டு இந்து கிச்சனுக் குள் சென்று, அங்கு இருந்த கவுன்டர்மேல் அமர்ந்து கொண்டு பவானியைப் பார்த்து,

"அக்கா, குடியான்னா என்ன மீனிங்...? இந்த கேசவ் என்னை அந்தப் பேர் சொல்லிக் கூப்பிடுறேன்னு சொல்றாங்க..."

"யார் அது கேசவ்...? தெரியாதவங்ககிட்டே எல் லாம் என்ன பேச்சு இந்து உனக்கு...? இங்கே கொடு போனை..." என்று இந்துவை அதட்டியபடியே அவள் கையில் இருந்து போனைப் பிடுங்கினாள்.

"யாரு தம்பி நீங்க...?" என்று தொடங்க, அதற்கு என்ன அந்தப் போனில் மறுமொழி சொல்லப்பட்டதோ... பவானி இந்துவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, "அப்படியா தம்பி...? ரொம்பச் சந்தோஷம். நீங்க தானா...?

நான் யாரோன்னு நினைச்சுப் பயந்துட்டேன்... இல்லை, நான் அவ கிட்டே சொல்ல மாட்டேன். இருங்க, அவ கிட்டேயே கொடுக்கிறேன்...!" போனை இந்துவின் வசம் ஒப்புவித்தாள்.

"ஹாய் குடியா... நீ கேட்டாகூட உங்கக்கா உனக்குச் சொல்ல மாட்டாங்க.. உனக்கு குடியாவுக்கு மீனிங் தெரிய வேணும்னா அப்போ இந்தியா வந்த பிறகு உன்னோட மொபைல் நம்பரை எனக்கு எஸ்எம்எஸ் பண்ணு. பை!" சொல்லி விட்டு வைத்து விட்டான்.

"அக்கா, நீங்க சொல்ல மாட்டீங்கதானே...? நானே நம்ம சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங் கிட்டே கேட்டுக்கிறேன்..." பவானியைப் பின் தொடர்ந்து சென்றபடி சொன்னாள் இந்து.

"வேண்டாம்... அவன்கிட்டே போய்த் தேவை இல் லாமல் இந்த விஷயத்தைப் பேசித் திட்டு வாங்காதே!"

"முரளி கிட்டே திட்டு வாங்கினாலும் பரவாயில்லை. இன்னிக்கு இதுக்கு மீனிங் தெரியலைன்னா எனக்குத் தூக்கம் வராது!" பவானியின் பேச்சுக்குப் பதில் சொல்லியபடியே முரளியின் அறைக்குள் கதவைத் தட்டி விட்டுச் சென்றாள்.

லேப்டாப்பில் தலையை நுழைத்து எதையோ பார்த்துக் கொண்டிருந்த முரளியிடம் சென்று, நடந்த எல்லாவற்றையும் சொல்ல, தன் மடிமீது இருந்த லேப்டாப்பை டேபிளில் வைத்துவிட்டு, "உனக்கு அறிவே

கிடையாதா? நான் போன் நம்பர் கொடுத்து இருக்கேன்னு சொன்னேன்... நீ அவன் கிட்டே பேசும்போது என்னைக் கூப்பிட்டு இருக்கலாம் இல்ல... அதை விட்டு விட்டு அவன் கூட கதையடிச்சியாக்கும். இனிமே அவன் போன் செய்தா எடுக்காதே...! அவனுக்கு உன்னோட இந்தியா போன் நம்பரையும் எஸ்எம்எஸ் பண்ணாதே...! நான் அவன் கிட்டே பேசிக்கிறேன்... இப்போ போய்த் தூங்கு!" என்று பேசியவன், லேசாகப் பதட்டத்துடனே இருப்பதாகத் தோன்றியது.

அசையாது முரளியைப் பார்த்துக் கொண்டு, அவன் பேசியதையும் கேட்டுவிட்டு மீண்டும் அவனிடம், "நீங்க சொல்றபடியே செய்றேன் முரளி. ஆனால், எனக்கு நீங்க குடியாக்கு மட்டும் மீனிங் சொல்லிடுங்க போதும்... வேற எதுவும் வேண்டாம்."

"அவன் லூசு ஏதோ உளறினான்... அதுக்கு எல்லாமா மீனிங் கேட்பே...? இனிமே அவன் உன் கிட்டே பேசப் போறது இல்ல... நீ போய்த் தூங்கு!"

முரளியின் பதட்டம்... அவள் விடாப்பிடியாக வார்த்தைக்கு அர்த்தம் கேட்டு நின்றதில் எரிச்சலாக மாறி, அவளிடம் எரிந்து விழுந்தான்.

இவர்கள் சென்னை நோக்கிப் பயணப்படும் நாளுக்கு முதல் நாள் இரவு பவானியை அழைத்த முரளி, "அக்கா, இதுல உங்க ரெண்டு பேருக்குமான டிக்கெட். நாளைக்கு செவ்வாய்க்கிழமை ராத்திரி பத்து மணிக்கு

ஏர்ற பிளைட் புதன்கிழமை காலை ஒன்பதரைக்கு லண்டன் போய்ச் சேர்ந்துடும்.

"அங்கே இருந்து திரும்பியும் கனைட்டிங் பிளைட் மதியம் ஒரு மணிக்குப் புறப்பட்டு, வியாழக்கிழமை காலையில் ஒன்பதே முக்காலுக்கு நீங்க சிங்கப்பூர் போய்ச் சேர்ந்துடுவீங்க... வெள்ளிக்கிழமை நைட்டு சிங்கப்பூர்ல இருந்து சென்னைக்குப் போயிடலாம்... உங்க ரெண்டு பேரோட டிக்கெட்டையும் ட்ராவல் டாக்குமென்ட் டையும் உங்க ஹான்ட் பேக்ல வெச்சுக்கோங்க. தர்ஷினி கிட்டே கொடுக்காதீங்க. பத்திரம்."

"எதுக்கு முரளி என் கிட்டே கொடுக்கிறே? எங்க ரெண்டு பேரோட டிக்கெட்டையும் ட்ராவல் டாக்குமென்ட் டையும் உன்னோட சேர்த்து வைச்சுக்கோ... என் கிட்டே எதுக்குத் தனியாகப் பிரிச்சுக் கொடுக்கிறே?"

"அக்கா, உங்க ரெண்டு பேருக்கு மட்டும் தான் நாளைக்கு சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பிசினஸ் கிளாஸ் டிக்கெட் கிடைச்சிருக்கு. எனக்கு எகனாமி கிளாஸ் கிடைக்கலை. புதன்கிழமை நைட்டுதான் கிடைத்து இருக்கு. நான் உங்களோட வெள்ளிக்கிழமை காலையில் வந்து சேர்ந்துக்குவேன்."

"ஏன்பா எங்க ரெண்டு பேருக்கு மட்டும் பிசினஸ் கிளாஸ்... எங்களுக்கும் எகானமி கிளாஸே புக் பண்ணி யிருக்கலாமில்லே...?"

"அக்கா, இந்து சொகுசா வளர்ந்தவ. நம்மைச் சந்தித்த நாளுக்கு முதல் நாளும் இங்கே வந்து சேரும்

வரைக்கும் பட்ட துன்பங்கள் மட்டுமே அவ அவளோட வாழ்க்கையில் பட்ட துன்பமாக இருக்கணும். அவ இந்த பிரயாணத்துல கூட கஷ்டப்படக் கூடாது. அதனால்தான் அவளுக்குப் பிசினஸ் கிளாஸ்... அதுவும் தனியா போக முடியாது.

“எனவே உங்களுக்கும் அதிலே போட்டு விட்டேன். ஒரு நாள் பின்னாடிதானே வரேன். நீங்க ரெண்டு பேரும் போய்ச் சிங்கப்பூரைச் சுத்திப் பாருங்க.”

மறுநாள் ஏர்போர்ட்டில் இந்துவிடம் முரளி...

“இங்கே பாரு இந்து, அக்கா சொல்றதைக் கேளு... ஊர்லேயும் சரி, சவேரியர் அங்கிளைப் பார்த்த உடனே கத்தாதே. அவங்களை புதுசாப் பார்க்கிறமாதிரி நடந்துக்கோ. ரொம்ப ஜாக்கிரதையா சென்னையில் நடக்கணும்!” என்று சொல்லிவிட்டுத் தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிலுவை கோக்கப்பட்ட செயினை எடுத்து இந்துவின் கழுத்தில் அணிவித்து விட்டு,

“இதை ராத்திரி தூங்கப் போகும் போது கழட்டிட்டு, மறுநாள் குளித்த பிறகு போடு.”

தன்னிடம் பேசிய முரளியை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தாள் இந்து.

கண்ணைச் சிமிட்டாமல் தன்னையே பார்ப்பதைப் பார்த்த முரளி, “என்னம்மா...?” என்று வினவ...

“அவ்வளவுதானா...?”

"என்னது தர்ஷினி...? அவ்வளவுதானான்னு கேட்கிறே? உனக்கு வேற ஏதாவது வேணுமா, சொல்லு. நான் வரும்போது வாங்கி வரேன்."

முரளியின் அருகில் நெருங்கிச் சென்றவள், அவனின் கைகளைத் தன்னுடன் கோத்துக் கொண்டாள்.

பல வருடங்களுக்குப் பிறகு சொந்த நாட்டிற்குச் செல்லப் போகிற நெகிழ்ச்சியும், தன்னுடன் முரளி தற்போது வரவில்லை என்ற ஏமாற்றமும் அவளை ஒரு சேர அலைக்கழிக்க, அவனின் தோளில் சாய்ந்தவள், பல வருடங்களாக தன்னை அரவணைக்கும் அத்தோள்களில் அழுத்தமாக இதழ்களைப் பதிந்தாள்.

முரளியின் விரல்களின் வழியே கைகளில் அழுத்தத்தை உணர்ந்த பிறகே அவனின் மேல் சாய்ந்திருந்தவள் சற்றே விலக, முகம் சிரிப்பைப் பூசிக் கொண்டது.

அவனின் தோள்பகுதியில் இருந்த சட்டைப் பாகத்தில் தன் இதழின் வடிவத்தை அப்படியே பதிவு செய்தது போல ஆக்கிய தன் லிப்ஸ்டிக்கின் வேலையைப் பார்த்து, 'எப்பொழுதும் லிப்ஸ்டிக்கை கம்மியாப் போடு' என்று கடுப்படிக்கும் அவனின் முகமும் நினைவில் வந்தது.

அவளின் முதல் முத்தத்தை உணராமலே தன் போக்கில் அவளுக்கு, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரைகளைக் கேட்காமலே அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருந்தான்.

# 4

முரளியின் சட்டையில் இருந்த லிப்ஸ்டிக் கறையைப் பார்த்த பவானியும், பிரேமும், என்ன சொல்வது என்று தெரியாமல் தடுமாற, தன் கையில் வைத்து இருந்த குளிர்கால ஜாக்கெட்டை முரளியின் தோளில் போட்டு விட்டுக் கேள்வியாகப் பார்த்தவனிடம், பிறகு வாங்கிக் கொள்கிறேன் என்றவன், இந்துவிடம் பேசத் துவங்கினான்.

நேரம் செல்வதை அறிந்த முரளி, இந்துவிடம் இருந்து தன்னுடைய கைகளை விலக்கிப் பவானியின் கையில் ஒப்படைத்து விட்டு, "பத்திரமா பாத்துக்குங்கக்கா, நாங்க கிளம்புறோம்!" என்றவன், தன்னுடன் வந்த பிரேமை விட்டு விட்டு வேக வேகமாக வெளியேறினான், பிரேம், முரளியைப் பின்னால் அது ஏர்போர்ட் என்பதையும் மறந்து கூப்பிட்டுக் கொண்டே ஓடினான்.

இந்துவைப் பார்த்து பவானி, "என்ன இந்தும்மா இப்படிப் பண்ணிட்டே... முரளி பார்த்திருந்தான், இங்கேயே உன் கிட்டே கத்தி இருப்பான். இப்படியா பண்ணுவே...?" எனப் பொரியத் தொடங்க, பவானியின் பேச்சைத் தன் கையசைவின் மூலம் தடுத்தாள்.

"அக்கா... ஏதோ ஒரு உந்துதலில் முத்தத்தை அங்கே வச்சுட்டேன். ஆனால், இப்போ யோசிச்சா சரியா வருது. கரெக்டான இடத்தில்தான் கொடுத்து இருக்கேன். இங்கே என்னை இவ்ளோ ஆண்டுகளாகப் பாதுகாத்தவன் அவன்தானே...! பல நேரங்களில் அடைக்கலம் புகுந்தது

அந்தத் தோளில் தானே! அதற்கான அங்கீகாரமாகவும் கூட இருக்கலாம். வாங்க, இமிக்ரேசன் கிளியரன்ஸுக்குப் போகலாம்!" உள்ளத்தில் இருந்த உவகை இந்துவின் பேச்சிலும் முகத்திலும் பிரதிபலித்தது.

இமிக்ரேசனை நோக்கி நடக்கத் தொடங்கிய இந்துவுடன் நடந்து கொண்டே பவானி, "ஆமாம்... முரளி மேலே சாப்ட் கார்னர் இருப்பதுமாதிரி எப்பவுமே சொன்னது இல்லை... இப்போ எப்படி இது?"

"அக்கா.... இப்போ மனசு என்னென்னவோ நினைக்குது. இந்தியா போன பிறகுதான் ஒரு நிலை யாகுவேன் போல... இப்போ எதுவும் என்கிட்ட கேட் காதீங்க. அங்கே போய்ப் பேசிக்கலாம்!" என்றவளின் பதிலால், பவானி ஒன்றும் பேசாமல் நடையைத் தொடர்ந் தார்.

**வீ**ட்டிற்குள் நுழையும்போதே இந்து இல்லாத வெறுமையை உணர்ந்தவனின் கால்கள், நேராகப் படுக்கையை நோக்கியே சென்றது.

இவர்கள் கிளம்பிய செய்தியைத் தந்தைக்குப் போனில் தெரிவித்து, சட்டையைக் கழற்ற முனைந்த வனின் கவனத்தைக் கவர்ந்தது இந்துவின் உதட்டின் வரி வடிவம், லேசான தீற்றலுடன்.

'இதை எப்படிக் கவனிக்காம போனோம்...? ஏன் இவ டார்க் கலர் லிப்ஸ்டிக்கே எப்பவும் போடறா...? சொன்னா கேட்பதே இல்லை. கிட்டே பேச வரும்போது பட்டிருக்க

லாம்...!' என்று யோசனை சென்றாலும், அதைப்பற்றி மேலே எதுவும் சிந்திக்க முடியாமல், இந்தியாவில் என்ன மாதிரியான நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக் குமோ என்று பதட்டத்தோடு இருந்த தன் நிலையை நொந்தவனாகத் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

பிரச்சினைகளைத் தருபவர்களிடம் இருந்து எவ்வாறு தன்னையும், இந்துவையும் காத்துக் கொள்ள லாம் என்ற யோசனையுடன் பவானியும், பிரச்சினைகள் எவ்வாறு பவானியையும் இந்துவையும் அணுகாமல்... அப்படியே அணுகினாலும் அந்தச் சிக்கல்களில் இருந்து எப்படி அவர்களைக் காப்பாற்றி வெளியே கொண்டு வருவது...? அதற்கு என்ன என்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என்ற தீவிரமான யோசனையில் முரளியும், பல வருடங்கள் கழித்து இந்தியாவிற்குப் போகி றோம் என்ற சந்தோஷத்தில் இந்துவும்... வெவ்வேறு மனநிலையில் மூவரும் இருந்தனர்.

வேறு வேறு சிந்தனைகளுடன் அமெரிக்காவில் இருந்து இருவர் மற்றும் ஒருவராகத் தனித்தனியாகக் கிளம்பி, சிங்கப்பூர் வழியாக முன்னால் திட்டமிட்டபடியே சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

சவேரியார் ஏர்போர்ட்டுக்கு வந்து இந்துவையும் பவானியையும் அழைத்துச் செல்ல, முரளி தனியாக ஒரு ப்ரீபெய்ட் டாக்ஸியில் ஏறிச் சென்றான். அழைத்துச் செல்லும்போதே காரோட்டியபடியே நிலைமையை விளக்கினார்.

சவேரியார், "பாப்பா! நீ இப்போ அந்த வீட்டுப் பொண்ணா வரலை... என்னோட சிநேகிதன் மகள் என்று தான் சொல்லி இருக்கேன். வெளியில் யார் கேட்டாலும் உங்க அம்மா அமெரிக்காவில் இருக்காங்க... அத்தை இறந்து விட்டாங்க... அத்தை மகனும் அக்கா, அண்ணா வுடன்தான் அங்கே வசிக்கிறாய் என்று சொல்லணும். இப்போ இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நீயும் உன் அக்காவும் மட்டும் வந்திருப்பதாகச் சொல் லும்மா."

"ஏன் மாமா நான் அப்படிச் சொல்லணும்?"

"இங்கே உங்கப்பாவின் பழைய எதிரிகளால் உன் உயிருக்கு ஆபத்து இருக்கும்மா.... எல்லோர் முன்னாடி யும் மாமா, அம்மா, என்று எங்கள் யாரையும் கூப் பிடாதே...! வேறு ஏதாவது தெரிய வேண்டுமானால், நம்ம ஹரிஹரன் அண்ணனிடம் கேள், சொல்லுவார்."

"அங்கிள், எனக்கு இங்கே ஓட்டுறதுக்கு கார் வேணும். உங்க வீட்டுல இருக்கா...? இல்லை, எங்க ஊரிலிருந்து என்னுடையதைக் கொண்டுவரச் சொல்ல லாமா?"

"உனக்குக் கார் ஓட்டக் கொடுக்கக் கூடாது என்று ஹரிஹரன் அண்ணன் சொல்லி இருக்காங்க. அது னால உனக்குத் தனியாகக் கார் கிடையாது. வெளியே போகணும் என்றால் என்கூட வரணும்... இல்ல, கால் டாக்ஸி... ஆட்டோதான்."

"ஐயோ! நான் எங்காவது போகணும்னா என்ன செய்ய...? எல்லாத்துக்கும் நான் உங்களையே எதிர் பார்த்துக்கிட்டு இருக்க முடியாது. ஒரு வேளை என்னைப் பத்தின உண்மை தெரிந்தவர்கள் ஆட்டோவிலோ இல்லை கால் டாக்ஸியிலோ போகும் போது கடத்திக் கிட்டுப் போயிட்டா என்ன செய்ய?"

"ஓ! அப்படி ஒரு விஷயமிருக்கோ...? சரி, நம்ம ஹரிஹரன் அண்ணன் கிட்ட பேசி, அவர் என்ன சொல் றாரோ அதுப்படி செய்யலாம்."

இரு வாரங்களுக்குப் பிறகு, பெசன்ட் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பின் கதவைத் திறந்து கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்தான் முரளி. நிசப்த மான வீடு அவனை வரவேற்றது.

ஒற்றைப் பிள்ளையாய்ப் பிறந்தாலும் இதுவரை அவன் என்றுமே தனியாக இருந்தது இல்லை. இந்த இரு வாரங்களாகத்தான் தனிமை அவனை மிரட்டியது. ஆம், அவனின் பெற்றோருக்குத் திருமணம் கழிந்து 20 வருடங்களுக்குப் பிறகு பிறந்தவன். முரளி பிறக்கும் பொழுது அவனின் தந்தையின் வயது ஐம்பதுகளின் தொடக்கத்திலும் அம்மா நாற்பதின் முடிவிலும் இருந் தார்கள்.

முரளியின் அம்மா, அவர்கள் பத்திரிகையிலே நிருபராகப் பணிபுரிந்தாலும், ஜெனரேஷன் கேப் மற்றும் இரவு பகல் பாராது பத்திரிகையைச் சுற்றியே பெற்

றோரின் வாழ்க்கை இருந்ததால், இவன் படித்து வளர்ந்தது எல்லாமே ஹாஸ்டல் சார்ந்த ஸ்கூலில்தான். முதலில் டூன் ஸ்கூல் எனப்படும் டேராடூனில் உள்ள பள்ளியிலும், பின்பு கொடைக்கானல் அமெரிக்கன் (கேஜஎஸ்) பள்ளியிலும் பயின்றான்.

இந்தியாவில் பிறந்த முரளி, பிறக்கும்போதே அமெரிக்க பிரஜையாகிப் போனான். முரளியின் அம்மா எட்டு மாதக் கர்ப்பிணியாக இருக்கும் சமயத்தில் இந்திரா காந்தி சுடப்பட்டார்.

அதனால் கலவரங்கள் வெடித்த பொழுது ஆபீஸில் இருந்து திரும்பும் வழியில் கலவரத்தில் மாட்டிக் கொண்டு வயிற்றில் அடிபட்டவள், உடனே அருகில் இருந்த அமெரிக்க எம்பஸியின் உள்ளே இருந்த ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட, இவன் அங்கு... அதாவது இந்தியாவில் இருக்கும் அமெரிக்க மண்ணில் (எந்த நாடாக இருந்தாலும் அமெரிக்கன் எம்பஸி கட்டத் தேவையான பொருட்கள் நிலத்தைத் தவிர ஏனைய சாமான்கள் அமெரிக்காவில் இருந்தே கொண்டு வரப்படும். இன்றும் அந்த மரபு தொடர்கிறது) பிறந்ததால் அமெரிக்கப் பிரஜையாக மாறினான்.

தனிமையை இந்த 29 வருடமாக உணராதவன், இன்று புதிதாக உணர்ந்தான். இந்தச் சிந்தனையில் இருந்து விடுபட்ட முரளி, வாங்கியவற்றை சமையல் அறையில் வைத்து விட்டுத் தன்னை ரெப்ரெஷ் செய்து கொண்டு ஐபாடுடன் வந்தவன், ஹாலின் ஒரு ஓரத்தில்

போடப்பட்டிருந்த மெத்தையில் விழுந்தான். எதிரே மேஜை மீது இருந்த எலக்ட்ரானிக் போட்டோ பிரேமில் வந்த ஒரு போட்டோவில் பார்வை நிலைத்தது. அதில் இந்து ஒரு முதிர்ந்தவளை அணைத்துச் சிரித்தபடி இருந்தாள்.

அந்த இரு பெண்களும் தன் வாழ்வில் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்தே இருந்தான். ஆம், அந்த வயது முதிர்ந்த மாது அவனின் அம்மா ஜெயலஷ்மி. இந்துவின் சிரிப்பு அவளின் கண்களில் எதிரொலித்தாலும், அவள் கண்ணில் காணப்படும் விஷமத்தனம் காணாமல் போய் இருந்தது.

முரளி, இந்துவைச் சந்தித்த நாட்களுக்கு அவனது நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

**கொ**டைக்கானல் அமெரிக்கன் ரெசிடென்டல் ஸ்கூல் வளாகத்தில் இருந்த கங்கா, இன்டியனா, சுதேஷ் என்ற மூன்று டாமிட்டரிகள் உண்டு.. இன்டியனா, சுதேஷ் இரண்டும் அடுத்து அடுத்து இருக்கும். ஆனால் கங்கா மட்டும் இந்த இரு டாமிட்டரிகளில் இருந்தும்... சைக்கிள் என்றால் 15 நிமிட தூரத்திலும் ஸ்கூல் பஸ்ஸில் என்றால் 5 நிமிட நேரத்திலும் நடந்து என்றால் 30 நிமிட தூரத் திலும் இருந்தது.

கங்கா என்ற டாமிட்டரி கட்டடம் ஹையர் செகன்டரி பிள்ளைகள் மற்றும் பத்தாவது படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டும் உள்ளது. ஏனெனில், அதற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் தான் லேப்கள் இருந்தன. அதனால்

படிப்பவர்களின் வசதிக்காக அவ்வாறு அமைக்கப் பட்டிருந்தது.

கங்கா பழைய கட்டிடமாக இருந்ததால், அதை இடித்து விட்டுப் புதியதாகக் கட்ட பள்ளி நிர்வாகம் முடிவு செய்து, அந்த வருடம் கங்கா கட்டிடத்தில் இருந்த மாணவ மாணவிகளை மற்ற இரு டாமிட்டரிகளிலும் தங்க வைத் தனர். கல்வியாண்டின் முதல் கால் பகுதி முடிந்து மீண்டும் பள்ளி இயங்கும் பொழுது, மாணவ மாணவிகள் இந்த மாற்றத்தில் வந்தனர்.

அன்று அந்தப் பள்ளியில் UNO தினம். அதனால் பல்வேறு நாடுகளில் இருந்து வந்து இருக்கும் மாணவ மாணவிகளும், மற்ற உள்ளூர் மாணவ மாணவிகளும் இணைந்து ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தினைப் பிரதிபலிக்கும்படி உடைகளும், நடனங்களும், பாட்டுகளும், உணவுகளும் என்று மொத்தப் பள்ளி வளாகமே திமிலோகப்பட்டுக் கொண்டு இருந்தது.

இந்த நிகழ்வுகளில் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்வதற்கு ஏதுவாக இரண்டு டாமிட்டரிகளுக்கு அருகில் இருந்த பள்ளி விளையாட்டுத் திடலில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன.

முரளி, தன்னுடைய மிருதங்கத்தை ஓரமாக வைத்து விட்டு, சுரேஷ் டாமிட்டரியின் பின் பக்கத்திற்கு வந்தான்.

பத்து வயதுடைய இரு பெண் குழந்தைகள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்று இருந்தனர்.

“தர்ஷினி, எனக்கு எப்படி என்று தெரியலை? நான் போய் யாராவது ஒரு அக்காவைக் கூட்டிக்கிட்டு வரவா?”

“இருடி, நானும் வரேன்!” என்று நகரத் தொடங்க,

சரியாக தர்ஷினி என்ற அந்தப் பெண் குழந்தை முரளியின் மீது மோதியது.

“நீங்க ரெண்டுபேரும் இங்கே என்ன செய்றீங்க?”

“அது வந்து அண்ணா, தர்ஷிணியின் பாவாடை அவிழ்ந்து போச்சு. எப்படிக் கட்டறதுன்னு தெரியலை... யாராவது ஒரு அக்காவைப் போய் நான் கூட்டிக்கிட்டு வரேன்னு சொன்னேன். அதைத் தவிர நாங்க அங்கே இருக்கிற ஜூஸ் பாக்கெட்டை டீச்சருக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்து இங்கே நின்னு குடிக்கலை...!”

தாங்கள் செய்த தவறை உளறிக் கொட்டிக் கிளறி மூடிக் கொண்டு இருந்தாள் மற்றொருத்தி

“கிளாரா, வாயை மூடு!” என்று அதட்டி விட்டு, “நாங்க என்ன செய்தா உங்களுக்கு என்ன வந்தது...? இங்கே வந்தப்ப என்னோட பாவாடை அவிழ்ந்துக்கிச்சு. சரி, நீ எங்களை விடப் பெரியவன் தானே! எனக்கு இந்தப் பாவாடையைக் கட்டி விடேன்.”

“என்னது...? நான் உனக்குப் பாவாடை கட்டி விடணுமா? அறிவு கிடையாது... யார், என்ன என்று தெரியாமல் இப்படித்தான் கேட்பியா...? என்னைப் பார்த்து

உன் பாவாடையைக் கட்டி விடச் சொல்றே...?" சின்ன பெண் என்றும் பாராமல் முரளி திட்டிக் கொண்டு இருக்கும் போதே ஒரு கையால் பாவாடையைப் பிடித்துக் கொண்டே, மற்றொரு கையைத் தூக்கி, போதும் என்று சைகை காட்டினாள்.

முரளியைப் பார்த்து, "ஏய், என்ன அறிவு பத்தி எல்லாம் கேட்கிறே? உனக்கும் பாவாடை கட்டத் தெரி யாதா? தெரியாதுன்னா தெரியாதுன்னு சொல்ல வேண் டியதுதானே! அதுக்கு எதுக்கு என்னைத் திட்டுறே?" ஒரு பக்கமாகத் தலைசரித்து முட்டைக் கண்ணை விரித்தபடி சொப்புவாயைக் குவித்து முரளியைப் பார்த்து வாயால் டைப்படித்தாள்.

ஒரு பக்கம் அவனுக்கு, அவளைப் பார்த்தால் களங்கமற்ற முகத்துடன், சூது, வாது அற்ற குணத்துடன் இருப்பவளைப் பார்த்துக் கோபப்படவும் முடியாமல், எங்கே உதவி செய்யப் போனால் மற்றவர்களின் பார்வையில் சின்னப் பெண்ணை ஏதாவது செய்வதாகத் தவறாக நினைக்க வாய்ப்பு இருப்பதை அறிந்தவன் திணறினான். அங்கு இருந்து சென்றால் அவளுக்கு யாராவது ஆபத்தை விளைவிப்பார்களோ என்ற அச்சம் துளிர்க்க, கிளாரா என்ற பெண்ணைப் பார்த்து,

"பாப்பா! நீ போய் அங்கே பெரிய அக்காங்க யாராவது இருந்தால், முரளி கிருஷ்ணன் 11 சி செக்ஷன் அண்ணா இங்கே வரச்சொன்னேன் என்று சொல்லு!"

சிறிது நேரத்தில் ஒரு பெண் வந்தாள். "என்ன முரளி, இங்கே நீ இவ கிட்டே மாட்டிக்கிட்டியா... என்ன வம்பு வளர்த்தா உன் கிட்டே?"

"மகி, இந்தப் பொண்ணுக்குப் பாவாடை அவிழ்ந்து போச்சு. கொஞ்சம் சரி பண்ணி விடேன்... இங்கே இதுக ரெண்டும் நின்னுக்கிட்டு திரு திருன்னு முழிச்சுட்டு இருந்துச்சு... யாராவது வந்தா ஆபத்துன்னுதான் இங்கே நின்னுக்கிட்டு யாரையாவது கூட்டிட்டு வரச் சொன்னேன்... சரி, நான் கிளம்புறேன்... நீ பார்த்துக்க!" அந்த இடத்தை விட்டு நகரும் முன் கிளாராவை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

"பாப்பா! நீங்க என் கூட வாங்க. உங்க பிரெண்டை அந்த அக்கா கூட்டிக்கிட்டு வருவாங்க... ஆமாம், நீங்க எந்த ஸ்டாண்டர்ட் படிக்கிறீங்க?"

"நாங்க ரெண்டு பேரும் பிப்த் ஸ்டான்டர்ட் படிக்கிறோம்... மிஸ்டர் ஆனந்த்தான் கிளாஸ் டீச்சர்."

"சரிம்மா... நீ போய் உன் கிளாஸ்ல போய் உட்காரு... உன் பிரெண்டை மகி அக்கா கொண்டு வந்து கிளாஸ்ல விடுவாங்க." அந்தப் பெண்ணை அவளின் வகுப்பில் விட்டுவிட்டு, பெரிய கேம்ஸ் மிஸ் என்று அழைக்கப்படும் தேவசாகரியைத் தேடிச் சென்றான்.

தர்ஷினியைப் பற்றித் தனக்குத் தோன்றியதை விவரித்தான். துடுக்கான பெண் என்பதால் கொஞ்சம் அதிகக் கவனத்தை அவள்மேல் வைக்கவில்லை என்றால்,

ஏதேனும் பாதகம் ஏற்படலாம் அல்லது அவளால் வேறு யாருக்காவது துன்பம் ஏற்படலாம் என்று சொல்லியதைக் கேட்ட டீச்சர், தான் பார்த்துக் கொள்வ தாகக் கூற, அதன் விளைவாகத் தர்ஷினி, தேவசாகரியின் கண்காணிப்பின் கீழ் இருக்கும் அறைக்கு மாற்றப்பட்டாள்.

மற்றவர்களை ஏமாற்றியதுபோல் இவளால் தேவசாகரியை ஏமாற்ற முடியவில்லை. காலையில் எழுந்து உடற்பயிற்சியும், பின்பு படிப்பு, அதற்குப் பின் கடவுள் வணக்கம், தினமும் குளியல் என்றும், இதைத் தவிர சனிக்கிழமை கராத்தே, நீச்சல், யோகா, தியான வகுப்புகள் மற்றும் ஞாயிற்றுக் கிழமை பிரேயர் அதுவும் அதிகாலையில் விழிப்பு, இதனை எல்லாம் விட சிகரம் வைப்பதுபோல் தினமும் இவளது சாப்பாட்டில் வைக்கப்பட்ட கீரையும் காய்கறிகளும் தர்ஷினியால் உண்ணப்படுகிறதா என்ற மேற்பார்வையும் எரிச்சலை மூட்டியது.

சனிக்கிழமை காலை கராத்தே வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. ஒன்றாம் நிலையில் இருந்த தர்ஷினிக்கு வகுப்பு எடுக்க வந்தான் முரளி. இவன் சொன்னதை எதுவுமே புரியாமல் ஏனோ தானோ என்று செய்தவளைப் பார்த்த முரளி, கராத்தே மாஸ்டரிடம் கொண்டு சென்றதால் தண்டனை பெற்று நின்று கொண்டிருந்த பையன்களுடன் நிற்க வைத்தான்.

வகுப்புகள் நிறைவுற்றவுடன் இவளுடன் தண்டனை பெற்ற ஒருவனான கோபியிடம் சென்று,

“ஹாய் கோபி... நீதான் நல்லா கராத்தே செய்வியே! பின்பு ஏன் இன்று பனிஷ்மெண்ட்டில் நின்றாய்?”

இவளால் கோபி என்று அழைக்கப்பட்டவன், ஒரு ஆப்பிரிக்க நாட்டுப் பிரஜை. இந்தியப் பெயர்கள் அவன் வாயில் கொலைப்படும். “டர்ஷூ, என்னோட கராத்தே யூனிஃபார்ம் வொய்ட் இல்ல, அதுல மட் ஆயிடுச்சு. வாஷ் பண்ணியும் சரியாகலை. அதனால என்னோட கராத்தே யூனிஃபாம் டிரை கிளினிங் போகப்போது இல்ல. அதுக்காகத்தான் பனிஷ் பண்ணினாங்க மாஸ்டர்.”

கராத்தே மாஸ்டர் மூலமாகத் தான் இப்பொழுது அனுபவித்து வரும் துன்பங்களுக்கு எல்லாம் மூல காரணம் முரளி என்பதையும் அறிந்து கொண்டாள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை காலை கராத்தே பிராக்டீஸுக்குச் சென்று திரும்பிக் கொண்டு இருக்கும் போது, முரளியை ஒரு குண்டுப் பையன் ஓடி வந்து வழிமறித்தான்.

“அண்ணா, கொஞ்சம் என் கூட வாங்க, ப்ளீஸ்!”

“எதுக்குப்பா...?”

“டாமிட்ரிக்குப் பின்னாடி என்னோட இன்னர் விழுந் துடுச்சு. போய் எடுக்கலாம்னா, அங்கே ஒரு கும்பல் இருக்கு அண்ணா. அதுக்கு ஒரு பொண்ணு தான் லீடர். அவங்க எல்லோரும் சேர்ந்துக்கிட்டு என்னை ராகிங் பண்றாங்க அண்ணா!”

"என்னது, ராகிங்கா...? அது எல்லாம் காலேஜ் லெவல்லதான் உண்டு. இங்கே எல்லாம் அப்படிப் பண்ண மாட்டாங்கப்பா...!"

"இல்லண்ணா... அந்தக் கூட்டம் முழுசும் பேபி கிளாஸ்லே இருந்தே படிச்சு, இப்போ பெரிய கிளாஸ் வந்து இருக்காங்க... நான் இந்த வருஷம்தான் சிக்ஸ்த் கிளாஸ் சேர்ந்து இருக்கேன்... அதுனால இவங்க ராகிங் பண்றாங்கண்ணா!"

"அப்படியா? வா, பார்ப்போம்."

அங்கே சென்றால் தர்ஷினி நடுநாயகமாக இருக்க, அவளைச் சுற்றி சில அடிப்பொடிகள் ஒரு பத்துப் பேர் இருந்தனர். அவர்களை விசாரிக்க, எல்லோருமே 5ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ளவர்கள். அந்தப் பள்ளியிலேயே ஃப்ரீ.கே.ஜி முதல் படித்து வருபவர்கள்.

தர்ஷினி அந்தக் குண்டுப் பையனைப் பார்த்து, "ஏய் ஹேமந்தா, ஓடிப் போயிடு. இந்த வாரம் உன்னோட டார்கெட் முடிஞ்சுப் போச்சு. இனி அடுத்த வாரம் பார்க்கலாம், கிளம்பு... கிளம்பு..." என்று அதிகாரம் செய்தாள்.

ஹேமந்தா என்று அழைக்கப்பட்ட பையனும் தன்னுடைய இன்னரை எடுத்துக் கொண்டு, விட்டால் போதும் என்று தலை தெறிக்க ஓடினான்.

முரளி, தர்ஷினியைப் பார்த்து, "ஏய் கத்தரிக்கா... இது எல்லாம் உன்னோட வேலைதானா? ராகிங்

பண்றீங்களோ? இருங்க, உங்க எல்லோரையும் டீச்சர்ஸ் கிட்ட சொல்லி பனிஷ்மென்ட் வாங்கிக் கொடுக்கிறேனா இல்லையா பாரு?"

"அதுக்கு நீ இங்கே இருந்து உன்னோட இந்த டிரெஸ் அழுக்கு இல்லாம போனால் தானே? இந்த டிரெஸ்ல அழுக்குப்பட்டா என்ன பனிஷ்மென்ட் தெரியுமில்லே? நாங்க எல்லோருமா சேர்ந்து உன்னை அந்தச் சகதியிலே தள்ளிவிட்டு, இங்கேதான் விளையாடுவோம். பாதர், சிஸ்டர் யார் கேட்டாலும் நாங்க விளையாடும் போது இவங்களும் விளையாட வந்து சேத்துக்குள்ளே விழுந்துட்டு, எங்கள் மேலே பழி போடுறேன்னு சொல்லுவோம். நாங்க இத்தனைப் பேரு. நீ ஒத்தை ஆளு. அதனால நாங்க சொல்றதுதான் எல்லோரும் நம்புவாங்க. அதைப் புரிஞ்சிக்கோ!" தெனாவட்டாகப் பதில் சொன்னாள் தர்ஷினி.

தர்ஷினி சொன்னதைக் கேட்ட ஒருவன், "தர்ஷினி, நீ சொல்றது உண்மையா? கராத்தே டிரஸ் அழுக்கானா பனிஷ்மென்ட்டா...? இதை யார் உனக்குச் சொன்னா?"

"ஆமாம்டா கோஸ்... எனக்கு அந்த வெள்ளிக் கிழமை கருப்பசாமி தான்டா சொன்னான்."

"வெள்ளிக்கிழமை கருப்பசாமியா? அது யாரு தர்ஷினி....?"

"டேய் நரம்படி, உனக்குத் தெரியாதா யாருன்னு...? நம்ம நைன்த் சி யில இருக்கானே கோபி... அவன்தான்

சொன்னான். அவங்க நாட்டு மொழியில் கோபின்னா வெள்ளிக்கிழமையாம். அதுதான் அவன் பேரு... சரி, கருப்பா வேற இருக்கானா...? அதுதான் வெள்ளிக்கிழமை கருப்பசாமின்னு வெச்சுட்டேன்."

அவர்களுக்குள் பேசிக் கொண்டதைக் கேட்ட முரளி, "ஊர்ல இருக்குற எல்லோருக்கும் பேரு வச்சிட்டுத் திரியுறியா நீ...? உருட்டி விட்ட தர்பூஸ் மாதிரி இருக்கிற உனக்கு இவ்வளவு கொழுப்பா...?"

"ஏய்... நெட்டைக் கொக்கு... உன்னை இங்கே கூப்பிட்டோமா...? பேசாமப் போயிடு... எனக்கே நிக் நேம் வைக்கிறியா...? இரு, உன்னை என்ன செய்யறேன் பாரு...?"

"ஓ! நீதான் இந்த கேங்குக்குத் தலைவியா? இரு, ஸ்கூல் அட்மின் கிட்டே சொல்றேன்...!"

"ஏய், நீ அடங்கவே மாட்டியா?"

"அடிங்க... எவ்ளோ பெரியவன் நான்... இப்படித் தான் என் கிட்டே பேசுவியா...? போட்டேன்னா தெரியும்!"

"நாங்க கேள்வி கேட்போம்... நீ பதில் மட்டும் தான் சொல்லணும். அதை விட்டு எங்களை நீ மிரட்டக் கூடாது... நாங்க கேட்கிறதுக்கு ஒழுங்கா பதிலைச் சொல்லு."

"சரி, உங்களுக்கு என்ன வேணும்? கேளுங்க சீக்கிரமா...?"

ஒரு குட்டை வாத்து வந்து இவனிடம், "நீ புது அட்மிஷன்தானே...?"

"இல்லையே...! நான் இந்த ஸ்கூல்ல சிக்ஸ்த்தி லிருந்து படிச்சிட்டு வரேன்."

"பொய் சொல்லாதே. +1 சேரும் போது ஃபார்ம் வாங்கி பில் அப் பண்ணினேதானே... அப்புறம் சேரும் போது ஃபீஸ்ல அட்மிஷன் பீஸ் கட்டினீங்களா இல்லையா? அதே மாதிரி டென்த் மார்க் ஷீட் வாங்கும் போது உன்னோட டிஸியையும் கொடுத்தாங்களா இல்லையா...? உண்மையைச் சொல்லுங்க!" என்று மற்றொரு பொடியன் கேட்டான்.

"ஆமாம், நீங்க சொல்றது எல்லாமே நடந்தது. இது எல்லா ஸ்கூல்லேயும் செய்ற ப்ரொசிஜர்தான்... ஆனா இதுக்கும் நியூ அட்மிஷனுக்கும் என்ன சம்பந்தம்? புரியலை...!"

"இதையெல்லாம் செய்ததால் நீங்க நியூ அட்மிஷன்னுதான் அர்த்தம்... நாங்களும் வருஷா வருஷம் வேற கிளாஸ் போறோம்... எங்களுக்கு இப்படி செய்யறது இல்ல... நாங்க என்ன சொல்றோமோ அதைத் தான் நீங்க செய்யணும்!" எகிறியது மற்றொரு கீச் தொண்டை கொத்தவரங்காய்.

ஒரு பையன் தர்ஷினியைப் பார்த்து, "என்ன செய்யச் சொல்லலாம்... சொல்லு தர்ஷு... அதைச் செய்ய வெச்சு அனுப்புவோம்."

"இவனை முதல்ல கம்பு சுத்த விடலாம்... பின்னாடி அவன் சுத்தறதை வைத்து என்ன செய்யலாம் என்று முடிவு பண்ணலாம்... கொண்டாங்க அந்தக் கம்பை!" என்று ஆணையிட்டாள் தர்ஷினி.

மிரட்டி இந்தக் கூட்டத்தைக் கலைக்க விரும்பாமல், என்னதான் இந்தப் பொடிசுங்க செய்யப் போகுது என்று அங்கேயே நின்று கொண்டிருந்த முரளி, தர்ஷினியின் பேச்சைக் கேட்டு, 'அட நமக்கு கம்பு சுத்தத் தெரியாது... இதுங்க கிட்டே வேற விரும்பியே மாட்டிக்கிட்டோம். அதுவும் கராத்தே யூனிஃபார்ம்ல ஒரு அழுக்குப் பட்டாலும் நமக்குப் பனிஷ்மெண்ட் நிச்சயம். இப்படி ஒரு நிலைமை தனக்கு ஏற்பட்டதே!' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு அங்கு பார்த்தான்.

அதை விட, வந்த கம்பைப் பார்த்து அதிர்ந்தானா அல்லது அவர்கள் எடுத்து வந்த முறையைப் பார்த்து அதிர்ந்தானா என்று ஒரு பட்டிமன்றமே வைக்கலாம் என்னும் அளவில் அதிர்ந்து, அரண்டு பார்த்தான்.

# 5

**எ**ங்கடா கம்பு வருது...? அதை எப்படிச் சுத்துவது என்று யோசித்தவாறு முரளி கம்பு எடுத்து வந்தவர்களை விட, அவர்கள் எடுத்து வந்த கம்பைப் பார்த்து முதலில் அதிர்ச்சி அடைந்தாலும், அதையும் இருவர் சேர்ந்து தூக்க முடியாமல் தூக்கி வருவது போல் பாவனை

செய்ய, அதைப் பார்த்த பொழுது வந்த சிரிப்பை வாய் உள்ளே அடக்கினான்.

கம்பு என்று அவர்கள் எடுத்து வந்தது ஒரு துடைப்பக் குச்சியை. இவர்கள் இதே நிலையில் சென்றால் காலேஜுக்குள் நுழையும் போதே அங்கே இருக்கும் சீனியர்களுக்கு ராகிங் செய்வது எப்படி என்று பாடம் எடுப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான்.

அப்பொழுது அவன் அருகே தர்ஷினியால் கோஸ் மற்றும் நரம்படி என்று அழைக்கப்பட்டவர்கள் வந்து, அந்தத் துடைப்பக் குச்சியைக் கொடுத்து, "இந்தக் கம்பை எங்க யாரு மேலும் படாமல் அந்தப் பக்கமா நின்னு சுத்தணும்... சுத்தற ஆர்வத்துல கம்பை உடைத்து விடக் கூடாது... கையிலே கால்ல போட்டுக்காம ஜாக்கிரதையா சுத்தணும்...!" என்று சொல்லி விட்டு, அங்கே இருந்த சிமெண்ட் பாதையில் அமர்ந்தார்கள்.

சிரிப்புடன் வாங்கி அதைச் சுற்ற ஆரம்பிக்க, "ஏய்! என்ன இது? எங்களுக்கு ஷோ ஏதாச்சும் காட்டுறியா...? நல்லா சுத்து, வேகமா சுத்து!" என்று குரல்கள் கேட்க ஆரம்பித்தன.

"சினிமா எல்லாம் பார்த்து இருக்கேயில்லே... அது போலச் சுத்து... ஒரு கால் தூக்கிச் சுத்து!" என்று ஒரு வாண்டு கத்த, இவன் தூக்கிக் கொண்டு சுத்தும் போது திடீரென்று, "பாம்பு" என்று கத்தியது ஒன்று.

அதைக் கவனித்தவன், காலை நன்றாக ஊன்றாமல் போனதால் பேலன்ஸ் தவறி சேற்றில்

விழுந்தான். அதைப் பார்த்து விட்டு, "ஹோய்..." என்று கத்தி விட்டு, எல்லோரும் தலைதெறிக்க அவ்விடத்தை விட்டு ஓடினார்கள்.

தர்ஷினி எதிரே வந்து கொண்டிருந்த பிரின்ஸ்பால் விவினைப் பார்த்து மெதுவாக நடந்து செல்ல ஆரம்பித்தாள். விவின் அருகே வந்தவுடன், "ஹாய் மிஸ்டர் விவின்!"

"ஹாய் மை டியர் சில்ட்ரன்ஸ்... என்ன செய்யறீங்க எல்லோரும் சேர்ந்து...?"

தர்ஷினி உடனே, "நாங்க சாக்கர் விளையாடினோம் விவின்... எனக்கு ஒரு டவுட் இருக்கு, அதைக் கேட்கலாமா...?"

"ஓ! ஷ்யூர்...!"

"யூனிஃபார்ம் எதுக்கு அரேஞ் பண்றாங்க மிஸ்டர் விவின்?"

"படிக்கிற இடத்தில் அனைவரும் சமம்... இங்கே எந்த வேறுபாடும் கிடையாது என்பதைச் சொல்வதற்காக!"

"எல்லோரும் சமம் என்று சொல்றதுக்காக உண்டாக்கின யூனிபார்ம்லேயே டிபரன்ட் காட்டினா என்ன பண்றது விவின்?"

"எங்கே...? யாரு யூனிபார்ம்ல டிபரன்ட் காட்டினாங்க...? ஆமாம், நீ ஏன் இதைக் கேட்கிறே...? நம்ம ஸ்கூல்ல தான் இந்த யூனிபார்ம் கான்சப்டே கிடையாதே!"

“கிளாஸ் ரூம்ல இல்ல... ஆனா கராத்தேல இருக்கே மிஸ்டர் விவின்... ஜூனியர்ஸுக்கு எல்லாம் ரெட்ல பிளாக் கலர் கராத்தே டிரஸ் கோட், அதே சீனியர்ஸுக்கு வொயிட் வித் பிளாக்... எதுக்கு இந்த டிப்ரன்ட்சியட் விவின்? வி கான்ட் அன்டர்ஸ்டான்ட் திஸ்!”

“டிப்ரன்ட் பண்றதுக்காக இந்த கான்செப்ட் இல்ல... நீங்க சின்னப் பிள்ளைங்க... நல்லா அழுக்காக்கி விடுவீங்கன்னும், அதே சமயம் பெரியவங்களா இருந்தா கேர்ஃபுல்லா இருப்பாங்க என்றுதான் அந்த மாதிரி டிரஸ் கோட் செய்து இருக்காங்க.”

“விவின், அங்கே பாருங்க!” என்று காட்ட, ஒரு கையில் இவர்களை அடிக்க ஒரு குச்சியும் இன்னொரு கையில் அவர்கள் அங்கு விட்டுவிட்டு வந்த பந்தை யும் கையில் எடுத்துக் கொண்டு கராத்தே யூனிபார்ம் முழுவதும் சகதியை அப்பியபடி முரளி வந்து கொண்டு இருந்தான்.

“நீங்க சொன்னீங்களே... அங்கே பாருங்க, அந்த சீனியர் எங்க கிட்டே இருந்து சாக்கர் பாலைப் பிடுங்கி விளையாடி, வொயிட் கராத்தே டிரஸ்ல எப்படி மட் ஆகிட்டு வராங்க... நாங்களெல்லாம் கராத்தே முடிந்தவுடன் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டுத்தான் விளையாடப் போவோம்...”

“உங்களுக்கு எல்லாம் இருக்கிற விவரம் இன்னும் அவனுக்கு வரலை... நான் ஏன் என்று கேட்கிறேன்... பை டியர்ஸ்!” என்றவர், முரளியைப் பார்த்து,

"என்னை வந்து ரூம்ல பாரு!" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

ஒரு மணி நேரம் கழித்து முரளி தன் ரூமுக்குச் சென்று தன்னுடைய பொருட்களைச் சேகரித்தான். அதைப் பார்த்த ரமணன், "என்னடா முரளி, எங்கே கிளம்பிட்டே? ஊருக்கா?"

"நீ வேற வயித்தெரிச்சலைக் கிளப்பாதே...! இந்த பொம்மக்காவாலே என்னை டிஸிப்ளினரி செல்லில் தூக்கிப் போட்டுட்டாங்க... நான் அங்கே போகணும். இன்னும் ஒரு மாசத்துக்கு அங்கேதான் இருக்கணும்."

"என்னது? டிஸிப்பிளினரி செல்லுக்காக? ஏன்டா, என்ன தப்பு பண்ணினே?"

நடந்த எல்லாவற்றையும் சொல்ல,

"பிரின்ஸ்பாலும், கராத்தே மாஸ்டர் குல்சினியாவும் என்னைப் பேசவே விடலை. அந்தப் பொம்மக்கா சொல்றதுதான் பெரிசா இருந்து இருக்கு... அவ சொன்னதை வெச்சு என்னைப் பனிஷ் பண்ணிட்டாங்க!"

"ஆமாம்... நீ யாரைப் பொம்மக்காங்கிறே? எனக்கு ஒண்ணும் புரியலை... முதல்ல அதைத் தெளிவாச் சொல்லு."

"நம்ம சின்ன வயசுல இருக்கும் போது பிளாஸ்டிக்ல ஒரு பொம்மை வைத்து இருப்போம் இல்ல... தலைமுதல் கால் வரை ஒரே கலர்ல இருக்குமே... அந்தப் பொம்மை

மாதிரியே ஒரே கலர்ல இருக்கிற தர்ஷினியைத்தான் சொன்னேன்டா."

"ஓ! அந்த ஆர்வக் கோளாறா...? போயும் போயும் நீ அவ கிட்டேயா மாட்டினே? ஆமாம், அவளுக்கு ஏன் உன் மேலே இவ்வளவு காண்டு?"

"என்னது, ஆர்வக் கோளாறா? புரியலையே...! ஆமாம், எல்லா டீச்சர்ஸும் அவளை எப்படி இவ்வளவு சப்போர்ட் பண்றாங்க?"

"உனக்குத் தெரியாதா? போன வருஷம் சயின்ஸ் கார்னிவல் அப்போ நீ இல்லையா?"

"இல்லடா... எங்கம்மாவுக்குக் கிட்னி ஸ்டோன் ஆபரேஷன்டா அப்போ... அதனால நான் டெல்லிக்குப் போயிருந்தேன்."

"போன தடவை சயின்ஸ் கார்னிவலுக்கு இஸ்ரோ விலிருந்து ஒரு சயின்டிஸ்ட் வந்தார். ஒவ்வொரு ஸ்டாலிலும் நின்னு, அது ஏன் இப்படி? இது எப்படி? என்று ரொம்ப நோண்டினார். அதுவும் பாட்டனி ஃபாஸ்ட்டு அது முடிந்த உடனே அவர்கிட்டே நாம கேள்வி கேட்கலாம். சொன்னவுடனே இவளும் எந்திருச்சு ஒரு கேள்வியைக் கேட்டா பாரு...

" 'நிலா இங்கே இருந்து பார்க்கும்போது வட்ட மாகத்தானே தெரியுது. ஏன்? அது வேற வடிவத்துல இருக்கக் கூடாதா? நாங்க இங்கே இருக்கிற ஸ்பேஸ் சென்டர் போனப்போகூட பார்த்தோம். எல்லா பிளானட்டும்

ரவுண்ட் சேப்ல தான் இருக்கு. ஆனா ஸ்டார்ஸ் மட்டும் அன்ஈவன் சேப்ல தான் இருக்கு. இந்த சேப்தான் ஒரிஜினலா இல்ல பேஃக்கா...? இந்த குவஸ்டினை நான் ஏற்கெனவே எங்க டீச்சர் கிட்டே கேட்டேன். அவர்தான் உங்களை மாதிரி ஒரு சயின்டிஸ்ட் தான் என்னோட குவஸ்டினுக்குப் பதில் சொல்ல முடியும்னு சொல்லிட்டார்!' என்று சொல்ல,

அந்த சயின்டிஸ்ட் ஒண்ணுமே பதில் சொல்ல முடியாமல் திருப்பி இவளைப் பார்த்து, "நீங்க என்ன ஸ்டான்டர்டு படிக்கிறீங்க...?" என்று கேட்க, இவள் விவரம் சொன்னவுடன்...

அந்த சயின்டிஸ்ட் இவளைப் பார்த்துச் சிரித்த படியே, "இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்றதை விட, நீயே நாளைக்கு சயின்டிஸ்ட் ஆகி ஸ்பேஸுக்குப் போய்த் தெரிஞ்சுக்கோ...!"

சொல்லிவிட்டு, கார்னிவலை சுற்றி மட்டும் பார்த்து விட்டு, யார்கிட்டேயும் எந்தக் கேள்வியும் மேற்கொண்டு கேட்காமல், நம்ம டீச்சர் எல்லாரையும் பார்த்து நல்லாச் சொல்லிக் கொடுப்பதாகப் பாராட்டி விட்டு... அதுவும் குறிப்பாக, இவ இவ்வளவு அறிவா கேள்வி கேட் கிறான்னா அதுக்குக் காரணம் டீச்சர்ஸ் நல்லா சொல்லிக் கொடுக்கிறதுதான் என்று சொல்லி விட்டுப் போயிட்டார்.

"அதுதான் இதுக்கு ஓவர் செல்லம். நம்ம பசங்களும் என்ன வால்தனம் அவ பண்ணினாலும்

கண்டுக்காம டீச்சர்ஸ்கிட்டே கொண்டு போகாம விட்டு விடுவோம். ஆமாம், அவ எதுக்கு உன்னைத் தேவையில்லாமல் போட்டுக் கொடுத்தா? நீ ஏதாவது அவளைப் பத்தி டீச்சர்ஸ் கிட்டே போட்டுக் கொடுத்தியா?"

யூஎன்ஓ தினத்தன்று நடந்ததையும், அதற்கு இவன் தேவசாகரி டீச்சரிடம் சொன்னதையும் சொன்னான்.

"இப்ப நான் ரூமுக்கு வரும்பொழுது அங்கே ஓரமா நின்று கொண்டு 'இவன் என் லிஸ்ட்ல இல்லை... ஆனா தானா வந்து சிக்கிட்டான். இன்னிக்கு வெச்சு இருக்கிற சூப்பே போதும்னு நினைக்கிறேன். அடுத்த தடவை என் லைன்ல கிராஸ் பண்ணினா அடிச்சு பொரிச்சு சாப்பிடுவேன்' என்று அவ அடிப்பொடிகளோடு வம்படிச்சுட்டு இருந்தா... நானும் இந்தச் சின்னப் பொண்ணு என்னால் பெரிய ஆள் என்று அவங்க க்ரூப்கிட்டே காட்டிக்கட்டுமே என்று சும்மா காதுல விழாத மாதிரி வந்துட்டேன்."

"நீ இதைப் போட்டுக் கொடுத்ததுக்கா அவ இவ்வளவு காண்டு ஆனா? இருக்காதே, வேறே ஏதாவது இருக்கும்."

"அவ காண்டு ஆகறதுக்கு மெயின் ரீசனே வேற. நான் போய்ப் போட்டுக் கொடுத்ததும் தேவசாகரி டீச்சர் அவளைத் தன்னோட கண்காணிப்பின் கீழ் எடுத்த போது தான் தெரிந்து இருக்கு... சண்டே அன்னிக்கு மாஸ்க்குப் போகாம எழுப்பி விடறவங்க கிட்டே நான் ஒரு இந்துன்னு சொல்றதும், வெள்ளிக்கிழமை எழுப்பினா நான் ஒரு

கிறிஸ்டியன்னு சொல்லி ரிலிஜியஸ் கிளாஸ் அட்டன் பண்றது இல்லையாம்.

"அது தவிர இந்தம்மா காய்கறி கீரை எல்லாம் சாப்பிட மாட்டாங்களாம். நான்–வெஜ்தான் சாப்பிடுவாங் களாம். அதனால இவளோட காய்கறி வேற யாராவது சாப்பிட, அவங்க பங்கு நான்–வெஜ்ஜையும் இவ முழுங்கி கொழுக்குமொழுக்குன்னு இருக்கிறதை டீச்சர் கண்டுபிடிச்சு, அதற்கு எல்லாம் வழியில்லாம டைட் பண்ணிட்டாங்க. அந்தக் கடுப்பைத்தான் இப்படிக் காட்டிட்டா தர்பூஸ்!" என்று ரசனையுடன் சிரித்தபடிச் சொன்னான்.

டிஸிப்ளினரி செல்லுக்குத் தன்னைப் போகும்படி ஆக்கியவளின் மேல் கோபம் கொள்ளாமல், சிரித்தபடி தன்னுடைய பொருட்களை அடுக்கும் நண்பனின் செயலை ஆச்சரியமாகப் பார்த்தான் ரமணா.

**ப**ல மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் தர்ஷினியை டாமில் இருக்கும் டீச்சர் அழைத்துக் கொண்டு செல் வதைப் பார்த்த முரளி பின்னோடு சென்றான்.

ஸ்கூல் காம்பஸ்க்குள் இருக்கும் சர்ச்சில் நுழைந்த டீச்சர், அங்கு பாட்டு டீச்சர் கிரேஸியும், பாதர் மெகர்மனும் இசையைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தவர்களிடம்...

"கிரேஸி டீச்சர், இந்தப் பொண்ணு பாடறதைக் கேளுங்களேன். நான் இந்தப் பாட்டைக் கேட்கும் போது ஒரு தடவைதான் இவ கேட்டா... அப்படியே அதுல வந்த மாதிரியே பாடுறா டீச்சர்."

பாதர், தர்ஷினியைப் பாடச் சொல்ல...

"என்னை ஆளும் மேரி மாதா
துணை நீயே மேரி மாதா"

என்ற பாடலை அப்படியே அவள் கேட்டது போல் பாடி முடித்தாள்.

கிரேஸி டீச்சர், "பாதர், அப்படி விப்ரட்டோ, சஸ்டெயின் நோட்ஸ், லோயர், அப்பர் நோட்ஸ், கமகம் எல்லாமே பெர்பெக்டா வருது... இவளுக்குக் கொஞ்சம் டிரெய்னிங் கொடுத்தா போதும்... சூப்பரா வருவா."

"சரிம்மா, நானும் கவனிச்சேன்... நீங்க என்ன செய்றீங்கன்னா, நம்ம பிரேயர் சாங் பாடற ட்ரூப்ல இவளை முன் வரிசையில் போட்டு விடுங்க... நல்லா பிராக்டீஸ் பண்ண வைங்க... காட் பிளஸ் யூ மை சைல்ட்," என்று சொல்லி விட்டுக் கிராஸ் செய்து விட்டுச் சென்றார்.

இதைப் பார்த்த முரளி, அன்று முழுவதும் பார்க்கும் எல்லோரிடமும் தான் ஏதோ சாதனை செய்தது போலச் சொல்லிக் கொண்டு திரிந்தான். அவன் அம்மாவுக்கு மட்டும் அன்று மூன்று தரம் போன் செய்து இந்த விஷயத்தைச் சொன்னான்.

**மு**ரளி பன்னிரண்டாம் வகுப்பிலும் தர்ஷினி ஆறாம் வகுப்பிலும் இருந்தார்கள். ஒருநாள் இவன் டாமைத் தேடி வந்த ஹெல்பர், இவனை கெஸ்ட் அழைப்பதாகச் சொல்ல... டாமுக்கு வெளியே சென்று பார்த்தான், அங்கே

ஆணும் பெண்ணுமாக நடுத்தர வயதில் இருவர் நின்று கொண்டு இருந்தனர்.

ஆள் பார்ப்பதற்கு நன்றாக ஆஜானுபாகுவாக மாநிறத்துடன், கூட இருந்த பெண்மணி நாகரிகமான உடையில் அடர் கறுப்பில் இருந்தார்.

'இவர்கள் யார், தன்னைப் பார்க்க வந்து இருக் கிறார்கள்?' என்ற சந்தேகத்துடன் அருகில் செல்ல, இவனைப் பார்த்து விட்டு அந்தப் பெண்மணி,

"உங்க பேர்தான் முரளியா தம்பி...? நாங்க சுபாவோட அம்மா அப்பா. நல்ல வேளை தம்பி, அவளை யார் கிட்டேயும் மாட்டாமல் காப்பாத்தியிருக்கீங்க!" என்க,

இவனுக்கு, அவர்கள் யார்? என்ன சொல்கிறார்கள் என்று முதலில் புரியவில்லை என்றாலும், "நான்தான் முரளி. ஆனால், நீங்க சொல்ற சுபாதான் யாருன்னு தெரியலை!" தன்னிலை விளக்கமளிக்க...

"சுபபிரியதர்ஷினி, தேவசாகரி டீச்சர் கிட்டே சொல்லி, யார் கிட்டே எப்படிப் பழகணும்னு கத்துக் கொடுக்கச் சொன்னீங்களாமே... அவளை வீட்டுல சுபா என்று கூப்பிடுவோம்." வந்திருந்த ஆண் தங்களின் பெண்ணைப் பற்றிச் சொல்ல,

'ஓ...! பொம்மாக்காவோட பேரண்ட்ஸா நீங்க?' என்று மனதில் நினைத்தவன், வெளியில் அவர்களைப் பார்த்து முறுவலித்து விட்டு,

"இங்கே அவளைக் கூப்பிடறது தர்ஷினின்னு... நீங்க சுபான்னு சொல்லவும் யாருன்னு தெரியலை. சாரி அங்கிள்."

தர்ஷினியின் அம்மா, "தம்பி, நீங்க அவளுக்கு ஒரு அண்ணனைப் போல இருந்து, என்ன செய்யணும் என்று யோசிச்சு செய்து இருக்கீங்க. ரொம்ப நன்றி," என்க,

'என்னது...? பொம்மக்காவுக்கு நான் அண்ணனா?' என்று அதிர்ச்சியாக மனதிலே கேள்வி கேட்க, அதையே வெளிப்படையாகக் கேட்டது ஒரு குரல்,

"என்னது...? இவன் எனக்கு அண்ணனா?"

இவன் திரும்பிப் பார்க்கத் தன் இடுப்பில் கையை வைத்து அவளின் அம்மாவைப் பார்த்து முறைத்துக் கொண்டே, "செபஸ்டியன்... நீ செலவு பண்ணி இந்த செல்வராணியை ஆடிட்டருக்குப் படிக்க வெச்சது வெறும் தண்டம். இன்னும் இவ ஈத்தாமொழியை விட்டுத் தாண்டலை... வயசுக்குச் சின்னவனா இருந்தா தம்பி, பெரியவனா இருந்தா அண்ணன்னு கூப்பிடறதை உன்னோட வெச்சுக்கோ. எனக்கு எல்லாம் சொல்லித் தராதே. என்ன, புரிஞ்சுதா?" தந்தையிடம் தொடங்கி, தாயிடம் முடித்தாள் தர்ஷினி.

"வாடி, வாயாடி வட்டிக்கழுதை... அம்மையையும் அப்பனையும் பேர் சொல்லி மரியாதை இல்லாம கூப்பிடுறே... எல்லாம் இந்த மனுஷரு உனக்குக் கொடுக்கிற செல்லம்."

"வயசுல மூத்த, இல்லைன்னா இளைய ஆம்பிளைகளை எப்படிக் கூப்பிடுறது...?"

"ஏன், பேரு இருக்குதுல்ல...? அதைச் சொல்லிக் கூப்பிடு."

"இரு, நான் போகும் போது தேவசாகரி மதனி கிட்டே சொல்லிட்டுப் போறேன்."

"என்னன்னு உங்க மதனி கிட்டே சொல்லுவீங்க...? வயசுக்கு மூத்த ஆம்பிளைகளை அண்ணன்னு சொல்லிக் கூப்பிடணும்னா. இரண்டு அடி வாங்கிக்குங்க. அவங்கதான் எனக்குச் சொல்லிக் கொடுத்தது... அப்படிக் கூப்பிடறதா இருந்தா உடன்பிறந்தவனைத் தவிர அந்த வார்த்தையை யாருக்கும் சொல்லாதே. நீ அண்ணனாக நினைக்கலாம்... ஆனால், அவங்க அப்படி நினைக்கணு மில்லே? அதனால் சும்மா பேர் சொல்லிக் கூப்பிடுன்னு."

"சரி, சரி. அம்மையும் மக்களுமா சண்டை போடாதீங்க... நம்ம வழக்கை அப்புறமா வெச்சுக்கலாம். பாருங்க முரளி, உங்க சண்டை பார்த்து சடவுறார் இல்ல...!" என்று இடையில் புகுந்து சமரசம் செய்தார் தர்ஷினியின் அப்பா.

"இவ பேரு இவாஞ்சலின் செல்வராணி. நான் மேத்யூ செபஸ்டியன் ராஜபாண்டியன். சென்னையில் ஹோட்டல் வெச்சு நடத்திக்கிட்டு இருக்கோம். சென்னை யில் சுபா இன்ஸ் பைவ் ஸ்டார் ஹோட்டலும், மகாபலிபுரத்துல இதே பேருல ஒரு த்ரீ ஸ்டார் ஹோட் டலும் இருக்கு. இப்பதான் ஈஸிஆர் ரோடு பக்கத்துல உத்தண்டியில் ஒரு 5 ஏக்கர் வாங்கி பிரைவேட் பீச்சோட ஒரு ரிசார்ட் கட்டி இருக்கோம்.

"எங்க ஹோட்டல் ஆடிட்டர் என் மனைவிதான். எங்களோட ஒரே பொண்ணு, வீட்டு மகாராணியான இவளைப் பத்தி நீ தெரிஞ்சுக்கணுமே என்று சொன்னேன். என்னடா, முதலில் பார்த்தவுடனே எல்லாத்தையும் ஒப்பிக்கிறார் என்று தப்பா நினைக்காதே தம்பி."

மரியாதைக்காகத் தன்னைப் பற்றியும் சொல்லியாக வேண்டி இருப்பதால், இவனும் தன் குடும்பத்தைப் பற்றி விளக்கினான்.

"எங்க அப்பா அம்மா மீடியாவில் இருப்பதால், எப்போ வீட்டுக்கு வருவாங்க என்று தெரியாது. அதனால் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்துட்டாங்க. நீங்க ரெண்டு பேரும் நிர்வாகம் செய்யற வேலை தானே...? இவளை ஏன் இங்கே கொண்டு வந்து விட்டிருக்கீங்க? சென்னையில் இல்லாத ஸ்கூலா...?" என்று கேட்க,

"இல்லப்பா... எங்களுக்கு வீடுன்னு ஒண்ணு நாங்க சென்னையில் கட்டவேயில்லை. எங்களுக்கு எங்க ஹோட்டல்லேயே இருக்கிற சூட்ல தங்கிடுவோம். அங்கே இவளை வெச்சுக்க முடியாது. அதனால்தான் இங்கே சேர்த்தோம். லீவ் விட்டா எங்க சொந்த ஊர் நாகர்கோவில் பக்கத்துல ஈத்தாமொழி அருகில் இருக்கும் ஆண்டவர் தோப்பு என்கிற கடற்கரை ஓரக் கிராமம்...

"அங்கே இவாஞ்சியோட அம்மா, அண்ணன், தம்பி இருக்கிறாங்க. ஈத்தாமொழி வீட்டுல எங்கப்பா இருக்கிறாரு. அங்கே போயிடுவா... இப்பதான் திருவான்மியூர் கிட்ட ஒரு

இடம் வாங்கிப் போட்டு இருக்கேன். இன்னும் ஒரு ரெண்டு வருஷத்துல கட்டிடுவேன்.”

“ஹை அப்பா! நாம வீடு கட்டப் போறோமா...? அப்படின்னா வீடு கட்டி முடிச்சா, உடனே நான் அங்கே படிக்க வந்துடலாமாப்பா...?”

“இல்லம்மா... உன் படிப்பு முடியுற வரைக்கும் இங்கே தான்டா மக்களே...! லீவுக்கு வீட்டுக்கு வரலாம்டா. அப்பா அம்மா, முத்தச்சா, உங்க கூட இருப்பாங்க. அப்பாவும் ஊர்ல இருக்கும் வீட்டுக்கு வந்து இருப்பேன். சரியா...?”

“ஓ...! அப்படியா? அப்பா, பெரிய வீடா கட்டுப்பா. கார்டன் வைக்கணும்ப்பா... அந்த கார்டன்ல ஒரு ஊஞ்சல் போடுப்பா... நான் நம்ம வீட்டுக்கு வரும்பொழுது எனக்கு மட்டும் ஒரு சர்வன்ட் வேணும்...!”

“உனக்கு மட்டும் தனியா ஒரு சர்வன்ட் எதுக்கு மக்களே...?”

“அதுவா அப்பா... கார்டன்ல ஸ்விங் போடுறேல்ல... அதுலே நான் உட்கார்ந்து ஆடும் போது அந்த ஸ்விங்கை ஆட்டி விடத்தான் அந்த சர்வன்ட்.”

“அந்த வேலையை நான் உனக்கு செய்வேன் சுபா மக்களே... அப்புறம் எதுக்கு ஒரு சர்வன்ட்?”

“அப்பா, நீங்க வீட்டுல இல்லாதபோது யார் எனக்கு ஆட்டுவாங்க... அதுக்குத்தான்ப்பா...!”

"என் சுபா மக்களுக்கு இல்லாததா? செய்துட்டாப் போச்சு...!" தர்ஷினியின் அப்பா சொன்னவுடன்...

"அங்கிள்! நான் நினைச்சேன், இவ பேசுறதைக் கேட்கத்தான் ஒரு சர்வன்ட் கேட்கிறாளோன்னு... இவ மட்டும் அப்படிக் கேட்டா, டெய்லி ஒரு சர்வன்ட் நீங்க தேட வேண்டி இருக்கும்!" என்று சொல்லிச் சிரித்தான் முரளி.

செபஸ்டியன் சிரித்துக் கொண்டே முரளியைப் பார்த்து, "மேற்கொண்டு என்ன படிக்கப் போறீங்க...?" என்று கேட்க,

"நான் யு.எஸ். போய் ஜர்னலிசம் படித்துவிட்டு வந்து இங்கே எங்க பத்திரிகையைப் பார்த்துக்கப் போறேன். அப்படியே எங்க பத்திரிகையோட நியூஸ் சேனல் ஒண்ணு ஓபன் பண்ணப் போறேன்..."

"வாவ்! குட் ஐடியா...!" தர்ஷினி இடையிட்டு,

"நான் எங்கப்பா மாதிரி ஹோட்டல் பத்திப் படிக்கப் போறேன். அதைப் படிச்சுட்டு எங்க ஹோட்டலை எங்கப்பா மாதிரியே பார்த்துப்பேன். அப்போ நான் உன்னோட சேனலுக்கு அட்வர்டைஸ்மெண்ட் தரேன். எனக்கு அதுல 50% கன்சஷன் தருவியா...?"

"என்னது, 50% கன்சஷனா? நீ நல்ல பிஸ்னஸ் வுமன்தான். அங்கிள், நீங்க வெச்சிருக்கிற ஹோட்டலை இவ கிட்டே விட்டீங்க, கண்டிப்பா பெரிய லெவல்ல செயின் ஆஃப் ஹோட்டல் குரூப்ஸா மாத்திடுவா. கவலையே படாதீங்க!" என்று சொல்ல, நால்வரும்

சிரித்தனர்.. சிறிது நேரத்திற்குப் பின் முரளி விடைபெற்று, தர்ஷினியின் அம்மா அப்பாவுடன் அவள் தனியாகப் பேச இடமளித்துச் சென்றான்.

அதன் பிறகு முரளி படிப்பில் அதிகக் கவனமாக இருந்ததால், தர்ஷினியைப் பார்க்க முடியவில்லை. பல மாதங்களுக்குப் பிறகு தர்ஷினியின் அப்பா இறந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டான்.

ஆறுதல் சொல்வதற்குப் போகலாம் என்ற பொழுது எக்ஸாம் தொடங்கியது. அதை முடித்து விட்டுச் சென்ற பொழுது அவளுக்கு எக்ஸாம் நடந்து கொண்டிருந்ததால், சந்திக்க முடியாமல் சென்றான்.

**சி**ல நாட்களுக்குப் பிறகு முரளியின் அம்மா அப்பா மூவரும் சேர்ந்து குலதெய்வ கோவிலுக்குச் சென்று விட்டு வரும் வழியில் உளுந்தூர்பேட்டைக்குப் பக்கத்தில் இருக்கிற எடகல்லில் உள்ள அன்னை சாரதா தேவியின் ஆசிரமத்திற்கு முரளியின் அம்மா சென்றதால், சிறிது தூரம் தள்ளியிருந்த ஒரு மோட்டலில் முரளியின் அப்பா ஹரிஹரனும் மற்றும் அந்த விழுப்புர மாவட் டத்தில் பணிபுரியும் நிருபர்களுடனும் ஏஜெண்ட்டுகளுடன் இவனும் நின்று பேசிக்கொண்டு இருந்தான்.

அப்பொழுது அங்கு நின்ற ஒரு சுமோ வண்டியில் இருந்து ஒரு பெண்மணியும் ஒரு சிறு வயதுப் பெண்ணும் கையில் ஒரு மீடியம் சைஸ் ஹான்ட் பேக்குடன் அங்கு இருந்த முள்காட்டினை நோக்கிச் செல்வதைப் பார்த்தான்.

அவர்கள் உள் பக்கமாகத் திரும்பும் போது பார்த்தால், அது தர்ஷினியும் அவளது அம்மாவும் போல் இருந்ததால், அவர்களை நோக்கி நகரத் தொடங்க...

அவனின் அப்பா, "முரளி, எங்கே போறே? இந்தா, இந்த பேஜர், செல்லுலார் வைச்சுக்கோ. சிக்னல் சரியாகக் கிடைக்காது. கூலர்ஸ் போட்டு இருக்கியா? ஜாக்கிரதை," என்க,

சரி என்று விட்டு அவர்களை நோக்கி நடந்தான். அவர்கள் இருக்கும் இடம் நோக்கிச் சென்று பார்த்தால், அங்கே தர்ஷினியும் அவளின் அம்மாவும்தான் இருந்தார்கள்.

ஆனால், அங்கு கண்ட காட்சி, தர்ஷினியின் அம்மாவே அவர்களின் துப்பட்டாவை எடுத்துத் தர்ஷினியின் கழுத்தில் போட்டுச் சுற்றி நெறித்துக் கொண்டு இருந்தார். அவன் நடப்பதை நம்பவும் முடியாமல், என்ன செய்வதென்று தெரியாமல் அதிர்ந்து விழித்துக் கொண்டு நின்றான்.

## 6

**டொக்**... டொக் என்ற சத்தம் கேட்டதில், பதறித் தன் நினைவலையில் இருந்து மீண்டான் முரளி.

மீண்டும் டொக்... டொக் என்ற சத்தம் கேட்கத் தன் வீட்டின் கதவோ என்று நினைத்துப் போய்த் திறந்து பார்த்தான். அங்கே யாரையும் காணவில்லை.

ஆனால், டொக் டொக் என்ற சத்தம் மட்டும் இடைவிடாமல் கேட்டது. எங்கு என்று தேடிய போதுதான் தன் பெட்டின் சைட் டேபிளில் வைத்திருந்த அமெரிக்க எண் உள்ள மொபைலில் இருந்து இந்தச் சத்தம் வந்து கொண் டிருந்தது.

போன் கட் ஆகி மீண்டும் அடிக்க, எடுக்கும் அவசரத்தில் அது ஸ்பீக்கர் மோடுக்குச் சென்றது.

அந்தப் பக்கம் பவானிதான் அழைத்தார்.

"என்ன விஷயம் அக்கா...?"

"எத்தனை தடவை நான் உனக்குப் போன் செய்யறது...? இப்படி எடுக்காம என்ன பண்ணிக்கிட்டு இருக்கே அங்கே...?"

"சாரி அக்கா... யார் ரிங் டோன் மாத்தி வெச்சதுன்னு தெரியலை. மொபைல் சவுண்டு வேற மாதிரி வந்துச்சா, அதுதான் எடுக்க லேட் ஆயிடுச்சு"

"இந்துவுக்கு நல்ல காய்ச்சல்... எந்த மாத்திரை கொடுத்தும் சரியாகலை. அவளுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துடுமோன்னு என்னவோ பயமா வேற இருக்கு. என்ன செய்ய...?"

"எப்படிக் காய்ச்சல் வந்தது...? நாலு நாளைக்கு முன்னாடி கூட மால்ல பார்த்தேனே, நல்லாத்தானே இருந்தா. அதுக்குள்ளே என்னாச்சு?"

"எனக்கு ஒண்ணும் புரியலை. நேத்திக்கு அய்யாவைப் பார்க்கப் போறேன்னு சொல்லிட்டு மன்சூர்

கூட்ப் போயிட்டு வந்தா. வந்தப்பவே முகம் சரியில்லை. என்னன்னு கேட்டதுக்குத் தலைவலின்னு சொன்னா. சரியாப் பேசலை, சாப்பிடலை. நம்ம அம்மா போட்டோவை வெச்சுக்கிட்டுப் பார்த்துக்கிட்டு ஏதோ யோசனையா இருந்தா. இன்னிக்குக் காலையில இருந்து நல்ல காய்ச்சல் இருக்கு. இப்போ ரொம்ப துவண்டு போயிட்டா. என்ன செய்ய?"

"அக்கா, நீங்க அவளைக் கூட்டிக்கிட்டு நம்ம இந்திரா நகர் வீட்டுக்கு வந்திடுங்க... அங்கேதான் இவளோட மெடிசன் எல்லாம் இருக்கு. பார்த்துக்கலாம், வாங்க. யாரையும் கூட கூட்டிக்கிட்டு வராதீங்க. நீங்களே அவளை அழைச்சுக்கிட்டு செல்ப் ட்ரைவ்ல வாங்க. நீங்க அங்கே வர்றதுக்குள்ளே நானும் வந்துடறேன்!"

போனை அணைத்து விட்டு அவசரமாக வேறு உடுப்புக்கு மாறி, பைக் சாவியை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டுத் தங்களின் அடையாறு இந்திரா நகர் வீட்டை நோக்கித் தன்னுடைய அப்பாச்சியை விட்டான்.

இவன் இந்திரா நகர் வீட்டிற்குள் நுழைந்த சிறிது நேரத்தில் மாருதி ஆல்டோ கேட் அருகே வந்து தயங்கி நிற்க, முரளி கூர்க்காவிடம் சைகை செய்ய, கேட் திறக்கப் பட்டவுடன் வேகமாகத் தன் முக விளக்குகளின் மூலம் ஒளி வெள்ளத்தை வீட்டுக்குள்ளும் போர்டிகோவிலும் பாய்ச்சியபடி உள்ளே நுழைந்து, போர்டிகோவில் இவன் அப்பாச்சியின் அருகே தயங்கிப் பின் தேங்கி நின்றது.

முரளி வேகமாக வந்து காரின் பின்பக்கக் கதவைத் திறந்து, அந்த சீட்டில் மயங்கிக் கிடந்த இந்துவைத் தன் இரு கரங்களில் ஏந்தி, நெஞ்சோடு அணைத்தவாறு வீட்டிற்குள் எடுத்துச் சென்றான்.

சில மருந்துகள் இந்துவின் உடம்பிற்குள் சிரிஞ்ச் மூலமாகச் செலுத்தப்பட்டது. இரண்டு மணி நேரம் சென்ற பிறகு பவானி, முரளியிடம்,

“எவ்வளவு நேரம்தான் மடியிலேயே வெச்சு இருப்பே...? கால் மரத்துப் போகப் போகுது. நீ அவளை மெத்தையில விடு!” என்று சொன்னபிறகுதான் மெத்தை யில் விட்டான்.

“அக்கா, காலையில் சீக்கிரம் எழுந்து இவளை அவ வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போகணும். நீங்க படுங்க, நான் இந்த சோபாவிலே இருக்கேன்.”

மறுநாள் காலை 4 மணிக்கு எழுந்து பார்க்கும் போது இந்துவிற்கு நன்றாகச் சூடு இறங்கி இருந்தது. பவானி கை வைத்துப் பார்த்ததும் விழித்துக் கொண்டாள். எழுந்து அமர்ந்து சுற்று நோக்கியவளை,

“எப்படி இருக்கும்மா? வீட்டிற்குப் போலாமா?” என்றதற்கு, மறுத்துத் தலையசைத்தவள்,

“இல்லை... நான் அங்கே வரமாட்டேன். இங்கே முரளி கூடத்தான் இருக்கப் போறேன். நீங்க வேணு மின்னா போங்க.”

"என்ன இந்து... உன்னை டாக்டர் கிட்டே கூட்டிக் கிட்டுப் போனப்ப டயம் ஆயிடுச்சு... அதனால் முரளி இங்கே அழைச்சுட்டு வந்தான். நீ டாக்டரோட க்ளினிக்ல அப்சர்வேஷனில் இருக்கிறதாகச் சொல்லி இருக்கேன். இப்ப வீட்டிற்கு வரமுடியாதுன்னு சொன்னா எப்படிம்மா...? நான் உங்க வீட்டு ஆளுங்களுக்கு என்ன பதில் சொல்வேன்?" பவானி, இந்துவின் பேச்சைக் கேட்டுப் பதறினாள்.

முரளி எழுந்து வந்து, "தர்ஷினி, இப்ப நீ வீட்டுக்குப் போ... போட்டி ஆரம்பிச்சா நாம இரண்டு பேரும்தான் சேர்ந்து பாடப் போறோம். அப்போ நான் உன் கூடவே உன் வீட்டில் வந்து தங்கி இருக்கேன், போதுமா? நான் கூட இப்போ இங்கே இல்லை... அப்பாதான் இருக்கார். அவர் எந்த நேரத்திலேயும் இங்கே வரலாம். வந்தால் எனக்குத்தான் திட்டு விழும். நீ இப்ப கிளம்பு."

"சத்தியமா நீங்க என் வீட்டுக்கு வந்துடுவீங்களா முரளி?"

"நான் சொன்னபடி நீ இப்போ நடந்தா கண்டிப்பா உன் கூடவே வந்துடறேன். இது அம்மா மேலே சத்தியம். இப்போ அக்காவோட கிளம்பு... ஆமாம், உனக்கு எப்படி திடீர் ஜுரம் வந்தது?" என்று விசாரிப்பில் இறங்,

தலையைச் சரித்துக் கண்ணையும் கைகளையும் விரித்து, "அதிகம் இல்லை... அரை கிலோ கஸாட்டா ஐஸ்கிரீம் சாப்பிட்டேன். அவ்வளவுதான்!" குறும்புச் சிரிப்போடு சொன்னாள் இந்து.

"ஏய் வாலு... இன்னும் இரண்டு வாரத்துல போட்டி இருக்கு தெரியுமிலே... அதுக்குத் தொண்டை நல்லா இருக்கணும். உனக்குத் தெரியாதது இல்லை, பார்த்துக்கோ. அவ்வளவுதான் சொல்வேன்."

"என் தொண்டைக்கு என்ன...? அது நல்லாத்தான் இருக்கு. வேணுமின்னா ஒரு சின்ன சாம்பிள் பார்க்கி றீங்களா...?" முரளியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே தன் நாவால் உதட்டை ஈரப்படுத்தியபடி,

"நான் கொடுத்ததைத் திருப்பிக் கொடுத்தா
முத்தமாக் கொடு, அதை மொத்தமாக் கொடு!
சின்னக் கண்மணி என் செல்லக் கண்மணி!"

என்று பாட... முரளி கையை உயர்த்திப் போதும் என்று காட்டி விட்டுப் பவானியிடம் திரும்பி, "அக்கா, டைம் ஆகுது. சீக்கிரம் கிளம்புங்க!" என்று அவசரப்படுத்தினான்.

அவர்கள் இருவரும் கிளம்பியதும் மென்னகை படர்ந்த முகத்துடன் தன் அப்பாச்சியை எடுத்துக் கொண்டு தன் இடம் நோக்கிச் சென்றான்.

ஒரு வாரம் சென்ற பிறகு ஹரிஹரன் போன் செய் தார். "நம்ம இந்திராவுக்குக் கார் வேணும்னு சொல்றா... அவ சொல்ற காரணங்கள் நியாயமா இருக்கு. எந்த மாடல் கார் வாங்கலாம், என்ன மேக் வாங்கலாம் என்று சொல்லு முரளி."

“அப்பா, அவளுக்கு நீங்க ரொம்பச் செல்லம் கொடுக்கறீங்க... இப்போ எதுக்கு அவளுக்குக் கார்...? அதெல்லாம் தேவையில்லை... அவ அவளோட மாமா கார்ல போயிட்டு வரட்டும்,” என்று படபடத்தான் முரளி.

“சும்மா இரு முரளி, புரியாம பேசாதே... எனக்குத் தெரியும் என்ன செய்யறதுன்னு...!” ஹரிஹரன், முரளியை அடக்கினார்.

அது கான்ஃபரன்ஸ் காலாகப் போக, மறுபக்கம் இருந்த சவேரியார், “எதுக்குப் புதுக் கார் வாங்கணும்...? நம்ம கிட்டே இருக்கிற கார்ல ஏதாவது ஒண்ணை அவ எடுத்துக்கிட்டும்.”

“இல்லடே... நம்ம கிட்டே இருக்கிற பிளசர் எதுவும் வேண்டாம்லே... புதுசா பிளசர் வாங்கிக் கொடுலே. நம்மக்கிட்ட என்ன காசுக்கா பஞ்சம்? பிசுநாறியா இருக்காதேல... வாங்கிக் கொடுக்கிறது தான் கொடுக்கிற இப்போ ஏதோ சோடா, மாஸா என்ற பேருல எல்லாம் பிளசர் வந்து இருக்காமே... அதுல ஒண்ணை வாங்கிக் கொடுங்கப்பா!” இந்துவின் பாட்டி சொல்ல,

“என்னது சோடா, மாஸா வா... கிறானி அது எல்லாம் குடிக்கிற கூல்டிரிங்ஸ் பேரு... கார் பேரு எல்லாம் இல்ல.”

“பாட்டி, அது சோடா இல்ல... ஸ்கோடா. மாஸா இல்ல... மஸ்டா!” என்றார் பவானி.

“வேண்டாம் அப்பா... நான் சொல்றேன்... அவளோட பிஎம்டபிள்யூ அங்கேதானே கிடக்கு. அதைக்

கொண்டு வந்திடலாம்... இங்கே அவ ஓட்டிக்கிடட்டும். அது டூ டோர் 2 சீட் தானே! அது போதும் இவளுக்கு. இங்கே தான் லெப்ட் ஹாண்ட் டிரைவிங் பத்தி ஒரு பிரச்சினையும் இல்லையே...!” முரளி சொல்ல... அதையே இந்து சம்மதம் சொல்ல... ஆனால், லைனில் இருந்த பிரேம்,

“என்னது...? என் தங்கைக்கு அந்தக் கார் வேண்டாம். அவளுக்கு நல்ல கார்தான் வாங்கணும்.”

“என்னடா... அவளேதான் அந்தக் காருக்கு ஒப்புக் கொண்டு விட்டா... நீ இப்போ எதுக்குப் புதுசா ஒரு பிரச்சினையை உண்டு பண்றே?” முரளி படபடக்க,

“உனக்கே நிலைமை என்னன்னு தெரியும் மாமா... அவள் ஓட்டிக்கொண்டு போறதுக்கு 2 டோர் 2 சீட் மட்டும் இருக்கிற அவ கார் வேண்டாம்... உன்னோட ஆடி ஏ5 கேப்ரியலட் இருக்கு இல்ல... அது கூட 2 டோர் 4 சீட் தான். அதைக் கொடு, அதுதான் அவளுக்கு ஸேஃப்!”

“சரிடா, நீ சொல்ற மாதிரியே செய்யலாம்!” என்க... ஹரிஹரன் குரல் இடையிட்டது.

“அங்கே இருந்து அதைக் கொண்டு வர வேண்டாம். அதே மாடல் மேக் தானே! இங்கே டெல்லியிலே நம்ம வீட்டு ஷெட்டுல கிடக்கு. அதை அவளுக்குக் கொடுத்து விடலாம்!” என முடித்து வைத்தார்.

“மாமா, அது கேசவ்வோடது இல்ல...?” பிரேம் இழுக்க...

“ஆமாம் பிரேம், அது கேசவ்வோடதுதான்...!” என ஹரிஹரன் ஆரம்பிக்கும் போதே முரளி இடையிட்டு,

“பரவாயில்லை... நம்ம தர்ஷினிக்குத்தானே! கொடுத்து விடலாம். அப்பா, அங்கே இருந்து கொண்டு வர்றதை விட இது இன்னும் ஈசியா முடிந்து விடும். நீங்க நம்ம ஷெட்டுல இருக்கிற வண்டியைக் கொண்டு வர்றதுக்கு ஏற்பாடு பண்ணுங்க!” என்று பேச்சை முடித்தான்.

கார் டெல்லியில் இருந்து கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் எதற்காக இந்தியா வந்தார்களோ அந்த ‘ஜோடியாகப் பாடுங்கள்’ போட்டிக்குப் பல கட்டங் களாகத் தேர்வு நடைபெற, இருவரும் தனித்தனியாகப் பங்கேற்றனர். இந்துவிடம் இருந்த பாட்டுத் திறமைக்கு அவள் சில போட்டிகளில் மட்டுமே பங்கு பெற்று, 50 பேர் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும் என்ற இறுதித் தேர்வுவரை வந்துவிட்டாள். ஆனா, முரளி சில சுற்று களில் நூலிழையில் தேர்வு பெற்று, இறுதித் தேர்வுச் சுற்றுக்கு வந்தான். ஜோடிகளைத் தேர்வு செய்யப் போகும் நாளும் வந்தது.

நடுவர்கள் வரிசையில் மந்தாகினி, லலிதா, ஆரியபாதம், சிவநந்தினி, அரவிந்த் என்ற புகழ்பெற்ற கர்நாடகப் பாடகர்களும், சினிமாப் பாடகர்களும் அமர்ந் திருந்தனர்.

12 ஜோடிகள் வரும்பொழுதே ஜோடிகளாக வந்திருந் தனர். மீதி 13 ஜோடியை இந்த 26 பேர்களில் இருந்து

தேர்வு செய்ய போட்டிகள் நடந்து கொண்டு இருந்தன. சிலரை இந்துவுக்கு ஜோடியாகப் பாடக் கேட்ட பொழுது இந்து மறுத்து விட்டாள்.

சிலர், அவள் பேசும் அமெரிக்க ஆங்கிலம் புரிய வில்லை என்றனர். முரளியிடம் கேட்டதற்குப் பாடிப் பார்க்கிறேன் என்றான்.

நடுவர் மந்தாகினி, “மிஸ்டர் முரளி, நீங்களும் மிஸ் இந்திரா பிரியதர்ஷினியும் முதலில் தனித்தனியாகப் பாடுங்கள். பிறகு இருவரும் இணைந்து பாடுங்கள். இன்று மட்டும் இணைந்து பாடும் பாடலை லிரிக்ஸ் பார்த்துப் பாடுங்கள். போட்டிக்குப் பாடும் பொழுது பார்க்காமல் தான் பாட வேண்டும்.

சரி என்று சொல்லி முதலில் இருவரும் தனித்தனி யாகப் பாடத் தொடங்கினார்கள், இந்து “சின்னச் சின்னக் கண்ணம்மா” என்ற பாடலைப் பாட, அதில் வரும்,

“பாவாடைக்கு நாடாவை கட்டிவிட்டது நீதான்
நான் ஆளான அந்நேரம் பக்கம் நின்னதும் நீதான்!”

என்ற வரிகள் வந்தபொழுது, அவள் முரளியைப் பார்த்துக் கொண்டே பாடினாள்.

இதுவரை முரளி பாடிய பாடல்களில் முக்கால்வாசி சோகப் பாடல்களாகப் பாடியதால் சிவநந்தினி, “என்ன மிஸ்டர் முரளி...? இப்பவும் ஏதாவது ஒரு சோகப்பாடல் தானே பாடப் போறீங்க?” என்க, லேசாகச் சிரித்து இல்லை என்று தலையசைத்து விட்டு,

"வர வர காதல் கசக்குதய்யா!" என்று ஜாலியாகப் பாடினான்.

முரளியின் பாடலைக் கேட்ட அரவிந்த், "வாவ்! சண்முகப்பிரியா ராகத்துல சூப்பரான பாட்டு பாடியிருக் கீங்க. அடுத்து இரண்டு பேரும் சேர்ந்து என்ன பாடப் போறீங்க?"

முரளி ஏதாவது சொல்லிக் குழப்பி விடக்கூடாதே என்று இந்து அவசர அவசரமாக, "செஞ்சுருட்டி ராகத்தில் வந்த பாடல்," என்றாள்.

அதற்கு லலிதா, "இந்து... நீங்க அதிகமாகப் பழைய பாடல்தான் இதுவரைக்கும் பாடி இருக்கீங்க. அதுவும் உங்க பாட்டி டீன் ஏஜ்ல இருக்கும்போது வந்த பாடல்களைத்தான் பாடி இருக்கீங்க... இப்பவும் அதே மாதிரி பழைய பாடல்தானா? சரி, பாடுங்க கேட்போம்."

"என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப்பார்
என் வீட்டு ஜன்னல் கம்பி எல்லாமே கேட்டுப்பார்
என் வீட்டுத் தென்னங்கீற்றை இப்போதே கேட்டுப்பார்
என் நெஞ்சைச் சொல்லுமே!"

என்று இருவரும் இணைந்து பாடி முடிக்க... ஐந்து நடுவர்களும் தவிர மற்றவர்கள் எழுந்து நின்று கைதட்டி னார்கள். மந்தாகினி இவர்கள் இருவரையும் பார்த்து, "நல்ல அருமையா பாடினீங்க... இந்து, நீங்க பாடினது ஒரிஜினல் கம்போசரை விட நல்லா பாடி இருக்கீங்க... வாழ்த்துக்கள்!"

லலிதா பங்குபெறுபவர்களைப் பார்த்து, "பங்கேற்கப் போகும் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்... அதே சமயம் இனிதான் போட்டியே தொடங்கப் போகுது. நாங்கள் சொன்னவற்றை அலட்சியப்படுத்தாமல், உங்களின் தவறுகளைத் திருத்திக் கொண்டு பாடுங்கள், வெற்றி பெறுங்கள். இனி எங்கள் ஐவரில் அரவிந்த் மட்டுமே வருவார். மீதி இரண்டு நடுவர்களாக ஜனனி மற்றும் பார்கவி உங்களின் திறமைகளைப் பரிசோதித்து, உங்களை அதற்கு ஏற்றாற் போல் மெருகேற்றுவார்கள். நாம் அனைவரும் இறுதி நிகழ்ச்சியில் சந்திப்போம்!" என்று சொல்லி விடை பெற்றார்கள்.

தர்ஷினியை யாராலும் கண்டுபிடிக்க இயலாது என்று எண்ணிக் கொண்டு, முரளி அவளை மேடை ஏற்றிக் கூடவே இணைந்து பாடிய செயல்... அவளைத் தேடிக் கொண்டு வந்தவர்களுக்கு, இவள் யார் என்பதை அடையாளம் காட்டியது!

## 7

இவர்கள் இருவரும் பங்குபெற்ற முதல் கட்டத் தேர்வு நிகழ்ச்சிகள், தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டு இருந்தது.

போட்டியில் முதன்முதலாகப் பாடப்போகும் பாட்டினைப் பற்றிப் போனில் விவாதித்துக் கொண்டு இருந்தனர்.

இவள் சொன்ன பாடல்களை முரளி வேண்டாம் என்க... முரளி சொன்ன பாடல்களை இவள் மறுதலிக்க... இருவரும் முடிவெடுக்க முடியாமல் திணறினர். முரளி, 'நாளை இதைப் பற்றிப் பேசலாம்!' என்று சொல்லி போனை கட் செய்த பத்து நிமிடத்தில், இந்துவின் போன் அலறியது.

எடுத்துப் பார்த்தவள், புது எண்ணாக இருந்ததால், 'எடுக்கலாமா? வேண்டாமா?' என்று யோசித்துவிட்டு எடுப்பதற்குள் அது நின்று விட,

'சரி, அடுத்த முறை முயன்றால் பார்த்துக் கொள்ள லாம்!' என்று நினைத்த பொழுது போன் மீண்டும் ஒலி யெழுப்ப, அதை எடுத்தாள்.

"ஹாய் குடியா...? என்ன பண்ணிக்கிட்டு இருக்கே? ஒரு போனை எடுக்க இவ்வளவு நேரமா?"

அந்தப் பக்கம் பேசிய குரல், மடமட எனக் கேள்விகளை அடுக்கியது.

"ஹாய் கேசவ்...! புது நம்பராக இருந்ததுனால நான் எடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்து எடுப்பதற் குள்ளே கட் ஆகி விட்டது. ஆமா, என் போன் நம்பர் எப்படி உங்க கிட்டே வந்தது?"

"நான் ஹரிப்பா கிட்டே இருந்து வாங்கினேன்!"

"கேசவ், குடியா குடியான்னு கூப்பிடறீங்க... ஆனா அந்தப் பெயருக்கு என்ன அர்த்தம் என்று மட்டும் சொல்ல

மாட்டேங்கிறே...? ப்ளீஸ்... நான் பாவமில்ல... சொல் லுங்களேன். கூகிள்லே போட்டா அது சொல்லிடும்... ஆனா, நான்... நீங்க எனக்கு எதனால் அந்தப் பெயரை வைத்தீங்க என்பது தெரியணும். அதற்காகத்தான் அங்கே தேடாமல் உங்களிடம் கேட்கறேன்."

"நான் என்ன சொன்னேன்... ஊருக்கு வந்ததும் உன்னோட புது நம்பரை எனக்கு எஸ்.எம்.எஸ். பண்ணச் சொன்னேன் இல்லையா...? நீ அதைச் செய்திருந்தால், நானும் குடியாவுக்கு மீனிங் சொல்லி இருப்பேன்... ஆனா, இப்போ நீ என்னோடு போட்ட டீலை விட்டுட்டே. சோ, நானும் உனக்கு மீனிங் சொல்ல மாட்டேன்."

"இல்ல... முரளி அத்தான்தான் என்னோட புது நம்பரை உங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொன்னான். அதுதான் தரலை...!"

"ஓ...! இது அவன் வேலைதானா...? நீங்க தரலைன்னா எனக்கு உன்னோட நம்பரைக் கண்டு பிடிக்க முடியாதா? சரி, நீங்க ரெண்டு பேரும் எப்போ சேர்ந்து பாடப் போறீங்க? இரண்டு பேரும் தனித் தனியா பாடறது தான் இப்ப டி.வி.யிலே டெலிகாஸ்ட் பண்ணிக் கிட்டு இருக்கான் போல! நான் விடாம பார்க்கிறேன் தெரியுமா?"

"முந்தா நேத்து நாங்க இரண்டு பேரும் சேர்ந்து பாடிட்டோம்... இன்னும் ஒன் வீக்ல இரண்டு பேரும் சேர்ந்து இந்தப் போட்டியிலே ஆரம்பப் பாடலைப் பாடப்

போறோம்... என்ன பாட்டு பாடறதுன்னுதான் குழப்பமா இருக்கு... எனக்குப் பிடிச்சா, அத்தானுக்குப் பிடிக்கலை... அத்தானுக்குப் பிடிச்சா, எனக்குப் பிடிக்கலை."

"என்ன திடீர்னு அவனை அத்தான்னு எல்லாம் சொல்றே... எப்பவுமே நீ அவனை இப்படித்தான் கூப்பிடுவியா...?"

"இல்லே... இங்கே எங்க கிரானிதான் அத்தான்னு கூப்பிடணும்... பேர் சொல்லிக் கூப்பிடக் கூடாதுன்னு சொல்லி இருக்காங்க."

"அப்போ நீ என்னையும் கேசவ்னு கூப்பிடாதே, அத்தான்னு கூப்பிடு."

"என்ன, விளையாடுறீங்களா...? முரளி எங்க அத்தம்மா பையன். அதனால நான் அவங்களை அத்தான்னு கூப்பிடறேன். அதுமட்டுமில்லாம, அவரை நான் கல்யாணம் பண்ணிக்கிற முறை இருக்கு. அதனால தான் அப்படிக் கூப்பிடறேன்... அவங்களோட பிரெண்டு நீங்க... உங்களை எப்படி நான் அத்தான் என்று கூப்பிடறது...?"

"குடியா... நானும் உன்னோட அத்தம்மா பையன் தான். எனக்கும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற முறை இருக்கு தெரியுமா? வேணுமின்னா நீ உன் மாமாப்பா கிட்டே கேளு... அவரே சொல்லுவார். நான் உன்னோட அத்தான்... சரி, என்னோட கார் அங்கே கிளம்பி வந்துட்டு இருக்கு... தெரியுமா உனக்கு?"

"தெரியும்... எப்போ வந்து சேரும்...? நான் போனை வைக்கட்டுமா...?"

"அடுத்த வாரத்துக்குள்ளே வந்துடும்... ஏன் போனை வைக்கிறே? என்ன விஷயம்...?"

"ஒண்ணுமில்லை... இன்னும் நாங்க பாட்டை செலெக்ட் பண்ணலை... எனக்குக் கூட பிரச்சினை இல்லை... ஒரு ஒன் அவர்ல லிரிக்ஸ் மட்டும் மனப்பாடம் பண்ணிட்டு ராகத்தைக் கேட்டுக்கிட்டா போதும், பாடிடுவேன். அத்தான் அப்படிக் கிடையாது, ரொம்பக் கஷ்டம்... கொஞ்சம் அனலைஸ் பண்ணி பாட்டு எடுக்கலாம்னுதான் கட் பண்றேன்னு சொன்னேன்."

"நான் வேணா ட்ரை பண்ணவா? உங்களுக்கு நல்ல பாட்டா சூஸ் பண்ணித் தரவா...?"

"கேசவ்... நீங்க சொல்ற பாட்டு எனக்குப் பிடிச் சிருந்தா மட்டும் போதாது. அத்தானுக்கும் பிடிக்கணும்."

"நானும் உன் அத்தான்தான். சொல்றேன் இல்லே... ஏன் உன்னால என்னை அத்தான் என்று கூப்பிட முடியாதா?"

"கடவுளே! இப்போ அத்தான் என்ற வார்த்தைதான் முக்கியமா...? சரி, நான் ஓபனாகவே சொல்றேன்... நான் முரளியை லவ் பண்றேன்... அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அதனாலதான் அத்தான் என்று கூப்பிடறேன்... கேசவ், உங்களை எங்க அத்தம்மாவும்

மாமாப்பாவும் பிள்ளையா நினைச்சு இருக்கலாம். ஆனா எனக்கு நீங்க வெறும் பிரெண்ட் மட்டும் தான். அதுக்கு மேலே வேறே எதுவுமில்லை."

"குடியா... இன்னிக்கு இல்லை... சின்ன வயசுல இருந்தே... அதாவது நாம ஸ்கூல்ல படிக்கும் போதிலிருந்தே உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அமெரிக்காவிலே நான் என் படிப்பை முடிக்கும் போது தான் அதை லவ்னு ஃபீல் பண்ணினேன். நான் உன்னை லவ் பண்றேன் டியர்... முரளி கூட உனக்குக் கல்யாணமா? நீ அவனை லவ் பண்றே...! ஆனா அவன் உன்னைக் காதலிக்கிறானா? உனக்குத் தெரியுமா? நீ அவன் கூடவே இருந்து வளர்ந்ததால் வந்த ஒரு கிரஷ் தான்... இது காதலெல்லாம் இல்ல டியர்!"

"கேசவ், நீங்க புரிஞ்சு பேசுறீங்களா... இல்லை புரியாமல் பேசுறீங்களான்னு எனக்குத் தெரியலை. முரளி மேலே எனக்கு வந்து இருக்கிறது காதல்தான்... எனக்குத் தெரியும்... நான் அவனைக் காதலிக்கிறேன்கிறது அவருக்கும் தெரியும். நாங்க எங்க காதலை வெளிப்படையாகச் சொல்லலையே தவிர, ஒருத்தருக்காக மற்றொருவர் என்பதை உணர்ந்து இருக்கோம்.

"கடந்த 11 வருஷமா என்னோட சுக துக்கத்தில் கூட இருப்பவன்... இப்போ மட்டுமில்லை, காலம் முழுவதும் துணை இருப்பான். என்னைத் தவிர யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான்... எனக்கும் கல்யாணம் நடந்தா அது முரளியோட மட்டும்தான்."

"இப்ப சொல்றேன் கேட்டுக்கோ குடியா... நான் ஹரி அப்பாகிட்டே உன்னைக் காதலிக்கிறதா சொல்லப் போறேன். அவர் சம்மதத்தோட உங்க வீட்டுல சம்மந்தம் பேசி உன்னை மனைவியாக்கி... அதுக்குப் பின்னாடி நீயே என்னைப் பார்த்து, 'அத்தான்! ஐ லவ் யூ'ன்னு சொல்லுவே. இது என்னோட சேலன்ஞ்!"

"அப்படியா கேசவ்? இதையும் கேட்டுக்கே, என்னை நீ கல்யாணம் பண்ணிக்க முடியாது..." யாரோ வரும் அரவம் கேட்கப் பேச்சை நிறுத்தி விட்டுச் சத்தம் வந்த திசையைப் பார்த்தாள். மன்சூர் வந்து கொண்டு இருந்தார். அவரைப் பார்த்து, "வாங்க!" என்றாள்.

மன்சூர், இவள் கையில் இருந்த போனையும் முகத்தையும் பார்த்து விட்டு, "ஏதோ முக்கியமான விஷயம் பேசிக்கிட்டு இருக்கீங்கன்னா... நான் அப்புறமா வரேன்ம்மா!" என்க...

"அது எல்லாம் முக்கியமான விஷயம் இல்லை... கேசவ் கிட்டேதான் பேசிக்கிட்டு இருந்தேன். அதை விடுங்க, போன காரியம் என்னாச்சு?" என்று கேட்டுக் கொண்டே போனைப் பார்க்க, அது அந்த நொடியில் கட் செய்யப் பட்டது கேசவால்.

மன்சூர், "அந்த வேலைக்கான எல்லாத் தகவலும் கிடைச்சுருச்சும்மா... உங்களுக்கு தனி கார் வந்த உடனே அதைச் செயல்படுத்த வேண்டியதுதான். ஆமாம் அம்மா, நம்ம கேசவ் தம்பி தானே..." என்று தொடங்க, அவரின்

மொபைல் அவரைப் பேசச் சொல்லி இடையிட்டுச் சத்தம் எழுப்ப, போனை எடுக்க முனைந்தவரை,

"அண்ணா...! யார் கிட்டேயும் என்னோட எந்த விஷயத்தையும் பகிர்ந்துக்க வேண்டாம்... மாமாப்பா... வைத்திப்பாவைத் தவிர. நீங்க யாருன்னு பாருங்க!" என்க... அவர் சரியென்று தலையாட்டி விட்டுச் சென்றார்.

**மு**ரளி, இந்துவிற்கு வாக்களித்தபடி, அவளின் வீட்டிற்கே பேயிங் கெஸ்ட்டாக வந்து தங்க ஆரம்பித்த பிறகு ஒரு நாள், ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சி ஒளி பரப்பாகிக் கொண்டிருந்தது. அதில் முரளி பங்குபெற்ற தொகுப்பு இடம் பெற்றது. அன்று முரளி,

"கண்ணுக்குள்ளே உன்னை
வைத்தேன் கண்ணம்மா – நான்
கண்கள் மூட மாட்டேனடி செல்லம்மா!
அடி நீதான் என் சந்தோசம்
பூவெல்லாம் உன் வாசம்
நீ பேசும் பேச்செல்லாம்
நான் கேக்கும் சங்கீதம்!"

என்ற பாடலைப் பாட, அந்தப் பாட்டு பாடி முடிந்தவுடன் அந்த நிகழ்ச்சியின் நடுவர்கள் எழுந்து வந்து அவனைக் கட்டிப் பிடித்துப் பாராட்டுவதைக் காண்பித் தார்கள்.

இந்துவின் வீட்டில் இருந்து அனைவரும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள், இந்துவைத் தவிர.

அப்பொழுது பிரேம், "டேய் மாமா! என்னிக்குடா இந்தப் பாட்டைப் பாடினே... அசத்திட்டே போடா... செம ஃபீலோட பாடியிருக்கிறேடா. இதைக் கேட்கும் பொழுது நான் அப்படியே மெல்ட் ஆயிட்டேன்!" என்று சொல்லி முரளியை அணைத்துக் கொண்டான்.

"ஒரு நாளைக்கு நீங்க எல்லோரும் போன் பண்ணப்போ எடுக்காமல் இருந்தேன் தெரியுமா? அன்னிக்கு மத்தியானம்தான் இந்தப் பாட்டைப் பாடினேன்."

"ஆமாம், நீ அங்கே பாடியதைக் கேட்டு எல்லோரும் மெல்ட் ஆயிட்டாங்க... ஆனா நீ அப்படியே கலங்காம இருந்து இருக்கியேடா... எப்படிடா உன்னால முடிஞ்சது? அதுவும் குரல்ல அப்படி ஒரு சோகத்தைக் கொடுத்துட்டு... சான்ஸே இல்லடா..."

"உனக்குத் தெரியுமா நான் அழலைன்னு...? நீங்க எல்லோரும் போன் அடிச்சபோது எடுக்காம ஏன் இருந்தேன் தெரியுமா? அன்னிக்கு சாய்ந்திரம் 6 மணிக்கு மேலே பீச்சுக்குப் போய்த் தனியா உட்கார்ந்து அழுதுட்டுத் தான் வந்தேன். அந்த நேரத்துல நீங்க எல்லோரும் போன் அடிச்சீங்க... அதனாலதான் எடுக்கலை."

"என்னது...? பீச்ல போய்த் தனியா உட்கார்ந்து அழுதியா?" பிரேம் கேட்டுக் கொண்டு இருக்கும் பொழுதே இந்து வெளியில் இருந்து உள்ளே வந்தாள்.

"யார் பிரேம் அண்ணா பீச்சுக்குப் போய் தனியா உட்கார்ந்து அழுதது? நீங்களா...?"

"நான் ஏன் பீச்சுக்குப் போய்த் தனியா எல்லாம் உட்கார்ந்து அழப் போறேன்...? எல்லாம் உன்னோட அத்தான்தான் அழுதது. அதுவும் இவன் அழறது யாருக்கும் தெரியக் கூடாதுன்னு 6 மணிக்கு மேலே போய் இருட்டுல உட்கார்ந்து அழுதுட்டு வந்து இருக்கான்... ஹா... ஹா...!" என்று சிரிக்க,

"டேய்! என்னைச் சும்மாவே ஓட்டுவா. நீ வேற இந்த விஷயத்தைப் போட்டுக் கொடுக்கிறே... அவ இதை வெச்சு என்னை ஏதாவது கிண்டல் பண்ணட்டும்... மகனே, நீ செத்தடி!" என்று பிரேமுக்கு மட்டும் கேட்கும் குரலில் கிசுகிசுக்க...

பிரேம் பொங்கி வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்க முயன்று, முடியாமல் முரளியைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தான்.

பிரேம் சிரிப்பதையும், முரளி அதைப் பார்த்து ஒரு மாதிரி நெளிவதையும் கண்ட இந்து, "அண்ணா... எதுக்கு இப்ப இந்த மாதிரிச் சிரிப்பு...? யாருக்கும் தெரியாமல் இருட்டிலே அமைதி தேடிப் போய் பப்ளிக் ப்ளேஸ்ல உட்கார்ந்து அழணும் என்றால், அத்தான் மனசுல எவ்வளவு வேதனையும் வலியும் இருக்கணும்? அதை உணராம கெக்கே பிக்கேன்னு சிரிக்கிறீங்க...?" பிரேமிடம் கடிந்து கொண்டவள்,

முரளியின் அருகே சென்று அவன் காலடியில் மண்டியிட்டு அமர்ந்து, கண்களை நேருக்கு நேராகப்

பார்த்தபடி, "அத்தான், யார் கிட்டேயும் சொல்ல முடியாத விஷயம் என்னவோ உங்க மனசுலே காயமா இருக்கு. அது எனக்குப் புரியுது... அதுக்காக இந்த மாதிரி பப்ளிக் ப்ளேஸ்ல போய் உட்கார்ந்து அழாதீங்க... பிரேம் அண்ணா கிட்டே சொல்ல முடியலை என்றால், என் னிடமோ இல்லை அக்காவிடமோ சொல்லுங்க. அதுவும் முடியாது என்றால் பாத்ரூம் இருக்குல்ல, அதுல ஷவரைத் திறந்து விட்டு அழுதுடுங்க. சத்தமும் வெளியில் கேட்காது, நீங்க அழுததும் வெளியில் தெரியாது.

"குறிப்பாக இன்னொண்ணு... அப்படி அழுதா அதைவந்து இந்த குடக்குகிட்டே சொல்லாதீங்க. இதுக்குத் தெரிஞ்சா இப்படித்தான் சிரிக்கும்!" எனச் சொல்லிவிட்டு எழுந்து அவள் அறையை நோக்கி நகர,

அவள் சொல்லியதைக் கேட்ட இரு ஆண்களும் வேறு எதுவும் பேசத் தோன்றாமல், கல்லாய்ச் சமைந்து அமர்ந்து இருந்தனர்.

மறுநாள் முரளி, இந்துவின் வீட்டு வாயில் முகப்பின் அருகில் நின்று கொண்டு, வீட்டுத் தோட்ட வேலை மற்றும் செக்யூரிட்டியுமான சங்கருடன் பேசிக் கொண்டு இருந் தான்.

அப்பொழுது அந்தப் பக்கம் வந்த கார், திடீரென்று முரளியின் அருகில் சடன் பிரேக் போட்டு நின்றது.

டிரைவர் இருக்கையில் இருந்து வெளி வந்த பெண் முரளியைப் பார்த்து,

"ஹாய்... நீ கிஸ்ல படிச்ச முரளி கிருஷ்ணன், 2003 பேட்ஜ் தானே?" என்று கேட்க,

"ஆமாம் நீங்க" என்று இழுத்தான் முரளி.

"டேய்...! என்னை அடையாளம் தெரியலையா உனக்கு...? நான் தான்டா மகி... உன் கிளாஸ்மேட்... மகிளா கொண்டலப்பட்டி... நீ இங்கேதான் இருக்கியா...? என்னடா செய்றே?" மகி, முரளியைப் பற்றி விசாரிக்கத் துவங்கினாள்.

"எதுக்கு வெளியிலே நின்னு பேசணும்? காரை உள்ளே பார்க் பண்ணிவிட்டு வா... வீட்டுக்குள்ளே போய்ப் பேசலாம்!" என்று அழைத்துச் சென்றான்.

அன்று மாலை மகி தன்னுடைய முகநூலில் உள்ள கிஸ் க்ரூப்பில் முரளியைப் பற்றியும், அவன் தங்கி இருக்கும் இடத்தையும் பதிந்தாள். நட்பினை மதித்த முரளியின் இந்தச் செயல், இந்துவுக்கு அவன் அறியாமல் ஆபத்தை வருவித்தனவா...?

## 8

**து**ல்லியமாகக் காரை ரிவர்ஸில் கொண்டு வந்து, இரண்டு கோடுகளுக்கு இடையே போதிய இடைவெளியில் எக்ஸ் பிரஸ் அவென்யூ மாலின் மாடி பார்க்கிங்கில் நிறுத்தி விட்டுக் காரிலிருந்து வெளியே வந்த இந்து, அங்கிருந்த லிப்ட் வரை சென்று விட்டுப் பிறகு திரும்பி காரிடமே வந்தாள்.

இந்துவின் காரின் அருகே இரண்டு ஆட்கள் நின்று, காரையே பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் நிற்பதைப் பார்த்துத் தன்னுடைய ரிமோட் கீயால் காரின் கதவைத் திறந்தாள். அதைக் கவனித்த இருவரும் சற்று விலகி நின்றனர். காரின் உள்ளே தலையை நுழைத்து, ஏதோ பின்னால் இருந்த சீட்டில் தேடியவளை, விலகி நின்ற இருவரில் ஒருவன் நெருங்கினான்.

சரக்கென்று இந்து காரிலிருந்து தலையை உயர்த்தி வெளியே வர... அருகில் வந்தவன், சில அடிகள் பின்னால் சென்று அங்கு நின்று கொண்டிருந்தவனையும் சேர்த்துக் கொண்டு கீழே விழுந்தான். கீழே விழுந்த இருவரும் இவளைப் பார்க்க... சண்டையிடுவதற்கு வசதியாக டேக்வான்டோ பொஸிசனில் நின்று கொண்டு இருந்தாள்.

“ஆர் யூ கார் தெஃப்டர்... ஷல் ஐ ஹான்ட் ஓவர் டூ காப்ஸ் போத் ஆப் யூ.”

இந்துவின் பேச்சைக் கேட்டவன், மற்றவனிடம் திரும்பி, “டேய் இனியா... என்னடா சொல்லுது அந்தப் பொண்ணு?”

“டேய் பிரசன்னா... அது பேசற இங்கிலீஷ் எனக்குப் புரியலைடா... ஏதோ ஃபாரினர் போல இருக்கு... இரு, எதுக்கும் தமிழ் தெரியுமான்னு கேட்டுப் பார்க்கிறேன்!” இனியன், இந்துவைப் பார்த்து...

“கேன் யூ ஸ்பீக் இன் டமிள்?”

"ம்... தெரியும்."

"நீங்க வெளிநாட்டுல இருந்து இங்கே வந்து இருக்கீங்களா...? உங்களுக்கு எந்த நாடு...?"

"ஆமாம்... அதைக் கேட்டு நீ என்ன பண்ணப் போறே...?"

"மேடம்! நீங்க எங்களைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க... என் பேரு இனியன்... லா முடிச்சிட்டு இவங்க கம்பெனியிலே லீகல் அட்வைசரா இருக்கேன்... இவன் பேரு பிரசன்னா... எக்ஸ் மினிஸ்டர் நவநீதத்தோட பையன்... சினிமாவுக்குப் பைனான்சியராகவும், சுபா இன்ஸ் குரூப் ஆப் ஹோட்டலுக்கு ஆக்டிங் எம்.டி.யாகவும் இருக்கான்..."

"இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்றீங்க...?"

"ஏதோ ஒரு டி.வி.யில புரோகிராம் வரப் போகுதாமே... அதுக்கு ஏகப்பட்ட பப்ளிசிட்டி நெட்ல பண்ணிட்டு இருக்காங்க. அதில் உங்களை மாதிரியே ஒரு முகத்தைப் பார்த்தேன். அதான் கிட்டே வந்து பார்க்க வந்தேன்... அதுவும் இல்லாம நான் ஒரு கார் லவ்வர்... உங்க புதுக்காரைச் சுத்திப் பார்த்துட்டுத் திரும்பினா... பார்த்த முகமா இருக்கே என்று கிட்ட வந்தேன்."

"ஓ...! அப்படியா? என் பேரு இந்திரா பிரிய தர்ஷினி... நீங்க விளம்பரத்தில் பார்த்த முகம் என்னுடையதுதான்... ஜோடியாகப் பாடுங்கள் போட்டிக்காகத்தான் இந்தியா வந்து இருக்கேன். பரவாயில்லையே...!

தமிழ்நாட்லே ஒரு புரோக்ராம்ல தலையைக் காட்டினா உடனே பப்ளிசிட்டி கிடைத்து விடுகிறதே!" புன்னகையுடன் சொன்னாள் இந்து.

"திறமையை மதிக்கும் ஆட்கள் இங்கே அதிகம் மேடம்!" என்றான் இனியன்.

புன்சிரிப்புடன் அவன் சொன்னதை ஒப்புக் கொண்டவளாகத் தலையாட்டி விட்டு விலகிச் செல்லும் போது, "நாம பிரெண்ட்ஸ் ஆகிடலாமா மேடம்?" இனியன், இந்துவை நோக்கிக் கை நீட்ட, யோசித்துக் கொண்டே இனியனின் கைப்பற்றிக் குலுக்கியவள்,

"புது ஆட்களையும் உங்களோடு உடனடியாக இணைத்துக் கொள்ளும் இந்த மனதிற்கே உங்களை பிரெண்ட்ஸ் ஆக்கிடலாம் போல... என்னை மேடம்னு கூப்பிடாதீங்க... ப்ளீஸ் கால் மீ இந்திரா ஆர் பிரியா!" என்று சொல்லிச் சிரித்தாள்.

"எந்த நாட்டிலே இருந்து வந்து இருக்கீங்க இந்திரா...?"

"அமெரிக்காவிலிருந்து...!"

"அங்கே லெப்ட் ஹான்ட் தானே டிரைவிங்... ஆனா நீங்க வெச்சிருக்கிற இந்தக் கார் ரைட் ஹான்ட் டிரைவிங். அதுவும் இந்தியன் ரிஜிஸ்ட்ரேசன்ல இருக்கு... இன்னும் இந்த மாடல் இந்தியாவுக்கு வரலையே...?"

காரைப் பற்றி விசாரணையில் இறங்கினான் இனியன்.

"என்னோட கஸின் இதை யூ.கே.ல இருந்து இம்போர்ட் பண்ணி டெல்லியில் வைத்து இருந்தான். இப்போ எனக்கு யூஸ் பண்ணக் கொடுத்து இருக்கான்."

"ஏன்டா, இந்தக் கார்ல என்ன இருக்கு... இப்படி அலையறே...? அதே நாலு வீல்... மேலே டாப்பு... அவ்வளவுதானே! இதுக்குப் போய் அவங்களை நோண்டி நோண்டிக் கேட்டுக்கிட்டு இருக்கே...?" என்று இனிய னிடம் சிடுசிடுத்தான் பிரசன்னா.

"என்னடா இப்படிச் சொல்லிட்டே! இந்தக் கார்ல டாப் ஓபன் ஆகி பின்னாடி உள்ளே போய்க்கும்... வேணும் போது மூடிக்கலாம்... இந்த மாடல் கார்ல 2 கதவு 2 சீட் தான் இருக்கும். ஆனா இந்தக் கார்ல மட்டும்தான் 2 டோர் 4 சீட் இருக்கு... டேய் அன்னிக்கு சிக்னல்ல நாம நின்னுக்கிட்டு இருக்கும் போது நீ காட்டினே தெரியுமா... ஒரு கார் போகும் போதே மேலே டாப் அதுவா மடங்குற மாதிரி... அந்தக் கார்தான்டா இது!" இனியன் விவரித்தான்.

இனியன், இந்துவைப் பார்த்து, "இந்திரா, எங்களுக்கு இந்தக் காரை ஓட்டிக் காட்ட முடியுமா...? உங்களோடு நாங்க வந்தா உங்களுக்கு ஒரு பிரச்சினை யும் இல்லையே...? ஏதாவது உங்களுக்கு முக்கியமான வேலை இருக்கா...?"

"சும்மா போரடிச்சதால் இந்தப் பக்கம் சுத்த வந்தேன். லிப்ட் வேலை செய்யலை. வேற ஏதாவது மால் போகலாம் என்று திரும்பி வந்துட்டேன்... அவ்வளவு தான்.

இங்கே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று ஒரு கருத்து பரவலாக இருக்கிறதே! அப்படியா இனியன்...?"

"நீங்க எதுக்கு இப்படிக் கேட்கிறீங்க என்று தெரியுது... எங்களால் உங்களுக்கு எந்தப் பாதுகாப்புப் பிரச்சினையும் வராது. இன்னொரு விஷயம், எங்க இரண்டு பேருக்கும் கராத்தே தெரியாது. இப்ப வாங்கின துக்கே எங்களால் இரண்டு நாள் சரியா நடக்க முடியாது. அது தவிர, எனக்குப் புது வித கார்கள் என்றால் ரொம்பப் பிடிக்கும் இந்திரா. அதனால் கேட்டேன்... நீங்க ஒப்புக் கிட்டா நாங்க ஒரு ரவுண்ட்ஸ் உங்களோட வரலாம் என்று நினைத்தேன்."

அவன் பதிலில் சமாதானமாகியவள், "உள்ளே உட்காருங்க." 'டிரைவிங் சீட்டுக்கு அருகில் உள்ள சீட்டினை விலக்கினாள். பிரசன்னா பின்னே இருந்த சீட்டில் அமர, விலக்கிய சீட்டினை சரிசெய்து இனியன் அதில் அமர்ந்தான். இந்து காரில் ஏறி அதை இயக்கினாள்.

"புது இடம்... டிரைவரை வைத்து இருக்கலாம் இல்லை?" என்று கேட்டவனிடம்,

"ஐயோ இனியன்... எனக்கு என்னோட காரை யார் ஓட்டினாலும் பிடிக்காது. ரூட் தெரியறதுக்கு என்னோட மொபைல் நவிகேடர் போட்டு பாவிக்கிறேன். அதனால தான் டிரைவர் வேண்டாம் என்று செல்ஃப் டிரைவ்... உங்க ஊர் கமலஹாசன் கூடச் சொல்லி இருக்காருங்க... ஒரு பாட்டுல,

"கன்னிப்பொண்ணா நெனைச்சி
காரைத் தொடணும்!
கட்டினவன் விரல்தான்
மேலே படணும்!
கண்டவங்க எடுத்தா
கெட்டுப் போயிடும்!

"சோ, ஒன் ஹான்ட்டா இருக்கணும்!" இந்து இனியனிடம் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது பின்னால் இருந்த பிரசன்னா, இனியன் காதில் ஏதோ முணுமுணுத் தான்.

இனியன், "ஏன் இந்திரா நீங்க ரிவ்யூ மிரர் வழியா பிரசன்னாவையே பார்த்துக்கிட்டு வர்றீங்க...?"

"என்ன இனியன் இப்படிக் கேட்கிறீங்க...? இந்த டிரைவிங் சீட்டுல உட்கார்ந்து ஓட்டும் பொழுது ரிவ்யூ மிரர்ல என்ன தெரியும்...? பின்னாடி உட்கார்ந்து இருக்கிறவங்க மட்டுமா தெரிவாங்க...? இல்லையே! பின்னாடி ஸ்கிரீன் வழியா நம்ம வண்டிக்குப் பின்னாடி வர்ற வண்டிதானே அதிலே நல்லா தெரியும். அது மட்டுமா, நான் லெப்ட் அன்ட் ரைட் சைடு மிரர் கூடத் தான் பார்த்தேன். அது இரண்டு பக்கமும் வர்ற வண்டி பார்க்கத் தானே தவிர, வேற எதையும் இல்லை... கார் ஓட்ற உங்களுக்கு இது நல்லாத் தெரிந்து இருக்கணுமே!"

"நாங்களும் அதுக்காகத்தான் பார்ப்போம்... ஆனால், நீங்க இந்தப் பத்து நிமிஷத்துல ஒரு நூறு

தடவைக்கு மேலே பார்த்து இருப்பீங்க போல இருக்கு... அதான் அசௌகரியமா ஃபீல் பண்ணி இருக்கான். அதனால்தான் கேட்டேன்."

"இனியன், ஒவ்வொரு நாலு செகண்ட்டுக்கும் டிரைவிங் ஆங்கிளா மூணு மிரர் & ஸ்பீடோ மீட்டர் பார்க்கணும்ங்கிறது ரூல்ஸ். இது தெரியாதா உங்களுக்கு?"

"என்னங்க இது... புதுசு புதுசா ரூல்ஸ் எல்லாம் சொல்றீங்க....?"

"அட, இது உங்க நாட்டு ரூல்ஸ் இல்லை மேன்... இன்டர்நேஷனல் டிரைவிங் ரூல்ஸ். இது தெரியாதா உங்களுக்கு?"

"அப்படியா...? எங்க கிட்டே யாருமே சொல்லலைங்க..." இனியன் சொல்ல, அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு,

"ஆர் யூ நேகல்ட்டிங் டூ மீ?"

"என்ன கேட்கறீங்கன்னு புரியலை. கொஞ்சம் தமிழ்ல சொல்றீங்களா...?"

"என்னை விடைக்கிறீங்களான்னு கேட்டேன்!"

"இது எந்த ஊர் தமிழுங்க... நீங்க இங்லீஸ்ல பேசினாலும் புரிய மாட்டேங்குது... தமிழ்லே பேசினாலும் புரிய மாட்டேங்குது. என்ன செய்யலாம்...?"

"டேய்! உனக்கு நீ படிச்ச லாவே சில சமயத்துல புரிய மாட்டேங்குது... இதுல அவங்க பாரின்ல படிச்சவங்க.

அவங்க பேசறது எல்லாம் புரியலை என்று புலம்பாம, பொத்திக்கிட்டு வாடா!" பிரசன்னா, இனியனை அதட்ட... வண்டியை இடதுபக்க ஓரமாக நிறுத்தி விட்டுத் தன்னுடைய மொபைலை எடுத்து யாரையோ தொடர்பு கொண்டு, நேகலேட்டிங் அர்த்தம் கேட்டாள். பதில் கிடைத்தவுடன் போனை வைத்துவிட்டு, நிறுத்திய காரை மறுபடியும் இயக்கினாள்.

"ஏங்க இந்த போன் பேசறதுக்காகவா காரை ஓரம் கட்டி நிறுத்தினீங்க?" ஆச்சரியமாகக் கேட்டான் இனியன்.

"ஆமாங்க... டிரைவிங்க்ல போன்ல பேசுறது தப்புங்க."

"ஐயோ! என்னடா இவங்க இவ்வளவு நல்லவங்களா இருக்காங்க."

"இனியன், நீங்க கேட்ட நேகலட்டிங்குக்கு மீனிங் கிண்டல்... அதாவது நீங்க என்னைக் கிண்டல் பண்றீங்களான்னு கேட்டேன்!" இனியனிடம் பேசிக் கொண்டே அந்த மாலில் அவர்களின் காரின் அருகே தன் காரைக் கொண்டு நிறுத்தினாள்.

"அதெல்லாம் இல்லீங்க... நாமதான் பிரெண்ட்ஸ் ஆகிட்டோமில்ல... நீங்க எங்க நம்பரை ஸேவ் பண்ணிக்கோங்க... எப்பவாவது ஏதாவது உதவி தேவைப்பட்டாலோ... இல்லை, போர் அடிச்சாலோ போன் பண்ணுங்க. மீட் பண்ணுவோம். அப்போ நாங்க கிளம்புறோம்!" என்றவன், தங்கள் இருவர் நம்பரையும்

கொடுத்துவிட்டு, அவளின் நம்பரைப் பெற்றுக் கொண்டான்.

தலையசைத்து அவர்களிடம் இருந்து விடைபெற்ற இந்து, வீட்டை நோக்கித் தன் காரைச் செலுத்தினாள்.

தெரு முனையில் இவளின் காரை வழி மறித்த முரளியிடம், "ஹாய்... வா, வந்து கார்ல ஏறு. நான் வீட்டுக்குத்தான் போறேன்."

"நான் கார்ல எல்லாம் ஏறலை. எனக்கு உன் கிட்டே கொஞ்சம் பேசணும்."

"என்ன முரளி... வீட்டுக்குத்தானே வர்றேன்... வாங்க, வீட்லே போய்ப் பேசிக்கலாம்."

"வீட்லே வெச்சுப் பேச வேண்டாம்னுதான் இங்கே உன்னை மடக்கினேன்... எக்ஸ்பிரஸ் மால்ல உன்னைப் பார்த்தேன். யார் கூடவோ பேசிக்கிட்டு அவங்களைக் கார்லே கூட்டிக்கிட்டுப் போனே. யார் அவங்க?"

"அவங்க என்னோட புது பிரெண்ட்ஸ்... இன்னிக்குத் தான் அறிமுகம் ஆனோம்."

"நீ சரியான வழியிலே போகலையோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு. ஏதாவது பிரச்சினையிலே மாட்டப் போறே... இந்த ப்ரெண்ட்ஷிப் எல்லாம் தேவையில்லை. பேசாம வந்த வேலையை மட்டும் பாரு, போதும். ஏதாவது ஏடாகூடமா செய்து வம்புல மாட்டிக்காதே."

"ஐ நோ வாட் ஐயாம் டூயிங்... சும்மா எல்லா விஷயத்திலேயும் என்னைக் கன்ட்ரோல் பண்ணாதே...

எனக்குப் பாதுகாப்புக் கொடுக்க மன்சூர் இருக்கார். நான் என்ன செய்யறேன் எது செய்யறேன்னு மாமாப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும் தெரியும். உனக்கு ஏதாவது விவரம் வேணுமின்னா நீ மாமாப்பா இல்ல, பெரியப்பா கிட்டே கேட்டுக்கோ." எடுத்தெறிந்து பேசி விட்டுத் தன் காரை வீட்டினை நோக்கிச் செலுத்தினாள்.

## 9

ஒரு சனிக்கிழமை நண்பகலில், தன் அமெரிக்க நட்புகளுடன் வாட்ஸ்அப்பில் கதை அடித்துக் கொண்டு இருந்தாள் இந்து. தோட்ட வேலையையும் வாசல் காவலையும் கவனிக்கும் சங்கர், அவசரமாக உள்ளே வந்தான்.

"இந்தும்மா... நம்ம முரளி அய்யா இல்லீங்களா...? எங்கே போய் இருக்காரு தெரியுமா? எப்பம்மா வருவாரு?"

"ஏன் கேட்கிறீங்க சங்கர் அண்ணா?"

"இல்லம்மா... வாசல்லே ஒரு பையன் வந்து இருக்கான். கேட்டா, முரளி அய்யா படிச்ச ஸ்கூல்ல படிச்சாங்களாம்... அவரைப் பார்க்க வந்து இருக்காங்க. அதான் கேட்கிறேன்."

"இருங்க, நான் வரேன்!" என்று சொல்லி சங்கருடன் வெளியில் சென்று பார்த்தாள். அங்கே, இவளை விட சற்று உயரமாகக் குண்டாக ஸ்பைக் தலைமுடியுடன் ஒரு காதில் கடுக்கன் கையில் வளையமும் டெனிம் டீ சர்ட்டும் ஜீன்ஸ் பேன்ட் ரேபன் கூலிங் கிளாஸுடன் தற்போதைய

சென்னை இளைஞர்களின் நாகரிகத்தைப் பிரதிபலித்தபடி இருந்தான்.

அவனைக் கண்டதும் முகத்தில் யோசனை ஓடியது. சங்கர் அந்தப் பையனை அணுகி, "இங்கே பாருங்க தம்பி, இவங்க கூட பாடறதுக்காகத்தான் முரளி தம்பி இந்த வீட்லே தங்கி இருக்காங்க... இந்த வீட்டுக்குச் சொந்தக் காரங்க இவங்கதான். முரளியைப் பத்தி ஏதாவது கேட்கணும் என்றால் இவங்க கிட்டே கேட்டுக்கோங்க!" இந்துவை நோக்கிக் கை காட்டினான்.

அந்த இளைஞன் இந்துவைப் பார்த்து, "ஸாரி ஃபார்த டிஸ்டர்பன்ஸ்... ஐ யாம் சுபாஷ்... முரளியோட வீடு தான் இது என்று அவர் கூட படிச்ச மகி என்பவங்க எப் பிலே போட்டு இருந்தாங்க... இப்ப முரளி இங்கே இல்லீங்களா?"

"டேய் கோஸ்... எப்படிடா இருக்கே...? உன்னைப் பார்த்து வருஷக் கணக்காயிடுச்சு இல்லே... இது என்னடா வேஷம்...?" என்று வந்தவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், வந்தவனைப் பற்றி அறிந்தவள் போல் கேள்விகளைக் கேட்டாள் இந்து.

"என்னோட நிக்நேம் உங்களுக்கு எப்படித் தெரியும்...? நீங்க யாரு...? உங்களை எனக்குத் தெரியலையே!" வந்தவன் பார்வையில் குழப்பத்தைக் காட்டினான்.

இந்து அவனைக் கடந்து படியில் இறங்கி தோட் டத்தில் கிடந்த ஒரு துடைப்பக் குச்சியை எடுத்து வந்து

அவன் கையில் கொடுத்து, "இது போதுமாடா...? இன்னைக்கு முரளி வந்த உடனே இதை வைத்து கம்பு சுத்தச் சொல்லி ராகிங் பண்ணலாம்!" என்க,

"ஹேய் தர்ஷினி..." என்ற கூவலுடன் அவளை அணைத்துக் கொண்டு லேசாகக் குதித்தபடி,

"நீதானா...? நீயேதானா தர்ஷினி?" என்று கேட்டபடியே கேவலுடன் அழத் தொடங்கினான்.

"நானேதான்... நானேதான்டா... என்னடா சுபாஷ்... ஏன் இவ்வளவு எமோஷனல் ஆகறே? வா, வா... உள்ளே வா!" அவனைத் தேற்றியபடியே வீட்டின் உள்ளே அழைத்துச் சென்றாள்.

இந்து கொடுத்த டிஸ்ஸூவால் முகத்தைத் துடைத்தபடியே, "நீதான் முரளியோட இணைந்து பாடப் போறியா...? நீ முரளியை எங்கே பார்த்தே...? எப்போ பார்த்த...? அவன் உன்னை எப்படி அடையாளம் கண்டு பிடிச்சான்...?"

"அந்த விவரத்தை எல்லாம் அப்புறமா சொல்றேன். ஏன்டா என்னைப் பார்த்த உடனே அழத் தொடங்கிட்டே? நான் என்னடா உனக்கு அவ்வளவு முக்கியமானவளாடா...?"

"என்ன தர்ஷினி இப்படிக் கேட்டுட்டே? நாம பழகினது எல்லாமே சின்ன வயசுல. ஆனா அப்போ நாம மட்டுமே நமக்கு ஆதரவு. நம்மைப் பெற்றவர்கள் எப்போவாவது ஒரு தடவை வந்து பார்த்துட்டுப்

போவாங்க... இல்லை, நாம் அவர்களைத் தேடிப் போவோம். அந்த வயதில் இது சரியா தவறான்னு தெரியாமல், நமக்கு ஏற்படும் உடல் உபாதைகளைக் கூட ஒரு ஆண் பெண் என்ற பேதம் இல்லாமல் பகிர்ந்துப் போம். நம்ம செட்டுல நீ மட்டும்தான் சிக்ஸ்த் முடிச்ச உடனே போயிட்டே.

"மற்ற எல்லோரும் +2 வரைக்கும் அங்கதான் படிச்சோம்... எல்லோரும் ஏதாவது ஒரு நேரத்துல உன்னை மிஸ் பண்றதை உணர்ந்தோம். உன்னைப் பார்க்கணும்னு எங்க எல்லோருக்கும் ரொம்ப ஆசை வந்தது.

"தேவசாகரி மேடம் வேற, நீ ஸ்கூலை விட்டுப் போய் 2 மாசத்துல அவங்களும் வேலையை விட்டுப் போயிட்டாங்க... உன்னை எப்படியாவது பார்க்கணும்னு ஆசைப்பட்டுக் கன்னியாகுமரிக்கு டூர் புரோக்ராம் போட்டு, நாங்க எல்லோரும் ஒன்பதாவது படிக்கும் போது போனோம். ஆனால் உங்க ஊருக்குள்ளேயே நாங்க யாரும் போக முடியலை... யார் கிட்டே எதைக் கேட்டாலும் எந்தப் பதிலும் கிடைக்கலை.

"எங்களுக்குத் தேவசாகரி மேடம் இருக்கிற அட்ரஸ் கிடைச்சது. நாங்களும் தேவசாகரி மேடத்தைத் திருநெல் வேலியிலே இருக்கிற சீயோன் ஸ்கூல்ல பார்த்தோம். ஆனா அவங்க, உன்னைத் தேடறதை விட, உனக்காக எங்களைப் பிரேயர் பண்ணுங்கன்னு மட்டும் சொல்லிட்டுப் போயிட்டாங்க...

"அப்புறமா நம்ம ஹேமந்தா ஒரு தடவை மெட்ராஸ் வந்தப்போ, உங்க அப்பா ஹோட்டலுக்குப் போய் உன்னைப் பத்தி விசாரிக்க, யாருமே எதுவுமே சொல்ல லையாம். அப்புறமா எப்படியோ உங்க ஹோட்டலோட எம்.டி.யைப் பார்க்கணும்னு பார்த்தா, அதிலே நம்ம எக்ஸ் மினிஸ்டர் நவநீதமும் அவர் மகனும் இருந்து இருக்காங்க... இவன் விசாரித்ததுக்கு, உன்னைப் பத்திக் கேட்டுக்கிட்டு இனிமே யாராவது வந்தால் கொலை பண்ணிடுவோம்னு மிரட்டி இருக்கான் பையன்...

"ஆனால் அந்த நவநீதம், நீ வெளிநாட்டுலே படிக்கிறதாகவும் படிச்சு முடிச்சவுடனே அவரோட பையனுக்கும் உனக்கும் கல்யாணம்னு சொல்லி விரட்டி விட்டு இருக்காங்க. அதை வந்து அவன் சொன்னவுடனே ஒரு நாள் முழுக்க நம்ம பிரெண்ட்ஸ் யாருக்குமே சாப் பாடு இறங்கலை... தூக்கமும் போய் துக்கத்தோட தான் இருந்தோம். நீ எங்கே இருந்தாலும் நல்லா இருக் கணும். அதே சமயம் கூடிய சீக்கிரம் நம்ம நட்புகளோட ஒண்ணு சேரணும்னுதான் எங்க பிரார்த்தனையா இருந் தது. இப்போ நீ சொல்லு... எங்கே இருந்தே இவ்வளவு நாளா?"

"ஸ்கூல்ல இருந்து என்னையும் எங்கம்மாவையும் நவநீதமும் அவர்களின் ஆட்களும்தான் சென்னைக்குக் கூட்டிட்டுப் போனாங்க. அப்போ எங்களுக்கு ஆக்ஸி டென்ட் ஆயிடுச்சு போல. அதுல இருந்து என்னைக் காப்பாத்தினது முரளி குடும்பமும் பவானிக்காவும்

அவங்களோட சகோதரிகளும்தான். நான் இங்கே இருந்தா என்னோட உயிருக்கு ஆபத்துன்னு என்னை யு.எஸ்.க்கு கொண்டு போய்ப் படிக்க வெச்சுக்கிட்டு இருக்காங்க...

“இப்போ, ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சிக்காக வந்து இருக்கேன்... எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் இவ்வளவு தான். ஆனா... தெரியாதது நிறைய இருக்கு. அதைத் தெரிஞ்சுக்க எனக்கு உன்னோட ஹெல்ப் தேவை. நீ என்ன பண்றே...? என்ன படிச்சு இருக்கே...? நம்ம பிரெண்ட்ஸ் எல்லாம் எப்படி இருக்காங்க...? நீ இன்னும் அவங்க கூட டச்லதான் இருக்கியா...?”

“நான்... துவாரகாநாத், அதுதான் கொத்தவரங் காய்... பன்னீர், கௌதம், ஆதர்ஷ், ஹானி எல்லோரும் கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிச்சு இருக்கோம். நம்ம கிளாரா ஃபேஷன் டிசைனிங் முடிச்சிட்டு கல்யாணத்தை யும் பண்ணிக்கிட்டு யூ.கே.ல செட்டில் ஆயிட்டா... ஹேமந்தா சிவில் இன்ஜினியரிங்கும், பிருந்தா ஆர்க்கி டெக் முடிச்சு இரண்டும் கல்யாணத்தையும் பண்ணிக்கிட்டு ஆந்திராவிலே பிசினஸ் பண்றாங்க...”

பேசிக் கொண்டு இருக்கும் போதே அவர்களின் அம்மா, இவர்கள் இருந்த இடத்தைக் கடந்து சென்றார்.

“தர்ஷினி... இது உங்கம்மாதானே...?”

“ஆமாம்டா... அந்த ஆக்ஸிடென்டில் எங்கம்மாவுக்கு மூளை கொஞ்சம் குழம்பிப் போச்சு...! எனக்கு இப்போ

உன்னோட ஹெல்ப் கொஞ்சம் தேவையா இருக்குடா...” என்றவள், மிகவும் தாழ்ந்த குரலில் ஏதோ சொல்லச் சொல்ல, அதை சுபாஷ் கேட்டுத் தலையாட்டினான். அவனும் அவளிடம் பதில் சொல்ல, இருவரும் மிக இறங்கிய குரலில் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

“முரளி கிட்டே மட்டும் நார்மலாகப் பேசு... வேறே எதுவும் தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதே...”

“சரி, நான் அப்படியே செய்றேன்...” சிறிது நேரம் பேசி விட்டுக் கிளம்பினான்.

மாலையில் வந்த முரளிக்கு, சங்கர் விஷயத்தைச் சொல்ல, மிகப் பதட்டத்துடன் உள்ளே வந்தவன், இந்துவை நோக்கி, “யார் வந்தா இன்னிக்கு? என்னைத் தேடி வந்தவங்க கிட்டே நீ எதுக்குப் பேசினே...?”

“உங்களை ஒண்ணும் அவன் தேடி வரலை... அவன் தேடி வந்தது என்னைத்தான்!” என்ற இந்துவைக் குழப்பமாக முரளி பார்க்க,

“என்ன, புரியலையா...? என் ஃப்ரெண்ட்ஸ்தான். இதுவரைக்கும் என்னைத் தேடி இருக்காங்க... நான் கிடைக்கலை... உன்னோட அட்ரஸை மகி அக்கா எஃப்பில போட்டதுனால உனக்கு ஏதாவது என்னைப் பத்தித் தெரியுமா? என்று கேட்க வந்தாங்க. நான்தான் என்று தெரிந்தவுடனே எவ்வளவு சந்தோஷப்பட்டான் தெரியுமா?”

இந்து அன்று மதியம் நடந்ததைச் சொல்லச் சொல்ல, முகம் சிவசிவக்க இறுதியில், “அக்கா...!” என்று அலறினான்.

அவன் அலறலைக் கேட்டு வெளி வந்த பவானி யிடம், "இன்னிக்கு மதியம் நீங்க எங்கே போயிருந்தீங்க அக்கா?"

"என்ன கேள்வி முரளி இது...? இன்னிக்கு சனிக் கிழமை, நம்ம பில்டிங் வேலை நடக்கிற கான்ட்ராக்டர் கிட்டே பணம் செட்டில் பண்றதுக்காகப் போய் இருந்தேன்."

"நீங்களும் வீட்ல இல்லை... நானும் வீட்ல இல்லை. இவ என்ன வேலை பண்ணி வெச்சிருக்கா பார்த்தீங் களா? வேண்டாம்கா... நாம நம்ம நாட்டுக்கே திரும்பிப் போயிடலாம்... கல்யாணத்தை முடிச்சிட்டு இங்கே திரும்பி வந்துக்கலாம்."

"ஏன், என்னாச்சு முரளி...?"

முரளி அன்று மதியம் நடந்தவைகளைச் சொல்ல, அதைக் கேட்ட பவானி தலையில் கையை வைத்துக் கொண்டு சோபாவில் பட்டென்று அமர்ந்தார்.

இருவரும் டென்ஷன் ஆனதைப் பார்த்த இந்து, "என்ன முரளி...? இப்ப எதுக்கு அமெரிக்காவுக்கு ரிட்டன் ஆகிற முடிவை எடுக்கிறே? இப்ப என்ன நடந்து போச்சு? நம்ம கோஸுக்குத்தானே தெரிந்து இருக்கு!"

"நீ கொஞ்சம் உன் திருவாயை மூடறியா...?" இந்துவைப் பார்த்து உச்ச பட்ச டெஸிபலில் இரைந்தான் முரளி.

"நீங்க ரெண்டு பேரும் வேணும்னா அமெரிக்கா போங்க... நான் வர மாட்டேன்!" தீர்மானமாக அறிவித் தாள் இந்து.

"தர்ஷினி, நிலைமை புரியாமல் பேசாதே... நான் உன் நல்லதுக்குத்தான் சொல்வேன். வா, நாம இங்கே இருந்து அமெரிக்கா போயிடலாம்... இன்னும் சில மாசம் முடிந்தவுடனே திரும்பி இங்கே வந்துடலாம். சொன்னா கேளு தர்ஷூம்மா."

"ஏன், இங்கே இருந்தா என்ன...?"

"இல்லம்மா... இன்னிக்கு நீ கோஸ்கிட்டே உளறி யிருக்கிற விஷயம் அவனுங்க காதுக்குப் போச்சுன்னா ஆபத்துதான்."

"யாருக்குத் தெரிஞ்சா என்னவாகும்? நீங்க எனக்கு ஃபுல் டீடெய்லா சொல்லுங்க."

"இப்போ சொல்ல முடியாது. நேரம் வரும்போது சொல்றேன்... ஏன், அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் வரக் கூடாதுன்னு தினமும் பிரே பண்ணிக்கிட்டு இருக்கேன்."

"கோஸ் யார்கிட்டேயும் சொல்லமாட்டேன்னு சொல்லி இருக்கான். அதுவும் இந்தப் பாட்டுப் போட்டி முடியுற வரைக்கும் நான்தான் தர்ஷினிங்கிறதை சொல்ல மாட் டேன்னு பிராமிஸ் பண்ணியிருக்கான்... தெரிஞ்சுக்கோங்க முரளி... தேவையே இல்லாமல் நீயும் டென்ஷனாகி, எல்லாரையும் டென்ஷன் ஆக்காதே...!"

"நீயும் எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடு. இனிமேல் யார் கிட்டேயும் உன்னைப் பற்றிய உண்மை யான விஷயங்களைப் பகிர்ந்துக்கிறது இல்லைன்னு..."

முரளி, இந்துவிடம் கேட்க... எதுவும் கேட்காமல் அவளும் அவனுக்குச் சத்தியம் செய்தாள்.

முரளி, நடந்த எல்லாவற்றையும் பிரேமிடம் பகிர்ந்து கொண்டான். முரளியின் கோபப் பேச்சில் அவன் சொன்ன கல்யாணம், இந்துவின் கவனத்தில் பதியாமலே சென்று விட்டது.

**சி**ல நாட்களுக்குப் பிறகு, இந்து சத்யம் சினி காம்ப்ளெக்ஸ் செல்ல அங்கு இனியனையும், பிரசன்னாவையும் சந்தித்தாள்.

“ஹாய் இந்திரா... என்ன, நீங்க மட்டும் தனியாகவா வந்தீங்க...?” என்று பேச்சைத் தொடங்கினான் இனியன்.

“இல்லை... ஒரு நல்ல படம் போட்டு இருக்கான்... வா பார்க்கலாம்னு ஃப்ரெண்ட் கூப்பிட்டாங்க... அதுதான் வந்து இருக்கேன்... ஆமா, எங்கே நீங்க ரெண்டு பேரும் இங்கே...?”

“இவங்க ஃபைனான்ஸ் பண்ணின படம் இன்னிக்கு இங்கே ரிலீஸ்... அதான் வந்தோம்!” இனியன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, இந்துவின் அருகில் வந்தான் சுபாஷ்.

“ஹாய் பிரியா!” என்று சொல்லி, அவள் தோளில் தட்டினான்.

“ஹாய் சுபாஷ்!” என்றவள், அவனை அணைத்துக் கொள்ள, பார்த்துக் கொண்டிருந்த இனியனின் முகம் சுருங்கியது.

"சுபாஷ், மீட் மிஸ்டர் இனியன் & பிரசன்னா!." மற்ற இருவரையும் இந்து, சுபாஷிடம் அறிமுகம் செய்து வைத்தாள்.

"இனியன், பிரசன்னா... இவன்தான் சுபாஷ்."

"எனக்கு இவங்களைத் தெரியும் பிரியா... ஆனால், இவங்களுக்கு என்னைத் தெரியாது. ஏதோ உன்னால் நானும் இவங்க கிட்டே அறிமுகமாகிட்டேன்." இருவரிடமும் கை குலுக்கினான் சுபாஷ்.

"உங்க கஸினோட ஃபிரெண்டா? நீங்களோ இந்தியாவுக்குப் புதுசு என்று சொல்லி இருக்கீங்க... அதனால் கேட்டேன்."

"என்ன பிரசன்னா சார் இப்படிக் கேட்டுட்டீங்க. நானும் பிரியாவும் பேபி கிளாஸ்ல இருந்து ப்ரைமரி ஸ்கூல் வரைக்கும் ஒன்றாக அமெரிக்கன் ஸ்கூல்ல படிச்சவங்க."

"என்னது...? நீங்க இரண்டு பேரும் ஒண்ணாப் படிச்சீங்களா?" பிரசன்னா கேட்க, ஆர்வக் கோளாறினால், தான் உண்மையை உளறியதை அப்பொழுதுதான் உணர்ந்தான் சுபாஷ்.

## 10

"ஆமாம் பிரசன்னா... இவன் பிறந்ததுதான் இங்கே. இவங்க அப்பா அமெரிக்காவிலே வேலை பார்த்ததால், அங்கேதான் இவன் படிச்சான். பிரைமரி

முடிக்கும்போது, இவங்க அப்பா பிசினஸ் ஸ்டார்ட் பண்ண இங்கே வந்துட்டாங்க. அதனால இவன் சென்னைப் பையனாக மாறிட்டான்." இந்து விளக்கம் அளித்தாள்.

"ஆமாம் பிரியா... கேட்கணும்னு நினைச்சேன். இப்படித்தான் நீங்க யாரைப் பார்த்தாலும் கட்டிப் பிடிப்பீங் களா?" கேட்ட இனியனிடம்,

"ரொம்ப நாள் பழகினவங்களைப் பார்க்கும்போது லைட்டா ஹக் பண்ணுவேன்."

"இப்படி நீங்க கட்டிப் பிடிக்கும் போது உங்க பாய் ஃபிரெண்ட், பேரண்ட்ஸ் எதுவும் சொல்ல மாட்டங்களா?" பிரசன்னாவும் கேள்விகளை எழுப்பினான்.

"மாட்டாங்க. அவங்களுக்கு நாங்க கட்டிப் பிடிக்கிறதை வைத்தே வித்தியாசம் தெரியும்."

"அப்படி என்ன வித்தியாசம், கட்டிப் பிடிக்கிறதுல?" எரிச்சலுடன் கேட்டான் இனியன்.

"இருக்கே இனியன். இப்போ என்னோட பாய் ஃபிரெண்ட்... இல்லை ஹஸ்பெண்ட் என்றால் ஃபுல் பாடி ஹக் பண்ணுவோம், வெறும் ஃபிரெண்ட் என்றால் வெறும் இந்த ஷோல்டர் மட்டும்தான் ஹக் பண்ணுவோம். அது மட்டும் இல்லாமல், முத்தம் கூட இரண்டு பேரோட கன்னங்களை மட்டும் சேர்த்து வெச்சு உதட்டால் ஒலி எழுப்புவோம்."

“ஓ...! உங்க நாட்டுக்கார பெண்ணைக் கட்டினா இது எல்லாம் தெரிஞ்சு இருக்கணும் போல. இல்லை, அடுத்த மாசமே டைவர்ஸ்தான். என்ன இந்திரா, நான் சொல்றது சரிதானே?” பிரசன்னா, இனியனைப் பார்த்துக் கொண்டே இந்துவிடம் கேட்டான்.

“இல்லை பிரசன்னா. எந்த நாட்டுக்காரப் பொண்ணை லவ் பண்ணிக் கட்டிக்கிட்டாலும்... இல்லை, பெத்தவங்க சொல்றாங்கன்னு கட்டிக்கிட்டாலும், அந்தப் பொண்ணு மேலேயும், ஆண் தன் மேலேயும் நம்பிக்கை மட்டும் வைத்து இருந்தால் போதும்... பிரச்சனையும் வராது, டைவர்ஸும் வராது. சந்தேகம்தான் டைவர்ஸுக்குக் காரணம் என்றால், அந்த ஆணுக்குத் தன் மேல் நம்பிக்கை இல்லை என்றுதான் அர்த்தமே தவிர, வேறு ஒரு காரணமில்லை.”

“இந்திரா, நீங்க எங்கே தங்கியிருக்கீங்க?” என்று இனியன் பேச்சை மாற்றினான்.

இந்து, தான் தங்கியிருக்கும் முகவரியைச் சொன்னவுடன், பிரசன்னாவும் இனியனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, அந்த மௌனத்தை சுபாஷ் கலைத்தான்.

“என்ன அப்படிப் பார்த்துக்கிறீங்க? என்ன விஷயம்?” என்க,

“நீங்க தங்கியிருக்கிற வீடு உங்க சொந்தக் காரர்களுடைய வீடா? எப்படி அவங்க உங்களுக்குச் சொந்தம்?” இனியன் பேச்சை இழுத்தான்.

"எங்கம்மா பிறந்தது வளர்ந்தது எல்லாம் ஆண்டவர் தோப்பு என்கிற கடற்கரைக் கிராமம், எங்கப்பா எங்கம்மாவை லவ் பண்ணிக் கல்யாணம் முடித்து ஊர்லேயிருந்து கூட்டிக்கிட்டுப் போயிட்டாங்க, இந்த வீட்டுல இருக்கிற மாரத்தாள் (இந்துவின் அம்மம்மா) பாட்டியும் எங்க பாட்டியும் ஃபிரெண்ட்ஸ். எங்கப்பா ஆக்ஸிடென்ட்ல இறந்து போன பிறகு என்னோட அத்தம்மா மூலமா இந்தக் குடும்பத்தோட பழக்கம் ஆயிடுச்சு... அந்த முறையிலேதான் எங்கம்மா என்னை அக்கா துணை யோட இங்கே தங்க சம்மதிச்சு இருக்காங்க, எங்கண்ணா யு.எஸ்.லே இருக்கான்."

"உங்க அப்பா என்ன செய்தாங்க?" ஆர்வமாகக் கேட்டான் இனியன்.

"எங்கப்பா ஹோட்டல் பிஸினஸ்."

"ஓ அப்படியா! இப்போ யார் அந்தப் பிசினஸ் பார்த்துக்கிறாங்க... உங்கம்மாவா?" ஆச்சரியமாகக் கேட்டான் பிரசன்னா.

"நாங்க அமெரிக்காவில் இருக்கிற வரைக்கும் என்னோட அத்தான், அக்கா, நான் மூணு பேரும் பார்த்துக்கிட்டோம். இப்போ தனியா அத்தானால் பார்த் துக்க முடியாதுங்கிற காரணத்தினாலே, இப்போ எங்க ஹோட்டலை நாங்க லீஸுக்கு விட்டுட்டோம்."

"அப்போ உங்க அண்ணன் என்ன செய்றாங்க யு.எஸ்.லே?"

இனியன் மேலும்மேலும் கேள்விகளை அடுக்கினான்.

"அண்ணன் அங்கே லாயரா இருக்கான்."

இனியனும் பிரசன்னாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொள்ள, "சரி... டயமாயிடுச்சு, கிளம்பலாமா?" என்று சுபாஷ், இந்துவைப் பார்த்துக் கேட்க, சரி என்று தலையாட்டி விட்டு, இருவரிடம் இருந்து விடைபெற்றாள்.

இவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு இருந்த பிரசன்னா, இனியனைப் பார்த்து, "என்னடா... இந்தப் பொண்ணையாவது முடிச்சுடலாமா? எல்லாம் தெளிவா கேட்டுக்கிட்டே இல்ல... இதுவும் டைம் பாஸ்தானா?"

"நீ வேற மச்சி... நான் எதிர்பார்த்ததைவிட சூப்பர் இடம்டா. சொந்தப் பிசினஸ் இருக்கு... அதுவும் பாரின்ல. மச்சான் வேறே லாயரா இருக்கான்... இவளைக் கல்யாணம் கட்டிக்கிட்டா கிரீன்கார்ட், கஷ்டமே படாமல் வெளிநாட்டுலே போய் செட்டில் ஆயிடலாம். அங்கே லாயரா பிராக்டீஸ் பண்ண முடியாட்டியும், இவங்க குடும்ப பிசினஸ் பார்த்துக்கிட்டு இருந்துடலாம். என்ன, பொண்ணு தான் கொஞ்சம் ஓட்ட வாய் போல... ரெண்டு முறைதான் பார்த்துப் பேசினோம், எல்லாத்தையும் உளறிக் கொட்டிடுச்சு."

"அப்போ எவனாவது பிட்டைப் போடுறதுக்கு முன்னாடி நீ முந்திக்கோடா. எப்போ சொல்லப் போறே அவ கிட்டே?"

"அடுத்த மாசம் உன்னோட பர்த்டே வருதுல்ல... இன்வைட் பண்ணிட்டு, அங்கே வரும் பொழுது சொல்லிட வேண்டியதுதான். எப்படி என் ஐடியா? சரி தானே?"

"ம்ம்... என்ஜாய் மச்சான்!" என்று சொல்லி இனியனை அணைத்துக் கொண்டான் பிரசன்னா.

**ஹா**ல் சோபாவில் அமர்ந்து, முரளி தன்னுடைய ஐபாடில் பாட்டுக் கேட்டுக் கொண்டு இருந்தான். அவன் அருகில் இந்து வந்து அமர்ந்து, அவனுடைய ஹெட் செட்டில் உள்ள ஒரு ரிசீவரைப் பிடுங்கித் தன் காதில் மாட்டிக் கேட்டவள்... பின்பு முரளியைப் பார்த்து,

"இந்தப் பாட்டை விட நான் ஒரு பாட்டு தரேன்... கேட்டுப் பாருங்க முரளி," என்று சொல்லித் தன்னுடைய ஐபாடில் இருந்த ஒரு பாட்டைப் போட்டு அவன் காதில் வைக்க, அதை கேட்கக் கேட்க முகம் மாறுதல் அடைந்து கொண்டே வந்தது.

அவனைப் பார்த்த இந்து, "சரி, இந்தப் பாட்டுப் பிடிக்கலைன்னா இதைக் கேளு!" என்று மற்றொன்றை மாற்ற, பாட்டு ஒலிக்கத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே காதில் செருகியிருந்த ஹெட் செட்டின் பகுதியைக் கழற்றி எறிந்து விட்டு இந்துவைப் பார்த்து,

"ஏய்...! நீ ஒழுங்கான பாட்டாவே கேட்க மாட்டியா? உனக்குன்னு கிடைக்குது பாரு பாட்டு."

"எவ்வளவு நல்ல பாட்டுத் தெரியுமா? உனக்குத்தான் ரசனை சரியில்லை."

“இதுவா நல்ல பாட்டு? முதல்ல நீ போட்ட பாட்டு, ‘கண்ணா என் சேலைக்குள்ளே கட்டெறும்பு புகுந்துடிச்சு!’ வருது இரண்டாவது பாட்டு... அதுலேயும் மோசம். ‘முத்தம் தர ஏத்த இடம் முகத்துல எந்த இடம்?’னு வருது. இந்த மாதிரி எல்லாம் பாட்டு கேட்டே... புத்தி புல் மேயத்தான் போகும், இப்ப எல்லாம் உன் சேருவார் சேர்க்கை சரி யில்லை. அதைச் சரி பண்ணினா நீ ஒழுங்குக்கு வந்துடுவே!”

முரளி, இந்துவைத் திட்டிக் கொண்டு இருந்தான்.

முரளியின் அருகில் நெருங்கி உட்கார்ந்து, அவன் தோள் மீது சாய முயன்றாள். அவளிடம் இருந்து விலகி எழுந்தவன், அவளைத் தாண்டிச் செல்ல முயலும் போது பொத்தென்று அவள் மேலே விழப் போவதை உணர்ந்து, சமாளித்து நிற்க முயன்று, முடியாமல் மீண்டும் தடுமாறி இந்துவின் மேல் சரிந்தான்.

இந்துவை அணைத்தாற் போல் விழுந்தவனின் முகம், அவளது இடது பக்க கழுத்துவளைவின் மீது இருந்தது. அவனின் வலது கை அவளது இடைப் பகுதியிலும், இடது கை சோபாவின் மீதும் இருக்க... இந்துவின் தலை முடியில் இருந்து வந்த மூலிகை ஷாம்புவின் மணமும், உடலில் இருந்து எழுந்த வீட்டில் காய்ச்சிய தேங்காய் எண்ணெய்யும் பயத்தமாவும் கலந்த வாசனையும், வழவழப்பான சருமமும் அவனை வேறு உலகிற்கு அழைத்ததோ என்னவோ?

அவளின் கழுத்து வளைவில் இருந்து முகத்தை எடுக்காமல், அங்கேயே ஆழப் புதைந்தவனின் உதடுகள், தன்னுடைய முதல் முத்திரையை அங்கே பதித்தது.

பின்னர் சிறிது மேல் ஏறி காதில் ஒளி வீசிக் கொண்டு இருந்த ஒரே ஒரு வைரக்கல் பதித்த கம்மலின் மீது பதிந்து, பின்பு சிறிது சிறிதாக முன்னேறி, அவனின் உதடுகள் அவளின் முகத்தில் எல்லா இடங்களிலும் முத்திரையைப் பதித்து கொண்டே வந்து, பின் உதடுகளில் சில நிமிடங்கள் தங்கி இளைப்பாறியது.

இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாக அணைத்த நிலையில், சத்தமில்லாமல் கொடுப்பதும் பெறுவதுமாக நீண்ட முத்த யுத்தத்தை நடத்திக் கொண்டு இருந்தனர்.

இவர்களின் காதல் மோன நிலையைக் கலைப்பது போல், வீட்டின் நிலைக்கதவு திறக்கும் சத்தம் கேட்டு, இருவரும் சுய உணர்வு பெற்று விலக, கதவைத் திறந்து கொண்டு பிரேமும் பாட்டியும் வருவதைப் பார்த்த முரளி, அவசரமாகத் தன்னுடைய அறை பார்த்து முகம் சிவக்க நடந்தான்.

எதுவுமே நடக்காதது போல இந்து, தன் ஐபாடில் பாட்டைப் போட்டு கொண்டு, அதனுடன் பாடிக்கொண்டே பிரேமையும் பாட்டியையும் பார்த்து என்ன என்பது போல் கண்ணால் கேட்டாள்.

“பாத்தீங்களா பாட்டி... இவளுக்கு இருக்க வேண்டிய வெட்கம் அவனுக்கு இருக்கு. இவ என்னடான்னா

எதுவுமே இங்கே நடக்காத மாதிரி உட்கார்ந்துக்கிட்டு, என்னன்னு உங்களையும் என்னையும் பார்வையாலேயே கேட்கிறா. எவ்வளவு கொழுப்பு பாருங்க?"

"அது இருக்கு இவளுக்கு எக்கச்சக்கமா. நீயாவது வெளியிலே இருந்து வந்தே, சரி. வீட்டுக்குள்ளாற இருந்த நான் எப்படி வெளியில் வந்தேன் தெரியுமா? வாசல்லே நிக்கிற சங்கரைக் கூப்பிடணும்னு உள்ளே இருந்து வந்தேன். இதுக ரெண்டு பேரும் கட்டிப் பிடிச்சுக்கிட்டு இருந்தது, கொஞ்சம் நேரம் பொறுத்துப் பார்த்தேன் இரண்டும் விலகறதா தெரியலை.

"என்ன செய்யலாம்னு யோசிச்சப்போ, இவ என்னைப் பார்த்துட்டா. உடனே விலகி இருக்கணுமா வேண்டாமா? இல்லியே... என்னைக் கண்ணாலே உள்ளே போன்னு சொல்றாப்பா... நான் பின் வாசல் வழியா வெளியிலே போய்ச் சங்கரைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்றதுக்குள்ளே, போன விஷயமே மறந்து போச்சு. என்ன செய்யச் சொல்றே இவளை? அடுத்த தடவை தம்பி ஹரிஹரன் வந்தால், கல்யா ணத்தை முடிக்கச் சொல்ல வேண்டியது... இல்லன்னா நம்ம மானம் கப்பலேறிடும்."

"பாட்டி, முரளி நல்ல பையன்... எனக்கு அவனைத் தெரியும்... நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் தவறாக நடக்காது."

"பேராண்டி, எனக்கும் தெரியும் முரளி நல்லவன் தான்னு. ஆனால் இவ இருக்கா பாரு, நல்லவ கிடையாது,

இவளா அவனைப் பிடிச்சு ஏதாவது செய்றது... அது ஏடாகூடமா ஆகறதுக்கு முன்னாடி கல்யாணத்தை முடிக்கணும்ப்பா."

இந்து எழுந்து பாட்டி அருகே சென்று, "கிரானி, இன்னிக்குத்தான் நீ உன் வயசுக்குத் தகுந்த மாதிரி யோசிச்சு இருக்கே. சீக்கிரமா மாமாப்பா கிட்டே சொல்லி முகூர்த்தத்துக்கு நாள் குறிக்கச் சொல்லு...!" என்றபடி முன்பக்கம் விழுந்த கூந்தலை அலட்சியமாகப் பின்னால் தூக்கிப் போட்டவாறு தன் அறையை நோக்கிச் சென்றாள்.

## 11

சுபா இன்ஸ் ஹோட்டலில் இணைந்த 'சாப்பிட வாங்க' ரெஸ்டாரன்ட்டின் உள்ளே ரிசர்வ் செய்த டேபிளில் சுபாஷும், இந்துவும் அமர்ந்து இருந்தனர்.

"தர்ஷினி, எல்லாரும் எப்போ வருவாங்கப்பா? இங்கே ஸீ ஃபுட் ஸ்டாட்டர் ஏதாவது இரண்டு பேருக்கும் சொல்லவா?"

"உனக்கு வேணும் என்றால் சொல்லிக்கோ, எனக்கு வேண்டாம்."

"உனக்குத்தான் ஸீ ஃபுட் ரொம்பப் பிடிக்குமேப்பா."

"நான் முழுக்க வெஜிட்டேரியனா மாறி வருஷம் பதினொன்னு ஆகுது."

"என்னது...? நீ வெஜிட்டேரியனா மாறிட்டியா? ஆர் யூ ஜோக்கிங்."

“இல்லடா... உண்மையாகத்தான் சொல்றேன். என்னிக்கு நான் அத்தம்மா கிட்டே போனேனோ, அப்போ இருந்து நான் வெஜிட்டேரியனா மாறியாச்சு.

“கோஸு, நீ எல்லார் முன்னாடியும் தர்ஷினின்னு கூப்பிடாதே. முரளி காண்டாயிடுவான். எல்லாரையும் போல இந்து என்றே கூப்பிடு. அதோ எல்லாரும் வர்றாங்க.”

இவளுடன் போட்டியில் பங்கேற்பவர்கள் அனை வரும் வர... ஹாய் என்று சொல்லி விட்டுக் கைகளைத் தட்டியும் கட்டிப் பிடித்தும் தங்கள் வருகையை உணர்த்திய பிறகே அமர்ந்தனர்.

“ஹாய் இந்து... முரளி எங்கே காணோம்? எப்போ வருவாங்க? உனக்குத் தெரியுமா?”

“தெரியலையே தேவன்... உன் கிட்டே அவன் நம்பர் இருந்தா கால் போட்டுக் கேட்டுப் பாரு. அவன் வரேன்னு சொன்னானா?”

“இருங்க... நான் அவன் எங்கே இருக்கான்னு விசாரிக்கிறேன். அவன் வர்றேன்னு சொன்னால் கண்டிப் பாக வருவான். டிராபிக்லே எங்கேயாவது மாட்டி இருப் பான்!” என்று சொல்லிய சுபாஷ், எழுந்து கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பின் முரளி வந்தான். வந்த வுடன் எல்லோரும் இந்துவுக்கும் முரளிக்கும் வாழ்த்து களைச் சொன்னார்கள்.

காரணம், இதுவரை இந்த ஜோடி மட்டுமே முதலாவதாக வந்து இருந்தது, அதுமட்டுமல்லாமல், பத்து ஜோடிகளில் முதல் ஜோடியாகத் தேர்வு பெற்றதனால், இந்த ட்ரீட் கொடுத்தார்கள் இந்துவும், முரளியும்.

“நேத்திக்கு நீங்க ரெண்டு பேரும் பின்னிட்டீங்க போங்க... நீங்க பாடினதைக் கேட்டப்போ, எங்களையே மறந்துட்டோம். என்ன வாய்ஸ்ப்பா உங்க ரெண்டு பேருக்கும்... சான்ஸே இல்ல போங்க... சூப்பர் பாட்டு செலக்‌ஷன்ப்பா!”

மனதாரப் பாராட்டினான் ஜெயன்.

“ஜெயன், அந்தப் பாட்டை நாங்க செலக்ட் பண்ணலை... ஆக்சுவலா நாங்க செலக்ட் பண்ணின பாட்டு வேறே. நம்ம தீபனும் வைசாலியும்தான், ‘நீங்க ரெண்டு பேரும் இந்தப் பாட்டைப் பாடுங்க... உங்களுக்கு முன்னாடியே இந்தப் பாட்டைச் செலக்ட் பண்ணிட்டோம்’னு சொன்னாங்க.” இந்து விளக்கமளிக்க,

தீபன், இந்துவைப் பார்த்து, “நீங்க ரெண்டு பேரும் பாடினதாலேதான் ‘நீயொரு காதல் சங்கீதம்’ பாட்டு சூப்பரா வந்து இருந்தது. குறிப்பா சொல்றதுன்னா, அந்த மணலலை யாவும் என்ற இடத்துல கரெக்டா பாடினீங்க. மற்ற எல்லோரும் மணழலை என்று பாடியிருக்காங்கன்னு நம்ம சீஃப் கெஸ்ட்டே சொன்னாங்க பார்த்தீங்களா...? ஆமாம் முரளி, அந்தக் காதல் காதல் என்று வருகிற

வரியை நீங்க பாடினதைப் பார்த்தால், உண்மையாக நம்ம இந்துவை லவ் பண்ணி, அதைப் பாடுற மாதிரி இருந்தது தெரியுமா?"

"நீ வேற தீபன். இதுக்கு முன்னாடி இவங்க பாடின 'ஓ பிரியா பிரியா' பாட்டுல கூட அப்படியேதான் பாடினார் முரளி. ஆனால், நமக்குத் தெரியும்... அவருக்கு, அவர் கூட படிச்ச பொண்ணோட நிச்சயம் பண்ணிட்டாங்க என்றும், இந்துவுக்காக அவங்க கஸின் யு.எஸ்.ல காத் திருக்கிறது. ஆனால், வெளியிலே யாரைப் பார்த்தாலும் கேட்கிறது இவங்க ரெண்டு பேருக்குள்ளே சம்திங் சம்திங்கான்னு!"

இந்துவால் தேவன் என அழைக்கப்பட்டவன், முரளியையும் இந்துவையும் போட்டியைக் காணும் மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பதைச் சொல்ல...

"சும்மா இரு தேவன்... யார் காதிலாவது விழுந்தா பிரச்சனை ஆயிடப் போகுது!" முரளி அடக்கிப் பேச்சை வேறு பக்கம் திசை திருப்பி விட... அனைவரும் பேசிச் சிரித்துக் கொண்டு இருந்தனர்.

திடீரென்று "ஹாய் இந்திரா" என்று ஒரு குரல் கேட்க, அமர்ந்திருந்த அனைவரும் குரல் வந்த திசை யைப் பார்த்தனர்.

"வாங்க டாக்டர்!" என்று சொல்லித் தன்னுடைய சக நட்புகளிடம், "பிரெண்ட்ஸ், இவங்க என்னோட வாய்ஸ் தெரப்பிஸ்ட் டாக்டர் ரென். எங்க நாட்டுல இருந்து வந்து

இருக்காங்க... இப்போ எனக்கும் முரளிக்கும் வாய்ஸ் தெரப்பி கொடுத்துக்கிட்டு இருக்காங்க."

"ஓ...! உங்களுக்காக இவங்க யு.எஸ்.லே இருந்து வந்து இருக்காங்களா?"

"விஜிதா, அவங்க எங்களுக்காக இங்கே வரலை. தன்னோட ஒரு நிகழ்ச்சிக்காக இந்தியா வந்தாங்க, அவ்வளவுதான்."

இவர்களுடன் போட்டியில் பங்கு பெறும் விஸ்வான் வந்து எல்லாருக்கும் பத்திரிகை கொடுத்தான்.

பின்பு அனைவரிடமும், "எல்லோரும் கண்டிப்பா வந்துடணும். முக்கியமா இந்து, நீ மட்டும் வராமல் இருந்துடாதே. கல்யாணப் பொண்ணு என் தங்கையே என்னை அடிச்சிடுவா. அதுமட்டுமில்லாமல் அன்னிக்கு நம்ம ஆளுங்கதான் லைட் மியூசிக் வேற. கஷ்டப்பட்டு நம்ம நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கிட்டே முரளி பர்மிஷன் வாங்கியிருக்கான். சொல்லிட்டேன், நீ மட்டும் சொதப்பிடாதே."

"விஸ்வான், எங்கக்கா பெர்மிஷன் கொடுத்தால், கண்டிப்பாக நான் வர்றேன்."

"என்ன பிரியா இப்படிச் சொல்றே?" என்று விஸ்வான் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே,

முரளி, விஸ்வானின் தோளைத் தட்டி, "நீ ஃபீல் பண்ணாதே... நான் இந்து தங்கியிருக்கிற வீட்டுலதான் பேயிங் கெஸ்ட்டாகத் தங்கியிருக்கேன். நான் அவங்க

அக்கா கிட்டே பெர்மிஷன் வாங்கி கூட்டிக்கிட்டு வரேன். கவலையை விடு!" எனத் தைரியம் அளிக்க,

விஸ்வான், முரளியை அணைத்து, "மச்சான்... ரொம்பத் தேங்ஸ்டா."

சிறிது நேரம் சென்ற பிறகு இந்துவின் மொபைல் அழைக்க, அங்கேயிருந்து எழுந்து சென்றாள். முரளி, சுபாஷை நோக்கிக் கண்ணைக் காட்ட, அவனும் இந்துவின் பின்னோடு எழுந்து சென்றான்.

வெளியில் சென்று பேசி விட்டுத் திரும்பிய இந்து, அங்கிருந்தவர்களிடம், "சாரி பிரெண்ட்ஸ், என்னோட இன்னொரு பிரெண்ட் இங்கே வந்து இருக்காங்க... என்னைக் கூப்பிடறாங்க, நான் போய்ப் பேசிட்டு வரேன்." சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

முரளியின் காதின் அருகில் வந்த சுபாஷ், "ஏய்... அந்தத் தடியன்கள்தான் கூப்பிடறாங்க... இவ போறா, நானும் துணைக்குப் போறேன்!" என்று முணுமுணுத்து விட்டு இந்துவின் பின்னால் நகர்ந்தான்.

சுபாஷும் இந்துவும் ரெஸ்டாரன்ட்டை விட்டு வெளியே வந்து ஹோட்டலின் ரிசப்ஷனை அடையும் போது, அங்கே இனியனும் பிரசன்னாவும் இவர்களுக்காகக் காத்திருந்தனர்.

"வாங்க இந்திரா!" என்று பிரசன்னாவே அவளை முன்னின்று வரவேற்றான். அழைத்துக் கொண்டு நடக்கும் போதே பிரசன்னா, இந்துவிடம், "உங்களை எங்கப்பா

வுக்கு இன்னிக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அப்பா வந்துகிட்டு இருக்காரு... அது வரைக்கும் நீங்க என்னோட ரூம்ல வெயிட் பண்ணலாம்.”

பிரசன்னாவே வந்து அழைத்துச் செல்லும் இவளைப் பார்த்த ஹோட்டல் ஊழியர்கள் அனைவரும், ‘இந்த பெண் பிரசன்னாவுக்கு அவ்வளவு முக்கியமான வளா?’ என்று தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண் டனர். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல், எம்.டி.யின் அறைக்குள் சென்று விட்டு வந்த எம்.டி.யின் பி.ஏ.வும், பிரசன்னாவும் இனியனும் நின்று கொண்டு, இந்துவும் சுபாஷும் அமர்ந்து கொண்டு இருந்ததைச் சொன்னான்.

எம்.டி. அறையின் உள்ளே....

“நான் இங்கே வந்திருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும் பிரசன்னா?”

“நான் உங்க காரைப் பார்த்தேன்... உங்களைப் பத்தி அப்பா கிட்டேயும் சொன்னேன். அவரும் உங்களை மீட் பண்ணனும்னு சொன்னாரு. அதனால்தான் கூப்பிட் டேன்.”

“இன்னிக்கு என்ன செலிபரேஷன்...? பார்த்தீங்களா, எங்களை எல்லாம் கூப்பிடலை?”

“இனியன், இன்னிக்கு உள்ள பார்ட்டி, எங்களோட சக போட்டியாளர்களுக்கு நானும் முரளியும் கொடுக்கிற டிரீட்... அதனால்தான் நாங்க வேற யாரையும் கூப் பிடலை.”

"எதுக்காக டிரீட்... தெரிஞ்சுக்கலாமா?"

"பத்து ஜோடி போட்டியாளர்களில் ஒருவராக... அதுவும் முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோடி நாங்க தான். அதற்குத்தான் டிரீட்."

"ஆமாம்... ட்ரீட் எல்லாம் என்ன ரெஸ்ட்டாரன்ட்ல வெச்சுக் கொடுக்கிறீங்க...?"

"என்ன பிரசன்னா இப்படிக் கேட்கிறீங்க...? ரெஸ்டாரன்ட்லதானே ட்ரீட் கொடுப்பாங்க... வேறே எங்கே வெச்சுக் கொடுக்கணும்? நீங்க என்ன சொல்ல வர்றீங்க...? புரியலை எனக்கு."

"ஆமாம்... நீங்க அமெரிக்காவிலே இருந்துதானே வந்து இருக்கீங்க?"

"ம்ம்... அதுல உங்களுக்கு என்ன சந்தேகம் இனியன்...?"

"இங்கே சாதாரணமான அப்பர் மிடில் கிளாஸ் பசங்களே ட்ரீட்னா பப்பு, டிஸ்கோத்தேன்னு போறாங்க. நீங்க என்னடான்னா ரெஸ்டாரன்ட்ல வெச்சு ட்ரீட் கொடுக்கிறீங்க?"

"நான் அமெரிக்காவிலே வளர்ந்து இருந்தாலும் இந்தியாவிலே உள்ள சாதாரண வீட்டுப் பொண்ணாதான் எங்க அத்தம்மா வளர்த்து இருக்காங்க... எங்கக்காவும் இதிலே எல்லாம் ரொம்பக் கட்டுப்பாடு."

"அப்போ உங்க ஹாபிஸ்தான் என்ன? என்டர் டெயின்மெண்ட்டுக்கு என்ன செய்வீங்க?"

“எங்க இடத்துக்குப் பக்கத்துல இந்தியக் கோவில்கள் அல்லது மிஷன்ல பாலவிஹார் வகுப்புகளில் பாட்டு, நடனம் சொல்லித் தருவேன்.”

“அப்போ அதுக்கு உங்களுக்கு சேலரி எவ்வளவு தருவாங்க இந்திரா?”

“சேலரியா? இனியன், நான் செய்றது சர்வீஸ்.”

“கழுத்துல சிலுவை போட்டு இருக்கீங்க... நீங்க எப்படி இந்துக் கோவில் உள்ளே எல்லாம்...?”

“பிரசன்னா... பிறப்பாலே நான் ஒரு கிறிஸ்துவப் பெண். ஆனால், என்னை வளர்த்தவங்க எங்க அத்தம்மா ஒரு ஹிந்து... இந்தச் சிலுவையை நான் ஊருக்குக் கிளம்பும் போது என்னோட கஸின் போட்டு விட்டான். அவ்வளவு தான். எனக்குக் கிருஷ்ணரும் இயேசுவும் ஒண்ணுதான். இரண்டு கோவிலுக்கும் போவேன்... இரண்டு மதப் பண்டிகையையும் கொண்டாடுவேன்.”

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போது நவநீதம் உள்ளே வந்தார். பிரசன்னா, இருவருக்கும் பரஸ்பர அறிமுகம் செய்து வைத்தான். நவநீதம், இந்துவின் குடும்பத்தைப் பற்றி விசாரிக்க... அவள் ஏற்கெனவே பிரசன்னா, இனியனிடம் சொன்னதையே சொன்னாள்.

சிறிது நேரம் பேசிக் கொண்டு யோசித்துக் கொண்டு இருந்த நவநீதம், திடீரென்று இந்துவிடம், “இதோ பாரும்மா இந்திரா... பிரசன்னா எனக்கு ஒரே பையன். ஏகப்பட்ட சொத்துக்கள் இருக்கு, படிப்பும்

இருக்கு. நான் ஜாதி, மதம் எல்லாம் பார்க்க மாட்டேன்... என்ன, உன்னை மாதிரி அவனுக்கு இங்கிலீஷ்ல பேச வராது... மத்தப்படி உனக்கு எந்த விதத்திலேயும் குறைஞ்சவன் கிடையாது, அவனுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சு இருக்காம். அவன் உன்னைக் கல்யாணம் கட்டணும்னு ஆசைப்படுறான்... நீ என்ன சொல்றே?" என்று கேட்டார்.

நவநீதத்தைத் தவிர மற்ற அனைவரும் அவரின் பேச்சைக் கேட்டு அதிர்ந்தனர்.

## 12

முதலில் சுய உணர்வு பெற்ற இந்து, "சார், இப்படித் திடீரென்று கேட்டால், நான் என்ன பதில் சொல்ல என்று தெரியலை. இந்த ஹோட்டல் ஓனர் பெண்ணோடதான் கல்யாணம்னு பிரசன்னா சொன்னார்... நீங்க இப்படிச் சொல்றீங்க?"

"அது வந்தும்மா... நீ தங்கியிருக்கிற வீட்டோட பொண்ணுதான் இந்த ஹோட்டலோட ஓனர்மா... சின்ன வயசுல அது காணாமல் போயிடுச்சு. அது தெரிந்த வுடனே அந்தப் பொண்ணோட அம்மா... அதுதான் நீ வீட்லே பார்த்து இருப்பியே ஒரு பொம்பளை... அவங் களுக்குப் பைத்தியம் பிடிச்சிடுச்சு.

"அந்தப் பொண்ணோட தாத்தாதான் இந்த ஹோட்டலை நிர்வகிக்கிற உரிமையை என்கிட்டே

கொடுத்து, பேத்தி திரும்பி வந்தா அவளுக்குப் பிரசன்னா வைக் கட்டிவைக்கணும்னு சொல்லிட்டுச் செத்துப் போயிட் டார். நானும் சரின்னு சொல்லி இத்தனை நாள் காத்திருந் தேன். இன்னும் அந்தப் பொண்ணு வந்து சேருகிற வழி தெரியலை.

"அந்தப் பொண்ணுக்காக நான் இவ்வளவு நாள், இவனுக்கு கல்யாணம் கட்டாமல் இருந்தேன், இவனும் தன் கண்ணாலேயே பார்க்காத பொண்ணுக்காகக் காத்திருந்தான், உன்னைப் பார்க்கும் வரைக்கும். எப்போ உன்னை என் பையன் பார்த்தானோ... அப்பவே உன் மேலே ஆசை வெச்சுட்டான்.

நானாம்மா அந்தப் பொண்ணு கூட வாழப் போறேன்...? அவன்தானே வாழப் போறான். அவன் விருப்பமில்லைன்னு சொல்லும் போது நான் வற்புறுத்த விரும்பலை. அவனுக்குப் பிடிச்ச உன்னையே கல்யாணம் பண்ணி வைக்கலாமேன்னுதான் உன் கிட்டே நானே நேரடியாகக் கேட்டுட்டேன். உங்க வீட்டுல உங்கம்மா எப்படி? உன் விருப்பத்துக்குத் தடையாக இருப்பாங்களா?"

"எங்கம்மா என்னோட விருப்பத்துக்குத் தடையாக இருக்க மாட்டாங்க. என்னோட விருப்பம்தான் அவங்க ளுக்கு முக்கியம்."

"சரிம்மா... அடுத்த வாரம் புதன்கிழமை பிரசன்னா வுக்குப் பிறந்த நாள். அதுக்கு நாங்க விழாவுக்கு ஏற்பாடு எல்லாம் பண்ணிட்டோம். உங்க ரெண்டு பேர் கல்யாணத் தையும் அதிலே அறிவிச்சுடலாமா?"

இந்து அவசர அவசரமாக, “ஐயோ சார்... அப்படி எல்லாம் செய்திடாதீங்க. நான் எங்கம்மா கிட்டே பேசணும். அவங்களுக்கு உடம்பு முடியலை. அதனாலே, நான் கலந்துக்கிற போட்டியில் செமி ஃபைனல் போது எப்படியும் ஒரு மாதம் எனக்கு லீவு கிடைக்கும். அதிலே ஊருக்குப் போக அந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர் கிட்டே கேட்டு இருக்கேன். அவரும் சரி சொல்லி இருக்காரு.

“அப்போ நான் அம்மாவைப் போய் நேர்லே பார்த்து விஷயத்தைச் சொல்லிக் கன்வின்ஸ் பண்றேன். எப்படியும் ஃபைனல் நான்தான் வின் பண்ணுவேன். அப்போ நீங்க நினைக்கிற மாதிரி, அந்த மேடையிலேயே அறிவிப்பு செய்துக்கலாம்.”

“என்னம்மா நீ, சாரு மோருன்னுகிட்டு. அழகாக மாமான்னு சொல்லும்மா... நீ சொல்றதும் நல்ல ஐடியா வாகத்தான் இருக்கு. அப்படியே செய்யலாம்.”

“அங்கிள், இன்னொரு விஷயம்... பிரசன்னாவோட பிறந்த நாள் விழாவலே என்னால் கலந்துக்க முடியாது. என்னோட பாடுற பையன் விஸ்வான், அவனோட சிஸ்டர் கல்யாணம் அன்னிக்கு. அதுக்கு நாங்க எல்லோரும் போறதாக முடிவு பண்ணிட்டோம். நீங்க இப்படித் திடீர்னு கூப்பிடுவீங்கன்னு தெரியாது. சாரி.”

“சரிம்மா. உனக்கு என்னிக்கு வசதிப்படும்னு சொல்லு... நாம அன்னிக்கு ஒரு நாள் பிரசன்னாவுக்குப் பிறந்த நாள் கொண்டாடிடலாம்.”

"நான் நெக்ஸ்ட் வீக் சனிக்கிழமை ஃப்ரீதான் அங்கிள்."

"சனிக்கிழமை நான் இங்கே இருக்க மாட்டேன்மா. பரவாயில்லை... நீயும் அவனும் அவன் பிரெண்ட்ஸும் சேர்ந்து கொண்டாடுங்க. என்ன, நான் சொல்றது சரிதானே? எந்த இடம்னு இவன் சொல்லுவான்!" நவநீதம் இந்துவுடன் பேசிக்கொண்டே இருக்கும் பொழுது, இந்து வின் போன் அழைத்தது

போனைப் பார்த்து விட்டு, "சாரி அங்கிள், எங்கக்கா தான் பயமாயிடுச்சுன்னு கூப்பிடறாங்க. நான் கிளம்பறேன்!" என்று சொல்லிக் கிளம்பினாள்.

நவநீதமும் அவளுடன் சேர்ந்து எழுந்து, "இதோ பாரும்மா இந்திரா... இப்போ போய் உங்க அக்கா கிட்டே இந்த விஷயத்தைப் பத்திச் சொல்லிக்கிட்டு இருக்காதே. அதுவே புருஷனை அமெரிக்காவிலே விட்டு இங்கே வந்து இருக்கு. அம்மா கிட்டே சொல்லி, அவங்க மூலமா உங்கக்காவுக்கும் அத்தானுக்கும் தெரியட்டும். என்ன, நான் சொல்றது சரிதானே?" பேசிக்கொண்டே வந்தவர்,

ஹோட்டலின் ஜி.எம். மற்றும் சில முக்கிய ஊழியர் களையும் கூப்பிட்டு, "இந்தப் பொண்ணைத்தான் என் பையன் பிரசன்னா கல்யாணம் பண்ணிக்கப் போறான். நானும் சரின்னு சொல்லிட்டேன். கூடிய சீக்கிரம் கல்யாணம் இருக்கும்!" என்று அறிவித்தார்.

இந்து அனைவரிடமும் கைகூப்பி நன்றி சொல்லி விட்டுக் காரை நோக்கி சுபாஷுடன் வேகமாக நடந்தாள்.

ஹோட்டலின் உள்ளே எம்.டி. அறையில்....

"என்னப்பா நீங்க... நான் அந்தப் பொண்ணை லவ் பண்றதாகச் சொல்லிட்டீங்க. ஆக்சுவலா அந்தப் பொண்ணை லவ் பண்றது நான் இல்லை... நம்ம இனியன்தான்."

"டேய்... எனக்கும் அது தெரியும்டா. நான் இப்படிச் செய்து இருக்கேன்னா யோசிக்காமல் செய்ய மாட்டேன். புரிஞ்சுக்க... நீ இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணினால்தான் உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். அதனாலதான்டா இப்படி ஒரு பிட்டைப் போட்டேன்."

"என்னப்பா இப்படிச் சொல்றீங்க? எனக்கு இந்த ஹோட்டல் ஓனர் பொண்ணு சுபாவோடதானே கல்யா ணம்னு சொன்னீங்க? அப்புறம் ஏதோ பிளான் எல்லாம் போட்டீங்க... இப்போ வந்து இந்தப் பொண்ணைக் கல்யாணம் கட்டச் சொல்றீங்க...?"

"அறிவு கெட்ட மடையா... அந்த சுபா பொண்ணு இருக்கிற இடம் இந்த நிமிஷம் வரைக்கும் நமக்குத் தெரி யாது, கூட்டிக்கிட்டு வரும்பொழுது அந்தப் பத்திரிகைக் காரன் தூக்கிட்டுப் போனதுதான். இந்த நிமிஷம் வரைக்கும் எங்கே இருக்குதுன்னு தெரிய மாட்டேங்குது. அந்தப் பத்திரிகைக்காரன் பின்னாடியே ஆள் போட் டால், அவன் நகராமல், அவன் பிள்ளை கேசவ் வந்தான். சரின்னு அவனைப் பின் தொடர்ந்தால், அவன் உலகம் சுற்றும் வாலிபன் மாதிரி ஊரையும் உலகத்தையும் சுத்திக்கிட்டு இருக்கான்.

"விசாரிச்சவரைக்கும் கேசவுக்கும் இந்தப் பத்திரிகைக்காரனுக்கும் எந்த விதமான சொந்தமும் இருக்கிற மாதிரி தெரியலை. அந்தப் பொண்ணு ஒரு வேளை திரும்பி வந்தாலும், நம்ம கிட்டே ஒரு முக்கியமான வீடியோ இருக்கு. அதைக் காட்டினால் போதும்... அந்தப் பொண்ணே அவளோட ஆத்தாகிட்டே கூடச் சொல்லாமல், நாம சொல்ற இடத்திலே சொல்ற மாதிரி கையெழுத்துப் போட்டுட்டு ஓடியே போயிடும்.

"இங்கே நான் லஞ்சத்திலே வாங்கின சொத்துக் களை எல்லாம் சி.பி.ஐ. நோண்டிக்கிட்டு இருக்கு. அதிலே என்ன ரிசல்ட் வரப் போகுதுன்னு தெரியலை... நான் ஃசீப் மினிஸ்டர் இல்லடா... சாதாரண மினிஸ்டர்தான். அதனால் எப்படியும் விசாரணை எல்லாம் வந்து, கேஸ் முடிந்து பார்த்தால் பாதி சொத்து நம்ம கிட்டே இருக்காது.

"என்னைப் பணிய வைக்க முடியலைன்னா உன் மேலே தான் ஏதாவது கேஸ் போட்டு உள்ளே தூக்கிப் போடுவானுங்க, உனக்கும் நம்ம மேலிடம் சீட் தர மாட்டேன்னு சொல்லிட்டாங்க. எனக்கே அடுத்த எலெக்ஷன்ல சீட் தராங்களா என்னன்னு தெரியலை. இப்போ நம்ம நிலைமை இப்படி இருக்கு."

"சரிப்பா... அதுக்கும் இந்தப் பொண்ணை நான் கல்யாணம் கட்டுறதுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு...? அதை முதல்ல சொல்லுங்க."

"ஏன்டா அவசரத்துக்குப் பொறந்தவனே...! நான் தான் சொல்லிக்கிட்டே வர்றேன் இல்ல... நீ குறுக்காலே

புகுந்துகிட்டு கரைச்சல் கொடுக்கிறே. நான் என்ன சொல்ல வர்றேன்னு நீ முதல்ல காது கொடுத்துக் கேளு... பின்னாடி நீ பேசு. புரிஞ்சுதா? என்ன சொல்லிக்கிட்டு இருந்தேன். ஆங்... நான் முழுசும் அம்புடக் கூடாதுன்னா, நீ இந்த ஊர்ல இருந்தாத்தானே...!

"இந்தப் பொண்ணைக் கட்டினா நீ அமெரிக்கா போயிடலாம். இந்தப் பொண்ணோட வீடும் நல்ல வசதி தான் போல... நீ சொன்னவுடனே நம்ம ஆளுங்களுக்குத் தெரிஞ்சவங்களை வெச்சு விசாரிச்சேன். அங்கே வீடு, ஹோட்டல்னு இருக்குது. நல்ல படிப்பு வேறே படிச்சுட்டு இருக்கு. இந்தப் பொண்ணோட அண்ணன் வேற லாயர்... தேவைப்பட்டா என்னோட கேஸுக்கு உதவு வான். நம்ம சொத்தும் எந்த விதமான சேதாரம் இல் லாமல் நம்ம கைக்கு வந்து சேர்ந்துடும்.

"நீயும் அங்கே போய் சில வருஷம் பின்னாடி, அந்த நாட்டுக்காரனா மாறிட்டா... எந்த ஒரு பிரச்சனையும் கிடையாது நமக்கு. இவ்வளவு ஏன்டா! நீ அந்த நாட்டுக் காரனா மாறின பிற்பாடு, நீ அந்த நாட்டுல எலெக்ஷன்ல கூட நிற்கலாம்டா."

"மெய்யாலுமா?"

"என்னது, மெய்யாலுமான்னு கேட்கிறே?"

"அந்த நாட்டுக்காரனா மாறினால் அந்த நாட்டு எலெக்ஷன்ல நிற்கலாமா?"

"ஆமாம்டா... ஏதோ ஒரு பேர் சொன்னான்டா நம்ம இசக்கி முத்து. அன்டர்வேர்ல்ட்னு பேரு உள்ள இங்கிலீசு

பட நடிகன், வேற ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்தவனாம். அமெரிக்க நாட்டுக்காரனா மாறின உடனே எலெக் ஷன்லே நின்னு ஜெயிச்சு இருக்கானாம்"

இனியன், நவநீதத்தைப் பார்த்து, "அங்கிள், அவன் பேரு அன்டர்வேல்ட் இல்லை... அர்னால்ட் சுவஸ்நாகர்... ஆமாம்டா பிரசன்னா... உங்கப்பா சொல்ற மாதிரி அவன் பிரெஞ்சுக்காரன்... அமெரிக்கனா மாறிப் பல வருடங்கள் கழித்துக் கலிபோர்னியா மாகாணத்திலே எலெக்ஷன்ல நின்னு கவர்னராக இருக்கார்."

"ஓ... ஏன்பா இனியா, அந்த நாட்டுல கவர்னர்தான் ஆக முடியுமா? ஒரு சீஃப் மினிஸ்டர்... இல்லாட்டி ஒரு பிரைம் மினிஸ்டர்லாம் ஆக முடியாதா?"

இனியன் மனதுக்குள், 'இந்தாளுக்கு நான் சொன்னால் ரொம்ப விளங்கிடும். சரியான கூமுட்டைங்க. இவனும் இவன் பிள்ளையும் எனக்கு ஒண்ணு பார்த்து செட் பண்ணலாம்னு பார்த்தா கெடுத்துட்டான் அப்பன். இதிலே ஏன் கெடுத்தேன்னு விளக்கம் வேற.

உங்களுக்கு எல்லாம், கூட இருந்து உறவாடிதான் கெடுத்து விடணும். இரு டீ... உங்களுக்கு ஆப்பை நானே வைக்கிறேன்!' என்று மனதிற்குள் எண்ணியபடியே...

நவநீதத்தைப் பார்த்துச் சிரித்தபடியே, "அங்கிள்... அந்த நாட்டிலே கவர்னர்ங்கிறது நம்ம நாட்டிலே இருக்கிற சீஃப் மினிஸ்டர் மாதிரிதான்!"

"ம்ம்... பார்த்தியா பிரசன்னா... நான் சொன்னது எல்லாம் உண்மைதான்னு உன்னோட பிரெண்டே சொல்லிட்டான். என்ன செய்றே நீ... அந்தப் பொண்ணை லவ்ஸ் பண்ணிக் கட்டிக்க... இந்த மாதிரி பொண்ணெல் லாம் உனக்குத்தான்டா செட் ஆகணும். இவனுக்கு இந்த ஊர்லேயே ஏதாச்சும் ஒரு பொண்ணைப் பார்த்துக் கட்டி வைக்கலாம்!" பேசி விட்டுக் கிளம்புவது போல் எழுந்த நவநீதம்,

பிரசன்னாவைத் தன் கைப் பிடியாய் இனியனை விட்டுச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்று, அவன் காதருகில் மிக மெல்லிய குரலில், "இல்ல... உன்னோட இப்போ வாழ்ந்துக்கிட்டு இருக்கிறது ஏதாச்சும் உன் கல்யாணத்திலே தகராறு பண்ணும்போது, அதை இவனுக்குக் கட்டி வெச்சுடலாம்!"

பிறகு வெளிப்படையாகச் சத்தமாக, "என்ன, போடா... போய் அந்தப் பொண்ணை அடுத்த வாரம் கூட்டி வந்து அவளுக்காகத் தனியாகப் பிறந்த நாள் கொண்டாடு. என்ன... நான் கிளம்புறேன், சரியா?" நவநீதம் கிளம்பிச் சென்றார்.

"சாரிடா மச்சான்... உனக்குப் பார்த்த பொண்ணு தான் அது. ஆனால் உன்னை விட அந்தப் பொண்ணு எனக்குத்தான் நல்ல சூட்டாகும். அப்பாரு சொல்றாரு... உனக்கு வேறே பார்க்கலாம்."

மனதுக்குள் இனியன், 'மவனே! உன் கிட்டே ஒரு விஷயத்தை நான் மறைச்சேன்டா. என்னன்னா, இந்த

இந்திராவோட கார் ரிஜிஸ்ட்ரேஷன்ல இருக்கிற பேரு கேசவ் சுப்ரமணியம்... அவன் இவளுக்கு அத்தானோட பிரெண்ட் டாம். உனக்குத் தெரியாமல் அந்த விஷயத்தை இந்திரா கிட்டே போன் மூலமா தெரிஞ்சுக்கிட்டேன். உங்களைப் பத்தின எல்லா ரகசியங்களையும் இவ மூலமாகவே அவன் கிட்டே சேர்த்து, உங்க தில்லு முல்லு எல்லாத் தையும் வெளியே கொண்டு வந்து, அப்பனையும் பிள்ளையையும் ஜெயிலுக்குள்ளே தள்ளிட்டு, நான் அவளோட அமெரிக்கா போவேன், அவ புருஷனா. என்ன, அப்பனும் பிள்ளையாலேயும் அதைப் பார்க்க முடியாது. அவ்வளவுதான்!'

இனியனின் தோளைத் தட்டிய பிரசன்னா, "என்னடா கம்முன்னு வர்றே... ஏதாச்சும் பேசுடா."

"உங்க அப்பாரு சொல்றதும் சரிதான் பிரசன்னா... சரி, அடுத்த வாரம் நீ எங்கே வெச்சுப் பார்ட்டி கொடுக்கப் போறே?"

"எங்கேடா கொடுக்கலாம்...? நீயே சொல்லுடா. நம்ம உத்தண்டியிலே இருக்கிற ரிசார்ட்ல கொடுக்கலாமா?"

"அந்தப் பொண்ணுதான் சொல்லிடுச்சுப்பா... அவங்கக்கா ரொம்ப ஸ்ரிக்ட்னு. அம்புட்டுத் தூரம் வருமோ வராதோ தெரியாது. ஒண்ணு செய்... அந்தப் பொண்ணு தான் பப்பு, நைட் கிளப்பு, டிஸ்கோதே போனது இல்லேன்னு சொல்லிச்சு இல்லே... இந்த ஹோட்டல்ல இருக்கிற நைட் கிளப்ல பார்ட்டி கொடுக்கலாம்...

சனிக்கிழமை வேற கூட்டமும் நல்லா இருக்கும்... அந்தப் பொண்ணுக்கும் சந்தோஷமா இருக்கும். என்ன சொல்றே நீ?"

"நீ சொல்றதும் சரிதான்டா. அடுத்த சனிக்கிழமை நம்ம நைட் கிளப்புலதான் பார்ட்டி. அதைச் சொல்லிட லாம்."

## 13

புதன்கிழமை இரவு. விஸ்வான் தங்கையின் கல்யாண ரிசப்ஷனில் முதலில் தனித் தனியாகப் பாடிக் கொண்டிருந்த முரளியும் இந்துவும், வந்தவர்களின் வேண்டு கோளை ஏற்று, இருவரும் இணைந்து மேடையில் பாட ஆரம்பிக்க...

இந்து ஆர்கெஸ்ட்ராவை நோக்கிக் கண் காட்ட, அவர்கள் சரியான பாட்டினை எடுத்து வைத்துக் கொண்டனர்.

"என்ன பாட்டு தர்ஷினி...?" உதடு பிரியாமல் முணுமுணுப்பாகக் கேட்டான் முரளி.

"எல்லாம் நம்ம பாட்டுதான். பேசாமல் இருங்க, எல்லோரும் நம்மையேதான் பார்க்கிறாங்க!" அவனைப் போலவே முணுமுணுத்து விட்டு,

மைக்கை எடுத்துப் பாட ஆரம்பித்தாள். 'சும்மா நிக்காதீங்க, நான் சொல்லும்படி வைக்காதீங்க...'

முரளியின் முகம் சிரித்தாற் போல் இருந்தாலும், இந்துவைப் பார்த்து முறைத்துக் கொண்டே இணைந்து பாடினான்.

கீழே உட்கார்ந்து கொண்டு பிரேமும் சுபாஷும் சிரித்தனர். பின்பு சுபாஷ் ஏதோ சொல்ல, அவன் சரி என்று தலையாட்டி சுபாஷிடம் போனை வாங்கி, அதைப் பார்த்துத் தன்னுடைய போனில் மாற்றிக் கொண்டான். மேடையில் இருவரையும் இறங்க விடாமல் ஒருவர் மாற்றி ஒருவர் சில பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்க, தொடர்ந்து இவர்களும் பாடினார்கள்.

பார்த்துக் கொண்டிருந்த விஸ்வான் இடையிட்டு, மற்றவர்களுக்கும் வாய்ப்புகள் தர வேண்டும் என்று சொல்லியும் ஒரே ஒரு பாடல் என்க... இதுதான் இறுதி என்று சொல்லி விட்டு, அதிலும் குறிப்பாக திவ்யா என்ற பெண்மணி எழுந்து நிலா பாட்டுதான் பாட வேண்டும் என்றதால், 'கல்யாணத் தேன் நிலா' என்ற பாடலை இருவரும் இணைந்து பாடினர்.

பாடி முடித்து மேடையை விட்டு கீழே இறங்கிய இந்து, நேராக சுபாஷ் அமர்ந்து இருந்த இடம் நோக்கி வந்தாள்.

சுபாஷின் தோளில் தட்டிக் காது அருகில் குனிந்து, “என்னடா... என் போனில் இருந்து பிரேம் அண்ணா கிட்டே என்ன காமிச்சே?”

“ஒண்ணுமில்லை தர்ஷினி... நான் உன் மொபைல்ல நீ பாடறதை போட்டோவும், வீடியோவும்

எடுத்தேன். அதை அண்ணா அம்மா கிட்டே காட்டணும்னு அவர் மொபைலுக்கு மாத்திக்கிட்டார். அவ்வளவுதான்."

இவர்களின் அருகில் வந்த முரளி, "தர்ஷினி, ஒண்ணு ஒழுங்கா கோஸ் கிட்டே உட்கார்ந்து பேசு... இல்லே, தள்ளி நின்னு பேசு. அதை விட்டு அவன் மேலே சாய்ந்து பேசுறது தப்பு... எங்களுக்குத் தெரியும் சுபாஷ் யாரு? என்னன்னு? ஆனா மத்தவங்களுக்குத் தெரியாது... நீ இப்படி நின்னு பேசுறதை ஒரு ஆள் மொபைல்ல போட்டோ எடுக்கப் பார்த்தாரு... நல்ல வேளை நான் பார்த்து உன்னை மறைச்சு நின்னுக் கிட்டேன்.

"நம்மைப் பத்தி அடுத்தவங்க தப்பா பேச நாமே இடம் கொடுக்கக் கூடாது. இதெல்லாம் என்ன சொன்னா லும் உனக்குப் புரிய மாட்டேங்குது. சரி, யார் உனக்கு இந்தப் பாட்டை எடுத்துக் கொடுத்தது? எவ்வளவோ நல்ல பாட்டுகள் இருக்கு... அதை எல்லாம் விட்டு விட்டு, இதைப் போய் எடுத்து இருக்கே...? இங்கே வா என் கூட!" என்று அழைத்துச் சென்று, தனக்கும் பிரேமுக்கும் இடையில் அவளை உட்கார வைத்துத் தன்னுடைய இடது கையைத் தூக்கி, அவளின் கழுத்துப் பகுதியில் வரும் சேரின் மீது வைத்துக் கொண்டு, தலையை அவள் பக்கம் சாய்த்து, மேடையில் பாடுபவர்களைப் பற்றி அவளுடன் மிக மெல்லிய குரலில் பேசிக் கொண்டு இருந்தான். அதே நிலையிலே நிகழ்ச்சி முடியும் வரை இருந்து விட்டுப் பிறகு கிளம்பினர்.

**போட்டி** நிகழ்ச்சியின் சூட்டிங் ஆரம்பித்தது. அந்த வாரம் அவர்கள் சூட் பண்ணியது ஜட்ஜ்களுடன் இணைந்து இருவரும் பாட வேண்டும்... அவர்கள் பாடுவதற்கு ஏற்றாற் போல் தங்களிடம் உள்ள தனித் திறமைகள் எதையாவது காட்ட வேண்டும்.

முதலில் இந்துவும் முரளியும் ஜனனியுடன் இணைந்து, ‘உன் மேலே ஆசை தான்’ என்ற பாடலையும், அரவிந்துடன் இணைந்து ‘சோனியா சோனியா’ பாடலையும், பின்பு பார்கவியுடன் இணைந்து ‘வந்தேன் வந்தேன் மீண்டும் நானே வந்தேன்’ பாடலையும் பாடி முடித்தவுடன் அங்கிருந்த காம்பியர்,

“என்னங்க இரண்டு பாட்டுகள் சண்டை போடற சாங்க் மாதிரியே பாடியிருக்கீங்க, அப்போ நீங்க இங்கே என்ன சண்டையா போடப் போறீங்க?”

“ஆமாம்... எங்க இரண்டு பேருக்குமே டேக் வாண்டோ தெரியும், அதனால் அதைத்தான் இங்கே செய்து காட்டப் போறோம்.”

“இந்துவுக்கும் டேக்வாண்டோ தெரியுமா? பார்கவி யோடு பாடும்பொழுது, நிஜமாகவே சண்டை போடுற மாதிரி தான் பாடினாங்க. அவ்வளவு இன்வால்வ்மெண்ட் பாட்லே.” அரவிந்த் தன்னுடைய கருத்தைச் சொல்ல,

சிறிது நேரத்திற்குப் பின் இருவரும் கராத்தே டிரஸ்ஸில் வந்து தங்களது திறமையை நிரூபிக்க... அரவிந்த், இந்துவைப் பார்த்து, “இந்து... ஒருவர் இல்லை,

இரண்டு பேர் வந்தாலும் சமாளிக்கலாம். ஒரு வேளை கராத்தே தெரிந்த ஒரு நாலு பேர் அட்டாக் பண்ண வந்தால் என்ன செய்வீங்க?"

"அது மாதிரியான நிலைமை வந்தா நான் வர்மக் கலையை வைத்து, வர்ற ஆளுங்களை மயக்கமாகச் செய்துவிட்டுத் தப்பிக்கலாம். அந்த மயக்கமும் அவங் களுக்கு ஐந்து நிமிடம் முதல் பத்து நிமிடம் வரை இருக்கும்... வர்மக் கலையை எல்லோரும் கைவிரல் களால்தான் செய்வாங்க. என்னுடைய குருநாதர் கால் விரலாலும் போடுவது பற்றிக் கற்றுக் கொடுத்து இருக் கிறார். நாலு அல்லது ஐந்து பேர் வந்தாலும் சமாளிக்க முடியும்."

"வர்மக் கலை கூடத் தெரியுமா? அதைப் பற்றி விளக்கிக் கொஞ்சம் செய்து காட்ட முடியுமா?" என்றார்.

"நம் உடலில் இருக்கின்ற உயிர்நிலை இடங்களாக இருக்கும் குறிப்பிட்ட இடங்களுக்கு வர்மம், இதனை மர்மம் என்றும் சொல்வார்கள். படுவர்மம் 12, தொடுவர்மம் 96, அப்படி மொத்தம் 108 வர்ம இடங்கள் இருக்கு. வர்மம் உள்ள இடங்களில் தாக்கு, காயம், குத்து, வெட்டு, தட்டு, இடி, உதை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று படும்போது, வலி, வீக்கம், இரத்தம் வெளிப்படுதல், மரத்துப் போதல், மயக்கம், உறுப்புகள் செயலிழத்தலோடு மரணமும் சம்பவிக்கும்.

"நான் இப்போ போடற வர்மத்துனால இவங்களை மயக்கமாக வைக்க மாட்டேன், அதே போல வேற எந்தத்

தீங்கும் ஏற்படாமல் சில வினாடிகள் அவர்கள் கை கால்களை அசைக்க முடியாமல் செய்ய முடியும். அதை மட்டும் செய்கிறேன்," என்று சொல்லி விட்டு, முரளியுடன் சேர்த்து கராத்தே படிக்கும் சில மாணவர்களையும் இணைத்துச் செய்து காட்டினாள். அரங்கமே எழுந்து கைத்தட்டியது.

"இது மட்டும்தான் தெரியுமா உங்களுக்கு?" என்று காம்பியர் கேட்க,

"இல்லை, எங்க இரண்டு பேருக்குமே யோகாவும் பிராணாயாமமும் தெரியும்."

"முரளி, உங்களுக்கு இந்தப் பிராணாயாமம் எந்த விதத்திலே பாடறதுக்கு ஹெல்ப் பண்ணுது?" ஜனனி இவர்களைப் பார்த்து கேட்டார்.

"பிராணாயாமமும் யோகாவும் பண்ணறதால்தான் எங்க இரண்டு பேருக்கும் அப்பர் அண்ட் லோயர் நோட்ஸ் சஸ்டெயின் பண்ணும்போது பிரெத் கன்ட்ரோல் கிடைக்குது. அதாவது 32 பீட்ஸ் வரைக்கும் மூச்சை ஹோல்ட் பண்ணி எங்களால் சங்கதியை சஸ்டெயின்ல ரொண்ட்னஸ் பண்ண முடியறதுக்குக் காரணமே பிராணாயாமம்தான்... அது தவிர நல்ல பேஸ்ல பாட முடியறதுக்கும் இதுதான் காரணம்."

"பிராணாயாமம் பண்ணினா நல்லா பாட முடியும்னு சொல்லறீங்க இல்லியா?" பார்கவி கேட்டார்.

இந்து, பார்கவியைப் பார்த்து, "பிராணாயாமம் சங்கீதத்துக்கு மட்டுமில்லை... நம்மையும் இளமையாக

வெச்சுக்க உதவும். நீண்ட ஆயுள் பெறவும் உதவியா இருக்கும்."

"என்னது இந்து, புதுசா சொல்றீங்க? இளமையா இருக்கலாம் என்பது உண்மையாகவா இல்ல ரூப்பா?" ஆவலுடன் கேட்டார் ஜனனி.

"இல்லீங்க... நான் சொல்லறது உண்மைதான். பிராணாயாமம் என்பது வெறும் மூச்சுப் பயிற்சிதான். அதை வைத்துத் தொடர்ந்து செய்து குண்டலினியை எழுப்புவார்கள். சித்தர்கள் எல்லாம் நீண்ட நாள் இருப்பதற்குக் காரணம் இந்தப் பிராணாயாமம்தான். அதாவது, மக்கள் மூப்படைவதற்குக் காரணமே நாம் சுவாசிக்கும் ஆக்சிஜன்தான். நாம் அதை அதிகமாகச் சுவாசிக்க சுவாசிக்க, நமது உடல் உறுப்புகள் நாளாக நாளாகச் செயலிழக்க ஆரம்பிக்கிறது. இதைத் தடுக்க நமது முன்னோர்கள் கையாண்ட முறைதான் பிராணா யாமம்.

"சுவாசிப்பின் மூலம் உள்ளே இழுக்கப்படும் காற்றை நம் சுவாசப் பையில் சேர்த்து வைத்துத் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்துவதுதான் பிராணாயாமம். அது பிராணா யாமம் கற்றுக் கொண்ட உடனே வந்து விடாது. மூச்சுக் கன்ட்ரோல் வர வர நாளடைவில் வரும்."

அதன்பிறகு இரண்டு நாட்களிலும் சூட்டிங் நடந்தது.

போட்டி காலிறுதியை நோக்கி நகர்ந்தது.

சனிக்கிழமை அக்காவிடமும் சுபாஷிடமும், வெளி யில் சென்று விட்டு இரவு ஒன்பது மணிக்குள் வந்து விடுவதாகச் சொன்னாள்.

பவானி, "நீ சீக்கிரமாக வரப் பாரும்மா. முரளி வேற இப்போ நிருபராகப் பத்திரிகையிலே வேலை பார்க்கிற துனால, சூட்டிங் இல்லாத அன்னிக்கு காலையில் போனா ராத்திரி பன்னிரண்டு இல்லைன்னா ஒரு மணிக்குத்தான் வர்றான். நானும் இன்னிக்கு பில்டிங் இருக்கிற இடத் துக்குப் போறேன். ரொம்ப நேரம் வெளியிலே சுத்தாதே. முரளிக்குக் கோபம் வந்துடும்... சொல்லிட்டேன். சுபாஷ் கூட போ." என்று சொன்னார்.

அவள் சமர்த்தாகத் தலையாட்டினாள். சிறிது நேரம் கழித்து இந்து, சுபாஷுக்குப் போன் செய்தாள்.

"தர்ஷினி, என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லு. நான் முக்கியமான வேலையில் இருக்கேன்."

"கோஸு... இன்னிக்கு அந்தக் காக்கா மண்டைய னுக்குப் பிறந்த நாள் ட்ரீட். அவங்க என்னோட ஹோட்டல் இருக்கிற கிளப்ல வெச்சுக் கொடுக்கிறாங்க. நான் போகப் போறேன். நீயும் வா."

"இன்னிக்கு சத்தியமா என்னாலே அசையக் கூட முடியாது. எனக்கு ரிலீஸ் இருக்கு. இப்போ இருந்து நாளைக்குக் காலையில் வரைக்கும் எனக்குக் கிளையன்ட் கூட மீட்டிங் இருக்கு. டெஸ்டிங் வேற ஓடுது... பக்ஸ் இருக்கான்னு பார்த்து அதுல அப்படி இருந்தா கோடிங்

எழுதிச் சரி பண்ணணும். சாரிம்மா, என்னால வர முடியாது. நீ அக்காவையோ இல்லாட்டி நம்ம பிரேம் அண்ணாவையோ கூப்பிட்டுக்கிட்டு போ... அவங்க வர்றலைன்னா நீ போகாதே. அவ்வளவுதான் சொல்லு வேன்."

"சரி, நான் பார்த்துக்கிறேன்," என்று சொல்லி விட்டுப் போனை அணைத்தாள்.

யாருடைய துணையும் இன்றி, மாலை ஆறு மணிக்கு மேல் தன்னந்தனியாகக் காரை எடுத்துக் கொண்டு மன்சூர் பின் தொடர, சுபா இன்ஸ் ஹோட்டலை நோக்கிச் சென்றாள்.

ஹோட்டலின் வரவேற்புப் பகுதியில் இருந்த பிரச்சன்னா, அவளை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். மன்சூரால் அவளை ஹோட்டலினுள் பின் தொடர முடியவில்லை.

ஏழு மணிக்குப் பார்ட்டி தொடங்கியது. பிரசன்னா வந்திருந்த அனைவரிடமும் இந்துவைத் தன்னுடைய பியான்ஸி என்று சொல்லி அறிமுகப்படுத்தினான்.

சிறிது நேரத்திற்குப் பின் பிரசன்னா, "இந்திரா, நீ ஏதாவது டிரிங்ஸ் எடுத்துக்கிறியா?" என்று கேட்க,

"ஐயோ சாரி... எனக்குப் பழக்கமில்லை."

"ஏய்... நீ வேற. எதுவும் ஹாட் டிரிங்ஸ் சாப்பிட வேண்டாம், ஜஸ்ட் பீர் ஆர் ஒயின் எடுத்துக்கோ."

"அது எல்லாம் சாப்பிட்டா எங்கக்கா திட்டுவாங்க, அடுத்த பிளைட்ல ஏத்தி என்னை ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போயிடுவாங்க."

"நீ போய் எதுக்கு அவங்க கிட்டே நான் டிரிங்ஸ் சாப்பிட்டேன்னு சொல்றே... உன் ரூம்ல போய் படுத்துடு. யாருக்கும் எதுவும் தெரியாது."

"டிரிங்ஸ் சாப்பிட்டுக் கார் ஓட்டக்கூடாது. கார் இல்லாமல் வீட்டுக்குப் போனால் தெரிந்து விடும்."

"ஒயின் இல்லாட்டி ஷாம்பெயின் சாப்பிட்டால் ஒண்ணுமே தெரியாது. இரண்டு பாட்டில் அடிச்சா கூட போதையே இருக்காது. இதுக்குப் போய்ப் பயப்படுறே? இன்னிக்கு நான் தர்றேன்... நீ இந்த ஒரு பாட்டிலைக் கோக்குடன் கலந்து குடி... அப்புறம் நீயே என்னை மாதிரி சொல்லுவே!" என்று சொல்லிய பிரசன்னா, ரெட் ஒயினில் கோக் கலந்து கொடுக்க, இவளும் குடித்தாள்.

வோட்காவும் விஸ்கியும் கலந்து அடிக்கும் அவனுக்கு, ஒயினில் போதை இல்லைதான். ஆனால், முதன் முதலில் குடிக்கும் இந்து ஒன்றரை கிளாஸ் குடித்த உடனே கண்ணைக் கிறக்கிக் கொண்டு தூக்கம் வருவது போல் இருந்தது. மூன்றாவது கிளாஸ் முழுசாக அவள் தொண்டைக்குள் இறங்கிய பிறகு, அவளுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது.

வெளியில் மன்சூர், சுபாஷ் வருகிறானா என்று பார்த்தான். அவன் வரவில்லை. நேரம் சென்று கொண்டே

இருந்தது. மணி எட்டைத் தொட்டவுடன் சுபாஷுக்குக் கால் செய்ய, அவன் தன்னுடைய நிலையை ஏற்கெனவே இந்துவிடம் சொன்னதாகச் சொல்லியவுடன், அங்கிருந்த வெயிட்டரை அணுகி, இந்துவின் போட்டோவைக் காண்பித்துச் சில நோட்டுகளும் கொடுத்து, அவள் எங்கிருக்கிறாள் என்று கேட்க, அவனின் மூலம் இந்து நைட் கிளப்பினுள் சென்றது தெரிய வந்தது. அவசரமாகப் போனில் முரளியை அழைத்து விஷயத்தைச் சொல்ல, அவன் பிரேமைத் தொடர்பு கொண்டான்.

"டேய் பிரேம்... நீ உடனடியாக சுபா இன்ஸ்க்கு வாடா. இன்னும் தர்ட்டி மினிட்ஸ்ல நீ அங்கே இருக்கணும், பார்த்துக்க."

வேகமாக வந்த பிரேம், சுபா இன்ஸ் ஹோட்டலின் இருட்டுப் பகுதியில் நின்று கொண்டிருந்த முரளி மற்றும் மன்சூரைப் பார்த்து அங்கு சென்றான்.

"எதுக்கு மாமா என்னை அவசரமாகக் கூப்பிட்டே?"

"டேய், நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்க. நான் உன் கூட வர முடியாது. அதே போலத்தான் மன்சூர் அண்ணாவும். இப்போ நீ நேரா இதுக்குள்ளே இருக்கிற நைட் கிளப்புக்குப் போறே!" சொல்லிக்கொண்டேயிருந்த முரளியைக் குறுக்கிட்டு,

"என்ன... அங்கே இருக்கிற யார் கிட்டேயாவது இருந்து உனக்கு ஏதாவது தகவல் வேணும். நான் போய் அந்த ஆளைப் பார்த்து வாங்கிட்டு வரணும். அவ்வளவு தானே! கவலையை விடு, நான் போயிட்டு வரேன்."

"ஏய்... என்னை முழுசாச் சொல்ல விடுடா அவசரக் குடுக்கை, உள்ளுக்குள்ளே உன் தங்கை அந்தப் பிரசன்னா கொடுக்கிற பார்ட்டிக்குத் தனியா போய் இருக்கா. சுபாஷால் இன்னிக்கு வர முடியலை. போய்ப் பார்த்துக் கூட்டிக்கிட்டு வா. நீ வந்த காரை எடுத்துட்டுப் போக நான் ஏற்பாடு பண்றேன்," என்று சொல்லிக் கொண்டே திரும்பியவன், தன் அருகில் பிரேம் இல்லாததை அப் பொழுதுதான் கவனித்தான்.

உள்ளே சென்ற பிரேம், குடித்துவிட்டு முழு போதையில் கண்கள் செருகப் பிரசன்னாவின் தோளின் மீது சாய்ந்து நின்றுகொண்டு இருந்த இந்துவைப் பார்த்தான். பிரேமுக்குக் கோபம் தலைக்கேற, இந்துவின் அருகில் சென்று அவளின் தோளைப் பற்றி, "இந்து..." என்று கூப்பிட, கண்ணைத் திறந்து பார்த்தவள், "ம்ம்..." என்று கண்ணைக் கசக்கினாள்.

பிரசன்னா யாரோ புதியவன் என்று நினைத்துப் பிரேமிடம், "ஏய்... யாரு நீ? என் ஆளை எதுக்கு டிஸ்டர்ப் பண்றே?" என்ற கெத்துக் காட்ட... பிரேம், பிரசன்னாவின் முகத்தில் ஒரு அறை கொடுத்த சத்தத்தில் கசக்கிய கண்ணினால் தெளிவற்ற பிம்பமாகப் பிரேம் இந்து வின் கண்ணுக்குத் தெரிய, அவள் வாயைத் திறந்து, "அண்ணா..." என்று சொல்லி அவன் மேல் சரிந்தவளை அணைத்துப் பிடித்தவாறு, பிரசன்னாவை முறைத்தான்.

பிரசன்னா, "மச்சான்" என்றவுடன்...

“யாருக்குடா யாரு மச்சான்? உன்னை நான் அப்புறமாகக் கவனிச்சுக்கிறேன்!” என்று பல்லைக் கடித்தபடி பிரசன்னாவின் அருகில் சென்று, அங்கு டேபிள் மேல் இருந்த ஹாண்ட் பேக் மற்றும் கார்ச் சாவியை எடுத்துக் கொண்டு, இந்துவைக் குழந்தையைத் தூக்குவது போல் தூக்கி அணைத்துப் பிடித்தவாறு வெளியே வந்தான் பிரேம்.

பிரேமின் பின்னால் நடந்த பிரசன்னா சொன்னதைக் கேட்டவுடன் ஒரு பக்கம் அதிர்ச்சியும் தன் கையில் இருக்கும் தங்கை மேல் கோபமும் ஒருசேர வந்தது.

## 14

இந்துவைத் தூக்கி நடந்த பிரேமின் பின்னாலே வந்த பிரசன்னா, “என் பேரு பிரசன்னா. நான் உங்க தங்கையை லவ் பண்றேன். அது விஷயமா உங்க கிட்டே பேசணும்... நாம எப்போ மீட் பண்ணலாம்?”

பிரேம் தன் மனதுக்குள் எழுந்த ஆத்திரத்தையும் அதிர்ச்சியையும் மறைத்தபடி, “என்னது... நீ இவளை லவ் பண்றியா? சரி, நீ லவ் பண்ற பொண்ணுக்கு இப்படித்தான் தண்ணி ஊத்திக் கொடுப்பியா? சரி விடு... இவ கிட்டே உன்னோட போன் நம்பர் இருக்குல்ல... எங்கே எப்போன்னு நானே கூப்பிட்டுச் சொல்றேன்,” என்று சொல்லி விட்டு நகர... பிரசன்னா, பிரேமைப் பின் தொடர்ந்து வந்தான்.

பிரேம் நின்று திரும்பிப் பார்த்து, “நீ போய் உன்னோட பார்ட்டியைத் தொடரு... என்னைப் பின் தொடர்ந்து வராதே!” என்று வார்த்தைகளை உமிழ்ந்து விட்டு, அவளை எடுத்துக் கொண்டு காருக்கு விரைந்தான்.

காருக்குச் சென்று அவளைக் கீழே இறக்கி அணைத்தபடி காரைத் திறந்து முன் இடது பக்க இருக்கையில் அமர்த்தி விட்டுப் போனில் முரளியை அழைத்து, இந்துவின் நிலையையும், பிரசன்னா அவனிடம் கேட்டதையும் சொல்ல, “பிரேம்... நிலைமை சரியா இல்லை. நான் அப்பா கிட்டே பேசிட்டு வரேன். நீ வீட்டுக்குப் போயிடாதே. இங்கு இருந்து நேராப் போய் மூணாவதா வர்ற ரைட்ல திரும்பி, உடனே வர்ற லெப்ட்ல திரும்பி நில்லு, நான் வர்றேன்.”

முரளி சொன்னதைக் கேட்டு, “நான் அப்படியே செய்றேன் மாமா. நீ சீக்கிரம் வா!” பதிலளித்த பிரேம், காரை எடுத்துக்கொண்டு வெளியேறி, முரளி சொன்ன இடத்தை அடைந்து, அவனுக்காகக் காத்துக் கொண்டு இருந்தான். சிறிது நேரத்தில் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான் முரளி.

“பிரேம்... நான் அப்பா கிட்டேயும் அக்கா கிட்டேயும் பேசிட்டேன், இவளைத் திருவான்மியூர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு நான் போறேன். நீ என் வண்டியை எடுத்துக் கிட்டு வா.”

சொல்லியபடியே காரின் ஓட்டுனர் பக்கக் கத வினைத் திறந்தான்.

"மாமா, நானே காரைக் கொண்டு வரேன், நீ உன்னோட வண்டியிலே வா!" என்றான்.

"பிரேம்... அவ உனக்குத் தங்கைதான். ஆனால், அவ இப்போ எங்க வீட்டு மருமகடா."

"நீ இங்கே இப்படிச் சொல்லிக்கிட்டு இருக்கே மாமா... ஆனா அங்கே ஒருத்தன் இவளைத் தன்னோட காதலி, வருங்காலப் பொண்டாட்டின்னு சொல்லிக்கிட்டு இருக்கான்."

"ஏய்... இவளை என்னோட பதினேழாவது வயசுலேயே எங்க வீட்டு மருமகளா ஒப்புத் தாம்பூலம் போட்டாச்சு... உனக்கு தெரியாது, நாளைக்கு உங்கப்பா வந்தா கேட்டுப் பாரு, இப்ப என் கிட்டே கார் சாவியைக் கொடு!" சொல்லிக் கை நீட்ட, அவன் கையில் சாவியை வைத்தான் பிரேம்.

மூவரும் இந்துவின் வீட்டை அடைந்த பொழுது, அங்கே வாசலில் இந்துவின் பாட்டியும் பவானியும் இருந்தார்கள்.

கார் நின்றவுடன் பவானி ஒருபுறமும் பிரேம் மற்றொரு புறமும் காரை நெருங்க, முரளி இருவரையும் பார்த்து, "அக்கா, நான் அவளைப் பார்த்துக்கிறேன். நீங்க அவளோட பேக் மட்டும் கொண்டு வாங்க. பிரேம், இந்தா கார் கீ. காரை ஷெட்ல நிறுத்திடு!"

ஆளுக்கு ஒரு வேலையைக் கொடுத்து விட்டு, இந்துவைக் கையில் தூக்க முயன்றான்.

அவன் செய்ய முயன்ற செயலைத் தடுத்த படியே, “முரளி! அவளைத் தூக்காதே, அவளை நடத்திக் கூட்டிக்கிட்டு வா. இல்லை, அவளை பிரேம் தூக்கட்டும்!” பவானி சொல்லியதால், அவர்களை ஏன் என்பது போல் பார்க்க... அவர் நான் சொன்னபடி செய் என்பது போல் கண்ணசைவில் காட்டினார்.

“அக்கா, நீங்களே அவளை எழுப்பிக் கூட்டிக்கிட்டு வாங்க!” என்று சொல்லி விட்டு இந்துவின் பேக்கோடு வீட்டிற்குள் சென்றான்.

பவானி, இந்துவை வீட்டிற்குள் அழைத்துச் சென்று அவளைச் சுத்தப்படுத்தி, அவளுடைய நைட் டிரஸ் மாற்றிப் படுக்கையில் விட, அங்கு இருக்க மாட்டேன் என்று சொல்லி ஹாலுக்கு வந்தாள்.

ஹால் சோபாவில் அமர்ந்தவளை யாரும் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டு இருக்க, தெளிவாகாமல் இருந்த அரைகுறை நிலையிலேயே முரளியை வம்புக்கு இழுத்தாள்.

“ஹாய் சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங்... என்னாச்சு மேன் உனக்கு? என்னை முறைச்சுப் பார்க்கிறே? என்ன விஷயம்?”

இவள் பேசுவதைக் கேட்ட இந்துவின் பாட்டி, “ஏன்டி, அவன் பேரு முரளி... வேற ஏதோ பேரு சொல்றே? இங்கே உட்கார்ந்து இருக்கிற ஆள் அடையாளம்

தெரியாத நிலையில இருக்கியா? என்ன அந்த அளவுக்கு சரக்கு உள்ளே ஏறி இருக்கோ?"

"ஹாய் அம்மம்மா, இவன் பேரு முரளி என்கிற முரளிகிருஷ்ணன்னு எனக்குத் தெரியும்... ஆனா இவனுக்கு சிக்கந்தர் சிங் பேரு இருக்கிறது உனக்குத் தெரியாதுங்கிறதும் எனக்குத் தெரியும். அந்தப் பேரு எப்படி வந்தது என்பதும் எனக்குத் தெரியும்."

"சும்மா கிட பாப்பா, தண்ணியை அடிச்சுட்டு ஏதாவது உளறணும்னு பேசாதே" பாட்டி கண்டித்தார்.

"ஆமாம் இந்து... நீ உள்ளே போய்ப் படு. எந்திரி!" பவானியும் இந்துவின் பாட்டியுடன் இணைந்து அவளை அங்கிருந்து கிளப்ப முயன்றார்.

"பவானிக்கா... அவ ஏதாவது சாப்பிட்டாளான்னு தெரியலை? தர்ஷினி, ஏதாவது சாப்பிடறியா?" என்று முரளி அவளிடம் விசாரிக்கத் தொடங்கினான்.

"சிப்ஸ் & ஒயின்தான் சாப்பிட்டேன். வேற ஒண்ணும் சாப்பிடலை. முரளி, நீ எனக்கு ஸ்பாஞ்ச் தோசையும் காரச் சட்னியும் செய்து தர்றியா?"

இந்து அவனிடம் கேட்டவுடன், சமையலறை நோக்கி எழுந்து சென்றான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அவனை ஏதோ சொல்லி வம்புக்கு இழுத்தே. இப்போ... பேசின அந்த நாக்குக்குக் காரச் சட்னியும் ஸ்பாஞ்ச் தோசையும் தேவை தான். எல்லாம் இவங்க கொடுக்கிற செல்லம்... இரண்டு

அடி போட்டா ஏறி இருக்கிற மப்பு எல்லாம் தன்னாலே கீழ் இறங்கிடும்."

"எதுக்கு அம்மம்மா என்னைத் திட்றே? அவன் என்னைச் சாப்பிடச் சொன்னதுக்கே என்ன காரணம் தெரியுமா? அவனோட அந்த பேரு வந்த ரகசியத்தை உன் கிட்டே சொல்லக் கூடாது என்றுதான்."

"அது என்னடி அப்படி ரகசியம்... பெரிய ராணுவ ரகசியம்? போடி, சரிதான்."

"உனக்கு ரகசியம் தெரியாது. அதனால நான் சொல்றேன் கேட்டுக்கோ. நான் காலேஜ் முடிச்சு யுனிவர்சிட்டி போகப் போறேன், அவனும் ஜர்னலிசம் பி.ஜி. முடிச்சுட்டு வந்து இருந்தான். ஹாலிடே பிரோக்ராமுக்கு எங்கேயாவது போகலாம்னு முடிவு பண்ணினோம். அப்பதான் அத்தம்மா சொன்னாங்கன்னு சொல்லி நாங்க நாலு பேரும் நயாகரா ஃபால்ஸுக்குப் போனோம். அப்போ அங்கே ஒரு வயசான நார்த் இந்தியன் லேடி ஒருத்தங்க முரளியைப் பார்த்துட்டு வேகமாக ஓடி வந்து,

" 'மேரா பியாரி ஜான் சிக்கு'' சொல்லிக் கட்டிப் பிடிச்சுக் கன்னத்துல மாறி மாறி முத்தம் கொடுத்தாங்க... அந்த ஓல்ட் லேடி இவனைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டு விடமாட்டேன் சொல்லிச்சு, அத்தம்மா கூட நினைச்சாங்க, அந்த ஓல்ட் லேடியோட சன் இல்லைன்னா கிராண்ட் சன்னை ஞாபகப்படுத்தற மாதிரி இருக்கிறான் போலன்னு.

அப்புறமா விசாரித்ததுல தெரிந்தது சிக்குங்கிறது சிக்கந்தர் சிங்கோட ஷாட் ஃபார்ம்.

"சிக்கந்தர் சிங் வேற யாருமில்லை... அந்த ஓல்ட் லேடியோட ஹஸ்பெண்ட்னு. அதுவும் இவன் பிறந்த அன்னிக்குத்தான் அந்த சிக்குவும் இறந்து இருக்கிறார், அப்புறம் அந்த சிக்கு டெட் ஆனதுனால அந்த ஓல்ட் லேடி மெண்டல் ஆகிட்டாங்களாம். அதுல இருந்து எனக்கு அவனை வம்புக்கு இழுக்கணும்னு நினைச்சா, அவனை சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங்னு கூப்பிட்டாப் போதும்... டென்ஷன் ஆகிடுவான்!" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"இப்ப ராத்திரிக்கு எதுக்குப் பேய் மாதிரி சிரிக்கிறே? நீ சொன்னதைக் கேட்டு எனக்குச் சிரிப்பே வரலை." பாட்டி, இந்துவிடம் சொன்னார்.

"அது இல்ல கிரானி... அன்னிக்கு அந்த ஓல்ட் லேடி கிஸ் அடிச்சு, அதுவும் அந்த லேடி பத்தின உண்மை தெரிந்த உடனே இவன் முகம் போன போக்கைப் பார்க்கணுமே... ஹா, ஹா!" இந்து மீண்டும் சத்தமாகச் சிரித்தாள்.

"முரளிக்கு கிஸ் கொடுக்கணும்னா ஒண்ணு கிழவியா இருக்கணும்... இல்ல பைத்தியமா இருக்க ணும்னு சொல்றியா? ஆமாம், இந்த இரண்டுல நீ எதுல வர்றே?"

"ஏய் கிரான்மா... உனக்குக் கொழுப்பு ரொம்ப ஏறிப்போச்சுன்னு நினைக்கிறேன்," என இரைய,

உள்ளே இருந்து கையில் தோசைத் தட்டு மற்றும் சட்னிக் கிண்ணத்துடன் முரளியும், தண்ணீர் டம்ளரைப் பிடித்தபடி பிரேம் பின் தொடர, "தர்ஷினி... ராத்திரி நேரம் சத்தம் அதிகமாகப் போடக்கூடாதுன்னு உனக்குத் தெரியாது...?" இந்துவை அடக்கியபடியே வந்தான் முரளி.

"தர்ஷினி, முதல்ல சாப்பிடு!" எனச் சொல்லி முரளி, இந்துவை நோக்கித் தட்டை நீட்டியபடியே அவள் அருகில் அமர, அவனின் பக்கம் திரும்பியவள், தட்டைக் கையில் வாங்காமல் வாயைத் திறந்து காட்ட, தோசையைப் பிய்த்துச் சட்னியில் தோய்த்து ஊட்டத் தொடங்கினான்.

சாப்பிட்டு முடித்தவுடன், "தர்ஷினி, போதும்... போய்ப் படு!" முரளி ஆணையிட,

"எனக்குப் பாட்டு கேட்டாத்தான் தூக்கம் வரும்!" என்று சொல்லிய இந்து, பவானியின் மடியில் காலை நீட்டி வைத்து முரளியின் மடியில் தலை சாய்த்தாள்.

புதுப் பழக்கமாகத் தண்ணியடித்து வீட்டிற்கு வந்தவளைத் திட்டக் கூட வழியில்லாமல், இன்னும் அதன் பிடியில் இருப்பவளைப் பார்த்துக் கொண்டே பவானி, 'வரம் தந்த சாமிக்கு' ஆரம்பிக்க, "எனக்கு இந்தப் பாட்டு வேண்டாம். எங்கப்பா எனக்குப் பாடற 'கண்ணே கலைமானேதான்' வேணும் முரளி. பிளீஸ்!" இந்து சொன்னவுடன், சரி என்று தலையாட்டி விட்டுப் பவானியைப் பார்த்துக் கண்ணசைக்க... அவர் புரிந்து கொண்டு பிரேமை அருகே அழைத்து அவன் காதில்,

"இந்து அவ அப்பாவைத் தேடத் தொடங்கிறது நல்லதுக்கு இல்லை... நீ இந்திரா நகர் வீட்டுக்குப் போய் அவளோட மருந்துகளைக் கொண்டு வந்துடு. அப்படியே நீ இங்க தான் தங்கப் போற விஷயத்தையும் அப்பாகிட்டே சொல்லிடு... ராத்திரி ஒருத்தர் மாத்தி ஒருத்தர் பார்க் கணும். சரியா...?" என்றான்.

பிரேம் சரி என்று தலையாட்டி விட்டுச் செல்ல, முரளியின் பாட்டைக் கேட்டபடியே உறக்கத்தின் வசம் சென்று விட்டாள் இந்து. ஆனால், மற்றவர்கள் அதைத் தொலைத்துவிட்டு, அவளைச் சுற்றி அமர்ந்து கவலை யும் சிந்தனையும் சூழ அவளையே பார்த்துக் கொண்டு இருந்தனர்.

## 15

**ஞா**யிற்றுக்கிழமை காலைப் பொழுது என்னவோ சற்று சோம்பலாகத்தான் விடிந் தது. ஆனால், அந்தக் காலையிலும் அதிக உற்சாகத்துடன் இருந்தான் முரளி.

இன்று பெரியவர்களின் விருப்பப்படி இந்து தங்கள் வீட்டுக்கு மருமகளாகப் போகும் உற்சாகம் அவனின் முகத்தில் அதிகமான பொழிவை ஏற்படுத்தியதால், ஏதேதோ சிந்தனையின் வசம் சென்று தனக்குள் சிரித்துக் கொண்டே ஹாலுக்கு வந்தான்.

இந்துவின் பாட்டி திருச்சபைக்குச் செல்வதற்காகத் தயாராகி ஹாலில் நின்று கொண்டு, வீட்டில் வேலை

செய்யும் செல்வியிடம், "நான் தோமையார் கோவில் (சாந்தோம் சார்ச்) மாஸுக்குப் போயிட்டு வரேன். நீ எங்கேயும் போகாதே. ராணியைப் (இந்துவின் அம்மா இவாஞ்சலின் செல்வராணி) பார்த்துக்கோ. சமையலை மனோகரி பார்த்துப்பா... பாப்பா இன்னும் எழும்பலை. அவளுக்கு என்ன வேணும்னு கேட்டு அதை வாங்க சங்கரைக் கடைக்கு அனுப்பு. சரியா?"

இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்த முரளி, "பாட்டி, இப்போ பிரேயருக்குப் போனா எத்தனை மணிக்குத் திரும்பி வருவீங்க?"

"வாப்பா முரளி... நேத்து ராத்திரி இவ பண்ணின அமர்க்களத்துனால நீங்க மூணு பேரும் தூங்கலை, ஆப்பம் ஊத்தித் தரச் சொல்றேன்... சாப்பிட்டீங்கன்னா நல்லாத் தூக்கம் வரும், தூங்குங்க!" முரளியிடம் சொல்லியபடியே செல்லியிடம் திரும்பி,

"ஏய் செல்லி... வீட்டுல ஆப்பப் பொடி இருக்கா? அதுல அந்தப் பாட்டில்ல போன தடவை கொண்டு வந்த தென்னங்கள்ளு இருக்கு... ஊத்தி ஆப்பம் சுட்டுக் கொடுக்கச் சொல்லு மனோகரி கிட்டே. முரளி, நான் போயிட்டு பத்து மணிக்கு எல்லாம் வந்துடுறேன்."

"பாட்டி, அப்பா இன்னிக்குக் காலையில் ஒன்பது மணிக்கு உங்களைப் பார்க்க வர்றேன்னு சொல்லி இருக்காங்க, நீங்க இங்கே இல்லாட்டி எப்படி?" என்று முரளி கேட்டுக் கொண்டு இருக்கும் போதே வாசலில் கார்

வந்து நிற்கும் ஓசை கேட்க, யார் என்று பார்க்க வாசலை நோக்கி விரைந்தனர்.

வாசலை அடையும் முன்பாகப் பன்னிரண்டு மற்றும் பதினேழு வயது மதிக்கத்தக்க இரு ஆண் பிள்ளைகள் வேகமாக உள்ளே வந்தனர்.

"அடப் பேராண்டிகளா, வாங்கடா, வாங்க. யார் கூட வந்தீங்க?"

சின்னவனாக இருந்தவன், "ஆத்.... தா, நான், அண்ணா, அம்மை, அப்....பா, பெரி....யப்பா வந்து இருக்காங்க!" மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, தாங்கள் யார் யாருடன் வந்தோம் என்று விவரித்தான்.

"பால்சா, எதுக்குடா இவ்வளவு அவசரம்... பதுக்கப் பதுக்கப் பேசு...!" எனச் சின்னப் பேரனை ஆசுவாசப் படுத்த,

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே, மற்றவர்கள் உள்ளே வந்தனர். வந்தவரில் சவேரியார், முரளியைப் பார்த்து, "என்ன முரளி, சுகம்தானே?"

"ஆமாம் அங்கிள்!" என்றான்.

"முரளி, நான் சுபாவுக்கு மட்டும்தான் அங்கிள்... உனக்குச் சித்தப்பா முறை வரும், அந்த மாதிரிக் கூப்பிடு."

"இப்போதைக்கு நான் அப்படிக் கூப்பிடலை. எல்லாம் நல்ல படியாக முடியட்டும் அங்கிள்... நான் உங்களை நீங்க சொன்ன மாதிரியே கூப்பிடறேன்."

"சரி, என்னமோ செய். இதோ பாரு, இதுதான் என் தம்பி ஸ்டீபன். அவங்க ஸ்டீபனோட வொய்ப் அருள் செல்வி. அந்த ரெண்டு பசங்களும் பெரியவன் ஜான்சன் சின்னவன் பால்சன். பாப்பா எங்கே ஆளைக் காணோம்? நீ எங்கம்மா கிளம்பிட்டே காலங்கார்த்தாலே?"

"ஏம்பா, இதை வாசல்லே வெச்சேதான் விசாரிக்கணுமா? உள்ளே வாப்பா." உள்ளே வந்தவர் களுக்குச் சில நிமிடங்கள் தங்களைத் தயார் பண்ண கொடுத்து விட்டுப் பின், "எல்லோரும் எதுக்குப்பா புறப்பட்டு வந்தீங்க? நேத்து உச்சிக்குப் போன்ல விளிச்சப்ப கூட சொல்லலையே... இந்த மாதிரி வரப்போறோம்னு!" தன்னுடைய விசாரணையைத் துவக்கினார் பாட்டி.

"நேத்திக்கு ராத்திரிதான் ஹரிஹரன் அண்ணன் போன்ல கூப்பிட்டுச் சொன்னது, எல்லாத்தையும் பேசி முடிச்சுடலாம்னு. வைத்தியும் வர்றான், அதனால நாங்க புறப்பட்டு வந்தோம். ஏன் உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதாக்கும், என் கிட்ட விசாரிக்கிறே?"

"டேய், எனக்கு ஒண்ணுமே தெரியாது. நேத்திக்கு ராத்திரி உன் தங்கச்சி மக பண்ணின கூத்து அப்படி, மனசு ரொம்ப விசனமாப் போச்சு. அதனாலதான் கோவிலுக்குப் போய் மாஸ்ல கலந்துக்கலாம்னு கிளம் பிட்டேன்."

"அம்மா, இப்போ மாஸ்க்குப் போக வேண்டாம். சாயந்திர மாஸ்க்கு எல்லோருமா சேர்ந்து போகலாம்."

மணி ஒன்பதைத் தொட்ட அதே நேரத்தில், வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்க... பவானியும் முரளியும் ஒரு ஓரமாக நின்று கொள்ள, சவேரியார் வாசலுக்கே சென்று ஹரிஹரனை அழைத்து வந்தார்.

உள்ளே வந்த ஹரிஹரன், பிரேமைப் பார்த்து, "எங்கேடா உங்கப்பா? எப்போ இங்கே வந்து சேருவான்? சீக்கிரம் கேட்டுச் சொல்லு. என்னிக்காவது ஒரு நாள் அவன் சொன்னா சொன்ன நேரத்துக்கு வந்து இருக் கானா?" கேட்டு விட்டு, அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டே, "சித்தி... என் மருமகளை எங்கே காணோம்?" இந்துவின் பாட்டியிடம் கேட்க,

"அவ இன்னும் உறங்கிட்டுக் கிடக்கா. உறக்கம் இன்னும் கலையலை."

"நான் போய் எழுப்பறேன்!" பவானி கிளம்ப, அவளைக் கையமர்த்திய ஹரிஹரன்,

"இருக்கட்டும்மா. அவ தூங்கட்டும். வைத்தி வந்த பிறகு எழுப்பிக்கலாம்."

இந்துவின் அம்மா அங்கே இருந்த சோபாவில் எல்லோரையும் பார்த்துக் கொண்டே அமர்ந்து, உயிரற்ற உணர்வற்ற பார்வையை எல்லோர் மீதும் செலுத்திக் கொண்டு இருந்தார்.

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போதே முரளி யின் மொபைல் ஒலிக்க, அதை எடுத்துப் பார்த்தவன், "அக்கா, கொஞ்சம் வாங்க!" பவானியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

இந்துவின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற முரளி, அங்கு பிரேம் கட்டிலின் அருகில் நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தான்.

"ஏன்டா, எங்க அப்பாதான் இப்போ இவளை எழுப்ப வேண்டாம், வைத்தி மாமா வரட்டும்னு சொன்னாரு இல்ல... அதுக்குள்ளே எதுக்குடா இங்கே வந்து எழுப் பினே? அவளே அரைகுறை தூக்கத்துல எழுந்தா நைநைன்னு இருப்பா... உன்னாலே சும்மாவே இருக்க முடியாதாடா?"

முரளி, பிரேமைப் பார்த்து எரிந்து விழுந்தான்.

பிரேம், இந்துவைப் பார்த்து, "நான் சொன்னா நம்ப மாட்டேன்னு சொன்னேயில்ல... இப்போ நீயே கேட்டுக்கிட்டியா? எங்கப்பா கூட வர்றாங்!" முரளியைப் பார்த்து, "மாமா, என் பேருல ஒரு தப்பும் இல்லை. அப்பாவுக்குப் போன் பண்றதுக்காக வந்தேன். இவ இங்கே உருண்டுக்கிட்டு கிடந்தா. சரி, உங்கப்பா வந்திருக்கிற விஷயத்தைச் சொன்னேன். நான் பொய் சொல்றேன்னு சந்தேகப்பட்டு உனக்குக் கால் பண்ணிட் டாடா."

"ஏன்டா, உனக்குப் போன் பண்றதுக்கு இந்த வீட்டுல வேற இடமே கிடைக்கலையா? இவ ரூமுக்குத் தான் வரணுமா?" பிரேமைத் திட்டியவன், இந்துவிடம் திரும்பி, "தர்ஷினி... நீ வேணும்னா இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கி எழுந்திருக்கியா?"

பவானி, இந்துவின் மெத்தையில் இருந்த தலையணையைச் சரி செய்தபடி, "ஆமாம் இந்து... பிரேம் அப்பா வந்த பிறகுதான் உன்னைக் கேட்பாங்க. அப்போ நீ வந்தால் போதும். அதுக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கு. நீ நல்லா தூங்கி எந்திரி."

பவானியையும் முரளியையும் மாறி மாறிப் பார்த்த பிரேம், "அக்கா... நீங்க போய் பால் புட்டி இருந்தா அதுல பால் நிரப்பிக்கிட்டு வாங்க... மாமா, நீ போய் சின்ன பாட்டி கிட்டே நூல் புடவை இருந்தா வாங்கிட்டு வா... நான் இங்கே தூளி கட்ட இடம் இருக்கான்னு தேடறேன்.

"ம்ம்... இதோ இருக்கு. இந்தத் தூணுக்கும் ஜன்னலுக்கும் இடையிலே கயித்தைக் கட்டி, அதுல அந்தப் புடவையைத் தூளியா கட்டலாம், இவளை அதுல போட்டு பால் புட்டியை வாயில் கொடுத்து... மாமா நீ தாலாட்டுப் பாட்டைப் பாடு, அக்கா நீங்க என்ன செய் யுறீங்க, அந்தத் தூளியைப் பிடிச்சு ஆட்டி, இவளைத் தூங்க வைங்க. ரொம்ப நல்லா இருக்கும் பார்க்கிறதுக்கு!

"மாமா! அவளுக்கு வயசு இருபத்தி மூணு மாசம் இல்லை மாமா... இருபத்தி மூணு வருஷம் மாமா, இருபத்தி மூணு வருஷம்!" என்று திட்டத் தொடங்கியவுடன், இந்து பெட்டிலிருந்து எழுந்து பாத்ரூம் உள்ளே நுழைந்தாள்.

"அறிவே கிடையாதாடா உனக்கு? அவ நல்லா தூங்கணும். அவ தூங்கினது போதாது... அவ தூங்காம

இருந்தா உடம்புக்கு முடியாமல் போயிடும். உனக்கு எங்கே இதெல்லாம் தெரியும்...? அவளுக்கு மட்டும் உடம்புக்கு முடியாம வரட்டும், அப்புறம் இருக்குடா உனக்கு!" கடித்த பற்களிடையே வார்த்தைகளைத் துப்பி விட்டு ஹாலை நோக்கி விரைந்தான் முரளி.

வைத்தி, இந்துவின் வீட்டிற்குள் நுழையும் போதே மணி பதினொன்று என்று ஹாலில் இருந்த கடிகாரக் குயில் வந்து அலறி விட்டுச் சென்றது.

வைத்தி வந்து சிறிது நேரத்திற்குப் பின்... ஹரிஹரனின் கண் அசைவினை ஏற்றுப் பேசத் தொடங்கினார்.

இந்து மற்றும் அவளின் குடும்பத்தினரைப் பார்த்து, "நான் உங்க குடும்ப வக்கீல் என்பதற்காக மட்டும் இதைப் பேச வரலை. இந்தக் குடும்பத்தில் ஒருவனாகப் பெரியவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்குப் பாத்திரமாக இதுவரை நான் நடந்து வந்து இருக்கிறேன். இந்தக் குடும்பத்தை என்னுடைய சின்ன வயசுலே இருந்து எனக்கு நல்லாத் தெரியும். அது மட்டுமில்லாமல், இன்னிக்கு வரைக்கும் நான் சாப்பிடும் ஒவ்வொரு பருக்கையும் இந்த வீட்டின் சாப்பாடுதான். என்னை ஒரு வேலைக்காரனாக நினைக்காமல், தன் பிள்ளையாகத் தான் இந்த வீட்டின் பெரியவரும், செபஸ்டியனும் நினைத் தார்கள்.

"இவங்களுக்கு மேலே பெரியம்மா. அவங்க இறக்கும் போது கூட செபஸ்டியனிடம், 'வைத்தியைப்

பார்த்துக் கொள். அவனைக் கை விட்டுடாதே!' என்று சத்தியம் வாங்கிட்டுதான் இறந்தாங்க. என் தூக்கத்தில் கூட நான் இந்த வீட்டுக்குத் துரோகம் நினைக்க மாட்டேன் என்ற நம்பிக்கை இருந்தால் சொல்லுங்கள். இந்த வீட்டின் மூத்த பிள்ளையாய் இருந்து சில முடிவுகளை எடுத்து விட்டுப் பின்பு வக்கீலாக என் கடமையைச் செய்ய ஆரம்பிக்கிறேன்" என்று சொல்லி முடித்தார்.

சவேரியார், "என்ன வைத்தி நீங்க... இப்படி எல்லாம் பேசுறீங்க. எங்களுக்கு உங்களைப் பத்தித் தெரியாதா? நீங்க எடுக்கிற எந்த முடிவுக்கும் நானும் எங்கம்மாவும், தம்பியும் கட்டுப்படுவோம். என்ன விஷயம், ஆரம்பிங்க."

தொண்டையைக் கனைத்துக் கொண்ட வைத்தி, "பாப்பா, இந்த நாட்டை விட்டு இவங்க கூடப் போய் இருந்த பதினொரு வருடமும் எட்டு மாதமும் அவ எப்படி இருந்தா, என்ன செய்தா... எல்லாம் நமக்குத் தெரியும். அதே போல இவளை அழைத்துக் கொண்டு போய் படிக்க வைச்சு இந்த அளவுக்கு ஆளாக்கிக் கொண்டு வந்து இருக்கிற நம்ம ஹரிஹரனும் சாதாரண ஆளு இல்லை.

"இன்னிக்கு இந்த நாட்டுல இருக்கிற பத்திரிகையில் முதல் இடத்தில் இருப்பவர், நேர்மையான மனிதர், காசு பணத்துக்கு மசியாதவர், அராஜகத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்... இப்படியே இவரைப் பத்தி சொல்லிக்கிட்டே போகலாம். அவர் மகனையும் அப்படித்தான் வளர்த்து இருக்கிறார். நம்ம பாப்பாவைப் பத்தி எதுவுமே தெரியாமல் தான் காப்பாற்றிக் கூட்டிக்கிட்டுப் போனார்.

"இந்த நிமிஷம் வரைக்கும் நம்ம ஹோட்டல் பற்றி மட்டும்தான் தெரியும். நம்ம பாப்பாவைப் பத்தின வேற எந்த விஷயமும் தெரியாது. நானும் சொல்லலை. சரி, நான் இப்போ விஷயத்துக்கு வரேன். நம்ம பாப்பாவை ஹரிஹரனோட வாரிசுக்குக் கல்யாணம் முடிக்கக் கேட் கிறாங்க. கொடுக்கலாமா, என்ன சொல்றீங்க?"

பாட்டி, வைத்தியைப் பார்த்து, "நானே இது விஷய மாக உன்கிட்டே பேசணும்னு இருந்தேன். எவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வைக்கணும். எங்க எல்லோருக்கும் சம்மதம் தான். ராணி நாளைக்கு உடம்பு சரியானா இதை ஒத்துப்பா."

"அப்போ சரி. அதை இப்போ நான் வக்கீலா சில விஷயங்களைப் பேசிட்டு, இன்னிக்கே நாம நிச்சயம் பண்ணிக்கலாம். சரிதானே?"

இந்துவைப் பார்த்து, "பாப்பா! இந்தப் பெரியப்பா இப்போ உன்னோட வக்கீலாகப் பேசப் போறேன்... நீ நினைக்கிற மாதிரி உனக்கு ஹோட்டல் மட்டும்தான் சொத்து என்பது இல்லை. நம்ம ஊர்ல உங்க மாமனுங்க பார்த்துக்கிற சொத்து அத்தனையும் உன்னோடதுதான்.

"அது இங்கே உங்கப்பாவைத் தெரிந்த யாருக்கும் தெரி யாது. அந்தச் சொத்துக்கள் சிலது பரம்பரையாக வந்தது... மற்றது அதை மூலதனமாக வைத்துச் சேர்க்கப் பட்ட சொத்துகள்.

“உனக்குப் பரம்பரைச் சொத்தாக வந்தது, ஆண்டவர் தோப்பு கிராமத்தில் இருக்கும் பரம்பரை வீடும், தென்னந்தோப்பும், நாலு கட்டுமரமும் பக்கத்துக் கிராமத்தில் உள்ள சில வயல்களும்தான். நாலு கட்டு மரமும் இப்போது இல்லை. ஆனால், அதற்குப் பதில் லான்ச் எனப்படும் விசைப்படகு ஒரு பதினைந்து, மோட் டார் படகு ஐந்து, மீன் பதப்படுத்தும் இடம், கருவாடு குடோன் மற்றும் மொத்த கொள்முதல் கிடங்கு, மீன்பிடி வலை தயாரிக்கும் ஃபாக்டரி, முந்திரித் தோப்பு மற்றும் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி, தேங்காய் நார் கயிறு ஃபாக்டரி, நாகர்கோவில் கோட்டாறு மற்றும் பார்வதி புரத்தில் உள்ள வீடுகளும், கடைகள்... இவைகள் உங்க தாத்தாவின் உழைப்பின் மூலம் சிறுகச் சிறுக அவரின் வாழ்நாள் முழுவதும் சேர்க்கப்பட்ட சொத்துக்கள்.

“உங்கப்பாவுடையது என்று பார்த்தால், அவன் ஐடியா கொடுத்ததால் உங்கள் தாத்தாவால் உருவாக் கப்பட்ட இறால் வளர்ப்பு, சிப்பி வளர்ப்புதான். இவை தவிர சொத்துக்கள் உண்டு. அவை சீயோன் டிராவல்ஸ் என்ற ஆம்னி பஸ் சர்வீஸ், பாளையங்கோட்டையில் இருக்கும் சீயோன் ஸ்கூலும் அதைச் சேர்ந்த கல்லூரி களும், இங்கே உள்ள ஹோட்டலும்தான்.

“நான் சொன்ன இந்த ஆம்னி பஸ், ஸ்கூல், ஹோட்டல் இந்த மூன்று சொத்துக்களுக்கு நேரடி வாரிசு நீதான். ஆனால், அது உன்னுடைய குடும்பச் சொத்து அல்ல.”

இந்து இடையிட்டு, "ஓ! அது எங்கம்மா வீட்டுல இருந்து வந்த சொத்தா?"

"ம்ம்... அவ்வளவு பெரிய ஆட்கள் எல்லாம் இல்லை நானும் என் புருஷனும். உன்னோட இந்த பாட்டன் வெறும் நாலு ஏக்கரா பூமிக்குச் சொந்தக்காரன். அதுல மட்டும்தான் உங்கம்மா கல்யாணம் வரைக்கும் நாங்க பயிர் வைச்சோம்!" என்று மொழிந்தார் இந்துவின் பாட்டி.

"அம்மா, நீ அவரைப் பேச விடும்மா... பாப்பா, நீ குறுக்கே பேசாதே. என்ன சொல்றாருன்னு கவனி!" சவேரியார் சொல்ல,

"கடைசியில் நான் சொன்ன இந்த மூன்று விதமான சொத்துக்களும் மஞ்சக்காணி சொத்து."

"மஞ்சக்காணி சொத்துன்னா என்ன? அதுக்கு எப்படி நான் வாரிசாக முடியும்?" என்று இந்து கேள்வி எழுப்பினாள்.

"மஞ்சக்காணி சொத்துன்னா... பெண்ணுக்கு அவங்க வீட்டுல இருந்து கொடுக்கப்பட்ட சொத்து என்று அர்த்தம். இந்த நிலங்கள் பெண் வாரிசு கிட்டே தான் போகுமே தவிர, அந்த வீட்டு ஆண் வாரிசு உரிமை கோர முடியாது. ஒரு வேளை மஞ்சக்காணி சொத்து இருக்கிற பெண்ணுக்கு பெண் வாரிசு இல்லை என்றால் பேத்திக்குப் போகும்.

"ஒரு வேளை அந்தப் பெண்ணுக்கு வாரிசே இல்லை என்றால், அந்தச் சொத்து அந்தப் பெண்ணின்

தங்கை அல்லது அக்காவின் பெண்களுக்குப் போகும். இந்த நிலங்களை புருஷன் வீட்டுப் பக்கத்தில் உள்ள வர்கள் உரிமை கோர முடியாது. இது சீதனமாக வந்த சொத்துக்கு மட்டுமில்லை... பெண் பெயரில் இருக்கும் எல்லா சொத்துக்களுக்கும் பொருந்தும்."

'மஞ்சக்காணி சொத்து விளக்கம் சரி. ஆனால், இந்த சொத்துக்கள் யாரோட சொத்து? இது எப்படி எனக்கு வந்தது?' என்ற யோசித்தும் புரியாமல், இந்து குழப்பமான பார்வையை வைத்தியின் மீது வீச, அந்தப் பார்வையின் பொருளை உணர்ந்த வைத்தி,

"இந்த மஞ்சக்காணி சொத்து உங்கப்பாவோட அம்மா மூலமா உனக்கு வந்து இருக்கு. இப்படிச் சொன் னால் உனக்கு எதுவும் புரியாது. எனக்குத் தெரிந்த உங்க குடும்பத்துக் கதை முழுசையும் விலாவாரியாகச் சொல்றேன்... பொறுமையாகக் கேளு."

## 16

**உ**ன்னோட முத்தச்சன் பேரு ராஜபாண்டியன் செல்லத்துரை. ஆத்தா (அப்பாவின் அம்மா) பேரு சுப்பத்தா என்கிற சிசிலியா. உன்னோட முத்தச்சன் நல்ல உழைப்பாளி. படிப்பு வரலை, ஒன்பதாம் வகுப்போட படிப்பை நிறுத்திட்டு கடல்ல மீன் பிடிக்கப் போயிட்டார். எங்கப்பா பஞ்சாபகேசனும் உன்னோட முத்தச்சனும் கோட்டாத்து ஸ்கூல்ல ஒண்ணாப் படிச்சவங்க.

“உங்க முத்தச்சா கருவாடு மொத்தக் கொள்முதல் தொடங்கி தேங்காய் நார்ல இருந்து எடுத்த கயிறு மற்றும் தேங்காய் ஓட்டுல செய்த கைவினைப் பொருட்களை ஏற்றுமதி பண்றதுக்காகச் சென்னைக்கு வருவாரு. அந்தக் காலத்துல நேரடியான டிரெயின் வசதி எல்லாம் நாகர்கோவில்ல இருந்து இல்லை. அப்போ சீயோன் பஸ் கம்பெனி பஸ்லதான் நாகர்கோவில்ல இருந்து திருநெல்வேலி போய், அங்கே இருந்து டிரெயின் பிடிச்சு சென்னைக்கு வரணும். அப்போ எங்கப்பா படிச்சு முடிச் சுட்டு உன் முத்தச்சன் கிட்ட கணக்குப் பிள்ளையா வேலை பார்த்தார்.

“சென்னைக்கு வர்றதுக்காக திருநெல்வேலி வரைக்கும் சீயோன் டிராவல்ஸ் வண்டியில போக வர, அப்போ உங்க ஆத்தாவோட அண்ணா அற்புதராஜுக்கும் நட்பு ஏற்பட்டது. அப்போ பஸ் கம்பெனிக்குச் சொந்தமான குடோன் உங்க ஆத்தாவோட அம்மா வீட்டுக்குள்ளே இருந்தது. அற்புதராஜ் உன்னோட முத்தச்சன் கிட்ட தங்கள் வீட்டு குடோனைப் பாவிக்கச் சொல்ல, அவரும் சரின்னு சொல்லி பொருட்களைப் போட்டு வைக்க எடுக்க உங்க ஆத்தாவோட பிறந்த வீட்டுக்கு அடிக்கடி போய் வரும் பொழுது, உங்க ஆத்தாவைப் பார்த்து காதலிச்சாரு.

உங்க ஆத்தாவின் சம்மதம் கிடைத்த உடனே உங்க ஆத்தாவின் அப்பா சக்கியநாதன் கிட்டே பொண்ணு கேட்டுப் போயிட்டாரு. அவரு பெண் கேட்ட நேரத்துல உங்க ஆத்தா பிறந்த வீடு இருந்த வசதிக்கு அரைப் பங்கு வசதிதான் உங்க முத்தச்சனுக்கு இருந்தது.

"அதுதவிர, உங்க ஆத்தாவும் முத்தச்சனும் ஒரே மதமா இருந்தாலும், இனம் வேற வேற. அதனால இவரு பெண் கேட்டதால சாத்தான்குளத்துல இருந்த மாமா பையனுக்குப் பொண்ணைக் கொடுக்க நிச்சயம் பண்ணிட்டாங்க. கல்யாண ஓலை பாளையங்கோட்டை கோவில்ல வாசிக்கும் போது, உங்க முத்தச்சன் அதுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சார். உடனே ஆயர் உங்க ஆத்தாவைக் கூப்பிட்டு விசாரிக்க, அவங்க ஆமாம் சொன்னதால் உங்க ஆத்தாவை முத்தச்சன் கல்யாணம் கட்டிக்கிட்டாரு.

"இந்தக் கல்யாணத்தை அவமானமாகக் கருதின சக்கியநாதன் அய்யா, உங்க ஆத்தாவுக்கு நகை பணம் எதுவும் தரலை. உங்க முத்தச்சனும் எதுவும் எதிர் பார்க்கவுமில்லை. உங்க ஆத்தாவை முத்தச்சன் கைபிடிச்ச நேரம், ஏற்றுமதி நல்லா வளர்ந்தது... சொத்துக்கள் வாங்கினாரு.

"ஒரு வருடம் போன உடனேதான் செய்தி வந்துச்சு... என்னன்னா, அப்போ இலங்கைக்கு வியாபாரம் செய்யப் போறவங்க தனுஷ்கோடி போய், அங்கே இருந்து படகு மூலம் தலைமன்னார் சேர்ந்து, அங்கே இருந்து தான் கொழும்புவை நோக்கிப் பயணப்படுவாங்க, வியாபாரத்துக்காகப் போன அற்புதராஜும் கண்டி கோவில்ல வேலைக்காகப் போன எங்கப்பாவும் தனுஷ் கோடி புயல்ல பாம்பன் பாலத்துல ஏற்பட்ட ரயில் விபத் துல இறந்துட்டாங்கன்னு செய்தி வந்தது.

"அப்போ உங்க ஆத்தாவோட தம்பி பரிசுத்தன், சென்னை வேதமாகப் பள்ளியிலே படிச்சுட்டு இருந்தார்.

பெரிய மகன் இறந்த விஷயம் தெரிந்த சக்கியநாதன் அய்யா, தன்னோட சீயோன் பள்ளிக்கூடத்தையும் பஸ் கம்பெனியையும் தன் பொண்ணோட பேருக்கு எழுதிக் கொடுத்துட்டு, வியாபாரம் மற்றும் சொத்துக்களை வித்து உங்க ஆத்தாவோட தம்பி பரிசுத்தன் கிட்டே பணத்தைக் கொடுக்க, அவர் தன்னோட அப்பாவின் வாழ்நாள் வரைக்கும் அந்தப் பணம் சொத்தாக இருக்கட்டும் என முடிவு செய்து அடையாறு, சாந்தோம், போர்ஷோர் எஸ்டேட், ராஜா அண்ணாமலைபுரம் போன்ற இடங்களில் வீடுகளாகவும் மகாபலிபுரத்தில் தேவாலயம் கட்ட இடமும் வாங்கிப் போட்டாரு.

உங்கப்பா பிறந்தான். அவன் பிறக்கும் போது எனக்கு வயசு ஐந்து. இரண்டு பேரும் அண்ணன் தம்பி போல வளர்ந்தோம், படிச்சோம். அவனுக்குப் பிசினஸ் படிக்கணும்னு ஆசைப்பட்டான். அதே போல அவனுக்கு ஐ.ஐ.எம். அலகாபாத் கிடைச்சது. எனக்கு டெல்லியிலே எல்.எல்.பி. படிக்க இடம் கிடைச்சது. பிசினஸ் படிக்கப் போறேன்னு சொல்லிப் போனவன் என்ன நினைச்சானோ தெரியலை... ஹோட்டல் மேனேஜ்மெண்ட் எடுத்துப் படிச்சான். அப்போ சக்கியநாதன் இறந்தார். அவர் பேர்ல இருந்த சொத்துக்களும், பரிசுத்தனுக்கு சிங்கப்பூர் திருச்சபையிலே ஆயரா பணியாற்றக் கிடைச்சதுன்னு தேவாலயம் கட்ட வாங்கின தன்னோட பேர்ல இருந்த மகாபலிபுரம் இடத்தையும் உங்க ஆத்தா பேருக்கு பரிசுத்தன் எழுதிக் கொடுத்துட்டாரு.

அந்த மகாபலிபுரம் இடத்துல, உங்க முத்தச்சன் கிட்ட சண்டை போட்டு, முதன்முதல்ல த்ரீ ஸ்டார் ஹோட்டல் தொடங்கினான். அது நல்லாப் போச்சு. ஊருக்கு வந்தவன், அவனோட ஒண்ணுவிட்ட அத்தை மகளான உங்கம்மாவைப் பார்த்துக் காதலிச்சு தேவா லயத்துல கைப்பிடிச்சான். அப்போ பி.காம்.தான் படிச்சு இருந்தா உங்கம்மா. சென்னைக்கு கூட்டிக்கிட்டு வந்து எம்.காம்., ஐ.சி.டபிள்யூ., சி.ஏ.ன்னு படிக்க வெச்சான்.

“அவ எம்.காம். முடிச்ச கொஞ்ச நாள் கழித்துதான் நீ பிறந்தே... நீ பிறந்தவுடன்தான் சாந்தோம் மற்றும் பட்டினப்பாக்கம் வீடுகளை வித்து அடையாறுல சில இடங்களையும் வாங்கி, ஊர்லே வியாபாரத்துலேயும் சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தையும் வைத்துத் தொடங்கியதுதான் சுபா இன்ஸ் என்ற ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்.

“இந்த ஹோட்டலின் முழுச் சொந்தக்காரர் உங்கப்பா தான். இடங்கள் எல்லாம் உங்க ஆத்தா பேர்ல... ஆனால், கட்டடம் முழுசும் உங்கப்பா பேர்லன்னு உங்க முத்தச்சன் ஒரு வில்லங்கத்தை அதிலே வெச்சு இருக்காரு. இது பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட பிறந்த வீட்டுச் சொத்து என்பதால், பெண் வாரிசுக்குத்தான் போகணும். அதிர்ஷ்ட வசமாக நீ அவனுக்கு ஒரே பெண்ணாகப் போயிட்டே. அதுவே உனக்குத் துரதிர்ஷ்டவசமாகவும் போயிடுச்சு.

“நீ பிறப்பதற்கு ஒரு வருடம் முன்னாடிதான் உங்க ஆத்தா இறந்தாங்க. அதுனால அவங்க அம்மாவே வந்து

பிறந்து இருக்கிறதா நினைச்சு, அதோட இரண்டு தலைமுறைக்கு அப்புறமா பெண் பிள்ளை என்பதால், உங்க முத்தச்சன் அம்மா பேரு தரிசனம்மாள் இந்த இரண்டையும் இணைச்சுதான் உனக்கு சுபபிரியதர்ஷினின்னும் அடையாறு ஹோட்டல் பேரு ‘சுபா இன்ஸ்’ என்று வைத்தான்.

உங்கப்பா ராஜா அண்ணாமலைபுரத்தில் இருந்த மூணு வீடுகளை வித்து ஈ.ஸி.ஆர். ரோட்டில் இருக்கிற உத்தண்டிங்கிற இடத்தை வாங்கி, அதுல ரிசார்ட் ஆரம்பிச்சான். அப்போதான் இப்ப சுபா இன்ஸ்ல பார்த்தியே அந்த நச்சுப் பாம்பு நவநீதம், உங்கப்பாவுக்குப் பிரெண்டா வந்து சேர்ந்தான்.

“நான் பிரேம் படிப்பு... அதாவது 9ஆவதுல இருந்து இவன் அமெரிக்காவிலேதான் படிப்பேன்னு சொன்னதுனால, அதைப் பார்க்க அமெரிக்கா போகும் முன்னாடியே கட்டட வேலைகள் எல்லாம் முடிந்து ரிசார்ட் ரன் ஆக ஆரம்பிச்சது... நான் அமெரிக்காவுக்கு போய் இரண்டாவது வாரத்திலே உங்கப்பன் சூசைட் பண்ணிக்கிட்டான். அதுக்கான காரணம் இதுவரைக்கும் தெரியலை.

“இது தெரிந்தவுடனே நான் அய்யாவைத் தொடர்பு கொண்ட போது ஒரு விஷயம் தெரிந்தது. அந்த நவநீதம் உங்க ஹோட்டல்கள் முழுவதையும் தன்னோட பேருக்கு எழுதி வாங்கி இருப்பது. நான் அங்கே இருந்தே என்னோட ஜூனியர் மூலமா ஒரு இன்ஜெக்சன் பெயில் போட்டேன். அதன்படி அந்தச் சொத்தை எழுதிக் கொடுக்கவோ

அல்லது விக்கவோ உங்கப்பாவுக்கு உரிமை இல்லை... அது உன்னோட சொத்து என்று. அதாவது மைனர் சொத்து. அதைப் பாதுகாத்து உன் கிட்டே ஒப்படைக்க வேண்டியதுதான் உங்கப்பாவோட கடமைன்னு சொன்னேன்.

“வித்ததாகச் சொன்ன பத்திரம் செல்லாததாகி விட்டதால், உங்க முத்தச்சன் கார்டியனா மாறி அந்தச் சொத்துகளை உன்னோட இருபத்தினாலாவது வயது ஆரம்பிக்கும் வரை அவர்களுக்கு லீஸுக்கு எழுதிக் கொடுத்தார். அப்போ அவன் ஊருக்கு வந்த பொழுது நம்ம ஊர்க்காரங்க எல்லோரும் சேர்ந்து அடிச்சு இரண்டு நாள் சோறு போடாம ஒரு வழி பண்ணிட்டாங்க.

“அய்யாவுக்கு விஷயம் தெரிந்து ஊர்க்காரங்களை சத்தம் போட்ட பிறகுதான் அவனை ஊரை விட்டு அனுப்பினாங்க. உங்கப்பா இறந்ததுல இருந்து உன்னோட முத்தச்சன் ரொம்பவே தளர்ந்துட்டார். அதனால மற்ற எல்லா சொத்துக்களுக்கும் உங்கம்மாவையையும் உன்னோட மாமன்களையும் என்னையும் கார்டியனா போட்டு தனியா உயில் எழுதி வெச்சுட்டார்.

“இந்த ஹோட்டலை நவநீதம் லீஸுக்கு எடுத்த பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் விபத்து ஏற்பட்டு, நீ காணாமல் போகவும்... உங்கம்மாவுக்குச் சித்தப் பிரமை பிடிக்கவும்... ஹரி கிட்டே தான் நீ இருக்கிறது எனக்கு ஊர்ஜிதமான தும்... தவறான ஆட்கள் நாளைக்கு இந்தச் சொத்துக்களுக்கு உரிமை கோரி வருவதைத் தடுக்க, நான்

உங்க தாத்தா கிட்டே சொல்லி, அவரும் என் பேருல இருந்த நம்பிக்கையில், நான் சொன்னதுபோல் எழுதி னார். நீ கிடைக்கவில்லை என்ற அதிர்ச்சியில் உங்க முத்தச்சனும் இறந்துட்டார்.

“இப்போ உன்னோட இந்த ஹோட்டல் அவனுங்க கைக்குப் போச்சுன்னா உன்னோட மற்ற சொத்துக்களும் அவனுங்களுக்குத் தெரிய வரும். அந்த சொத்துக்கள் அத்தனையும் அவன் கைகளுக்குப் போச்சுன்னா, உங்க குடும்பம் மட்டுமல்ல நம்ம கிராமத்தையே அழிச்சுருவான். உண்மையாக உன் முத்தச்சன் எழுதின உயில் என்ன வென்றால், உன்னோட இருபத்தினாலாவது வயதுல கல்யாணம் முடித்து உன் புருஷன்கூட வந்து நீதிமன் றத்தில் கையெழுத்து போடணும்.

“நான் சொல்லிச் சேர்த்த வாக்கியங்கள் என்ன வென்றால், கணவனுடன் வந்து கையெழுத்துப் போடும் முன், நீதான் உண்மையான சுபபிரியதர்ஷினி என்பதை டி.என்.ஏ. மூலமா கோர்ட்டுக்கு நிரூபிக்கணும். அதுதவிர ஒரு அடையாளம் உன் கிட்டே உண்டு. இது யாருக்கும் தெரியாது. ஏன், அதை நீயே கவனிச்சு இருக்க மாட்டே, அதைத்தான் அந்த உயில்லே குறிப்பிட்டு இருக்கு. அந்த அடையாளத்தையும் டாக்டர்கள் மூலமாகப் புரூப் பண்ணணும். பின்புதான் இந்தச் சொத்துக்கள் உனக்கு வரும்,” என்று எல்லாவற்றையும் விளக்கினார்.

“பெரியப்பா! இந்தச் சொத்துக்கள் எல்லாம் எனக்குச் சொந்தமானது, சரி. ஒரு வேளை என்னோட கல்யாணத் துக்கு முன்னாடி நான் செத்துட்டா என்னவாகும்?”

"இந்தச் சொத்துக்கள் எல்லாம் ஒரு டிரஸ்ட் ஃபார்ம் பண்ணி அதுல இருந்து வரும் வருமானங்கள் கிறிஸ்டியன் மிஷனரீஸ் மூலம் நடத்தப்படும் சேவைகளுக்குப் பயன்படும்."

"ஏன், அதை இப்போ செய்ய முடியாதா?"

"செய்யலாம்... அதுக்கு முன்னாடி உனக்குக் கல்யாணம் நடக்கணும். உன் ஹஸ்பெண்ட் வந்து அந்த உயில்ல சைன் பண்ணணும்."

"இல்ல பெரியப்பா... நான் செத்துட்டதாகச் சொன்னால்?"

"இந்து..." என்று பவானியும், "தர்ஷினி..." என்று முரளியும் அழுத்தமாகக் குரல் எழுப்பினர்.

"நீ இறந்துட்டதா சொன்னா அதைச் சட்டத்தின் முன் புரூப் பண்ணணும். அப்போதான் அதை அப்படிச் செய்ய முடியும்."

"நான் இப்படியே தலைமறைவாக இருந்தால் என்னவாகும்...?"

"இப்ப உன் சொத்தை யார் யார் பாதுகாத்து வருகிறார்களோ அவர்களிடமே இருக்கும். இந்த வருடத்துடன் முடியும் உன்னோட ஹோட்டல் லீஸ் மட்டும் வேண்டுமானால் நீட்டிக்கலாம் அல்லது அவர்கள் அதை கோர்ட்டின் வசம் ஒப்படைக்க கோர்ட் என்ன முடிவு எடுக்கிறதோ அதன்படிச் செய்யலாம்..."

"பெரியப்பா...! எப்படி, இந்த மோசமான ஆளு நவநீதம் சொத்துக்காகத்தான் என்னைத் தேடுறாருன்னு சொல்றீங்க... அதுக்கு ஏதாவது எவிடன்ஸ் இருக்கா?"

"ஏன்மா, அமெரிக்கன் ஸ்கூல்ல படிச்சுக்கிட்டு இருந்த உன்னை ஏன் இவன் அவசரமாகப் படிப்பை நிறுத்தி சென்னைக்குக் கூட்டிக்கிட்டு வரணும்...? அவனுக்கு ஏதோ உள் நோக்கம் இருந்து இருக்கு. அதைத் தெரிந்ததால்தான் உன் அம்மா இவர்களிடம் கொடுத்து உன்னைத் தப்புவித்தார்கள்... அது மட்டுமல்ல, இப்ப உன்கிட்ட பழகறது, கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லறதுக்குப் பின்னாடி ஒரு காரணம் இருக்கு. அதுக்கு என்கிட்டே ப்ரூப் இருக்கு.

"சந்தேகத்தின் பலனை குற்றவாளிக்கும் கொடுக்கணும் என்ற வாக்கியத்தின்படி நவநீதம் நல்லவனா இருப்பானோ என்ற சந்தேகம் உனக்கு வந்து விட்டது. இதைக் கேளு!" என்று சொல்லி, பிரேமின் கையில் இருந்த ஐபேடை வாங்கி, அதில் ஜிமெயிலில் வந்த ஒரு ஆடியோ ஃபைலைப் போட, அன்று நவநீதம் தன் மகனிடம் பேசியது ஒலிபரப்பாகியது.

"பெரியப்பா.... வெளிநாட்டுல இருக்கும் பொண்ணைக் காதலிக்கிறேன்னு சொல்றவன் பின்னாடி இது மாதிரி ஏதாவது ஒரு காரணம் இருக்கும். இதைப் பெரிய விஷயமாக எடுத்துக்கக் கூடாது. என்னோட பாடற போட்டியில் இருக்கிற சந்துரு என்ற பையன் கூட அமெரிக்காவில் செட்டில் ஆகணும்னு சொல்லி லவ்

பிரபோஸ் பண்ணினான். இந்த ஆடியோவில் இருக்கிற விஷயம் வேற; நான் கேட்கற விஷயம் வேற...

"என்னை ஸ்கூல்ல இருந்து கூப்பிட நவநீதம் அங்கிள் மட்டும் தனியா வரலை... எங்கம்மாவும் கூட வந்தாங்க. அடுத்தது ஸ்கூல் டி.சி.யில அம்மாதான் கையெழுத்துப் போட்டு வாங்கினாங்க. ஸ்கூல்ல இருந்து மதுரை ஹோட்டல்ல தங்கற வரைக்கும்... ஏன், மறுநாள் நாங்க ஹோட்டலை விட்டுக் கிளம்பும் வரை நல்லாத்தான் நவநீதம் அங்கிள் கூட பேசினாங்க. அம்மா கார்ல ஏறின பிறகு கூட அவங்க கிட்ட பேசலையே தவிர, என் கிட்டே மட்டும் சிடுசிடுன்னு இருந்தாங்க. ஒரு இடத்துல வண்டி நின்னப்ப... பாத்ரூம் போகறதுக்குக் கூட்டிக்கிட்டு போகிற மாதிரி கூட்டிக்கிட்டுப் போய் கொல்லப் பார்த்தாங்க... நல்ல வேளை, முரளியும் அக்காவும் வந்ததாலே நான் சாகாம இன்னிக்கு உயிரோடு இருக்கேன்.

"ஒருவேளை, இவங்க என்னைக் கொன்னு அந்த இடத்துல போட்டு, நான் யாருன்னு தெரியாம அனாதைப் பிணமாக இருந்து, என்னைப் புதைக்கவோ எரிக்கவோ செய்து இருந்தால், உங்க யாருக்குமே நான் செத்தது தெரியாமல் இருந்து இருக்கும்.

"அப்போ அம்மா என்னைக் கொல்லப் பார்த்தது அந்த நவநீதத்துக்கு எங்க சொத்து எல்லாம் போகணும் என்றுதானே...! எங்க மாமாங்களுக்கு என்னை விட என் சொத்துக்கள் முக்கியமே கிடையாது. வேற ஏதோ இவங்களுக்கும், நவநீதம் அங்கிளுக்கும் இடையில் இருக்கு. அதுக்கு நான் இடைஞ்சலா இருப்பேன் என்ற

காரணத்துக்காகக் கூடக் கொல்லப் பார்த்திருக்கலாம்!" இந்து தன் தாய்மேல் குற்றங்களை அடுக்கத் தொடங்கினாள்.

வைத்தி அதைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் இடையில் குறுக்கிட்டு, "இல்லம்மா... என்ன நடந்ததுன்னு தெரியாமல் பேசக் கூடாது. மதுரை ஹோட்டல்ல வைச்சு என்ன நடந்ததுன்னா..." என்று வைத்தி தொடங்க...

முரளி, வைத்தியைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டு, "வேண்டாம் மாமா... போதும், நிறுத்துங்க... அவ புரியாமல் பேசுறா. அதுக்கு நீங்க விளக்கம் எதுவும் சொல்ல வேண்டாம்!" என்றவன், இந்துவைப் பார்த்து, "தர்ஷினி... அப்பா கேட்கிறதுக்கு மட்டும் பதில் சொல்லு."

இந்து, ஹரிஹரனைப் பார்க்க, அவர், "இந்திரா, சொல்லும்மா. என்னோட வாரிசைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குச் சம்மதமா?"

"மாமா, உங்க பையன்கிட்டே கேட்டீங்களா? அவங்களுக்குச் சம்மதமா?"

"அவன்தான் இன்னிக்கு வந்து பேசி நிச்சயம் பண்ணச் சொன்னான். அதுக்குத்தான் வந்து இருக்கேன், கூடிய சீக்கிரம் கல்யாணத்தை வைக்க வேண்டியதுதான். உன்னோட விருப்பத்தைச் சொல்லு இப்போ."

"சரி மாமா... எனக்கும் சம்மதம்தான்!" இந்து சொல்லிக் கொண்டு இருக்கும் போதே வேகமாக உள்ளே நுழைந்தான் சுபாஷ்.

ஹரிஹரன் ஏதோ பேசத் தொடங்கும்போது அவரின் மொபைல் போன் அழைக்க, அவர் எடுத்துப் பேசி முடிக்கும் வரை பொறுமை காத்தவன்,

அவர் பேசி முடித்தவுடன், சுபாஷ் தன் கையில் இருந்த பேப்பரை தூக்கி எல்லோருக்கும் நடுவில் தரையில் வீசினான். முரளி அவனைக் கேள்வியாகப் பார்க்க, "என்ன முரளி பார்க்கிறே, இது உங்க பேப்பர் தானே...? இதுல மூணாவது பேஜ்ல நாலாவது காலத்திலே பாரு.... இவளை பிரேமண்ணா கையில் தூக்கிட்டு வந்த போட்டோவைப் போட்டு... நவநீதம் பையன் பிரசன்னா வெச்ச பார்ட்டியில குடிச்சுட்டு மயங்கிக் கிடந்தான்னு எழுதி இருக்கான்."

"டேய்... எப்படிடா? எங்களுக்கு எதுவுமே தெரியாதுடா. அப்பா, முதல்ல இதை என்னன்னு விசாரியுங்க!" என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, 'சப்' என்று சத்தம் கேட்க, அனைவரும் சத்தம் வந்த திசையில் பார்க்க, அங்கே உச்சபட்சக் கோபத்தில் இந்துவின் அம்மா அவளின் தலைமுடியை ஒரு கையால் பிடித்தபடி அடுத்த கையை அவளை மறுபடியும் அடிக்க ஓங்கியபடி இருந்தார்.

"ஏய்...! நீ நவநீதம் பையன் வெச்ச பார்ட்டிக்குப் போய் குடிச்சியா? உன் மாமனார் வீட்டுப் பேப்பர்ல வந்த செய்தி உண்மையா? சொல்லுடி...! இவ்வளவு நேரம் பேசினாயே... இப்போ பேசுடி, பேசு. ஏன் வாயை மூடிக்கிட்டு இருக்கே? ஸ்பிக் அவுட்!" என்று இரைந்தார்.

இந்து அவள் அம்மாவின் முகத்தைப் பார்த்தபடியே, "ஆமாம்!" என்று சொன்னவுடன், அடுத்த அடி அவளின் மற்றொரு கன்னத்தில் விழுந்தது.

அனைவரும் இந்துவின் அம்மாவைத் தடுக்க முயல, "யாரும் பக்கத்தில வராதீங்க" என்று சொல்லிய படியே இந்துவைப் பார்த்து, "உங்கப்பா ஏன் சூசைட் பண்ணிக்கிட்டார்னு காரணம் எனக்கும் இன்னிக்கு வரைக்கும் தெரியாது. ஆனால் அதுக்கு மூல காரணம் நவநீதம்னு நீ என்னைப் பிரிஞ்சு போன பின்னாடி தான் தெரியும். உங்கப்பா சாகும்போது என்கிட்டே சொன் னாரு...

" 'இந்தக் குடும்பத்தோட மானம் நான் உயிரோடு இருந்தா போயிடும். அது போகக் கூடாதுன்னு தான் நான் செத்துப் போறேன்... ஒரு வேளை உன்னால போக வேண்டி வந்தால், அந்த நேரத்துல நீயும் என் கிட்டே வந்துடு. எக்காரணம் முன்னிட்டும் நம்ம குடும்ப மானம் போகக் கூடாது, அவங்க கேட்கறது என்னோடதா இருந்தா கொடுத்து இருப்பேன். குடும்ப கௌரவம் முன்னாடி மத்தது எல்லாம் தூசு. இப்ப என்கிட்ட இருக்கிறது எல்லாமே நம்ம சந்ததியோடது. அதை நான் எப்படிக் கொடுக்க முடியும்?'னு சொன்னார்.

"அந்த மானம் உன்னாலே போயிடுமோன்னுதான் உன்னை அன்னிக்குக் கொல்லப் பார்த்தேன். ஆனால், இன்னிக்குப் பேப்பர்ல வர்ற அளவுக்குக் குடும்பக் கௌரவத்தை, உங்கப்பா உண்டாக்கின ஹோட்டல்லேயே

தொலைச்சுட்டு வந்து இருக்கியே... உன்னை அன்னிக்கே கொல்லாம விட்டது தப்புன்னு தோணுது."

இந்து, இவாஞ்சலின் கையைப் பிடித்து முறைத்துக் கொண்டே, "இன்னிக்கு நான் தப்பு பண்ணினேன், சரி. அன்னிக்கு என்ன தப்புப் பண்ணினேன் என்னைக் கொல்லப் பார்த்தே?" வினவ...

"அன்னிக்கு நீ தப்பு பண்ணலை, நான் பண்ணின ஒரு தவறுனாலே ஒரு பெரிய அசிங்கம் நடக்க அடிகோலியது. நீ இருந்தால்தானே அது நடக்கும். அதுக்கு நீ இருக்கக் கூடாதுன்னுதான் கொல்லப் பார்த்தேன்!" வேக வேகமாக மொழிந்தார்.

"என்னை வெச்சு அப்படி என்னதான் செய்தாங்க? சொல்லித்தான் தொலைங்க!" ஆத்திரமாக இந்து, இவாஞ்சலினிடம் கேட்டாள்.

"அதுவா...?" என்று இந்துவின் அம்மா ஆரம்பிக்க...

முரளி, "ஆன்ட்டி, சொல்லாதீங்க!" என்று இரைய,

"அம்மா, வேண்டாம்!" என்று பவானியும் இந்துவின் அம்மாவின் வாயைப் பொத்த... பொத்திய கையை விலக்கிய இவாஞ்சலின், துப்பாக்கியில் இருந்து புறப் படும் ரவை போல வார்த்தைகளைத் துப்ப ஆரம்பித்தார்.

"உன்னோட பன்னிரண்டாவது வயசுல அந்த பாண்டியன் ஹோட்டல்ல எனக்குத் தூக்க மருந்தும் உனக்கு மயக்கம் கலந்த போதை மருந்தும் கொடுத்து

உன்னைப் பாலியல் ரீதியாகக் காயப்படுத்தினான் நவநீதத்தின் மகன் பிரசன்னா. இதுக்கு நவநீதமும் உடந்தை. அது மட்டுமா...?

"அப்பனும் பிள்ளையுமாக உன்னைச் சென்னைக் குக் கூட்டிக்கிட்டு வந்து, எப்படித் தொழில் விபச்சாரியாக மாத்துவது என்பது பற்றிப் பேசியதைக் கேட்ட பிறகு தான், நீ உயிரோடு இருக்கக் கூடாது என்று கொல்லப் பார்த்தேன். இப்ப என்னடான்னா, நீயே அவனுங்ககிட்டே போய் வம்படியா சிக்கி இருக்கே!"

கண்ணீருடன் வந்த வார்த்தைகள் சரியான இலக்கைத் தாக்க, கடந்த காலத்தின் அவலங்களை மேலோட்டமாக அறிந்த இந்து, உண்மை கொடுத்த அதிர்ச்சியில், ஆடாமல் அசையாமல் கண்கள் மேல் நோக்கி நிலை குத்த அமர்ந்தாள்.

## 17

**சி**றிது நேரம் முன்பு வரை இரைச் சலாக இருந்த வரவேற்பறை, அந்த நிமிடம் முதல் மயான அமைதியைத் தற்காலிக மாகத் தத்தெடுத்துக் கொண்டது.

இவாஞ்சலினின் வார்த்தைகளால் அன்று நிகழ்ந்த சம்பவம் அரைகுறையாய்த் தெரிந்திருந்தவர்கள் மனதில் இடி போல அதிர்ச்சியை விளைவித்ததால், உயிர் உள்ள சிலைகள் போல் காணப்பட்டனர்.

சிறிது நேரம் அப்படியே சென்றது. சோபாவின் நுனியில் அமர்ந்து இருந்த பவானி, எதார்த்தமாகத் திரும்பிப் பார்த்தவர், "முரளி, இங்க பாரு" என்று கூவிக் கொண்டே இந்து அமர்ந்து இருந்த இடம் நோக்கி விரைய, அதே வேகத்துடன் முரளியும் இந்துவை நோக்கிப் பாய்ந்தவன், பிட்ஸ் வந்து சோபாவில் இருந்து கீழே விழத் தொடங்கியிருந்த இந்துவைக் கீழே விழாமல் பிடித்துக் கை கால்களை நேர் செய்தபடி தரையில் படுக்க வைத்து விட்டுப் பிரேமைப் பார்த்து, "நேத்து ராத்திரி கொண்டு வந்த மருந்துகளைப் பிரிஜ்ஜில் இருந்து எடுத்துட்டு வா!" என்று பணித்தான்.

பவானி, துவண்டு போயிருந்த தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொள்ள, அவளின் வாயைத் திறந்து தனது கைகளைப் பற்களுக்கு இடையே கொடுத்தபடி சுபாஷைப் பார்த்து, "அவளோட பேக்ல ஒரு மெரூன் கலர் பாக்ஸ் இருக்கும், எடு!" என உத்தரவிட்டார்.

முரளி, இந்துவின் பாட்டியைப் பார்த்து, "பாட்டி, நீங்க போய் ஐஸ் கியூப் டிரே கொண்டு வாங்க. அப்படியே இரண்டு டவல் கொண்டு வாங்க."

அதற்குள் சுபாஷ் எடுத்து வந்த பாக்ஸில் இருந்த ரப்பர் துண்டுகளில் ஒன்றை எடுத்த முரளி, பற்களுக்கும் கன்னத் தோலுக்கும் இடையின் வழியாகப் பற்களுக்கிடையில் அந்த ரப்பர் துண்டினை வைத்த பிறகு, பவானி தன்னுடைய கையை விலக்கினார். அதற்குள் இந்துவிற்கு வந்த வலிப்பின் வேகம் சிறிதுசிறிதாகக் குறைய ஆரம்

பிக்க, "அக்கா! நீங்க உங்க கையில முதல்ல ஐஸ் வைங்க... நான் இன்ஜெக்ஷன் போடறேன் அவளுக்கு."

அங்கு நின்றிருந்த அனைவரும் பவானியின் கையைப் பார்க்க, கைகளில் பற்களின் தடம் மிக அழுத்தமாகப் பதிந்து, அதில் இருந்து ரத்தம் துளிர்த்துக் கொண்டு இருந்தது. "ஏம்மா நீ கொண்டு போய் உன் கையைக் கொடுத்தே? இப்போ பாரு ரத்தமே வருது!" இந்துவின் பாட்டி பவானியைப் பார்த்துக் கேட்டார்.

பாட்டியைப் பார்த்து லேசாகச் சிரித்த பவானி, "நான் கையை வைக்கலைன்னா, அவ பல்லுக்கிடையே அவளோட நாக்கு மாட்டித் துண்டாகிடுமே! அதைத் தவிர்க்கத்தான் பாட்டி!" என்று சொல்லியபடியே தன்னுடைய ஒரு கையில் ஐஸ் கியூபினை வைத்து டவலால் கட்டினார். மற்றொரு கைக்கு சுபாஷ் அதே போல் செய் தான்.

இந்துவின் உடம்பில் ஊசியின் மூலம் மருந்தினைச் செலுத்திய முரளி.. அவளைக் கைகளில் ஏந்தி அவளது அறைக்கு நடந்தபடியே "அக்கா, திரும்பியும் வர மாதிரி இருக்கு. நீங்க அந்த ஹெவி டோஸ் மருந்தும் அப்படியே தூங்கற மருந்தும் எடுத்துக்கிட்டு வாங்க. அது இரண்டையும் மிக்ஸ் பண்ணிப் போட்டுடலாம்."

இந்துவை ரூமுக்குள் எடுத்துச் சென்று மருந்துகளைச் செலுத்தும் வரை எல்லோருமே அந்த அறையின் வாயிலிலேயே இருந்தனர். பல நிமிடங்கள் கரைந்தவுடன், "அவ ஆழ்ந்த தூக்கத்துக்குப் போயிட்டா.

இனிமே பயம் இல்லை. வாங்க, போகலாம்!" என்றான் முரளி.

"நீ எப்படிப்பா அவ நல்லா தூங்கிட்டான்னு சொல்றே? இருந்தாலும் பரவாயில்லை... நீங்க எல்லாம் போங்க... நான் என் பொண்ணு பக்கத்திலேயே இருக் கேன்!" உறங்கும் மகளைப் பார்த்தபடியே இவாஞ்சலின் சொன்னார்.

வெளியில் இருந்து எட்டிப் பார்த்த சுபாஷும் "ஆமாம் ஆன்ட்டி... அவ நல்லாத் தூங்கிட்டா. பாருங்க, ரெண்டு கையும் தலைக்கு மேலே தூக்கி இரண்டு உள்ளங்கையும் இறுக்க மூடி இருக்கு... இப்படி இருந்தா அவ நல்லா தூங்கறான்னு அர்த்தம்...!"

சவேரியார், "ராணி! நீ வந்து என்ன நடந்தது என்று எங்களுக்கு விளக்கமாகச் சொல்லு. ஜான்சன், பால்சன் வெளியே வாங்க. தூங்கிறவளுக்கு உங்களாலே எந்தத் தொந்தரவும் வரக் கூடாது!" உத்தரவிட்டுச் செல்ல, மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.

ஹால் சோபாவில் அமர்ந்தவுடன் ராணியைப் பார்த்து, அனைவர் மனதிலும் உள்ள கேள்வியை ஹரிஹரனே கேட்டார். "ஏம்மா, உனக்கு உடம்பு முடியாமல் இருந்துச்சே...! எப்போ குணமாச்சு? என்ன நடந்தது? விளக்கமாகச் சொன்னால்தான் எங்களாலே அந்த நவநீதத்துக்கிட்டேயிருந்து இந்திராவைக் காப் பாற்ற முடியும். என்ன நடந்தது? உண்மையை -

அதாவது உனக்குத் தெரிந்த விஷயங்களை வெளிப் படையாகச் சொல்லிடு.”

“நாங்க 2000மாவது வருஷம் உத்தண்டி நிலத்தை வாங்கினோமே... அப்போதிலிருந்து எங்களுக்குப் பிரச் சனைதான். ஒவ்வொரு பிரச்சனையா முடிச்சுட்டு வந் தோம். முதல்ல பக்கத்து நிலத்துக்காரனால பிரச்சனை வரும் பொழுது இவருக்கு நட்பாக வந்தவன்தான் இந்த நவநீதம். என்ன எண்ணத்தோட இவர்கிட்டே நண்பனா மாறினானோ தெரியலை.

“எப்போதுமே இவர் யார் கிட்டேயும் எங்களைப் பத்தி அதிகமாகச் சொன்னது கிடையாது. நாங்க அடையார்ல இருக்கிற ஹோட்டல்ல உள்ள ரூம்லதான் தங்குவோம்... உத்தண்டி பிராஜெக்ட் ஆரம்பித்த பிறகு அவரும் நானும் அடிக்கடி அங்கே எங்களுக்கு ஒரு காட்டேஜ் வெச்சுக்கிட்டு தங்க ஆரம்பிச்சோம்...

“ஒரு நாள் காட்டேஜ் கதவைத் திறந்து கொண்டு வந்தவர், ‘இவா... கிளம்பு. நாம நம்மோட சுபா இன்ஸூக்கே போயிடலாம்.”

“என்ன அத்தான், இப்போ வந்து இப்படிச் சொல்றீங்க...? மணியைப் பார்த்தீங்களா? பதினொண் ணுக்கு மேலே ஆயிடுச்சு. இப்போ கிளம்பிப் போறதுக்குப் பதிலா நாளைக்குக் காலையிலே இங்கே பார்த்துட்டு, அப்படியே மகாபலிபுரத்துல இருக்கிற ஹோட்டலையும் பார்த்துட்டு மதியத்துக்கு மேலே அங்க போகலாம்...”

"என்ன பிரயோசனம் சொல்லு... நம்ம கிட்டே இருக்கிறதை கொடுக்கிறதுக்கு, இதை என்ன நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சதா? இது நம்மோட வருங்கால சந்ததிக்குப் போக வேண்டியது. ஒரு வேளை குடும்ப மானமா அல்லது உயிரா என்று வந்தால் நீ எக்காரணம் முன்னிட்டும் உயிரைப் பெரிசாக மதிக்காதே... உன்னை நம்பித்தான் நான் எல்லாத்தையும் விட்டுப் போறேன்."

"என்னது அத்தான், எங்கே போறீங்க? இப்போ எங்கே இருக்கீங்க? நீங்க பேசறது ஒண்ணுமே புரியலையே!" பதட்டத்துடன் வினவினாள்.

"நம்ம மானம் போற நிலைமையில் இருக்கேன். அதனால் தற்கொலை பண்ணிக்கப் போறேன்... ஆனால், வெளியில் இருந்து பார்த்தால், ஹார்ட் அட்டாக் மாதிரி தெரியும்... இப்ப நான் சுபா இன்ஸ் ஆபீஸ் ரூம்லதான் இருக்கேன்... உனக்கு யாருமில்லைன்னு நினைக்காதே. அப்பாவும், வைத்தியும், உன் உடன்பிறப்பும் இருக்கு!" என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே ஒரு மாதிரியான விக்கல் சத்தம் கேட்க, இவா போனைப் போட்டு விட்டு இரண்டாவது மாடி நோக்கி விரைந்து சென்று பார்க்கும் போது, சோபாவில் தலை சரிந்து விழுந்து கிடந்தார் செபஸ்டியன்.

தன் மாமாவுக்கும், உடன்பிறப்புகளுக்கும் என்ன நடந்ததோ அதைச் சொல்ல, அவர்கள் அங்கிருந்த படியே விஷயம் வெளியானால் ஹோட்டலுக்குக் கெட்ட பெயர் என்றும் தேவையில்லாத வழக்கு விவகாரங்கள்

வரும்... அதனால் கணவனை இழந்து நிற்கும் இவாஞ்சலின் அமைதி பாதிக்கப்படும் என நினைத்து, ஹார்ட் அட்டாக் போல சரிக்கட்டி விஷயத்தை முடித் தனர்.

நவநீதம் தன் ஹோட்டலை எழுதி வாங்கியது எதுவும் இவாவிற்குத் தெரியாது. தெரியாதபடி ராஜபாண்டி யன் பார்த்துக் கொண்டார்.

இரு மாதங்களுக்குப் பிறகு ஓர் நாள் ஹோட் டலுக்கு வந்த நவநீதம், "அம்மா இவாஞ்சலின்... உன்னை இப்படி விட்டுப் போக எப்படித்தான் மனசு வந்துச்சோ செபஸ்டினுக்கு, சாகிறதுக்கு முதல் நாள் கூட என் கிட்டே பேசிக்கிட்டு இருந்தான். இந்த வருஷம் உங்க மகளை அமெரிக்கா அனுப்பிப் படிக்க வைக்க முடியாது. அத னால வேற நாடு எதுக்காவது அனுப்ப முடியுமான்னு பார்க்கணும்னு சொன்னான்மா.

"நேத்திக்கு தான் எங்க குடும்பத்துக்குத் தெரிந்த வங்க சொன்னாங்க... ஆஸ்திரேலியாவுக்கு படிக்க அனுப்ப முடியுமாம்... அவனோட கடைசி ஆசைம்மா... அவன் பொண்ணு வெளிநாடு போய்ப் படிக்கணும்கிறது... நாம என்ன செய்யலாம்... போய் உன் பொண்ணை இங்கே கூட்டி வந்திடலாம். அப்புறம் இங்கே இருக்கிற ஆஸ்திரேலியா தூதரகத்துல போய் கேட்டா என்ன வழி முறைன்னு சொல்லுவாங்கம்மா. அதைப் பண்ணி இந்த வருஷத்துல இருந்து பிள்ளை வெளிநாட்டுல படிக் கட்டும்."

"சரிங்க அண்ணே, நீங்க சொல்றபடி செய்யலாம். எனக்குத் தெரியும் இது அவரோட ஆசைங்கிறது. அவளை அழைச்சுக்கிட்டு வருவதற்கு முன்னாடி எதுக் கும் எங்க மாமாகிட்டேயும் ஒரு வார்த்தை கலந்து பேசிக்கிறேன்."

"ஏன் தங்கச்சி, இப்பத்தான் தன்னோட ஒரே பிள்ளையைச் சாகக் கொடுத்திருக்காரு... அது தவிர வயசான மனுஷன், உங்க பொண்ணு வேற அவருக்கு ஒரே பேத்தி. அவரோட வாரிசு ஒண்ணை எமனுக்குக் கொடுத்துட்டு, அடுத்ததை வெளிநாட்டுக்கு உடனே அனுப்பறேன்னு சொன்னா ஒத்துக்குவாரா?

"போய் பொண்ணை கூட்டி வந்துட்டு விசா எல்லாம் வாங்கின பிற்பாடு அவர் கிட்டே சொல்லிக்கலாம். என்ன நான் சொல்றது? நீயே யோசனை பண்ணிப்பாரு... இந்த அண்ணன் சொல்றது சரியா இல்லையான்னு... சரின்னா போனைப் போட்டுச் சொல்லு... நானும் உன் கூட வர்றேன். போய் கூட்டி வந்திடலாம்!" என்று அழகாக வலை விரிக்க, நவநீதத்தின் தந்திரம் அறியாமல் அதில் சிக்கினாள் இவாஞ்சலின்.

இவர்கள் கொடைக்கானலுக்குச் செல்வதற்காக கிளம்பும் சிறிது நேரத்திற்கு முன்பாக ஹோட்டலின் மேனேஜரும் இவர்களின் நம்பிக்கைக்கு உரியவருமான ஏகாம்பரம் வந்து, "பாப்பாவைக் கூட்டி வரப் போறீங் களாம்மா... இந்தாங்க பாப்பாவுக்கு செபாஸ் தம்பி இருக்கும்போது அப்ளை பண்ணின பாஸ்போர்ட் நேத்

திக்கு தபால்ல வந்துச்சும்மா... அப்புறம் இந்த கவர்ல இருக்கறது வைத்தி அய்யா கிட்டே போகணும். என்னோட வீட்டு அட்ரஸுக்கு அய்யா அனுப்பின கவர்மா... பத்திரம்!" என்றார்.

இவர்களின் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்க, ஏகாம்பரம் இவைகளை அருகில் வைத்து இருந்த பேக்கினுள் போட்டதை இவாஞ்சலின் பார்த்தார். பின்பு இவாஞ்சலின் நவநீதத்துடன் கொடைக்கானலுக்குக் கிளம்பிச் சென்றார்.

கொடைக்கானலில் இருந்து இந்துவை அழைத்துக் கொண்டு திரும்பும் வழியில், "தங்கச்சி, நேத்து ராத்திரி தூங்காம முழிச்சு இரண்டு வண்டி டிரைவரும் ஓட்டி இருக்காங்க, நாம என்ன பண்ணலாம்... மதுரை பாண்டியன் ஹோட்டல்ல ரூம் போட்டுத் தூங்கி நாளைக்குக் காலையிலே மெட்ராஸுக்குக் கிளம்பலாம். என்னம்மா சொல்றே நீ...?" என்று தன் தேன் தடவிய குரலில் கேட்க, இவாஞ்சலினும் அதற்கு ஒப்புக் கொண் டார்.

அன்று பாண்டியன் ஹோட்டலில் தங்கினார்கள். மறுநாள் காலை தன்னுடைய கடமைகளை முடித்த இவா, பக்கத்தில் அரைகுறை தூக்கத்தில் அப்பாவினைத் தேடும் மகளின் மீது கை வைத்துப் பார்க்க, லேசாக ஜுரம் இருப்பது போலத் தெரிய, அங்கு சென்று கொண்டிருந்த சர்வரிடம், இங்கு டாக்டர் எங்கிருக்கிறார் என்று கேட்க லாம் என்று பின்தொடர்ந்தார்.

அப்பொழுது அங்கே கார் பார்க்கிங் செல்லும் வழியைக் கடக்கும் பொழுது நவநீதத்தின் குரல் கேட்க, அதில் சுபாவின் பெயர் அடிபட்டதால், என்னவென்று அறியும் ஆவலில் செவி கொடுத்தார்.

"என்னடா பிரசன்னா... சுபா எப்படி இருந்தா ராத்திரி. ம்ம்... மஜாதான் போ உனக்கு. ஆனால் வயசுக்கு வராத குட்டி... முதன்முதலில் நீதான் கை வெச்சு இருக்கே... உன் கை ராசியான கைடா மகனே! இனிமே அவ என்னவாகப் போறா பாரு."

"ஏன்பா அவசரமாக இப்பவே காரியத்தை முடிக்கச் சொன்னே? அவ வயசுக்கு வந்த பிற்பாடு என்றால் இந்த பொம்பளையும் நம்மைப் பார்த்துப் பயப்படும்... நமக்கும் பிடி கிடைச்ச மாதிரி ஆச்சு."

"டேய்... நான் எதுக்கு இப்பவே முடிக்கச் சொன் னேன் தெரியுமா? இப்ப விட்டா ஒரு வேளை அவங்க ஊருக்குப் போயிட்டா... அந்தப் பொண்ணை நம்ம கைக்குக் கொண்டு வர முடியாது. அதனால தான் இந்தப் பொம்பளைக்குத் தூக்க மருந்தைப் பால்லேயும் அந்தப் பொண்ணுக்கு மயக்க மருந்தை சுவாசிக்க வெச்சு நம்ம ரூமுக்குக் கொண்டு வந்த பின்னாடி போதை மருந்தும் போடச் சொன்னேன்.

"அந்த ஹோட்டல் அந்தப் பொண்ணு பேர்ல இருக்கு. ஆனா இதுல நமக்கு ஒரு விஷயம் சாதகமா இருக்கு. என்னன்னா, அவ தன்னோட பதினெட்டு வயசுக்கு

மேலே தன்னோட புருஷனுக்கு எழுதிக் கொடுக்கலாம். இப்ப என்ன செய்வோம், இவளைக் கூட்டிக்கிட்டுப் போய் நமக்கு வேண்டிய காரியங்களைச் சாதிக்க உதவும் பெரிய மனுஷங்களுக்கு அனுப்பி வைப்போம். சின்ன வயசுப் பொண்ணுங்கிறதால நமக்கு நல்ல வேட்டைதான்.

“பதினெட்டு வயசு வந்ததும் இவளை ரெஜிஸ்டர் கல்யாணம் கட்டிக்கோ. பின்னாடி ஹோட்டலை எழுதி வாங்கின பிற்பாடு கர்ப்பத்தடை செய்து நம்ம ஆட்களை வெச்சு பம்பாய்ல வித்துடலாம்... ஏன் கர்ப்பத்தடைன்னா பின்னாடி இவளுக்கு பிள்ளை கிள்ளை வந்து சொத்துக் காகப் பிரச்சனை பண்ணக் கூடாது பாரு. அதுக்குத்தான்.

“இங்கே அவ எவன் கூடவோ ஓடிப் போயிட்டான்னு கதை விட்டுடலாம். கொஞ்ச நாள் கழிச்சு ஏதாவது மினிஸ்டர் பொண்ணு... இல்ல, தொழிலதிபர் பொண்ணு பார்த்து உனக்கு நான் கட்டி வைக்கிறேன். என்ன சொல்றே நீ... சரி, சரி... ரொம்ப நேரம் இங்கே நின்னு பேச வேண்டாம். வா, அவளைக் கூட்டிக்கிட்டு சீக்கிரமா ஊர் போய்ச் சேரலாம்.”

இவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் இவாவின் செவியின் வழியே பாய்ந்து, மூளையையும் இதயத்தையும் தாக்கியது அணுகுண்டாக.

அவர்களின் நகரும் ஓசை கேட்டவுடன், தன் மகளை நரகப் படுகுழியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உந்த, வேகமாக அவ்விடத்தை விட்டு

நகர்ந்த இவாஞ்சலின், தன் ரூமிற்குள் வந்து மகளை ஆராய எண்ணியவள், அந்த மனித உருவில் இருக்கும் சாத்தான்கள் எப்போது வேண்டுமானாலும் தன் அறையை அடையலாம். மகளின் நிலையைத் தாயாகிய நான் அறிவேன் என்று அறிந்தால், தங்கள் நிலை மோசமாகும். ஏதாவது சொல்லி அவர்களை அப்புறப் படுத்திவிட்டுப் பின்பு அதை ஆராயலாம்...!' புத்தியில் உரைத்தது.

அதற்குள் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்க, அவசரமாகக் குளியறைக்குள் சென்று, தனக்கு உண்மை தெரியும் என்பதைத் தெரியாதபடி இருப்பதற்காக முகத்தில் தண்ணீரை அடித்து, அதை அங்கிருந்த டவலால் முகத்தை மறைத்தாற் போல் துடைத்தபடியே வெளியே வர, நவநீதம் கட்டில் அருகே நின்று கொண்டு இருந்தார்.

“தங்கச்சி... நாம் இப்போ சாப்பிட்டுக் கிளம்பலாம். மதியம் இரண்டு மணிக்குள்ளே ஊருக்குப் போய்ச் சேர்ந்துடலாம். சரியாம்மா...?”

இருவரையும் பார்த்த பொழுது அவர்களைக் கொல்லத் துடித்த ஆத்திரத்தையும்... அண்ணன் என்று கூப்பிட மனசும் நாவும் அருவருக்க அந்த வார்த்தையைத் தவிர்த்து விட்டு, “இல்லீங்க... அவளுக்கு என்னமோ தெரியலை லேசா ஜுரம் காயுது. இன்னிக்கு அவர் இறந்த கிழமை... அதனால நான் எதுவும் சாப்பிட மாட்டேன்... நீங்க போய் சாப்பிட்டு என்னைக் கூப்பிடுங்க... நான் கீழே வரேன்.”

அவர்கள் சென்றதும் கதவை அடைத்துக் கொண்டு, மகளின் துணிகளை விலக்கிப் பார்த்ததில், அவள் சூறையாடப்பட்டது அந்தத் தாய்க்குப் புலப்பட, அதை மூளைக்குக் கண்கள் உணர்த்திய நேரத்தில், தன் உடம்பில் ஒவ்வொரு செல்லும் உச்சந் தலையில் ஆரம்பித்த தீ உள்ளங்கால் வரை திகுதிகு என்று எரிவது போல் இருந்தது.

அந்தத் தீயின் ஜுவாலையை அதிகரிப்பது போல் தூக்கக் கலக்கத்திலோ அல்லது நடந்த கொடுமையின் வேதனையின் மயக்கத்திலோ இருந்த சுபா, லேசாக விழித்து இவாவைப் பார்த்து.

"அம்மா! இங்கே தை (தொடைப் பகுதியைத் தொட்டுக் காட்டி) இரண்டு பக்கமும் வலிக்கும்மா. யூரின் போகிற இடமும் பயங்கர பெயினா இருக்கும்மா. என்னால எழுந்து நிக்கக் கூட முடியலைம்மா. யூரின் பாஸ் பண்ண போக டிரை பண்ணலாம்னு எழுந்தால், காலைத் தரை யிலே ஊன்ற முடியலைம்மா. ஏன் இப்படி ஆச்சு. நான் ரொம்ப சேட்டை பண்ணறேன்னு காட் என்னை நடக்க விடாம பனிஷ் பண்ணிட்டாராம்மா...? சாரிம்மா... நான் இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்மா. நீ என்னோட கால் சீக்கிரமா நல்லா ஆகணும்னு பிரேயர் பண்ணும்மா."

தனக்கு நேர்ந்த கொடுமையைக் கூட அறியாமல் குழந்தைத்தனத்துடன் இருக்கும் மகளின் பேச்சைக் கேட்டு நெஞ்சு வலிப்பது போல் இருக்க, அதன் தாக்கமாகக் கண்கள் இருளத் தொடங்க, அந்த நேரம் தாங்கள்

இருக்கும் சூழ்நிலை சரியில்லை என்பதை அறிவு உணர்த்த... தனக்கு ஏதாவது நேர்ந்தால் தன் குழந்தை மீள முடியாத புதைகுழியில் தள்ளப்படுவாள் என்பதையும் உணர்ந்த இவா...

தன் துக்கத்தையும் தனிமையையும் பயத்தையும் தூக்கித் தன் மனதிற்குள் ஒரு மூலையில் வீசி எறிந்து விட்டு, எப்படியாவது இவர்களிடம் இருந்து தப்பிக்க முடியுமா என்று யோசித்தாள். ஒரு வழியும் புலப்பட வில்லை. செபஸ்டியன் சொன்னது போல் இவளையும் கொன்று விட்டுத் தன்னையும் மாய்த்துக் கொள்ளலாம் என்றால், அதற்கான நேரமும் மிகக் குறைவாக இருந் தது. போகும் வழியில் தப்பிக்க முயற்சிக்கலாம். முடிய வில்லை என்றால் இவளைக் கொன்று விட்டு நாமும் நம் வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாம் என்ற முடி வுக்கு வந்தாள்.

சுபாவைப் பார்த்து, "அது ஒண்ணுமில்லை பாப்பா... நான் ஆடாம ஓடாம இருன்னு சொன்னா கேட்கிறியா... மாட்டேங்கிறே. ஏதோ இடத்துல ஏறி குதிக்கிற நினைவில பெட்ல இருந்து கீழே விழுந்துட்டே... அதனாலேதான் வலிக்குது, இப்போ வா, அம்மா கையைப் பிடிச்சுக்கிட்டு நட!" என்று சொல்லி சுபாவை எழுப்பிப் பாத்ரூமுக்குள் அனுப்பினாள்.

அவள் உடுப்பை மாற்றலாமா என்று யோசித்தவள், மாற்றினால் நான் இவள் சின்னாபின்னப் படுத்தப்பட்டது எனக்குத் தெரியும் என்பதை அந்தக் கயவர்கள்

உணர்ந்து கொள்வார்கள்... தப்பிச் செல்ல வாய்ப்பு கிடைக்கும் வரை இவளுக்கு நடந்த கொடுமையும், நடக்கப் போக இருக்கும் விபரீதமும் எனக்கு தெரியாதது போல நடிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

கிளம்ப வேண்டிய ஆயத்தங்களைச் செய்த பிறகு, நவநீதம் அழைக்க, காரில் சென்று அமர்ந்தார்கள்.

விழுப்புரம் நெருங்கும் வரை இவர்களுக்குத் தப்பிச் செல்ல வாய்ப்பு ஏதும் கிடைக்கவில்லை. விழுப்புரம் அருகே டீ குடிப்பதற்காக வண்டியை நிறுத்த, இயற்கை உபாதை என்று சொல்லி விட்டு சுபாவை அழைத்துக் கொண்டு அந்த முள் செடியின் உள்பக்கம் சென்று, தன் கழுத்தில் இருந்த துப்பட்டாவை எடுத்து மகள் கழுத்தில் போட்டு நெறிக்க ஆரம்பிக்க, அவள் மூச்சுக்குத் திணறும் நேரம் ஒரு கையை முரளியும், மற்றொரு கையைப் பவானியும் பிடித்து இழுத்தனர்.

முரளியைப் பார்த்ததும் ஒரு பக்கம் ஆனந்தமும் மறுபக்கம் அதிர்ச்சியும் அடைந்த இவா, தன்னிடம் இருந்த சுபாவை முரளியிடம் தள்ளி, "இவளை நீங்க இரண்டு பேருமா எங்கேயாவது கூட்டிக்கிட்டுப் போயிடுங்க. இந்தாம்மா... இந்த பேக்ல இருக்கிறதை நீங்க பாதுகாப்பான இடம் போனதும் பிரிச்சுப் பார்த்து, அதிலே இருக்கிற ஆளைத் தொடர்பு கொண்டா உங்களுக்கு உதவி கிடைக்கும்... முரளி, பாப்பா பத்திரம்ப்பா,"

பவானியைப் பார்த்து, "என் பொண்ணுக்கு நீதான் காவலாக இருக்கணும்!" என்று சொல்லி விட்டு, வேகமாக

அந்த டீக் கடையை நோக்கி வர, அங்கே இவர்கள் வந்த சுமோ சாவியுடன் ஆள் அருகே இல்லாமல் நின்று கொண்டு இருந்ததைக் கவனித்த இவாஞ்சலின், வேகமாக டிரைவர் இருக்கையில் ஏறி, அதை உயிர்ப்பித்து, வில்லிலிருந்து புறப்படும் அம்பைப் போல் கன்னியாகுமரி நோக்கிச் செல்லும் நேஷனல் ஹைவேயில் வண்டியைச் செலுத்தினாள்.

இருள் மயங்கும் சமயம் டி.கல்லுப்பட்டி என்ற இடத்தின் அருகில் இவர்களின் சீயோன் டிராவல்ஸ் வண்டி மதுரையில் இருந்து ஆட்களை ஏற்றிக்கொண்டு நாகர்கோவில் நோக்கிச் சென்று கொண்டு இருப்பதை பார்த்த இவாஞ்சலின், பஸ்சின் குறுக்கே காரை நிறுத்தி மகளின் பேக்கை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். வெளியில் எட்டிப் பார்த்த டிரைவர், தன்னுடைய முதலாளி அம்மாதான் பஸ்சின் குறுக்கே காரை நிறுத்தி உள்ளார் என்பதை உணர்ந்து பஸ்சின் கதவைத் திறக்க, உள்ளே ஏறிய இவா, டிரைவரைப் பார்த்து, "பாருங்க, எங்கேயும் வண்டி நிக்கக் கூடாது. குளத்து (உள்ளூர் பேருந்துகள் மட்டும் இயக்கப்படும் பஸ் நிலையம் நாகர்கோவில்) பஸ் ஸ்டாண்டில் எல்லோரையும் இறக்கி விட்டு, என்னை நம்ம ஊருக்குள்ளே கொண்டு போய் இறக்கி விடணும்." கட்டளை பிறப்பித்து விட்டு அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்தவர், மயங்கிப் போனார்.

இவாஞ்சலின் நடந்ததைச் சொல்லி முடிக்க... "நான் அவனுங்க வண்டியை எடுத்துக்கிட்டு போய் இருக்கேன். அவனுங்க என்னைத் துரத்தவே இல்லை."

"சரிம்மா... உனக்கு எப்போ சரியாச்சு? அதைச் சொல்லு... இன்னிக்கு நடந்ததைப் பார்த்தா, இப்பத்தான் உனக்கு சரியான மாதிரி தெரியலையே!" என்று வைத்தி கேட்க,

"அதுவா பெரியத்தான்" என்று இவா ஆரம்பிக்கும் போதே உள்ளே இருந்து...

"அண்ணா, அப்பா, ஆத்தா, மாமா... இங்கே வாங்களேன்!" என்ற அலறல் சத்தம் கேட்க, இந்துவின் அறையை நோக்கி அனைவரும் ஓடினர்.

## 18

**மா**டியில் இருந்த பெரிய ஹாலில் ரிலாக்ஸ் கவுன்ஞ்ச்சில் அரை மயக்க நிலையில் தன்னை அறியாமல் மூடும் கண்ணினைத் தட்டி விழித்தபடி, மற்ற இடங்களில் அமர்ந்து இருந்தவர்கள் அனைவரையும் தன் உருட்டைக் கண்ணால் உற்றுப் பார்த்தபடி இருந்தாள் இந்து.

இவள் படும் பாட்டைப் பார்த்து மனது பொறுக்காமல் பவானி, "உனக்குத்தான் உடம்பு முடியலையே...! உள்ளே போய்ப் படுத்துத் தூங்கும்மா. தேவை இல்லாமல் எதுக்கும்மா இங்கே உட்கார்ந்து உன்னைக் கஷ்டப் படுத்திக்கிட்டு இருக்கே?"

"இல்லக்கா... இவ்வளவு நாள் என்னோட வாழ்க்கையில என்ன நடந்தது என்று தெரியாமல் இருந்தது சரி.

ஆனால், இனிமேல் எனக்கு நடந்தது எல்லாம் தெரிய வேண்டும்!" குரலில் உறுதியுடன் சொன்னாள்.

"உனக்கு வர வரப் பிடிவாதம் ரொம்ப அதிகமாகப் போச்சு. இப்போ உனக்கு என்ன தெரியணும்?" பிரேம் எரிச்சலுடன் இந்துவைப் பார்த்துக் கேட்க...

சற்று நேரத்துக்கு முன் பால்சன் அலறிய அலறலில் எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு இந்துவின் ரூமில் சென்று பார்க்கும் போது, அவள் மெத்தையை விட்டு எழுந்து கொண்டு இருந்தாள்.

பால்சனைப் பார்த்துச் சவேரியார், "மக்கா! எதுக்கு அத்தரைக்கு அலறினே? நான் உங்களை வெளியிலே தானே இருக்கச் சொன்னேன். நீ எதுக்கு உள்ளே வந்தே?"

"அண்ணா என் கூட பகளம் வெச்சான். அதனாலே நான் விலகி ரூமுக்கு வந்தேன். அப்போ இவங்க கட்டிலுக்கு இந்தப் பக்கம் வந்து கீழே விழுந்துடு வாங்களோன்னு பயந்து உங்களைக் கூப்பிட்டேன், உங்களைக் கூப்பிட்ட சத்தத்தில்தான் விழிச்சது!"

இந்து தூக்கத்தில் சூரியனை போன்றவள். ஒரு இடத்தில் மறைந்த சூரியன், நேர் எதிர்த் திசையில் மறுநாள் உதிப்பது போல் இந்துவும் படுக்கும் போது இருக்கும் திசைக்கு நேர் எதிர்த் திசையில்தான் காலையில் விழிப்பாள். அன்றும் அப்படித்தான் கிடந்த திசையில் கால் தூர சுற்றினை முடிக்கும் போது அவளைப் பார்த்த பால்சன், பயம் கொண்டு அலற, அவள் விழிப்பதற்கு

ஏதுவாக அமைந்தது. மீண்டும் அவளைத் தூங்கச் சொல்லி அனைவரும் கெஞ்ச, இவள் மிஞ்சிக் கொண்டு ஹாலில் வந்து அமர்ந்து இருக்கிறாள்.

பிரேமின் கேள்விக்கு இந்து அவனைப் பார்த்த படியே, "அண்ணா! உன் சித்தி எப்படி அந்த நவநீதத்துக் கிட்டே இருந்து தப்பிச்சாங்க? நான் எப்படி முரளி கிட்டே போனேன்? எல்லாம் எனக்குத் தெரிய வேண்டும். அது தெரியாமல் என்னால தூங்க முடியாது."

இவாஞ்சலின், நவநீதம் மற்றும் அவன் பிள்ளையால் இவளுக்கு நடந்த கொடுமையையும் அதற்குப் பிறகு அவர்கள் செய்யத் துணிந்த படு பாதகச் செயலையும் சொல்லி, பின் தான் அவளை முரளி மற்றும் பவானியிடம் ஒப்படைத்தையும் பின்னர் தான் தப்பியதையும் சொல்ல... இந்து கேள்வியாக முரளியைப் பார்க்க, தன்னுடைய தொண்டையைச் செருமிய படி,

"ஆமாம். உன்னை உங்க அம்மா எங்க கிட்டே ஒப்படைக்கும்போது, உனக்குப் பாதி உணர்வுதான் இருந்தது. உன்னை எனக்குத் தெரிந்த அளவு கூட எனக்குப் பதினொரு வருஷத்துக்கு முன்னாடி பவானிக்கா யாரு, பேரு, ஊரு எதுவுமே அப்போ தெரியாது. அதே போலத்தான் அந்த அக்காவுக்கும் நாம யாரு என்னன்னு எதுவுமே தெரியாது."

இதைக் கேட்டு அதிர்ந்த இவாஞ்சலின், "அய்யோ அப்படியா...? நான் அவங்க உன்னோட அக்கான்னு நினைச்சு தான் பேக் மற்றும் இந்துவுக்கு அவங்களைக்

காவல் சொன்னேன். அவங்களை உங்களுக்குத் தெரியவே தெரியாதா?"

"ஆன்ட்டி, அன்னிக்கு அவங்க எனக்கு அக்கா கிடையாது. ஆனா இன்னிக்கு அவங்க என்னோட அக்கா தான்... எங்கம்மாவும் அப்பாவும் அவங்களை தங்களோட மகளா தத்து எடுத்துக்கிட்டாங்க. இருங்க, எல்லாத்தையும் உங்களுக்குப் புரியும்படிச் சொல்றேன். அன்னிக்கு நீங்க இருந்த இடத்துக்கு நான் எப்படி வந்தேன் என்றால், எங்க குலதெய்வம் கோவில் நாகர்கோவிலில் இருக்கிற அழகிய பாண்டியபுரம் என்ற கிராமத்துல இருக்கிற பூ சாத்தான் கோவில். நான் யு.எஸ்.ஸுக்குப் படிக்கப் போறத்துக்கு முன்னாடி, அங்கே சாமி கும்பிடணும்னு சொல்லி எங்கம்மா எங்களை வற்புறுத்திக் கூட்டிக்கிட்டுப் போனாங்க.

"போயிட்டுத் திரும்புற வழியிலதான் எடக்கல்லுல இருக்கிற அன்னை சாரதா ஆசிரமத்துக்கு அம்மா போகணும்னு சொல்லி அங்கே இறங்க, அப்பா தன்னோட சக பத்திரிகைத் தோழர்களைப் பார்க்கிறதுக்காக சில மீட்டர்கள் முன்னால இருந்த அந்த மோட்டல் கிட்ட நின்னோம். அப்போ நீங்க வேகமாக இறங்கிப் போறதைப் பார்த்தேன்.

"அங்கிள் இறந்தது பற்றிக் கேட்கத்தான் வந்தேன். அப்போதான் நீங்க செய்த செயலைப் பார்த்துத் தடுத்தேன். உடனே நீங்க என் கிட்டே இந்துவை விட்டு விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாகப் போயிட்டீங்க..."

தர்ஷினியைத் தன் மேல் சாய்த்தபடி ஒல்லியான உருவ அமைப்பில் மாநிறத்துடன் காட்டன் சேலையில் முகத்தில் சாந்தம் தவழும் சிறிய புன்னகையுடன், பார்க்க அமைதியான தோற்றத்துடன் முன் இருபதுகளில் காணப்பட்ட பெண்ணைப் பார்த்து முரளி, "அக்கா! ஆன்ட்டி ஏன் இவளை நம்மகிட்டே கொடுத்துட்டு வேக மாக எங்கே போறாங்க? நீங்க தர்ஷினியோட ஹோட் டலில் வேலை பார்க்கிறீங்களா?"

"இந்த பாப்பா பேரு தர்ஷினியா? நான் இவங்க ஹோட்டலில் வேலை செய்யலைப்பா. இப்பதான் நான் இவங்களையே பார்க்கிறேன்... நான் என் சகோதரி களோட வந்தேன்ப்பா... இருங்க, நான் போய் அந்த ஆன்ட்டி என்ன ஏதுன்னு பார்த்துட்டு வர்றேன்!" சொல்லியபடியே தன்னிடம் இவாஞ்சலின் கொடுத்த பேக்கினையும் தர்ஷிணியையும ஒப்படைத்து விட்டு, முனை வரை சென்று பார்க்க,

ஒரு சுமோ வேகமாகக் கிளம்பிச் செல்ல, அந்த இடம் பரபரப்பு அடையவும் ஏதோ விபரீதம் என்று புரிந்தவர், கையசைவு மூலம் அந்தப்புறம் இருந்த யாரிடமோ ஏதோ சொல்லி விட்டுத் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தான் முரளி.

"தம்பி, நாம இங்கே ரொம்ப நேரம் நிற்க முடியாது. இவங்க அம்மா அந்தக் காரைக் கிளப்பிக்கிட்டுப் போயிட் டாங்க. அவங்களைத் துரத்திக்கிட்டு ஒரு ரவுடிக் கும்பல் போகுது. இந்தா அந்த அம்மாவோட துப்பட்டா...

இதை வெச்சு பாப்பாவைப் போர்த்து. நாங்க வந்த வேனைக் கொண்டு வரச் சொல்லி இருக்கேன். அதுல தப்பிக்கலாம்."

தர்ஷினியை, அந்தப் பெண் சொன்னது போலவே போர்த்தித் தன் தோள் மீது தூக்கி கொண்டு ஓட, சரியாக அந்தப் பெண் சொன்ன வேன் வந்து நின்று ஏறும் போது, இவர்கள் வேன் நின்ற இடத்திற்குச் சில மீட்டர்கள் முன்னால் அந்த ரவுடிக் கும்பல் சுமோவில் ஒரு ரவுடியை ஏற்ற நின்றது.

அந்த ரவுடி திரும்பிப் பார்த்து விட்டு இவர்களைக் காண்பித்து, உள்ளே இருந்தவர்களிடம் ஏதோ சொல்ல, அதைப் பார்த்த வேன் டிரைவர் வண்டியை வேகமாக ஒடித்து எதிர்த் திசையில் திரும்பி ஓட்ட ஆரம்பிக்க, அதே நேரம் வேன் சீட்டில் கிடந்த தொலை தூரக் கல்வி புக்கில் ஷாட் ஹாண்டில், 'சுபாவுக்கு ஆபத்து, பின் தொடரவும்' என்று எழுதி ஹரிஹரனைக் கடக்கும் போது ஜன்னலில் பாதி உடம்பு வெளியில் தெரியும்படி வந்து குறி பார்த்து எறிய, இவர்களின் வேனை அந்த சுமோவும் அதற்குப் பின்னால் ஹரிஹரன் மற்றும் பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்களும் தங்கள் வண்டிகளில் பின் தொடந்தனர்.

வேன் உள்ளே முரளி அங்கிருந்தவர்களைப் பார்த்து, "கொஞ்சம் தண்ணீர் இருக்குமா?" என்று தர்ஷினியைத் தன் மடிமேல் அமர்த்தி நெஞ்சின் மீது சாய்த்துக் கொண்டு, ஒரு கையால் அவளை இறுக்கி அணைத்தபடி கேட்டான்.

வேறு ஒரு பெண் தண்ணீர் பாட்டிலைக் கொடுக்க, அதில் இருந்த தண்ணீர் முழுவதையும் முரளி குடித்து முடிக்க, அவன் குடிக்கும் போது சிதறிய சிறு துளிகள் தர்ஷினியின் மீது பட்டு, அவள் லேசாக முகத்தைத் திருப்பி அவனது சர்ட் மீது முகத்தைத் தேய்த்து விட்டு, "வாட்டர் பிளீஸ், வாட்டர்!" என்று முனகத் தொடங்கினாள்.

எல்லாரும் பரபரப்பாகத் தண்ணீர் தேட ஆராய்ந்து பார்த்துப் பிறகு ஒருவர், "தம்பி! இந்தப் பாட்டிலில் ஒரு மூடி அளவுதான் தண்ணீர் இருக்கு. இப்போதைக்குக் கொடு!" என்றார்.

அதைக் கொடுக்கும் போதுதான் முரளி உணர்ந் தான், தர்ஷினியின் உடம்பு அவள் போட்டு இருந்த டிரஸ்ஸுக்கு மேலே கூடக் கொதிப்பதை. சிறிது நேரத்தில் வேன் குலுக்கலுடன் நிற்க, சுமோவில் இருந்து வந்த ஆட்கள் வேனைச் சூழ்ந்து கொண்டு கதவைத் திறந்து முன்னால் அமர்ந்து இருந்த இருவரை அடிக்க ஆரம்பித்தனர்.

பின்னாலே வேகமாக வந்த ஹரிஹரனும் அவர் களது ஆட்களும் அப்படி அப்படியே போட்டு விட்டு வந்து, "என்ன நடக்குது இங்கே?" என்று ஹரிஹரன் குரலை உயர்த்திக் கேட்டவுடன்...

அவர்களைப் பார்த்த, அந்தக் கும்பலில் வெள்ளையில் கட்சிக் கரையிட்ட வேட்டி மற்றும் வெள்ளைச் சட்டை அணிந்தவர் வந்து, "சார்... என் பேரு

நவநீதம். நான் மேடவாக்கம் வட்டச் செயலாளராக இருக்கேன். இந்த வேன்ல இருக்கிறவளுங்க எங்க வீட்டுப் பொண்ணைக் கடத்திக்கிட்டுப் போகப் பார்க்கிறாங்க. அதுதான் பிடிச்சு உதைக்கிறோம். ஆமாம்... அந்தப் பையன்...?" என முரளியைக் காட்டி விசாரிக்கும் போதே, அவன் தன் கண்களால் அந்த வேனில் உள்ளவர்கள் அப்பாவிகள் என்பதை கண் ஜாடையில் சொல்ல, அதைப் புரிந்து கொண்ட ஹரிஹரன் பேச்சை வளர்த்தார்.

"அந்த பையன் இவளுங்களோட ஆளுன்னு நினைக்கிறேன்."

"நான் யாரு தெரியுமா உங்களுக்கு?"

"உங்களைத் தெரியாமல் நான் அரசியல்ல இருக்க முடியுமா என்ன? நீங்க மவுண்ட் ரோடுல இருக்கிற பெரிய பத்திரிகை ஆபீஸ் ஓனர்."

"ம்ம்... இந்த வேனுக்குள்ளே இருக்கிற பையன் என்னோட மகன்தான். அது தெரியுமா உங்களுக்கு?"

"அது உங்க மகனா சார்... பாருங்களேன், எங்க வீட்டுப் பொண்ணைக் கடத்தினது பத்தாதுன்னு உங்க வீட்டுப் பையனையும் கடத்தப் பார்த்திருக்காங்க."

"ஹலோ... என்ன பேசறீங்க நீங்க? இவங்க ஏன் என் பையனைக் கடத்தணும்? இந்த வேன்ல இருக்கிறவங்க யாரு தெரியுமா? எங்க பத்திரிகை ஆபீஸ்ல வேலை செய்றவங்க," முரளியைப் பார்த்து, "முரளி...

இவங்க வீட்டுப் பாப்பா எப்படிப்பா நம்ம வேனுக் குள்ளே."

"அப்பா, இது அவங்க பாப்பா இல்லப்பா. இங்கே இருக்கிறது நம்ம சுபாப்பா, அதுதான் உங்க கசின், என்னோட இவா ஆன்ட்டி செபா அங்கிள் பொண் ணுப்பா."

அவசரமாக இடையிட்ட நவநீதம், "இல்லீங்க... தம்பி பொய் சொல்றாரு. அந்த சுபா பொண்ணு எங்க வீட்டுப் பொண்ணுங்க. அந்தப் பொண்ணோட அம்மா அப்பா பேரும் அதுதாங்க."

"அட, அது எங்க வீட்டு பொண்ணுங்க. நான் இப்ப தான் நாகர்கோவிலிருந்து திரும்பி வந்துக்கிட்டு இருக் கேன். பாப்பாவும் இவனும் ரொம்ப சுகிர்த்து (பிரெண்ட்). அதனால வண்டியிலே பின்னாடி ஏறிக்கிச்சு போல. இதை நான் பார்க்கவே இல்லை... உங்க வீட்டுப் பொண்ணு வேற ஏதாவது வண்டியில ஏறிப் போய் இருக்கும். நீங்க தான் தவறா வந்து தேடுறீங்க."

"இல்லீங்க... நான் இப்பத்தான் அந்தப் பொண்ணை கொடைக்கானல் ஸ்கூல் இருந்து டி.சி. வாங்கி கூட்டிக்கிட்டு வர்றோம், அந்த பொண்ணை ஆஸ்திரேலியா அனுப்பிப் படிக்க வைக்கப் போறோம். டேய், பேக் எடுத்துட்டு வாடா!" ஒருவனை ஏவியபடியே சுபா தங்கள் வீட்டுப் பெண் என்பதை நிரூபிக்க முயன்றார்.

"ஏங்க, உங்களுக்கு இந்தப் பொண்ணு எப்படிங்க சொந்தம்? அதைச் சொல்லுங்க முதல்ல... இந்தப்

பொண்ணோட அப்பா அம்மா யாரும் இல்லாம இந்த மாதிரி அடியாள் கும்பலோட கூட்டிக்கிட்டு போக வேண்டிய நிர்ப்பந்தம் என்ன...?"

"இந்த பொண்ணோட அம்மா எங்க கூடத்தான் வந்தாங்க. திடீர்னு அவசர வேலை வந்துச்சுன்னு அவங்க நாகர்கோவில் போயிட்டாங்க!" பிரசன்னா வேகமாக உளறத் தொடங்கினான்.

முரளி, "அப்பா! நீங்க நம்ம செபா மாமா செத்ததுக்கு துட்டி (துக்கம்) கேட்க போனப்ப, நம்ம இவா அத்தை தாத்தா வீட்லேதானே இருந்தாங்க. இவங்க என்ன புதுசா கதை சொல்றாங்க?" சுபாவின் தாய் தந்தை பெயரையும், அவர்களின் நிலையையும் சாதாரண மாகப் பேசுவது போல் சொல்லி வைக்க,

ஹரிஹரன் பக்கத்தில் நின்றவரை அழைத்து, "தம்பி, நீங்க என்ன செய்றீங்கன்னா... இங்கே ஏதாவது எஸ்.டி.டி. பூத் பார்த்து, நம்ம ஆபீஸுக்குப் போன் பண்ணி நம்ம பிரஸ் அசோசியேஷன்ல சொல்லி எல்லா பத்திரிகைக்காரங்களையும் சென்னை கமிஷனர் ஆபீஸுக்கு வரச் சொல்லுங்க. நாம அங்கே வெச்சு இந்தப் பாப்பா யார் வீட்டுப் பொண்ணுன்னு முடிவு பண்ணிக்கலாம்!" பிரச்சனையை முடிக்க ஆலோசனை சொல்வது போல் பேசி முடித்தார்.

நவநீதம் சென்று பார்க்கச் சொன்ன ஆள் திரும்பி வந்து, 'அந்த வண்டியில் எந்தப் பையும் இல்லை,

பொருட்கள்தான் இருக்கிறது' என்று சொல்ல, அதைக் கண்டும் காணாதது போல ஹரிஹரன் நிருபர்களிடம் பேசுவது போல் பேசிக் கொண்டு இருக்க.

நவநீதம் வந்து, "பையன் மட்டுமில்லை, நீங்களும் நல்லா பொய் சொல்றீங்க... இந்த வேன்ல இருக்கிறவங்க உங்க பத்திரிகையில் வேலை செய்யறாங்கன்னு. ஏங்க இந்த அரவாணிக் கும்பல் உங்ககிட்டே வேலை செய்றாங்களா? இவளுங்க என்ன வேலை செய் வாங்கன்னு எல்லோருக்கும் தெரியும். அதைத்தான் இவங்க உங்க பத்திரிகையிலும் செய்யறாங்களா? இன்னிக்கு நீங்க எங்ககிட்டே இருந்து அந்தப் பொண் ணைக் கொண்டு போகலாம். ஆனால், அந்தப் பொண்ணே என்னைத் தேடி வரும். அன்னிக்கு உன் னாலே தடுக்க முடியாது. அப்ப பேசிக்கிறேன் உன்னை!" என்று சொல்லி விட்டு நகர்ந்தார்.

"நவநீதம்... இங்க வாங்க... அரவாணிகள்னா உங்களுக்குக் கேவலமா? அவர்கள் அரவானின் மனைவிகள். என்னிக்கோ வாழ்ந்து செத்தவனுக்காக இன்னிக்கும் தாலி கட்டி அறுத்து அவனையே தன்னுடைய கணவன் என்று சொல்லும் ஒவ்வொரு அரவானின் மனைவிகளும் உத்தமிகள்தானே...!

"அந்த மாதிரி அரவானின் மனைவிகளாக மாறின பெண்களைத் தன்னோட இச்சையைக் தீர்த்துக்கொள்ள பாலியல் தொழிலாளியாக மாற்றிய ஆண்கள்தான் அசிங்கப் படணும், அவமானப்படணும். என்னங்க

இல்லை அவங்க கிட்டே? அறிவு இல்லையா? தங்களுக்கு என்ன வேணும் என்ற தெளிவில்லையா? அன்புதான் இல்லையா? வேலை கொடுத்தா அதை நல்லா முடிச்சுக் கொடுக்கும் திறமை இல்லையா? எல்லாமே அவங் களுக்கு இருக்குங்க.

"நான் ஆணா? பெண்ணா? திருநங்கையா? ஜாதி மதம் இதை எதையும் பார்க்க மாட்டேன். என்கிட்டே வேலைகேட்டு வர்றவங்ககிட்டே என்ன திறமை இருக் குன்னு மட்டும்தான் பார்ப்பேன். நான் பொய் சொல் றேன்னு நீங்க எதை வெச்சுச் சொல்றீங்க? வேணு மின்னா வாங்க, பிரஸ்ஸுக்கு முன்னாடி வெச்சு உண்மை யைக் கண்டு பிடிக்கலாம்?

"எதையும் யோசிக்காமல் என்னிக்கு இந்தப் பொண்ணு எங்களுக்கும் அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லன்னு சொல்லி உங்களைத் தேடி வர்றாளோ அன்னியோட நானும் என்னோட வம்சமும் பத்திரிகைத் துறையிலே இருந்து விலகுவோம்... இது வாள் முனையை விட பேனா முனை சிறந்ததுன்னு நினைக்கிற என்னோட பேனா முனை மேல் சத்தியம்" ஹரிஹரனும் சத்தியத்தின் மீது நம்பிக்கை கொண்டு எதிர் சவால் விட்டார்.

## 19

ஹரிஹரன் முரளியைப் பார்க்க, அவன் புரிந்துகொண்டு, "அக்கா! பேக் எடுத்துக்குங்க. நாம அப்பா வண்டிக்குப்

போயிடலாம்!" என்று சொல்லியபடியே வேனில் இருந்து ஹரிஹரனின் வண்டிக்கு மாற... அங்கிருந்தவர்களைப் பார்த்தபடி தன்னுடைய டிரைவரிடம், "எப்போ சென்னை போய்ச் சேருவோம்?" என்று கேட்டார்.

"ஐயா, நாம இப்போ விக்கிரவாண்டி கிட்டே நிக்கிறோம். ஒரு மூணு மணி நேரத்துல நம்ம வீட்டுக்குப் போயிடலாம்"

தங்களுடைய நிருபர்களைப் பார்த்து, "ஐந்து பேர் மட்டும் என் கூட வாங்க. ரெண்டு பேர் முன்னாடி ரெண்டு பேர் பின்னாடி வாங்க. வேன் முதலில் போகட்டும், அதுக்குப் பின்னாடி என்னோட வண்டி வரட்டும். வேன்ல ப்ரஸ் எழுதி ஒட்டுப்பா!" என்று கூறி விட்டு, ஒரு சில நிருபர்களுடன் மட்டும் தனியாகச் சென்று பேசினார்.

ஒரு நிருபர் அவரை நெருங்கி வந்து, "அம்மா, நம்ம ஜன்னத் வண்டியில் வந்துக்கிட்டு இருக்காங்க. நீங்க முன்னாடி போங்க. நான் இடையில் விஷயத்தைக் சொல்லி அனுப்புறேன்!" அவரும் சரி என்று தலையாட்டி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

காரினுள் முரளி, "அப்பா... சுபாவுக்கு நல்ல காய்ச்சல்ப்பா..."

"அப்படியா? இப்போ எதுவும் செய்ய முடியாது. அம்மா வெச்சு இருக்கிற மெடிசன் பேக்ல பாரு... க்ரோசின் இருக்கும் கொடு. அப்படியே இந்தா, இந்தக் கர்ச்சீப்பை கூலர்ல இருந்து தண்ணி எடுத்து அதில் நனைத்து

நனைத்து நெற்றியில் போடு. சென்னை போனா என்ன செய்யலாம் என்று பார்க்கலாம்."

கார் வடபழனியை நெருங்க, "ரவி, நீ கோடம்பாக்கம் பிரிட்ஜ் கிட்டே இருக்கிற நம்ம டாக்டரோட சன் இன் லா ஹாஸ்பிடலுக்கு வண்டியை விடு."

கோடம்பாக்கம் ஹாஸ்பிட்டலில் சேர்த்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, இவர்கள் அனைவரும் இருக்கும் இடம் நோக்கி ஒரு மத்திம வயதைத் தாண்டிய பெண்மணி அவசரமாக அங்கே வந்தார். அப்பொழுது தர்ஷினியை பரிசோதனை செய்து மருத்துவ சிகிச்சை செய்த டாக்டர் வெளியில் வந்து, அவள் பாலியல் வற்புறுத்துலுக்கு ஆளாகியுள்ளதால் இந்த ஜுரம் வந்துள்ளது என்பதை விவரித்துக் கொண்டு இருக்கும் பொழுது வேகமாக வெளியில் வந்த நர்ஸ், "டாக்டர்... இவங்க கொண்டு வந்த பொண்ணுக்கு பிட்ஸ்!" இவர்களிடம் பேச்சை பாதியிலே விட்டு விட்டு ஓடினார்.

"என் பேரு ஜெயலஷ்மி... இதோ இருக்கானே முரளி, அவன் என் பையன், இவரு என்னோட புருஷன் ஹரிஹரன். உங்களைப் பற்றிச் சொன்னால்தான் நாங்க உங்களுக்கு உதவ முடியும்!" வேனில் வந்தவர்களிடம் சொன்னார்.

அதில் இருந்த ஒரு பெண், "அம்மா... நாங்க எல்லாம் திருநங்கைகள். மத்தவங்க போல ஆரம்ப காலத்தில் இருந்தோம். ஆனால், இப்போ ஒரு ஐந்தாறு

வருசமாக அதை எல்லாம் விட்டுவிட்டு எய்ட்ஸ் விழிப் புணர்வு பிரச்சாரம், கிராமப்புறங்களில் ரத்த தான முகாம்கள் பற்றிய பிரசாரங்களுக்குச் செல்வது, நாங்க எல்லாம் அடிப்படைக் கல்வி படிச்சு இருக்கிறதால பார்வையற்ற மாணவர்களுக்குப் பரீட்சை எழுதுவது, அவர்களுக்குப் புத்தகம் வாசித்துக் காண்பிப்பது என்று செய்து வருகிறோம். நிரந்தர வேலை இல்லை, நிரந்தர வருமானமும் கிடையாது. கிடைக்கிற வேலையை அதாவது சட்டத்திற்கு உட்பட்டு எங்களோட தேவைகளுக்கு தேவைப்படும் வேலை செய்து பணத்தைச் சம்பாதிக்கிறோம். ஏன், தெரு கூட்டற வேலை வரைக்கும் செய்து இருக்கோம்.

"நாங்க நேத்து வரைக்கும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துப் பார்வையற்ற மாணவர்களுக்குப் போய் எக்ஸாம் எழுதிக் கொடுத்து இன்னிக்குக் காலையில மதுரையில் இருந்து புறப்பட்டு வந்தோம். உங்க வண்டி நின்ன இடத்துலதான் நாங்களும் எங்க வண்டியை நிறுத்தி காலை உணவு சாப்பிட்டோம். அப்போ பவானி (தர்ஷினி மற்றும் முரளியுடன் இருந்த பெண்) இயற்கை அழைப்புக்காக அங்கே இருந்த புதர்கள் பக்கம் போனா. இவ போன கொஞ்ச நேரத்துல ஒரு சுமோ வேகமாகக் கிளம்பிப் போக, நாங்க நின்ற இடம் கலவரமாக ஆச்சு. என்னன்னு எட்டிப் பார்த்தால், இவ கையசைத்து எங்களைக் கூப்பிட்டா. ஏதோ விபரீதம்னு புரிஞ்சு வண்டியைக் கொண்டுபோய் இவங்களை ஏத்திக்கிட்டோம்.

மீதி நடந்தது எல்லாம் ஐயா சொல்லி இருப்பாங்க. இது தானம்மா நடந்துச்சு."

ஜெயலஷ்மி ஒன்றும் பேசாமல் பவானியைப் பார்க்க, "நான் அங்கே புதர்ப் பக்கம் போயிட்டுத் திரும்பி வரும் பொழுது பார்த்தேன். அந்த அம்மா பொண்ணோட கழுத்துல தன்னோட துப்பட்டாவை எடுத்துப் போட்டதை. ஏதோ நடக்கப் போகுதுன்னு என்னோட உள் மனசு சொல்லிச்சு. அதனாலே வேகமாக அவங்களை நோக்கிப் போனேன்!" என்று தொடங்கி, அங்கே நடந்ததையும் பின்பு தங்களிடம் இவாஞ்சலின் சொன்னதையும் சொன்னார்.

ஹரிஹரன், பவானியுடன் கூட வந்தவர்களைப் பார்த்து, "ரொம்ப நல்ல விஷயங்களைப் பண்றீங்க. அதுக்கு ஏதோ என்னால் ஆன உதவியாக என்னோட ஆபீஸ் சிலவற்றில் உங்கள் எல்லோருக்கும் நிரந்தர வேலை போட்டுத் தர்றேன். ஆனால், இன்னிக்கு நடந்த விஷயம் ஏதோ பெரிசா இருக்கும்னு தோணுது. அதற்குத் தகுந்தாற் போல் அந்தப் பொண்ணுக்கு நேற்று இரவு நடக்கக் கூடாத கொடுமை நடந்து இருக்கு. உங்களை எல்லாம் ஒரே இடத்தில வைக்க முடியாது. அதனால்தான் பிரிச்சுப் போடறேன். தப்பா நினைக்காதீங்க."

பவானி, இவாஞ்சலின் கொடுத்த பேக்கை ஜெயலஷ்மியிடம் கொடுத்து விட்டு, "ஐயா, நான் இந்த பாப்பாவோடேயே இருக்கேன். அது எங்கே இருந்தாலும் சரி... நான் வேறே எங்கேயும் போக மாட்டேன். நான் அவளுக்குக் காவல். இனிமேல் அவளை ஒருத்தன்

தொடணும் என்றால் என்னைக் கொன்னுட்டுதான் அவளைத் தொட முடியும்...

"அறியாத வயசிலே அவளுக்கு எவ்வளவு பெரிய கஷ்டம். நடந்ததோட வலி என்ன என்று எனக்கும் தெரியும். ஏன்னா நானும் அதைக் கடந்து வந்தவள்தான். எங்களுக்கு வேற வழி இல்லாமல் பாலியல் வன்முறை எங்கள் மேல் திணிக்கப்பட்டது. அதை நாங்களும் அந்தச் சமயத்தில் ஏற்றுக் கொண்டோம். ஆனால், இப்போ நாங்க அதிலே இருந்து வெளியில் வந்துட்டோம். இனிமேல் நான் அந்தப் பெண்ணின் நிழல்!" பவானி சொல்லி முடித்தாள்.

பவானி கொடுத்த பேக்கினை வாங்கி ஆராய்ந்த ஜெயலஷ்மி, "ஹரிப்பா... இதுல அந்தப் பொண்ணோட பாஸ்போர்ட், வில் (உயில்) கூட இருக்குப்பா. அதோடு இந்த விசிட்டிங் கார்ட் இருக்கு பாருங்க!"

ஹரிஹரன் அதை வாங்கிப் பார்த்துக் கொண்டு இருக்கும்போது ஒரு நர்ஸ் வந்து, "அந்தப் பொண்ணுக்கு நினைவு வந்துடுச்சு. தூக்கத்துக்கு ஊசி போட்டும் தூங்க மாட்டேன்னு அடம் பிடிக்குது. நான் போகணும்னு சொல்லிக் கத்தி அழுது கலாட்டா செய்கிறது. வந்து பாருங்க," வைத்திக்குப் போன் செய்ய ஹரிஹரன் வேறு பக்கம் செல்ல...

ஜெயலஷ்மி, பவானி, முரளி மட்டும் உள்ளே சென்றனர். அங்கு ஜெயலஷ்மி, பவானியையும் பார்த்து அதிக ஆர்ப்பாட்டம் செய்ய, முரளி அவள் அருகில்

சென்று தலையில் கை வைத்து வருடியவாறே, “தர்ஷினி... இங்க பாரு... நான் யாருன்னு தெரியுதா? ஸ்கூல்ல இருந்து வரும் பொழுது ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்து போச்சு. அதனால உனக்கு ஜூரம் வந்துடுச்சு. அதுக்காகத் தான் உன்னை ஹாஸ்பிடல்ல சேர்த்து இருக்கோம். இதோ இருக்காங்க பாரு, இந்த அக்கா கிட்டேயும் என் கிட்டேயும் உன்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி உங்கம்மா விட்டுட்டுப் போய் இருக்காங்க. அவங்க எப்போ வர்றாங்களோ அது வரைக்கும் நீ எங்க கூட இரு. அதோ நிக்கிறாங்களே அவங்க என் அம்மா. நான் இல்லாதப்போ அவங்க கூட இரு. சரியா?”

முரளி சொல்வதைக் கேட்டுக் கொண்டே இருந்த தர்ஷினி, “ப்ளீஸ்... நீயும் என்னை விட்டு எங்கேயும் போகாதே. என்கிட்டவே இரு. எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. கண்ணை மூடினா ஒரே இருட்டா இருக்கு. அப்போ யாரோ என் மேல் விழுந்து அமுக்கிற மாதிரி இருக்கு. கால் எல்லாம் வலிக்குது, யூரின்...”

அவள் பேச வருவதைப் புரிந்த முரளி, “அந்த வலி எல்லாம் போகறதுக்குத்தான் உனக்கு தூக்கத்துக்கு மருந்து கொடுத்து இருக்காங்க. நீ இப்போ தூங்கு. நான், எங்கம்மா, அக்கா இங்கேயே உன் பக்கத்துலே இருக்கோம். எங்களை மீறி யாரும் உன்கிட்டே வர மாட்டாங்க. இப்போ சமர்த்தாத் தூங்கு பார்க்கலாம்!” சமாதானம் சொல்லி அவளின் தலையை வருடிக் கொடுக்க, ஆழ்ந்த உறக்கத்துக்குச் சென்றாள்.

"பப்பு, நீ சொன்னது சரிதான். இந்தப் பொண்ணு தான் சுபா இன்ஸ் ஓனர்... அவனுங்க அந்தச் சொத்தை அடிக்க இவளைக் கடத்த முயற்சி பண்ணியிருக்காங்க. அது தெரிந்த இவளோட அம்மா, நம்ம பிள்ளை கிட்டே கொடுத்துட்டு எஸ்கேப் ஆகிட்டாங்க... இவளுக்குப் பின்னாடி பெரிய சதி வலையே இருக்கு. இவ அவனுங்க கையில மாட்டினா... பாவம், இந்தப் பொண்ணோட வாழ்க்கை நிச்சயமாகப் பாழாகிவிடும்."

தன்னிடம் வைத்தி பகிர்ந்த தகவல்களான நவநீதத்தின் தில்லு முல்லு வேலைகளும், அதில் ஏதோ ஒரு காரணத்தினால் செபாஸ்டியன் இறப்பும், பின்பு ஹோட்டல் லீஸ் என்ற பெயரில் நவநீதத்திற்குச் சென்றதையும் சொல்லி, பிறகு, "இந்த கார்ட்ல இருந்த வைத்திய நாதன் இவங்க குடும்ப வக்கீல் மட்டுமில்லை... அவர் இவளுக்குப் பெரியப்பாவாம். லீகல் கார்டியன் வேறு. அவர் வரேன்னு சொல்லி இருக்கார், இவளை அவர் கிட்டே ஒப்படைத்து விடலாமா?" என்று கேட்டார்.

முரளியும் பவானியும் ஒரு சேர மறுத்தனர். "எங்களை நம்பி ஒப்படைத்ததை நாங்கள் எங்ககிட்டே கொடுத்த ஆள் கிட்டே தான் திருப்பிச் சேர்ப்போம். அது வரைக்கும் எங்கள் இருவரில் ஒருவர் அவளுக்குப் பாதுகாப்பாக இருப்போம். வேற யாரையும் நம்பிக் கொடுக்க முடியாது!" என்று முரளி காரணத்தை விவரித்துச் சொல்ல...

அதைப் பவானியும் ஆமோதித்தார்.

"டேய்! பைத்தியக்காரத்தனமாகப் பேசாதேடா. அவனுங்க உன்னைக் கடத்தி உன் மூலமா அவளைத் தங்கள் கிட்டே வர வைக்கப் பார்க்கிறாங்கன்னு இதோ மன்சூர் மூலமா தெரிய வந்து இருக்கு. அது மட்டுமில்லை, உள்துறை அமைச்சர் பையன் இவனுங்களுக்குப் பயங்கர சப்போர்ட் வேற..." படபடக்கும் ஹரிஹரனைத் தன் கைகளை உயர்த்திப் பேசாமல் இருக்குமாறு ஜெயலக்ஷ்மி கையசைத்து விட்டு, முரளியை ஆழ்ந்து பார்த்து,

"இப்போ அவ இருக்கிற நிலையிலே விட்டா கூடிய சீக்கிரம் தனக்கு என்ன நடந்தது என்று யோசிக்க ஆரம்பித்து, எல்லாத்துக்கும் பயந்து பைத்தியக்கார நிலைக்குப் போக வாய்ப்பு இருக்கு. நான் குமுதினி நாத்தனார் சாந்தினியிடம் இவளைக் கவுன்சிலிங் கூட்டிக் கிட்டு போகணும். ஏன்னா, இது சாதாரண மனவியல் பிரச்சனை மட்டுமில்லை, பாலியல் வன்முறையால் ஏற்பட்ட உடல் மற்றும் மனக்காயத்திற்கும் சேர்ந்த பிரச் சனை. அதனால அவங்ககிட்டேதான் போகப் போறேன்.

"அதுக்கு முன்னாடி ஒரு விஷயம் இருக்கு. அவ ளுக்கு எப்படி டிரீட்மென்ட் கொடுக்கிறது... அவளுக்கு நடந்த உண்மையைப் புரிய வைச்சு அதுக்கு டிரீட்மென்ட் கொடுத்தா விளைவுகள் பய்ங்கரமாக இருக்கும். இப்போ அப்படிச் செய்யாமல், ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு தெரிந்தால், அவ ஒண்ணு தற்கொலை பண்ணிக்கலாம்... இல்லை, தன்னோட கூட்டுக்குள்ளே அடங்கலாம்...

இல்லை, வாழ்க்கையிலே யாரையும் நம்பாமல் பயந்து அன்செக்யூர் ஃபீலிங்ஸ்ல தன்னோட வாழ்க்கையை அழிச்சுக்கலாம்.

"இந்த உண்மை தெரிந்தால் இவளுக்கு ஒரு கல்யாண வாழ்க்கை இருக்குமாங்கிறது மிகப்பெரிய சந்தேகம்தான். ஆனால், இதை எல்லாம் மறைச்சு இந்த இன்சிடெண்ட்டை சுத்தமா மறக்கடிச்சுடலாம். இவளைப் பற்றி நல்லாத் தெரிந்த ஒருவன் இவளைக் கல்யாணம் பண்ணிக்கணும். இல்லை, நாளைக்கு வர்ற இவளோட வாழ்க்கைத் துணைகிட்டே இந்த உண்மையைச் சொல்லித்தான் கல்யாணம் பண்ணணும். அப்போதான் இவளோட வாழ்க்கை நல்லா இருக்கும்.

"அது மட்டுமில்லை. இப்போ இவளை அவளோட பெரியப்பா லீகல் கார்டியன் வந்து கேட்டால், அவங்க கிட்டே நாம் இவளை அனுப்ப முடியாது என்று சொல்ல அழுத்தமான காரணம் வேண்டும். என்ன செய்யறது சொல்லு."

"அம்மா, உனக்குச் சம்மதம் என்றால் தர்ஷினி குறிப்பிட்ட வயசு வந்ததும் நம்ம வீட்டு மருமகளாக எடுத்துக்கப் போறதாகச் சொல்லிடுங்க. அதுவரை அவள் உங்களிடம் வளருவாள் என்பதையும் தெரியப்படுத்துங்க."

மகனை உற்றுப் பார்தத ஹரிஹரன், "என்னடா காதலா? அதுவும் இந்த வயசுலேயே? இப்போ உனக்கு வந்து இருக்குறதுக்கு பேரு பரிதாப உணர்ச்சிதான். வேறு

எந்த மண்ணாங்கட்டியுமில்லை. நீயே உன்னைப் பத்தி சரியாத் தெரியாமல் பேசாதே. ஒரு தடவை வாக்கு கொடுத்தால் கொடுத்தது தான்.

"வார்த்தையை விடறதுக்கு முன்னாடியே யோசிச்சு, அது சரிதானான்னு புரிஞ்சதுக்குப் பின்னாடிதான் அதை வெளியே விடணும். நீ சொல்லறது சாதாரண விஷய மில்லை, ரொம்பப் பெரிசு. அதெல்லாம் அவசரத்துல எடுக்க முடியாது."

"அப்பா, அவளை எனக்கு ரெண்டு வருஷமாகத் தெரியும். அவளோட குறும்புகள், அழகு, அதே சமயம் பேச்சு செம க்யூட்பா. ஒரு தடவை மட்டுமே கேட்ட பாட்டை, அதிலே எப்படிப் பாடியிருக்காங்களோ அப்படியே திருப்பிப் பாடுவாப்பா. எனக்கு அவளை இப்போ இல்லை, இரண்டு வருஷமாகவே ரொம்பப் பிடிக்கும்." கண்களில் ஆர்வம் மின்ன தர்ஷினியைப் பற்றியும், தனக்கு அவளை எவ்வளவு பிடிக்கும் என்பதையும் விவரித்தான்.

"டேய் அறிவு கெட்ட மடையா! உனக்கு வந்திருப்பது இன்பாக்சுவேஷன்தானே தவிர வேறு ஒண்ணுமில்லைடா. அது சரி, நீ உன்னோட நிலையை மட்டுமே வெச்சுப் பேசுறியே... அவளுக்கு ஒரு மனசு இருக்குடா. அது எப்படி என்னங்கிறது நமக்கு என்ன தெரியும்? நீ அவளை லவ் பண்ணலாம், உங்கம்மாவும் நானும் அதுக்குச் சம்மதிக் கலாம்... ஆனால், அவள் நாளைக்கு அதுக்குச் சம்மதிக் கணுமில்ல... அவளுக்கு உன் மேலே ஈர்ப்பு வரணு மில்லை. வந்தால்தான் நல்ல வாழ்க்கை... இல்லை, அது நொந்த வாழ்க்கையாக மாறிப் போயிடும்."

"அம்மா, நீங்கள் என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ தெரியாது. நீங்க அவளைப் படிக்க யு. எஸ். கூட்டிக்கிட்டு வரணும். அவ உங்க பாதுகாப்புல தான் இருக்கணும். ஒரு குறிப்பிட்ட வயசுக்குப் பிறகு அவ என்னைப் பிடிக்கலைன்னு சொல்லட்டும்... அப்புறம் பார்க்கலாம்."

மகனின் வார்த்தை கேட்டுச் சந்தோஷம் கொண்ட ஜெயலஷ்மி, ஹரிஹரனைப் பார்த்து, "முரளிப்பா, கிரிமினல் அவனே இவ்வளவு பிளான் போடும் போது, இந்த மாதிரி கிரிமினலோட கிரிமினல் பக்கங்களை எல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வர்ற பத்திரிகைத் துறையைச் சேர்ந்த நமக்கு எவ்வளவு பிளான் பண்ணத் தெரியும்? என்ன, நாம கண்டுக்காம அவனுங்க கூட விளையாடணும். பார்க்கலாம், நாமளா இல்லை அவனுங்களான்னு...!

"முதல்லே சில வேலைகள் செய்யணும். நாம இவளை யாருக்கும் தெரியாமல் இங்கே இருந்து சாந்தினியோட வீட்டுக்குக் கொண்டு போகணும். அது தவிர, இவளுக்கு வேற பேர் மாத்தணும். இவ உடம்பு குணமான உடனே வெளிநாட்டுல படிக்கப் போறா. ஆஸ்திரேலியா இல்லை அமெரிக்காவிலே என்னோட கண்காணிப்பின் கீழ், பவானி முரளியோட பாதுகாப்புக் குள்ளே. அதற்கான முதல் கட்டமாக, இனிமேல் நாங்க மூணு பேரும் ஒண்ணா இருக்கக் கூடாது. இவளை என் கிட்டே விட்டு விட்டு, இவங்க இரண்டு பேரும் அமெரிக்

காவுக்குப் போகட்டும். பின்னாடி இவனுங்க கண்ல மண்ணைத் தூவிட்டு நான் அவளோட அமெரிக்கா பறக்கிறேன்."

ஜெயலஷ்மி பேசுவதை ஆர்வமாகக் கேட்டுக் கொண்டு இருந்த ஹரிஹரன், "பப்பும்மா, எதிரியை என்னிக்குமே லேசா எடை போடக் கூடாது. அவன் கிரிமினல் மட்டுமில்லை, அரசியல் செல்வாக்கு வேறு நல்லாவே இருக்கு. அதனால் நாம ரொம்ப ஜாக்கிரதை யாக இருக்கணும். இவ்வளவு சொன்னே சரி, இந்தப் பவானியை எப்படி அமெரிக்காவுக்கு அனுப்ப முடி யும்? அதுக்கு ஏதாவது பிளான் இருக்கா... அதையும் சொல்லு."

"ஏன் அத்தான், ஜர்னலிசத்தைப் பால பாடமாக வும், பிளான் போடறது, ஸ்கெட்ச் போட்டுப் பிடிக்கிறது, எல்லாத்தையும் துருவித் துருவி விசாரித்து, உண்மையை வெளிக் கொணர்ந்து மக்கள் கிட்டே கொண்டு போய்ச் சேர்க்கிறது... இதை எல்லாம் சப்ளிமெண்ட்டரி பாடமாகவும் சொல்லிக் கொடுத்த உங்களுக்கு, நான் பவானியை அமெரிக்கா அனுப்ப பிளான் நான் போடணுமா என்ன?"

ஜெயலஷ்மி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த முரளி, "ஓஹோ, நான் உங்களுக்கு இருபது வருஷம் கழிச்சுப் பொறக்கக் காரணம் இது தானாம்மா? எல்லா பாடத்தையும் கத்துக் கொடுத்துக் கடைசியாக உங்களுக்கு ரொமான்ஸ் பாடத்தை அப்பா சொல்லிக் கொடுத்ததாலத் தான் நான் வர்றது லேட்டா ஆகி இருக்கு."

கிண்டலடிக்க, அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

"போக்கிரிப் பயலே!" செல்லமாகக் கடிந்தபடி சிரித்துக் கொண்டே மகனின் தலையைக் கலைத்துத் தன்னோடு சேர்த்துக் கட்டிப் பிடித்தார் ஹரிஹரன்.

நவநீதம், 'தன்னை விட்டு அம்மாவும் பெண்ணும் தப்பித்து விட்டார்கள். தன்னிடம் உள்ள துருப்புச் சீட்டை, இந்தப் பத்திரிகையாளன் இடையில் இருப்பதால் பயன் படுத்த முடியாது. பத்திரிகைக்காரனை அப்புறப்படுத்த ஒரே வழி, அவன் பிள்ளையைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதுதான்.' அதற்காக முரளியைக் கடத் தவும், அது மட்டுமில்லாமல் முரளிக்கு உதவிய அந்தத் திருநங்கையை ஒரு வழி செய்யவும் முடிவு செய்து பிளான் போட்டான்.

அடர் இரவின் மத்தியில், தர்ஷினி சேர்க்கப்பட்டு இருந்த ஹாஸ்பிடலின் பின்பக்க வழியாக மனோதத்துவ மற்றும் பாலியல் துறையில் டாக்டராக இருக்கும் சாந்தினி யின் இருப்பிடத்திற்கு ஜெயலஷ்மி வந்து சேர்ந்தார்.

இரவு கரைந்து விடியலுக்கான நேரத்தின் அருகாமையில், நவநீதம் போட்ட பிளான் அறிந்த ஹரிஹரன், எவ்வாறு தன் மகனையும் தங்களிடம் ஒப்படைத்த சிறு பெண்ணின் வாழ்க்கையையும், அவளுக்காகத் தன் உயிரைப் பணயம் வைக்க முன் வந்த சிவமாகப் பிறந்து, சக்தியாக மாறி அவளின் ஒரு நாமம் கொண்ட பவானியைக் காப்பாற்றி நாட்டை விட்டு

வெளியே அனுப்புவது என்று பிளான் போட்டு, அதை எவ்வாறு முடிப்பது எனத் தீர்மானம் செய்தார்.

## 20

திங்கள்கிழமை காலை பத்து மணிக்கு கதிட்ரல் சாலையில் இருந்து வேகமாக வந்த யமஹா பைக், அமெரிக்க கான்சால்ட் முன்பக்கப் பெரிய கதவின் அருகில் வந்து, தன் பாக்கெட்டில் இருந்து பாஸ்போட்டை எடுத்துக் காட்ட, படீர் என்று பெரிய கதவுகள் திறக்க, வேகமாக பைக் உள்ளே சென்று மறைந்தது.

அவர்களைத் துரத்திக் கொண்டு வந்த சுமோவும் பின்னால் வந்த ஒரு போலீஸ் ஜீப்பும் சிறிது முன்னாடியே தேங்கி நின்றன.

பெரிய கதவின் வழியே உள்ளே நுழைந்த அந்தப் பைக்கை ஓட்டி வந்தவன் முகத்திலும் கை கால்களிலும் காயங்கள் காணப்பட்டன. அந்த இளைஞனுக்குப் பின்னால் அமர்ந்த யுவதியின் தோள் பட்டை மற்றும் இடது கையில் அரிவாள் வெட்டும் காணப்பட்டது. மூக்கிலிருந்து லேசாக இரத்தம் வந்து கொண்டு இருந்தது, வலது கை இயல்பான நிலையை விடப் பருத்து வீங்கிக் காணப்பட்டது.

இறங்கிய அந்த இளைஞன், உள்ளிருந்து வந்த ஆபீசரிடம், "நான் முரளி கிருஷ்ணன். அமெரிக்க சிட்டிசன். இதோ என்னோட பாஸ்போர்ட். இங்கேதான்

படிச்சு முடிச்சேன். எங்க அப்பா இந்த நாட்டில் பத்திரிகை வைத்து நடத்துகிறார், அவரின் புதிய எதிரியான இந்த மாநிலத்தின் உள்துறை அமைச்சரின் மகன் மற்றும் அவரின் தீவிர விசுவாசி ஒருவரும் என்னைக் கடத்திச் செல்ல முயன்ற பொழுது, என்னைக் காப்பாற்றினார் இந்தச் சகோதரி.

"இதற்கு இந்த மாநிலத்தின் போலீஸும் உடந்தை. நீங்களே இப்பொழுது வெளியில் இருக்கும் கேமராவை இயக்கினால் தெரியும்... எங்களைத் துரத்தி வந்த சுமோ வண்டியும், அதற்குப் பாதுகாப்பாக வந்த போலீஸ் ஜீப்பும் அங்கே இருப்பதைப் பார்க்கலாம்," என்று நிலைமையை விவரிக்க, அந்த அதிகாரி செக்யூரிட்டி கேபின் சென்று பார்த்துவிட்டு, இவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

பவானிக்கும் முரளிக்கும் மருத்துவ உதவி அளிக்கப்பட்டு, இருவரும் வெளியில் சென்றால் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத காரணத்தினால், பவானி ஒரு அமெரிக்கக் குடிமகனைக் காப்பாற்றியதால், தன்னுடைய நாட்டில் அவர் வாழுவதற்கான சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால், அடைக்கலமாக வந்த அகதி என்ற அடிப்படையில் தூதரகம் அவருக்குத் தற்காலிக அமெரிக்க குடியுரிமை வழங்கிப் பலத்த பாதுகாப்போடு அமெரிக்கா விற்கு இருவரையும் அனுப்பி வைத்தனர்.

அங்கு சென்ற பவானி, முதல் மூன்று மாதங்கள் போலீஸ் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டு, அவரின்

நன்னடத்தை சோதிக்கப்பட்ட பின்பே சாதாரண சிட்டிசனாக வாழ அனுமதிக்கப்பட்டார்.

இந்தியாவில் அந்த மூன்று மாத காலத்தில் வைத்தியநாதனின் ஒப்புதலுடன் சுபாபிரியதர்ஷினி இந்திரா பிரியதர்ஷினியாக மாற்றப்பட்டு, மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு, நடை உடை பாவனைகளில் திருத்தம் செய்ய... பவானியின் திருநங்கை சகோதரிகளின் மூவர் மூலமாக அவள் சென்னையில் இருந்து மும்பையில் இருக்கும் ஜெயலஷ்மியிடம் ஒப்படைக்கப்பட, அங்கிருந்து அமெரிக்காவிற்குச் சென்று சேர்ந்தார்கள்.

ஒரு குயில் குஞ்சு, கிளிகள் வாழும் கூட்டிற்கு அடைக்கலம் புகுந்ததை ஏற்ற இறக்கத்துடன் சொல்லிக் கொண்டு வந்த முரளி, இந்துவைப் பார்த்து, "நீ அடிக்கடி கேட்பியே... ஏன் அத்தையை இந்தியாவுக்குக் கொண்டு போகலைன்னு? அதற்கு இதுதான் காரணம்." தன் தாயின் உடல் என்று சொல்ல முடியாமல் வெத்தாகச் சொல்லி முடித்தான்.

இந்துவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் நிகழ்ந்து நீண்ட ஒன்பது வருடங்களுக்குப் பிறகு நிகழ்ந்த அத்தையின் பூத உடலை இந்தியாவிற்குக் கொண்டு வருவதற்கும் என்ன சம்பந்தம் என்ற குழப்பப் பார்வையை முரளி மேல் வீசினாள்.

"புரியலையா? அம்மாவுக்கு நான்தான் கடைசி காரியங்கள் பண்ண வேண்டும்... நீயும் கண்டிப்பாக

இங்கே வந்தாக வேண்டும். நீ இல்லாமல் அவர்களின் கடைசி நிகழ்வுகள் இருந்தால், அம்மாவுக்கு மனசாந்தி ஏற்படாது என்று அப்பா நினைத்தார். இங்கு அம்மாவைக் கொண்டு வந்தால், அப்பாவின் பின்னால் நவநீதம் ஆள் வைத்து இருக்கிறான்... அப்பொழுது என்னையும் உன்னையும் கண்டு கொள்வான் என்பதினால்தான் இங்கு கொண்டு வரவில்லை. அதனால்தான் அப்பாவும் இறுதி நிகழ்ச்சிக்கு அமெரிக்கா வரவில்லை." கனத்த குரலில் முரளி சொல்லி முடித்தான்.

ஹரிஹரன், இந்துவைப் பார்த்து, "இப்ப கூட என் பின்னாடியே ஆள் சுத்திக்கிட்டுதான் இருக்கு. நான் எப்படி இன்று இங்கே வந்து இருக்கேன் தெரியுமா...? எனக்குப் பதிலாகத் துணை ஆசிரியர் ஜகன்னாதனின் தம்பி பத்மனாபன் என்னை மாதிரி உடல் அமைப்பு உடையவர். இருவரும் நம்ம இந்திரா நகர் வீட்டில் இருந்து கிளம்பி கார்ல ஹைதராபாத் போறாங்க. அவங்களை அப்படி அனுப்பிச்சுட்டு நான் நம்ம ஆபீஸ் பின் பக்க வழியாக டாக்சி எடுத்துக்கிட்டு வந்து, இடையிலே உங்க மாமா அனுப்பிச்ச கார் மூலமா இங்கே வந்து இருக்கேன். இது தான் நிலைமை. அமெரிக்காவில் நடக்கப் போகும் கல்யாணத்துக்குக் கூட நானும் வைத்தியும் வர மாட் டோம்," என விவரிக்க...

தனக்காக எந்த விதமான இரத்த பந்தமுமில்லாமல், எந்த ஒரு இலாப நோக்கமுமில்லாமல், மனித நேயம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட

அம்மூவரையும், இறந்த பிறகும் இன்றும் தன்னுடைய நினைவுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கும் அவளின் அத்தையம்மாவும் தனக்காகச் செய்த செயல்கள் ஒவ்வொன்றும் இந்துவின் கண் முன்னே படமாக விரிய, தன்னுடைய நிலை மறந்து அவர்களின் தியாகங்கள் மட்டுமே அவளை நிலை குலையச் செய்தது.

## 21

பணம் என்ற ஒரு மதிப்புள்ள காகிதத்துக்காகத் தங்கள் வாழ்க்கையில் விளையாடிய நவநீதத்தின் மீது கணக்கற்ற கோபம் எழ, அந்த நினைவுகளின் தாக்கத்தால் இந்துவின் முகம் தணலாக மாற, பிறிதொரு சோபாவில் அமர்ந்து இருந்த ஸ்டீபனை நோக்கி, "சின்ன மாமா லாஞ்ச், போட் எல்லாம் உங்க மேற்பார்வையில் தானே இருக்கு?"

"ஆமாம் பாப்பா... ஏன் கேட்கிறே?"

"நாம புதுசா வாங்கியிருக்கிற அந்த ஐலான்ட் எங்கே இருக்கு பெரிய மாமா?"

"அதுவா பாப்பா... கேரளாவிலே ஆலப்புழா கிட்டே காயல் சூழ்ந்த இடம்தான். உன் அத்தம்மா சொன்னாங்கன்னு வாங்கியது. ஹோட்டல் பில்டிங் எல்லாம் இருக்கு. எந்தப் பேர்ல பதியறதுன்னு குழப்பத்துல பழைய பேர்ல தான் ரன் ஆயிட்டு இருக்கு. அதுவும் நம்ம பழைய ஆளுங்களைக் கொஞ்ச பேரும், அதிலே வேலை பார்த்தவர்கள் சிலரும் இருக்காங்க."

"சின்ன மாமா, நமக்கு விசுவாசமான ஆளுங்க கொஞ்ச பேரை ரெடியா இருக்கச் சொல்லுங்க. நவநீதம் இப்போ இங்கே இல்லை. நான் அவன் பையனைப் பேசி நைசா கூட்டிட்டு வரேன். அவனை லாஞ்ச்ல கடலுக்கு உள்ளே கொண்டு போய்..."

அவள் பேசிக்கொண்டு இருக்கும் போதே ஸ்டீபன் "கல்லைக் கட்டி கடலில் ஆழ்த்திடுவோம் பாப்பா. நீ ஒண்ணும் கவலைப்படாதே. உனக்குப் பக்கபலமா நாங்க இருக்கோம். எங்க வீட்டுப் பொண்ணு மேலே கை வெச்ச அவனைச் சும்மா விடலாமா...?"

"ஆமாம் தம்பி, அவனுங்களைச் சும்மா விடக் கூடாது!" என்று சவேரியாரும் தூபம் போட்டார்.

"உஷ்... உங்க ரெண்டு பேருக்கும் பொறுமையே கிடையாதா? நான் முழுசாக இன்னும் சொல்லி முடிக் கலை. பதினொரு வருஷமா அப்பனும் புள்ளையும் ஆடிய ஆட்டத்துக்கு அவ்வளவு சீக்கிரமா புள்ளைக்காரன் சாகக் கூடாது. அவனை லாஞ்ச்ல தூக்கிப் போட்டுக்கிட்டுப் போய் அவன் முதுகுத் தோலை உரிச்சுப் போட்டு, அந்த ஜலாண்ட்ல போட்டா... புழு ஒரு பக்கமும் காக்கா, குருவி, கழுகு ஒரு பக்கமும் கொத்தக் கொத்த, அவன் செத்த பிறகு கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு நாற்பது நாடிகல் தாண்டி கொண்டு போய்க் கடல்லே வீசிட்டு வரணும்.

"சதை மூலமாகத் தனக்கு நல்ல வாழ்க்கை தேட நினைச்ச அவனுங்களுக்குத் தன்னோட சதை மற்ற உயிரினங்களுக்கு உணவாகும் போதுதான் அவன் செய்த தவறு தெரியும்."

ஆவேசக் குரலில் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு இருந்த பவானியும் முரளியும், தாங்கள் வளர்த்த பெண்ணுக்குள் எவ்வாறு இவ்வளவு கொடூரம் புகுந்தது என்ற ஆச்சரியமும் வேதனையும் கொண்டனர்.

வைத்தியும் ஹரிஹரனும், 'இவள் இவ்வாறு செய்தால், நாளை இவளுக்கு என்ன பிரச்சனைகள் வருமோ?' என்று அஞ்சினார்கள்.

இந்துவின் பேச்சால் ஏற்பட்ட அதிர்ச்சியையும், அதனால் ஏற்பட்ட மோன நிலையையும் வைத்தி கலைத்தார். "பாப்பா... நீங்க சொல்றது எதுவுமே ஒத்து வராது. காரணம் என்னன்னா, நீங்க அந்த ஐலாண்ட்டுக்கு கூப்பிட்டா அவன் உடனே வருவானா? அதுவும் தனியா வர அவனுக்கு என்ன பைத்தியமா பிடிச்சு இருக்கு?"

"சரி, அப்படி வந்தாலும் முதுகுத் தோலை உரிக்கிறது என்ன அவ்வளவு சுலபமா என்ன? அது எல்லாம் ஒரு பேச்சுக்குச் சொல்றதுதான். சரி, நீ உரிச்சு அவனை ஐலாண்ட்ல வெச்சா கழுகுகள் வட்டமிட்டுக் கோஸ்டல் கார்ட்ஸ் சந்தேகம் வந்து உள்ளே வந்தால், ஐலாண்ட் மட்டுமில்லை, எல்லாத்தையும் சீஸ் பண்ணிடு வான்... எதைச் செய்தாலும் புரிந்து செய்."

இந்துவின் அம்மம்மா வைத்தியைப் பார்த்து, "அப்போ அவன் செய்த வேலைக்குச் சும்மா விடச் சொல்றீங்களா? இவனைத் தண்டிக்காம விட்டா எத்தனைப் பொண்ணோட வாழ்க்கைளை நாசம் பண்ணுவான்,

எத்தனைப் பெத்தவங்களுக்கு வேதனை கொடுப்பான், அந்த நாசகாரன்!" என்று ஆவேசமாகப் பேசியவரைப் பார்த்த இவாஞ்சலின்,

"அம்மா! அவளே சும்மா கொடையில் சாமி வந்தது கணக்கா ஆடுறா. நீ வேற அதுக்கு கொட்டு அடிச்சுக்கிட்டு திரியுறே. பேசாம இரு. அதுதான் குடும்பத்து ஆம்பளை இரண்டு பேரு பெரியவங்க இருங்காங்களே... அவங்க பார்த்துப்பாங்க."

கோபத்தின் வடிவமாக அமர்ந்திருந்த தன் மகளைப் பார்த்து, "என்னடி பேசுறே அறிவு கெட்டத் தனமா? இதுக்காகத்தான் நாங்க பன்னிரண்டு வருசமா போராடினோமா? உங்க அப்பாவும் இதுக்காகத்தான் செத்தாரா? அதைப் பார்த்துக்கிட்டு உங்க பாட்டனும் சும்மா இருந்தாரா? இது எல்லாம் செய்யறது எங்களுக்குத் தெரியாது...?

"அவ்வளவு ஏன், இதோ உட்கார்ந்து இருக்கிறாரே உங்க பெரியப்பா, மாமாப்பா, அவங்க கிட்ட கேளு... நான் வைத்திருந்த பேக்ல ரிவால்வர் ஃபுல்லா லோட் பண்ணி அன்னிக்கு என் கையிலதான் இருந்தது. அதுவும் சைலன்ஸர் பொருத்தியது. எனக்குச் சுடவும் தெரியும், அதுக்குப் பயிற்சியும் உண்டு. துப்பாக்கிக்கு லைசன்ஸும் உண்டு. ஆறு தோட்டாவிலே இரண்டு தோட்டாவை அப்பனும் புள்ளையும் நம்ம ரூம்க்கு வந்தாங்களே அப்போதே... இல்லாட்டா, கார் பார்க்ல வெச்சுப் போட்டு

இருக்கத் தெரியாது எனக்கு? ஏன் அதுக்கு முன்னாடியே உங்கப்பனுக்குத் தெரியாது அவனுங்க சோலியை முடிக்க? எதுக்குப் பொறுமையாக இருந்தோம்.

"நல்லா வாழற நம்மைப் பத்தி நல்லது பேசப் பத்து பேர் இருந்தா, கெட்டது பேச நாலு பேர் இருப்பாங்க. அவங்க தேவையில்லாம இன்னும் அதிகமாப் பேசி, உண்மையில்லாத விஷயங்களைச் சொல்லி, அந்த நாலு பேரை நாற்பது பேரா மாத்த வேண்டாம் என்ற எண்ணம் தான் எங்களை அந்த இடத்துல சூழ்நிலைக் கைதியாக நிக்க வெச்சது.

"துஷ்டனைக் கண்டால் தூரப் போகச் சொல்றது கோழைத்தனம் இல்லை. அதுதான் அறிவான செயல். காரணம், அவன் நிலைக்கு நாமும் இறங்கினால், அவனுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லை.

"ரோட்டுல போகும் போது வெறி நாய் ஒண்ணு நம்மைக் கடிக்க வந்தால், அந்த இடத்தை விட்டு நாம விலகிடுவோமே தவிர, அந்த நாயைப் போய் நாம கடிக்கக் கிளம்பினால், அது அறிவான செயலா? என்னைப் பொறுத்தவரை துஷ்டர்கள் எல்லாம் வெறி நாய் போன்றவர்கள்தான். அந்த வெறி நாயைக் கொல்லணும் தான். ஆனால், அதுக்கு முன்னாடி அந்த வெறி நாய்க்கு வெறி முத்தி பின்னாடி தான் ஓட விட்டு, லாரி அடிச்சு சாக அடிக்கணும்.

"நவநீதத்தை உங்க மாமாப்பா சும்மா விடமாட்டார், ஏதாவது செய்வார். அது வரை நீ பொறுமையாக இரு,"

என மகளைக் கடிந்தும், சமாதான அறிவுரை வார்த்தைகளைச் சொல்லிய இவாஞ்சலின்... பிறகு தன்னிடம் இருந்த ரிவால்வரை எடுத்து அனைவருக்கும் பார்க்கும்படி வைத்தார்.

"ஆமா இந்து... உங்கம்மா சொல்ற மாதிரி அவனுங்களைத் தண்டிக்க வேண்டியதுதான். அதுக்காகத் தான் நான் உன்னை அவனோடு பழக விட்டேன். சில சமயங்களில் சத்திரியனா இருக்கிறதை விட சாணக்கியனாக இருக்கிறதுதான் முக்கியம். எப்படி அவன் எதை வெச்சு உங்க வாழ்க்கையில் விளையாடினானோ, அதே போல நானும் அதை வெச்சுதான் அவனை மடக்கப் போறேன்.

"அதுக்கு முன்னாடி உனக்குக் கல்யாணம் நடக்கணும். அடுத்து நாம் கொடுக்கிற தண்டனையாலே அவன் நடைப்பிணமாகத்தான் மீதிக் காலத்தைக் கழிக்கணும். அதுக்கான நேரம் இன்னும் வரலை. கொஞ்சம் பொறுமையாக இரு!" என்று ஹரிஹரனும் தன் பங்கிற்கு விளக்க, பின்பு இவாஞ்சலினைப் பார்த்து "இந்த ரிவால்வர் எப்படி உன் கிட்ட வந்துச்சும்மா?" ஆச்சரியத்துடன் கேட்டார்.

ஜான்சனைப் பார்த்து, "தம்பி, அத்தையோட கட்டிலுக்குக் கீழே ஒரு பச்சைக் கலர் பேக் இருக்கும்... அதை எடுத்துக்கிட்டு வா!" என்று விட்டு, "முரளி அம்மா தான் அமெரிக்கா போகிறதுக்கு முன்னாடி என்னை ஊர்ல வந்து பார்த்துட்டு, இதைக் கொடுத்துட்டுப் போனாங்க!"

என்று சொல்லியபடியே ஜான்சன் கொண்டு வந்த பேக்கில் இருந்து ஒரு லேப்டாப், சில சிடிகள், ஹெட் போன், ஸ்மார்ட்போன் போன்றவையும் எடுத்து வைத்தார்.

“இது எல்லாம் எனக்காக அமெரிக்காவிலே இருந்து கொடுத்து அனுப்பியது. இது என் பொண்ணு பரத நடன அரகேற்ற சிடி, அவ பெரிய மனுஷியானப்ப நீங்க வெச்ச விழா சிடி, அவ கிராஜுவேஷன் சிடி, அவ முதன் முதல்ல ஒரு போட்டியிலே பாடின சிடி... அவளோட எல்லா நிகழ்வு சி.டி.களையும் அண்ணி உயிரோடு இருந்தவரை எனக்கு அனுப்பிடுவாங்க. இவளோட நடன அரங்கேற்றத்தை நான் ஸ்கைப் வழியாக நேரடியாகப் பார்த்தேன்.

இவ என்கிட்ட இருந்து பிரிந்த ஒன்பது வருட நிகழ்வுகளும் என் கிட்டே சி.டி.களாக இருக்கு... இவ் வளவு ஏன், இவ டூர் போன சி.டி.கள் கூட இருக்கு தெரி யுமா? இதெல்லாம் எப்படி வரும்னு யோசிக்கிறீங்களா அண்ணே?”

“அது இல்லம்மா... அவ அமெரிக்கா போகும் முன்னாடின்னா, உனக்கு அப்போ உடம்பு முடியாம இல்லே இருந்தது. எப்படி அவ உன்கிட்டே துப்பாக்கி யைக் கொடுத்தா?”

“இல்லே அண்ணே! அவனுங்க கிட்டே இருந்து தப்பிச்ச நான், டி.கல்லுப்பட்டி வரைக்கும் போய் பஸ் மடக்கி ஏறினது மட்டும்தான் எனக்குத் தெரியும். மூணு நாள் கழிச்சு எனக்கு உணர்வு வந்து பார்த்தா... எங்கம்மா

என் தம்பி கிட்டே புலம்பிக்கிட்டு இருந்தாங்க, எனக்குப் பிரமைதான் பிடிச்சுப் போச்சுன்னு. என் பொண்ணு காணாமல் போனதாலே அந்த அதிர்ச்சியில் நான் சித்த சுவாதீனம் இல்லாமல் இருக்கிறதாகச் சொன்னாங்க. அப்போதான் நான் உணர்ந்தேன், எனக்கு நினைவு வந்தது என்று தெரிந்தால், என் பெண்ணைப் பத்தி சொல்லியே ஆகணும்... அதனாலே நான், மௌனமாக சித்தப்பிரமை பிடித்த மாதிரியே இருந்தேன். இவங்க யாருக்கும் எதுவும் கண்டு பிடிக்க முடியலை.

"என் மாமனார் பேத்தி காணமல் போன துக்கத் திலேயே போய்ச் சேர்ந்துட்டாரு... அப்பவும் நான் என்னோட மௌனத்தையே தொடர்ந்தேன். என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னு கவனிக்க ஆரம்பிச்சேன்... சில மாதங்களுக்குப் பிறகு முரளியோட அம்மா, ஒரு பெண் ணோட என்னைப் பார்க்க வந்தாங்க.

"அந்தப் பெண்ணை என்னோட ரூமுக்கு வெளியில் நிறுத்திட்டு, இவங்க மட்டும்தான் வந்தாங்க. ஆனால், வந்து ஒரு பத்து வினாடி நேரம் வரைக்கும் என்னையே உத்துப் பார்த்தாங்க. அப்புறமாக இந்த ரிவால்வரை எடுத்து என் கிட்டே கொடுத்து,

" 'இது உன்னோடது. உன் பாதுகாப்புக்கு வெச் சுக்கோ. உன் பொண்ணு என் மருமகளுக்கு இது தேவைப்படாது. ஏன்னா, அவளுக்கு என் பையன் மற்றும் உன் பொண்ணோட பாதுகாப்பும் என்னோட கண்காணிப்பும் இருக்கு. வேற யார் கிட்டேயாவது நடி,

உனக்குச் சித்தப் பிரமை பிடித்து இருக்குன்னு... அவங்க நம்புவாங்க, நான் மாட்டேன். உன் பொண்ணை நான் அமெரிக்காவுக்குக் கூட்டிக்கிட்டு போய்ப் படிக்க வைக்கப் போறேன்'னு. சொன்னாங்க.

“ஆச்சரியப்பட்டு, அவங்க எப்படிக் கண்டு பிடிச்சாங் கன்னு கேட்க, தனக்கு உண்மையான சித்தப் பிரமை பிடித்தவர்களுக்கும் நடிப்பவர்களுக்கும் வித்தியாசம் தெரியும்... என்னோட கண்ல தெரிந்த பயம் வைத்துதான் நான் நடிக்கிறேன்னு கண்டு பிடித்ததாகச் சொன்னாங்க. பிறகு டாக்டர் சாந்தினியை உள்ளே வரவழைச்சுப் பேசினாங்க.

“டாக்டர் சாந்தினிதான் எனக்கு அமெரிக்காவிலே இருந்து அனுப்பும் பொருளை எல்லாம் கொண்டு வந்து தருவாங்க. அவங்க தான் இன்டர்நெட் கனெக்ஷன் டாக்குள் மூலமா எடுத்துக் கொடுத்தாங்க. ஸ்கைப் மூலமாப் பேச, இதோ இந்த ஸ்மார்ட் போன் வழியா வைபர்ல பேச எல்லாம் சொல்லிக் கொடுத்தாங்க. ஆனால், சி.டி. மட்டும் என்னோட ஜன்னல் வழியாக வந்து விழும். யார் போடறது, எப்படிப் போடறாங்கன்னு எனக்குத் தெரியாது. நான் நடிக்கிறேன் என்பது இன்னொருத் தருக்கும் தெரியும்.

“இங்கே நான் வந்த பிறகு ஒரு நாள் ஜன்னல் கிட்டே நின்னுக்கிட்டு பார்த்துக்கிட்டு இருந்தேன். அப்போ ஒருத்தர் சொன்னாங்க... ‘அம்மா, நீங்க கவலைப்படா தீங்க. உங்க பொண்ணு எனக்கு இன்னொரு எஜமானி.

அதனாலே அவங்களோட பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம்'னு..." என்று இவாஞ்சலின் விவரித்துக் கொண்டு இருக்கும் பொழுது, மன்சூர் கதவைத் திறந்து கொண்டு வந்து சில பைகளைக் கொண்டு வர... அவரைப் பார்த்து, "அண்ணே, இவர்தான் அன்னிக்கு அப்படிச் சொன்னது."

மன்சூர் அங்கே இருந்த பையையும் மற்ற பொருட்களையும் சி.டி.களையும் பார்த்து விட்டு, "ஐயா, நம்ம அம்மா சொல்லித்தான் எனக்கு போஸ்ட் மூலமா வர்ற சிடிகள், லெட்டர், போட்டோவை இவங்க ரூம் ஜன்னலில் வீசுவேன். அதுக்காகத்தான் நான் நாகர் கோவில்லே தங்கினேன். அப்போதான் வர்மக்கலை அங்கே கத்துக் கொடுக்கிறதைப் பார்த்து அம்மா கிட்டே சொல்ல, அதைப் படிக்கிறேன் அய்யா கிட்டே சொல்லிட்டு அங்கே இருன்னு சொன்னாங்க... நானும் அம்மா சொல்லியபடியே செய்தேன்."

"சரிம்மா... இப்போ சொல்லு, உன் பொண்ணை என் வாரிசுக்குக் கட்டித் தர விருப்பமா? உன் பதில் என்ன?"

"அண்ணே, அவ உங்க வீட்டு மருமக அண்ணே. இது எல்லாம் என் கிட்டே கேட்கணுமா? உங்களுக்கு என்ன தோணுதோ அப்படியே செய்யுங்கள்!" மகளுக்குத் திருமணம், அதுவும் அவளைப் போற்றிப் பாதுகாக்கும் ஒருவனுடன் என்ற உண்மை கொடுத்த சந்தோஷம் முகத்திலும் பேச்சிலும் பிரதிபலிக்கத் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

தட்டுகளில் நிச்சயத்திற்குத் தேவையான பொருட்கள் அடுக்கப்பட, அதைப் பார்த்த இந்து, "மாமாப்பா... வேண்டாம், எனக்கு இந்தக் க்ல்யாணம் வேண்டாம். என்னை விட்டுடுங்க. உங்க பையனுக்கு நல்ல பெண் ணாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணுங்க. நான் வேண்டாம். என்னால் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க முடியாது... உங்க வீட்டுக்கு மருமகளா வர்ற தகுதியை நான் இழந்துட்டேன். எனக்குக் கல்யாணமே வேண் டாம்!" என்று தன் உச்சபட்சக் குரலில் அலறினாள்.

இந்து, முரளிமேல் கொண்ட காதல் அறிந்த அனைவரும் அவளின் இந்தப் பேச்சைக் கேட்டு அதிர்ந்து போய் அவளையே பார்த்தனர்.

## 22

இந்துவை சாந்தினி கவுன்சிலிங் கொடுத்துக் கொண்டு இருந்த நேரத்தில்... பிரேம், பிரசன்னாவை ஹோட்டலின் ரெஸ் டாரன்ட்டில் சந்தித்தான்.

"வாங்க மச்சான், என்ன விஷயமாகப் பேசணும்?" என்று பிரேமைப் பிரசன்னா வரவேற்க...

பிரசன்னாவின் அழைப்பை நாராசமாக உணர்ந்த பிரேம் கடுகடுப்பாக, எதற்கு வந்து இருக்கிறான் என்பதைச் சொன்னான். "பாருங்க, உங்க கிட்டே உறவு முறை கொண்டாடிக்கிட்டு இருக்க நான் இங்கே வரலை... உங்களாலே என் தங்கைக்குக் கெட்ட பெயர் வந்து இருக்கு... அது உங்களுக்குத் தெரியுமா?"

"என்னாலா...? இருக்காதே!" அசட்டையாகப் பதில் சொன்னான் பிரசன்னா.

"என்ன இப்படிச் சொல்றீங்க...? நேத்திக்குப் பேப்பர் படிச்சீங்களா... அதுவும் ஹார்ட்பீட் ஆஃப் இந்தியா சென்னை எடிஷன்!"

அசட்டையாகச் சொன்னவனை வெறுப்பாகப் பார்த்தபடியே விசாரித்தான் பிரேம்.

பிரேமின் கேள்விக்கு ஸ்டைலாகத் தோளைக் குலுக்குவதுபோல் நினைத்துக்கொண்டு, வலிப்பு வந்தாற் போல் தோளை வெட்டிக்கொண்டே, "இல்லீங்களே... நான் இங்கிலீஸ் பேப்பர் எல்லாம் படிக்க மாட்டேன்... ஏன், அதிலே என்ன வந்துச்சு?" பதில் கேள்வி கேட்டான்.

"என் தங்கை தண்ணியடிச்சு மயங்கிட்டான்னு அதிலே போட்டோவோட செய்தி வந்து இருக்கு. இது எங்கம்மாவுக்கு தெரிந்தது... அவ்வளவுதான். அவளும் இங்கே இருக்க முடியாது. அதுமட்டுமில்லாமல் உங்க ளுக்கு அவளைக் கல்யாணம் பண்ணித் தர மாட்டாங்க."

"அய்யோ, இப்போ என்ன செய்யறது? எங்கப்பா கூட ஊர்ல இல்லை. இப்போ அவரைப் போன்ல கூடப் பிடிக்க முடியாது. என்ன செய்ய?" பதறினான் பிரசன்னா.

"ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். அந்தப் பத்திரி கையில் இது தவறான தகவல் என்று மறுப்பு அறிக்கை வந்தால் போதும்... உங்க ஹோட்டல்லே இருக்கும் மாணிக்கம் தன்னோட மொபைல் மூலமா எடுத்த

போட்டோவை அந்தப் பத்திரிகையில் வேலை செய்யும் ஒருத்தருக்குக் கொடுத்து இருக்கார்" தான் விசாரித்து அறிந்து கொண்ட தகவலைப் பிரசன்னாவிடம் சொன்னான் பிரேம்.

"சரி, அப்படிச் செய்யலாம். இருங்க, எங்க ஜி.எம். கிட்டே கேட்டால் தெரியும்!" சொல்லி விட்டு விசாரிப்பில் இறங்கினான். சிறிது நேரத்திற்குப் பின் அந்த மாணிக்கம் என்பவருடன் வந்தான்.

பிரேம், பிரசன்னாவை நோக்கி, "இந்த ஆளை வண்டியில் ஏத்துங்க. அதே போல உங்க சொல் பேச்சுக் கேட்கிற ஏதாவது லேடிஸ் ஸ்டாஃப் இருக்காங்களா... அவங்க சனிக்கிழமை சாயந்திரம் இங்கே டியூட்டியில் இருந்து இருக்கணும்... அப்படி யாராவது இருந்தா அவங்களையும் வண்டியில் ஏத்துங்க... நாம அந்தப் பத்திரிகை ஆபீஸ் போகிற வழியிலே என்ன செய்யணும் எப்படிச் செய்யணும்னு சொல்றேன். அது படி செய்தால் போதும்!" என்று இயக்கத் தொடங்கினான்.

பிரேம், பிரசன்னா மற்றும் அவனது ஊழியர்களை அழைத்துக் கொண்டு ஹார்ட்பீட் ஆஃப் இந்தியா பிரஸ்ஸின் தலைமை அலுவலகத்திற்குக் கூட்டிச் சென்றான்.

இவர்கள் சென்ற சிறிதுநேரத்திற்குப் பின் ஹரிஹரனின் ரூமுக்குள் அழைக்கப்பட்டார்கள்.

உள்ளே இருந்த முதலாளி இருக்கையில் ஹரிஹரன் அமர்ந்து இருக்க, எதிரில் இருந்த சோபாவில்

வைத்தி அமர்ந்திருந்தார். மற்றவர்களை வெளியில் நிற்க வைத்து விட்டுப் பிரேமும் பிரசன்னாவும் மட்டும் வந்தார்கள். அவர்களைப் பார்த்து ஹரிஹரன், "வாங்க, உட்காருங்க. நீங்க யாரு? உங்களுக்கு நான் எந்த விதத்துல உதவி செய்யணும்? என்ன பிரச்சனையாக நீங்க என்னைப் பார்க்க அப்பாயின்ட்மென்ட் வாங்கி இருக்கீங்க?" எனக் கேட்டு விட்டு லேசாகத் திரும்ப, அங்கு நின்ற பிரசன்னாவைப் பார்த்து, "எனக்கு உங்களைப் பத்தி தெரியும்... இவர் யார்? உங்களுக்குத் தெரிந்தவரா? இல்லை, சொந்தக்காரரா?" விசாரிக்க ஆரம்பித்தார்.

"ஐயாம் பிரேம்குமார். நான் யு.எஸ்.லே லாயரா இருக்கேன். என்னோட சிஸ்டர் இந்திரா பிரியதர்ஷினி... உங்க பத்திரிகையிலே நேத்திக்கு சென்னை இஸ்யூல தேர்ட் பேஜ்ல ஃபோர்த் காலத்துல என்னோட சிஸ்டரைப் பத்தித் தவறான செய்தி வெளியிட்டு இருக்கீங்க. அதுவும் அவ இப்போ, 'ஜோடியாக பாடுங்கள்' நிகழ்ச்சியின் ஸ்டார் பாடகியா இருக்காங்க. இந்த நேரத்துல அவங்களோட புகழைக் கெடுக்கிற மாதிரி இந்த வேலை நடந்து இருக்கு. நான் ஏன் உங்க பத்திரிகை மேல டிப்பர்மேண்டல் சூட் போடக் கூடாது?" ஏற்கெனவே திட்டமிட்டபடி கோபத்தினைக் குரலில் கொண்டு வந்து, விலாவாரியாக ஹரிஹரனைப் பார்த்து பிரேம் கேட்க,

"மிஸ்டர் பிரேம்குமார், அவசரப்படாதீங்க. எங்க பத்திரிகையிலே ஆதாரமில்லாமல் எந்தச் செய்தியும் வெளியிட மாட்டோம். என்ன விஷயம்...? எங்கே தவறு

நடந்து இருக்கு என்று விசாரிக்கலாம். இப்போ நீங்க உங்க தரப்பைச் சொல்லுங்க!" ஹரிஹரன் பொறுமை யாகப் பேசினார்.

"சனிக்கிழமை அன்னிக்கு ஈவினிங் இவங்க ஹோட்டல்ல இவரு பார்ட்டி வெச்சு இருந்தார். என் தங்கை அன்னிக்கு பிரெண்டை மீட் செய்யப் போய் இருக்கா... அந்த பிரெண்ட் ஏதோ ஒரு காரணத்தாலே வர லேட் ஆயிடுச்சு. என் தங்கைக்கு டென்ஷன் ஆனா லோ பிரெஷர் வரும். டைம் ஆகுதேன்னு டென்ஷன் ஆனதுல லோ பிரெஷர் வந்து இருக்கு... ரெஸ்ட் ரூம் கிட்டே போகும் போது மயங்கி விழ, அதைப் பார்த்து விட்டு அங்கே வொர்க் செய்யற லேடி ஸ்டாப் இவளோட போன் மூலமா எமர்ஜென்சில இருக்கிற என்னோட நம்பருக்குக் கால் பண்ண, நான் உள்ளே போய் தூக்கிட்டு வந்தேன்.

"இதுதான் அன்னிக்கு நடந்தது. ஆனால், பிரசன்னா வெச்ச பார்ட்டியில் என் தங்கை கலந்துக் கிட்டு குடிச்சிட்டு மயங்கின மாதிரியும், நான் போய்த் தூக்கிட்டு வந்த மாதிரியும் உங்க பத்திரிகையிலே போட்டு இருக்கு. இதோ அன்னிக்கு டாக்டர்கிட்டே ட்ரீட்மென்ட் எடுத்ததற்கான ஆதாரம் இருக்கு... இப்போ என்ன சொல்லப் போறீங்க?" ஹரிஹரனின் குடும்ப டாக்டர் குருநாதன் அளித்த சர்டிபிகேட் காட்டினான் பிரேம்.

அதற்குள் அந்த நிருபர் வரவழைக்கப்பட, அவ னிடம் விசாரித்ததில், தான் அந்த இடத்துக்குச் செல்ல வில்லை என்றும், இந்த பேரரின் நட்பு வட்டத்தின்

மூலமாக வாட்ஸ் அப்பில் வந்த செய்தியைத்தான் வார்த்தைகளாகப் போட்டு எழுதிக் கொடுத்ததாகவும் சொல்ல, ஹரிஹரன் அந்த நிருபரை எச்சரித்து அனுப்பி, பிரேம் சொன்னது போலவே பிரேம் அழைத்து வந்த லேடி ஸ்டாப்பும் சொல்ல... அந்தப் பேரரும் தான் செய்தது தவறு என்பதை ஒப்புக்கொள்ள... ஹரிஹரன், பிரேமைப் பார்த்து,

“நாளைக்குக் காலையில் வர்ற இஸ்யூல ஃபர்ஸ்ட் பேஜ்ல எங்களுடைய வருத்தத்தையும் மன்னிப்பையும் வெளியிடறோம். உங்களுக்குக் கஷ்டம் கொடுத்ததுக்கு சாரி!” தன்மையாக மன்னிப்புக் கோரினார்.

“சீக்கிரம் ஷாட் அவுட் பண்ணினதுக்கு தேங்க்ஸ்!” என்று சொல்லி விடைபெற்று அறையைவிட்டு வெளியேற... வைத்தி, பிரசன்னாவைப் பார்த்து,

“பிரசன்னா, ஒரு நிமிஷம்!” என்றபடி பிரசன்னாவின் அருகில் வந்து அவன் தோள் மீது கை போட்டு, மிக அருகில் மெல்லிய குரலில், “அடுத்து வர்ற மாசத்தோட ஹோட்டல் லீஸ் முடியுது. தெரியுமா உங்களுக்கு? இன்னும் எந்த ஸ்டெப்பும் எடுக்காமல் இருக்கீங்க? இவாஞ்சலின் கையெழுத்துப் போட்டால் சட்டப்படி செல்லாது... என்ன விஷயம்னா அவ பைத்தியம். அதனாலே நீங்க என் கிட்டே தான் வரணும். நான்தான் சட்டப்படி கார்டியன்.

“ஆமா... என்ன புதுசா வக்கீல் எல்லாம் பிடிச்சு இருக்கிற மாதிரி இருக்கு? என்ன என்னவோ கேள்விப்

பட்டேன்... அதுவும் அமெரிக்கப் பொண்ணோட கல்யாணம்னு... ஆமாம், உனக்கு அமெரிக்க எம்பசியிலே போய் அங்கே வைக்கிற இன்டர்வியுவிலே இங்கிலீஷ் பேசணுமே, தெரியுமா? அந்த அளவுக்கு இங்கலீஷ் பேச வருமா? மொழியைக் கத்துக்கிறது ஒரு பெரிய விஷயம் தானே...! இதுல எல்லாம் ஃபோர்ஜரி பண்ணப் பார்த்தால், ஸ்ட்ரெயிட்டா ஜெயில்தான்." எகத்தாளமும் கிண்டலும் தொனிக்க வைத்தி பேசப் பேசப் பிரசன்னாவிற்குப் படபடப்பாக வந்தது.

பின்பு வைத்தி சிறிது சத்தமாக, "உங்க கூட வந்தவங்க உனக்காக வெயிட் பண்றாங்க, நீ போ. அப்படியே நான் சொன்ன விஷயத்தையும் அப்பா கிட்டே சொல்லிடுப்பா!" அன்பாகப் பேசி அனுப்பி வைத்து விட்டு, ஹரிஹரனைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

**மூ**ன்று வாரத்திற்குப் பின் சுபாஷ், திருநங்கைகள் இருவரை வீட்டுக்கு அழைத்து வந்தான்.

"தர்ஷினி... நீ சொன்ன இரண்டு பேரும் இவங்க தான்."

"வாங்க, நேத்திக்கு எதுக்காக பவானிக்காவுக்குப் போன் பண்ணீங்க...? அவங்க இல்லைன்னு சொன்ன வுடனே போனை வெச்சுட்டீங்க. என்ன விஷயம், சொல் லுங்க. நீங்க பேசப் போற விஷயம் பெரிசுன்னு நினைக்கிறேன்... ஏன்னா, என் கிட்டே பேசினவங்க ரொம்ப டென்ஷன்ல இருந்ததை என்னாலே உணர முடிந்தது. அக்கா கிட்டே சொன்னால்தான் ஹெல்ப் கிடைக்கும்னு

நினைக்காதீங்க. என் கிட்டே சொன்னாலும் நிச்சயமாக என்னாலே முடிந்ததைச் செய்வேன்."

"நேத்திக்குப் போன் பேசினது நான்தான். என் பேரு மீதா, இவ சுவாசினி... நான் பெங்களூர்ல கிராபிக் டிசைனர் கோர்ஸ் படிச்சுக்கிட்டு இருக்கேன். இவ இங்கே தரமணியில் இருக்கிற பாலிடெனிக்ல பியூட்டிஷியன் கோர்ஸ் பண்ணிக்கிட்டு இருக்கா. எங்களுக்கு பவானிக்கா தான் ஃபீஸ் பே பண்ணணும். இன்னும் பண்ணலை. அதைப் பத்திப் பேசத்தான் போன் பண்ணினேன்."

"செமஸ்டர் ஃபீஸ் எவ்வளவு?"

"செமஸ்டர் பீஸ் மட்டும் ஒன் லக் தேர்ட்டி தவுசண்ட்."

"அது மட்டும் போதுமா...? இல்லை, ஹாஸ்டல் ஃபீஸ் அந்த மாதிரி ஏதாவது வேணுமா?"

"தங்குறது எல்லாம் எங்களை மாதிரி இருக்கிற அக்காங்ககூட தங்கிடறோம், லேட் ஃபீஸ் பே பண்ணற துனாலே ஃபைன் பே பண்ணணும். அப்புறம் செமஸ்டர் எக்ஸாம் ஃபீஸ் தான்... வேற ஒண்ணும் கிடையாது."

"எல்லாம் சேர்த்து ஒரு ஒன் லக் செவண்டி ஃபைவ் தவுசண்ட் போதுமா?"

"அய்யோ, அது ரொம்ப அதிகம். அவ்வளவு எல்லாம் வேண்டாம்!" படபடப்புடன் மீதா சொல்ல,

"பார்ட் டைம் ஜாப் எல்லாம் போக வேண்டாம். படிக்கிறதை மட்டும் பாருங்க... இருங்க வரேன்... டேய்

கோஸு, என் கூட வாடா!" சுபாஷை அழைத்துக் கொண்டு தன் ரூமுக்குள் சென்றாள்.

தன்னுடைய லாக்கரில் இருந்த அவளின் அத்தைம்மா அவளுக்கு என்று கொடுத்த அடுக்குச் சங்கிலியை எடுத்து அவனிடம் கொடுத்து, "இதை பேங்க்ல அடமானம் வைப்பியோ இல்லை என்ன செய்வியோ தெரியாது. அவங்க கேட்ட அமௌண்ட் என் கைக்கு இன்னும் கொஞ்ச நேரத்துல வரணும். நான் சம்பாதித்த காசு இங்கே கொண்டு வர எப்படியும் ஒரு வாரம் பிடிக்கும். ஒரு வாரம் கழிச்சு அதை நான் திருப்பி எடுக்கணும். விக்க மட்டும் செய்யாதே. ஒரு வேளை காசு ரொம்பக் கம்மியா கிடைச்சா... இந்தா, இதையும் வெச்சுடு!" என்று தன் காதில் இருந்த வைரத் தோடைக் கழற்றி அவன் கையில் வைக்க, அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்த சுபாஷ்...

"என்ன... அவ்வளவுதானா? எல்லாத்தையும் சொல்லி முடிச்சுட்டியா? அப்ப நீ இன்னும் முழுசா என்னை பிரெண்ட்டா நினைக்கலை இல்லே...?"

"ஏய், என்னடா உளறல்?"

"உன் நகையை அடமானம் வெச்சுத்தான் அவங்களுக்கு நீ உதவணுமா? ஏன், என் கிட்டே காசு இல்லை...? நான் கொடுத்து உதவ மாட்டேனா? என்னை பிரெண்ட்டாகக் கன்சிடர் பண்ணியிருந்தா என்னடா செய்யலாம்னு கேட்டு இருப்பே? இப்படி ஒரு முடிவு எடுத்து

இருக்க மாட்டே!" எண்ணெய்யில் இட்ட கடுகாக சுபாஷ் பொரிய,

"இப்ப என்ன வேணும்ங்கிறே, சொல்லித் தொலை!" எரிச்சலுடன் மொழிந்தாள்.

"அந்தப் பணத்தை நான் தரேன்னு சொல்றேன். அவ்வளவுதான்!"

"ம்ம்... அதெல்லாம் வேண்டாம். பவானிக்கா இப்போ பில்டிங் கட்டுறதுனாலே கொஞ்சம் பணக் கஷ்டம்... இந்த ஆறு மாசமாக அக்கா வேலைக்குப் போகலை. அதனால் காசு கிடையாது. இது தெரிந்தாலே குதிப்பாங்க. இன்னும் பணம் முழுவதும் நீதான் கொடுத் தேன்னு தெரிந்தால், அவ்வளவுதான்.

"ஏன், இப்போ அம்மாம்மா கிட்ட... இல்லை, பெரிய மாமா கிட்டே வாங்கிக் கொடுக்கத் தெரியாதா எனக்கு... அந்த மாதிரி செய்தா அக்கா ரொம்ப மனசு வேதனைப் படுவாங்கடா. அதுக்குத் தான் நான் நகையை அடமானம் வெச்சுப் பணத்தைக் கொடுத்துட்டு, ஊர்ல என் பேருல கொஞ்சம் பணம் கிடக்கு, அதை அழகி மூலமா இங்கே வர வெச்சுக்குவேன். சரி, நான் நகையை அடமானம் வைக்கலை. பணத்தைக் கடனாகக் கொடு, வாங்கிக் கிறேன்!"

"சரி, பணத்தைக் கடனாகக் கொடுக்கிறேன். ஆனால், அதிலே பாதியை எனக்கு நீ திருப்பித் தந்தால்

போதும். மீதி என்னோட கணக்கா இருக்கட்டும். நீ அக்கா கிட்டே நான் தந்தேன்னு சொல்லிக்க வேண்டாம்!" பிரச்சனைக்குத் தீர்வு சொல்லித் தன்னிடம் இருந்த பணத்தைப் போய் எடுத்து வந்து கொடுத்தான்.

**கா**ல் இறுதிச் சுற்றுக்கான தலைப்பாக ஹாஸ்யப் பாடல்கள் கொடுத்து இருந்தார்கள். முதலில் இருவரும் தனித்தனியாகவும் பின்பு சேர்ந்தும் பாட வேண்டும். அதற்காக இந்து 'டும் டும் என் கல்யாணம்' மாயாபஜார் படத்தில் வரும் பாடலை எடுக்க, முரளி என்.எஸ்.கே. பாடிய 'சிரிப்பு இதன் சிறப்பை சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு' ராஜா ராணி படத்தின் பாடலை எடுக்க, இருவரும் சேர்ந்து பாடும் பாடலாக சக்கரவர்த்தித் திருமகள் படத்தில் வரும் 'உன் அத்தானும் நான் தானே சட்டை பொத்தானும் நீதானே' தேர்தெடுத்து வீட்டின் மொட்டை மாடியில் பாடிப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

இந்து, முரளியைப் பார்த்து, "என்னத்தான் என்.எஸ்.கே. பாட்டு சரியாகப் பாடிடுவீங்களா? சொதப் பிட்டீங்க... அவ்வளவு தான், மொத்த ஜோலியும் முடிஞ் சுடும், ஜாக்கிரதை!" எச்சரிக்கை விடுத்தாள்.

"ஏய், நான் நல்லா பிராக்டிஸ் பண்ணியிருக்கேன். நீ எடுத்த பாட்டுல தான் அந்த மேல் (ஆண்) வாய்ஸ் வரும் இடம் சரியா வந்தா பாடு... இல்லை, அதை ஸ்கிப் பண்ணிடு... வாய்ஸ் ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே!"

முரளி, இந்துவிடம் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே கீழே இருந்து வேகமாக மேலே வந்த பிரேம்,

முரளியைப் பார்த்து, "அவ வாய்ஸ் ஸ்ட்ரெயின் ஆகறதைப் பத்தி இவ்வளவு கவலைப்படறியே மாமா, அவ வாழ்க்கை ஸ்ட்ரெயின் ஆனா பரவாயில்லையா? முடிஞ்சா நீ கல்யாணம் பண்ணிக்கணும், அதை விட்டு விட்டு எதுக்காக அடுத்தவனுக்கு என் தங்கையைக் கல்யாணம் பண்ணி வைக்கிறே...? எங்களை எல்லாம் பார்த்தால் உனக்கு எப்படி இருக்கு?" என்று மெதுவாக ஆரம்பித்து, வேகமாக வார்த்தைகளைக் கொட்டினான்.

இந்து பட்டென்று எழுந்து பிரேம் அருகில் வந்து, "என்ன அண்ணா சொல்றீங்க?" விசாரிக்கத் தொடங்க...

முரளி அவசரமாகப் பிரேமிடம், "இதோ பாரு மச்சான்... நாம இதைப் பத்தி தனியாப் பேசிக்கலாம். நான் உனக்கு எல்லாம் விளக்கமாகச் சொல்றேன்... கொஞ்சம் பொறுமையா இரு!" சமாதானம் செய்யப் புறப்பட...

பிரேம், இந்துவைக் கையைப் பிடித்துக் கொண்டு, "உன்னோட எந்த விளக்கமும் தேவை இல்லை, தனியாகப் பேச வேண்டிய அவசியமும் இல்ல. ஒண்ணு மட்டும் சொல்றேன் தெரிஞ்சுக்கோ மாமா... உன்னைத் தவிர என் தங்கையை யாரும் கல்யாணம் பண்ணிக்க விட மாட்டேன். இப்போ ஏற்பாடு செய்து இருக்கிற இந்தக் கல்யாணம் நடக்காது... நடக்கவும் விட மாட்டேன். அவ அவளோட காலம் முழுக்க மறைஞ்சு வாழ்ந்தாலும் பரவாயில்லை. என்னோட தங்கையா என் கூட அமெரிக்காவிலே இருக்கட்டும்!" என்று ஆவேசமாகக் கத்தினான்.

# 23

**சி**ல நாட்களுக்குப் பிறகு.... ஞாயிற்றுக் கிழமை காலை, பவானி தோட்டத்தில் நின்று முரளியுடன் பேசிக் கொண்டு இருந்தார், உள்ளிருந்து வேகமாக வெளியே வந்த இந்து, பவானியைப் பார்த்து,

"அக்கா, நான் கிளம்பறேன்!" என்று சொல்லிவிட்டு அவளின் காரை நோக்கிச் செல்ல,

"காலங்கார்த்தாலே எங்கே அக்கா இவ கிளம் பிட்டா...? மாஸ்க்குப் போறாளா?" வழியில் நின்று கொண்டு இருக்கும் தன்னைப் பார்க்காது வேகமாகக் கடந்து செல்லும் இந்துவைப் பார்த்தபடி பவானியிடம் கேட்டான் முரளி.

"இல்ல முரளி, இன்னிக்கு முழுசும் கலாசேத்திராவுல தான் இருப்பா."

"அங்கே என்ன வேலை இவளுக்கு?"

"டான்ஸ் சொல்லிக் கொடுக்கிறா."

"எப்படி இவளை டீச்சரா அங்கே எடுத்தாங்க?"

"இவளைப் பத்தின உண்மை வெளியாகறதுக்கு முன்னாடி உள்ள வெள்ளிக்கிழமை டெலிகாஸ்ட் ஆன உங்களோட பாடல் நிகழ்ச்சி மூலமாகத்தான். எல்லாம் சவுந்திரவல்லி உபயம்தான். அவங்க மூலமாகக் கேட்ட இவளும் சரின்னு சொல்லி, இந்த ஒரு மாசமாகப் போய்க்கிட்டு இருக்கா." சுருக்கமாகப் பவானி சொல்லி முடித்தார்.

அந்தப் பதிவுகள் எடுத்து இரு மாதங்களுக்குப் பின் ஒளிபரப்பு ஆவதால், அன்று நடந்தவை முரளிக்கு இப்பொழுது நடந்தது போலத் தோன்றியது.

அன்று சீஃப் கெஸ்ட்டாக சவுந்திரவல்லி என்கிற கர்நாடக இசைப் பாடகி வந்து இருந்தார். போட்டியாளர்கள் வரிசையில் இந்துவைப் பார்த்துக் கண்ணால் சௌக் கியமா என்று கேட்க, அவளும் பரம சுகம் என்று தன் பார்வையால் பதிலளித்தாள்.

நிகழ்ச்சிகளுக்கு இடையே சவுந்திரவல்லி, "ஜனனி, பார்கவி, அரவிந்த்... இதோ இங்கே பார்ட்டிசிபென்ட் இருக்காங்களே இந்திரா பிரியதர்ஷினி... இவங்களோட டான்ஸ் அரங்கேற்றம் யு.எஸ்.ஏ.லே நடக்கும் போது, சாருலதா ராஜராமன் தான் அவங்களுக்குக் குரு. அதனால பாடறதுக்கு நான் போனேன். அப்போ பார்த்தீங்க என்றால், சிலப்பதிகாரத்தில் சொன்ன மாதிரி அரங்கேற்றத்துக்கு வீணா வேணு கான, மிருதங்க என்கிற பாணியில் அமைந்து இருந்தது.

"பாட (கான) நான், வீணா அவளோட அத்தை, புல்லாங்குழல் (வேணு) நம்ம மூர்த்தி, மிருதங்கத்துக்கு அவளோட அத்தான்... பாரதியின் ஊழிக்கூத்து பாட்டுக்கு ஆடினா பாரு... உண்மையாக ஒரு காளி ஆவேசம் வந்து ஆடினா எப்படி இருக்குமோ அப்படி ஒரு ஆட்டம் ஆடினா பார்த்துக்கோ... நல்ல டேலண்ட் ஆன பொண்ணு... இப்போ பாட்டுலேயும் முத்திரையைப் பதிக்கிறா!" என்று மனம் திறந்து பாராட்டினார்.

இவர்கள் இருவரும் பாட வந்த பொழுது அரவிந்த், "இன்னைக்கு என்ன பாடப் போறீங்க?"

"நாங்க இன்னிக்கு ஆகாய வெண்ணிலாவே பாடப் போறோம்!" என்றான் முரளி.

ஜனனி, இந்துவைப் பார்த்து, "இந்து, இப்போ உங்களால் ஏதாவது ஒரு பாட்டுக்கு ஆட முடியுமா?" என்று கேட்க

"சாரி... இப்போ நான் ஆடறது இல்லை." தலையைக் குனிந்தபடியே மறுத்துரைத்தாள் இந்து.

"ஏன்?" ஆதங்கத்துடன் கேட்டாள் பார்கவி.

"இரண்டு வருஷத்துக்கு முன்னாடி வரைக்கும் எனக்குப் பாட்டும் டான்ஸும் இரண்டு கண்ணாகத்தான் இருந்தது. இரண்டு வருஷத்துக்கு முன்னாடி இதே போல ஒரு நவம்பர் மாசக் கடைசியில் நான் ஒரு டான்ஸ் ஷோவுக்கு ஒப்புக்கிட்டேன். எங்க டான்ஸ் ஷோ அன்னிக்கு பயங்கரப் பனிப்பொழிவாக இருந்தது. எங்கக்கா வீட்டுக்கு வர முடியாதுன்னு எங்களோட ரெஸ்டாரன்ட்ல தங்கிட்டாங்க. எங்க அத்தான் துபாய் போய் இருந்தார். கார் எடுக்க முடியாது.

"அத்தைம்மா சொல்லியும் கேட்காம அந்த ஷோவுக்குப் போய்த்தான் ஆகணும்னு பிடிவாதம் பிடிச்சு போனோம். ஆனால், அங்கேயும் பனிப்பொழிவால் ப்ரோகிராம் கேன்சல் பண்ணிட்டாங்க. அவங்க எங்க கிட்டே தெரியப்படுத்துவதற்கு முன்னால் நான் அவசரப்பட்டு வந்துட்டேன்.

"நேரம் ஏற ஏறப் பனிப்பொழிவு அதிகமாக ஆரம்பிச்சது. அப்போ வழக்கமான வேகத்துல போகக் கூடாது. ஆனால், என்னோட அவசரப் புத்தியாலே அத்தை சொன்னதையும் கேட்காமல், எப்பவும் போகிற வேகத்துல காரை ஓட்டினேன். ஒரு இடத்துல பிரேக் பிடிக்க முடியாமல் டயர் வழுக்கிக் கார் எதிர்ப்புறமாகத் திரும்பி, பின்னாடி வந்துக்கிட்டு இருந்த டேங்கர் லாரியைப் பார்த்துப் போக ஆரம்பிச்சது.

"வந்த விபரீதத்தை உணர்ந்த அத்தை, வேகமாக ஸ்டியரிங்கை முழுசா வலது பக்கம் திருப்பியவாறே, ஒரு கையாலே என்னோட சீட் பெல்ட் ரிமூவ் பண்ணி என்னை வலது பக்கமா இழுத்துக்கிட்டு, கார் கதவைத் திறந்து தள்ளி விட்டு அவங்க கீழே விழுவதற்கு முன்பே கார் அங்கே இருந்த போஸ்ட் மீது மோதி நின்றது. விபத்துல முன்னாடி இருந்த ஏர்பேக் ஓபன் ஆகாமல், செஸ்ட் அந்த டாஷ் போர்ட் அடிச்சதுனாலும் விபத்துனால ஏற்பட்ட அதிர்ச்சினாலும் அத்தை அந்த இடத்திலேயே இறந்துட்டாங்க.

"எனக்குள்ளே ஒரு குற்ற உணர்ச்சி. எனக்கு டான்ஸ் மேல இருந்த வெறி தானே... என்னோட அத்தைம்மா உயிர் போகக் காரணமாக இருந்த அந்த டான்ஸ் எனக்கு வேண்டாம் என்று முடிவு பண்ணி, டான்ஸ் ஆடறது இல்லை." நடந்ததை இந்து விளக்கினாள்.

"உங்களோட பாட்டைக் கேட்டு இருக்கோம். நடனத் தைப் பார்க்கலாம் என்று எதிர்பார்த்திருந்தால், எங்களை

இப்படி ஏமாத்திட்டீங்களே இந்து? இது உங்களுக்கே நியாயமா?” என்று இவர்களுடன் போட்டியில் பங்கேற்று வெளியேற்றப்பட்ட அவினாஷ் சொல்ல, எல்லோரும் வற்புறுத்த,

“சரி, உங்க ஆசைக்காக நான் கொஞ்சம் இறங்கி வரேன். நான் ஆட மாட்டேன், அபிநயம் மட்டும் பிடிக்கிறேன்.”

ஜனனி, இந்துவைப் பார்த்து, “இந்து, நீங்க அபிநயம் பிடிங்க... ஆனால், இங்கே நீங்க பாடுற பாடலுக்கு பாடிக்கிட்டே செய்யணும். டீல் ஓ.கே.வா?”

இந்துவும் ஒப்புக்கொண்டு அதே போல் அன்று பாடிய ‘ஆகாய வெண்ணிலாவே’ பாடலுக்கு அபிநயம் பிடித்துக் கொண்டு பாடினாள்.

ஏதோ அசையும் ஒலி கேட்க, திடுக்கிட்டுப் பவானியைப் பார்த்த முரளி, “அக்கா, இவ ஹோட்டல் வேலைக்குப் போய்கிட்டுத்தான் இருக்காளா? நீங்களாவது வேண்டாம்னு சொல்லக் கூடாதா?”

“நான் சொன்னா மட்டும் கேட்டுடவா போறா... எல்லாம் உன்னால வந்தது. சொல்லச் சொல்லக கேட்காமல் செய்தே... இப்போ யார் சொல்றதையும் கேட்க மாட்டேங்கிறா... கூட சப்போர்ட்க்கு வேற பிரேம் சேர்ந்துக் கிட்டான். ஐயாவும் சரி சொல்லிட்டாரு.... ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள்தான் லீவ். அதுலேயும் இதோ டான்ஸ் கிளாஸ் சொல்லிக் கொடுக்கக் கிளம்பிட்டா... இன்னும்

என்ன நடக்கப் போகுதோ தெரியலை. ம்ம்... நடக்கிறது நடந்துதான் தீரும்." சலிப்பாக அலுத்துக் கொண்டார் பவானி.

பிரேம் அந்தப் பக்கமாக வருவதைப் பார்த்த முரளி அவனிடம், "ஏன்டா, நீயாவது அவ கிட்டே சொல்லக் கூடாது, ஹோட்டலில் வேலைக்குப் போக வேண்டாம்னு. நீயும் அவ செய்யறதுக்கு எல்லாம் ஒத்து ஊதிக்கிட்டு இருக்கிறே." திட்டத் தொடங்கியவனைக் கை காட்டி, போதும் என்று செய்கை செய்தவன்...

லானில் இடப்பட்டு இருந்த அந்தச் சேரில் உட்கார்ந்து கொண்டு, அங்கே புல்லில் டிரிப் இரிகேஷன் பைப்பில் சொட்டுச் சொட்டாக வெளிவந்து கொண்டு இருந்த தண்ணீரை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்தான். சில நாட்களுக்கு முன் நடந்தது கண்முன்னே விரிந்தது, காட்சியாய்.

திருமணம் நடக்காது என்று கத்திய பிரேம், இந்துவின் கையை பிடித்து இழுத்துக் கொண்டு கீழே விரைய... "என்ன அண்ணா, என்ன விஷயம்?" என்று மெதுவாக ஆரம்பிக்க, அவளைப் பார்த்து முறைத்தபடி,

"நானும் உனக்கு நல்லதை மட்டும்தான் செய்வேன், என்னையும் நீ நம்பலாம்!" வார்த்தைகளைத் துப்பியபடியே மொபலை எடுத்து, அவனின் அப்பாவான வைத்தியை அழைத்தான்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு வைத்தி திருவான்மியூர் வீட்டில் காணப்பட்டார். மாடியில் இருந்த

ஹாலில் ஹரிஹரனையும் ஸ்டீபன் குடும்பத்தையும் தவிர அனைவரும் கூட... வைத்தி, பிரேமைப் பார்த்து, "எதுக்குடா அவசரமாக வரச் சொன்னே?"

"ஏன்ப்பா, நம்ம வீட்டுப் பொண்ணை ஒருத்தனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறோம்... அவன் யார், என்ன, ஏது, எப்படின்னு முழுசா தெரிஞ்சுக்காம கொடுத்து விடுவீங்களா இப்படி?"

"பிரேம், புரியும்படியாகப் பேசு. மொட்டைத் தாத்தா குட்டையிலே விழுந்தான்ங்கிற மாதிரிப் பேசாதே!" என இந்துவின் பாட்டி கண்டிக்க,

"பாட்டி, நமக்கே தெரியும் நம்ம பாப்பா முரளியை லவ் பண்றது. ஆனால், நாம இப்போ நம்ம பாப்பாவைக் கல்யாணம் கட்டப் போறது யாருக்குத் தெரியுமா? இந்த முரளி இல்லை... கட்டப் போறவன் பேரு கேசவ் சுப்பிரமணியம்... அதாவது ஃப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டரா இவங்க பததிரிகையில் வேலை செய்யறவன்... இவங்க அப்பாவின் எழுத்துலக வாரிசு... அரசியல்வாதிகள் வெளியில் இவனைப் பார்த்துப் பயந்தாலும், எப்போ வேண்டுமானாலும் போட்டுத் தள்ளக் காத்திருக்கும் ஒரு உயிருக்கு உத்திரவாதம் இல்லாத ஒருத்தனுக்கு!" காரணங்களை அடுக்கினான்..

பிரேமைப் பார்த்த இந்து, "உனக்கு எப்படிடா அண்ணா தெரியும்...? அந்த கேசவ் சுப்பிரமணியம்தான் மாப்பிள்ளைன்னு?" விசாரிக்கத் தொடங்கினாள்.

"ம்ம்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உன்னோட அழகி... அதான் அலெக்சாண்டிரியா போன் பண்ணினா. உன்னோட ஒரிஜினல் பேரு சுபாபிரியதர்ஷினியா என்று கேட்டு விட்டு... முரளியை லவ் பண்ற இந்து, எப்படி இந்த கேசவ் என்பவனைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சு இருக்கான்னு கேட்க, அப்போதான் மாப்பிள்ளை இதோ உட்கார்ந்து இருக்கிற பிரகஸ்பதி இல்லை, வேற ஒண்ணுன்னு புரிஞ்சது."

"ஆமாம்... அலெக்சாண்டிரியாவுக்கு மட்டும் எப்படித் தெரியும் கேசவ் சுப்பிரமணியம்தான் மாப்பிள்ளைன்னு...?" கொக்கியாய்க் கேள்வியை வைத்தி இழுக்க,

"அப்பா... அங்கே மேரேஜ் லைசன்ஸ் வாங்கினா தானே ரிஜிஸ்டர் முன்னாடி அதுவும் கிறிஸ்துவ முறைப்படி திருமணம் செய்ய முடியும். அதுக்காக எல்லாம் பதியணும் தானே... அதனால் அந்த ஃபார்மாலிட்டி எல்லாம் ஹரி அங்கிள் கேட்க, நான்தான் அலெக்சாண்டிரியா நம்பர் கொடுத்தேன். அவர் அனுப்பிய விவரங்களைப் பார்த்து விட்டுத்தான் அவ இவளுக்குப் போன் பண்ண, இவ எடுக்கலை. அதனாலே விவரம் தெரிவதற்காக என் கிட்டே பேசினா." வைத்தியின் சந்தேகத்தைத் தனக்கு எப்படித் தெரிந்தது என்பதை விளக்கினான் பிரேம்.

இவாஞ்சலின், "சரி, இப்போ என்னதான் செய்யச் சொல்றே?" அடுத்த கேள்வியைப் போட,

"இந்தக் கல்யாணம் என் தங்கைக்கு வேண்டாம். இன்னிக்கு இவளைப் பத்தி எதுவுமே தெரியாமல்

கல்யாணத்தை பண்ணிக்கிட்டு, பின்னாடி என் தங்கையைக் கொடுமைப்படுத்தினால் என்னால பொறுத் துக்க முடியாது. அவளை விடோவா பார்க்கிற சக்தியும் எனக்குக் கிடையாது. சோ, இந்தக் கல்யாணத்தை இத்தோட நிறுத்துறதுதான் சரி.'' பிரேம் சொல்லி முடித்தான்.

“என்னடா பேசுறே, வாக்கு கொடுக்கிறதுன்னா சும்மா இல்லை. ஒரு தடவைக்கு நூறு தடவை யோசித்து, பத்து தடவைக்கு மேலே எல்லார் கிட்டேயும் சம்மதம் வாங்கிக் கொடுக்கப்பட்ட வாக்கு.. நாஞ்சில் நாட்டுக்காரன் நாக்கு பிரண்டாலும் வாக்கு மாறா. இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியாது. அதைத் தவிர வேற ஏதாவது பேசு... ஆனா அதுக்கு முன்னாடி, நான் ஏன் நம்ம பாப்பாவை கேசவ் சுப்பிரமணியத்துக்கு நிச்சயம் பண்ணினார்னு ஹரிஹரன் கிட்டே கேட்கிறேன்!” என்று சொல்லியபடியே தன்னுடைய மொபைலில் ஹரிஹரனைத் தொடர்பு கொண்டார்.

சில அழைப்புகளுக்குப் பிறகு போனை எடுத்த ஹரிஹரனிடம் வைத்தி விசாரிக்க, அந்தப் பக்கத்தில் இருந்து ஹரிஹரன் சொன்ன பதில் எல்லோரையும் அதிர்ச்சி அடைய வைத்தது.

“வைத்தி, நான் இப்போ டெல்லியிலே எங்க அசோசியேஷன் மீட்டிங்ல இருக்கேன்ப்பா. அதனால தான் நீ கூப்பிட்ட உடனே எடுக்க முடியலை. இப்போ நான் உள்ளே போகணும். இந்திரா:வின் கேஸ் தான் டீல்

பண்ணிக்கிறதா கேசவ் சொன்னான். அதுக்கு ஃபீஸா இந்திராவைக் கல்யாணம் செய்துக்கணும்னு சொன்னான். அதான் நான் சரி சொல்லிட்டேன்!" என்று விஷயத்தை முடித்தார்.

ஹரிஹரன் அந்தப் பக்கம் போனை வைத்தவுடன் பிரேம், வைத்தியிடம், "என்னப்பா... என் தங்கை என்ன பொருளா...? ஃபீஸா அவனுக்குக் கொடுத்து விட...!" பொரியத் தொடங்கினான்.

"இதோ பாருடா, இந்தக் கல்யாணம் நடக்கணும். இதுல உன் தங்கையோட வாழ்க்கை மட்டும் சம்மந்தப் படலை. ஒரு பிசினஸ் உலகம் மட்டுமில்லை, இதுல நிறையப் பேரோட வாழ்க்கை, அது தவிர ஒரு கிராமத்தின் எதிர்காலம் எல்லாம் இருக்கு... நீ போய் உன் தங்கைக்காகக் கையெழுத்துப் போடலைன்னா சொல்லு... நான் போய் கையெழுத்துப் போடறேன்... பின்னாடி வர்ற விளைவுகளை அப்புறமா பார்த்துக்கலாம்...!" என்று வைத்தி பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

"பெரியப்பா, நீங்க சொல்றபடியே எல்லாம் நடக்கட்டும். நான் நாளையிலிருந்து அந்த ஹோட்டல் வேலைக்குப் போகப் போறேன். நான் வேலை கேட்டா பிரசன்னா வேலை தருவான்!" என்று தீர்மானமாக அறிவித்தாள்.

இவாஞ்சலின் ஏதோ சொல்ல வாயெடுக்க, அதைத் தடுத்த வைத்தி, "கல்யாணத்திற்குப் பிறகு அவதானே ஹோட்டலை எடுத்து நடத்தணும். இப்பவே ஆரம்பிக்

கட்டும். அப்புறம் ராணி உனக்கு, உங்கம்மாவுக்கு, உங்கண்ணாவுக்கு, ஸ்டீபன் குடும்பத்திற்கு விசா வந்துடுச்சு. முதல்ல இங்கே இருந்து நீ, அத்தை, சவேரியார் மூணு பேரும் கிளம்புங்க. லண்டன்ல உனக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கப் போறோம் என்று வெளியில் சொல்லிக்கணும்.

"அங்கிருந்து பிரான்ஸுக்குப் போங்க. அங்கே இருக்கிற என் பிரெண்ட் அமெரிக்க டிக்கெட்டைக் கொண்டு வந்து தருவான். இன்னும் ஒரு வாரத்துல கிளம்புங்க... ஸ்டீபன் பின்னாடி வருவான். பாப்பாவும் பவானியும் பிரேமும் ஒண்ணா வருவாங்க. சரியா?" திட்டங்களை விவரித்து விட்டுக் கிளம்பினார்.

பிரேமின் தோள்மீது கை வைத்து லேசாகப் பவானி உலுப்ப, சுய உணர்வு பெற்ற பிரேம், பார்வையாலே என்னவென்று கேட்க, "பிரேம், வர்ற வியாழக்கிழமை செமி ஃபைனல் சூட்டிங் இருக்கு. நீயே உன் தங்கை கிட்டே சொல்லிடுப்பா. நல்லா பிராக்டீஸ் பண்ணச் சொல்லு... அதைத்தான் முரளி சொல்லிட்டுப் போனான், நீ கவனிக்கலை. அதான் உன்னைக் கூப்பிட்டுச் சொன்னேன்." பவானி அவனை அழைத்த காரணத்தைச் சொல்ல, பிரேம் சரி என்று தலையாட்டிய படி உள்ளே எழுந்து சென்றான்.

புதன்கிழமை இரவு மணி பத்தினை நெருங்கிய நேரம் வரை இந்து வீடு வந்து சேரவில்லை. சுபாஷுக்குப் போன் அடித்தாலும் அவனின் அம்மா எடுத்தார்கள்.

அவர்களிடம் விசாரிக்க, அவன் தன் நண்பர்களுடன் பாண்டிச்சேரி சென்று இருப்பதாகச் சொல்ல, மன்சூரை அழைக்க, அவரோ தன் குடும்பத்தினருடன் நாகூர் தர்க்கா சென்றிருப்பதாகச் சொல்ல...

வீட்டின் வாசலில் இந்துவின் கார் நிறுத்தப்பட்டு இருக்க... ஹோட்டலில் விசாரித்த பொழுது, அவள் டியூட்டி முடித்து மாலை மூன்று மணிக்கே சென்று விட்டதாகச் சொல்லியதைக் கேட்டு அவளைத் தொடர்பு கொள்ள முயன்றால், மொபைலும் அணைத்து வைக்கப்பட்டு இருந்தது. நேரம் சென்றதே தவிர அவள் வீட்டிற்கு வரவில்லை.

"அவளை இதுக்குத்தான் வேலைக்கு எல்லாம் போக வேண்டாம்னு சொன்னேன்... அதுவும் அவனுங்க கிட்டே. இப்போ எங்கே இருக்கா என்ன செய்யறான்னு ஒண்ணும் தெரியலை... நாளைக்கு ஈவினிங் சூட்டிங் வேற இருக்கு. அதுலேயும் நாங்க எடுத்த முதல் பாட்டு ஏற்கெனவே பாடின பாட்டு சொல்லிட்டாங்க. இப்போ புதுசா எந்தப் பாட்டைப் பாடன்னு தெரியலை!" என்று புலம்பியபடியே உள்ளே சென்று அவனுடைய லேப் டாப்பை இயக்க, அதிலும் ஒன்றும் தெரியவில்லை.

பிரேமும் இந்துவைத் தேடிக் கொண்டே பிரசன்னாவைப் போனில் அழைக்க, அவனோ, "மச்சான்... சாரி, உங்க கிட்டே சொல்லாம வந்துட்டேன். எங்க கட்சியின் அகில இந்திய மாநாடு மத்தியப் பிரதேசத்தில் நடக்கிறது... அதுக்கு நானும் அப்பாவும்

வந்துட்டோம். அதுவும் இது அடுத்த வாரம்தான் இருந்தது. கட்சித் தலைமை வெளிநாடு போறதுனாலே இந்த வாரமே வெச்சுட்டாங்க.

“இந்திரா கிட்டே டெய்லி போன்ல பேசறேன். நான் இல்லாததால் அவதான் ஹோட்டல் முழு இன்சார்ஜ், அவளை போன்ல கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி டிரை பண்ணினேன், எடுக்கலை. நீங்க அவ கிட்டே நான் கேட்டதாச் சொல்லுங்க. நாளைக்கு மத்தியானம் போன் பண்ணறேன்னு சொல்லுங்க,” என்று சொல்லியபடியே போனை அணைத்தான்.

“சரி, இந்துவோட கார் எப்படி இங்கே வந்துச்சு? காலையிலே கார் எடுத்துக்கிட்டு தானே வேலைக்குப் போனா...?” பிரேம், பவானியிடம் கேட்க...

“நான் வெளியில் போயிட்டு ஐந்து மணிக்குத்தான் வந்தேன்... மனோகரி மட்டும்தான் இருந்தாங்க. அப்பவே கார் இங்கேதான் நின்னுக்கிட்டு இருந்துச்சு... நானும் மனோகரி கிட்டே இந்து எங்கேன்னு கேட்டேன். அதுக்கு அவ என் கிட்டே திருப்பி பாப்பா வந்துடுச்சான்னு கேட்டா. அதுக்குப் பிறகுதான் உங்க இரண்டு பேரையும் கூப்பிட்டேன்.”

ஹரிஹரனை அழைத்துப் பவானி விஷயத்தைச் சொல்ல, அவரும் தங்கள் தொழிலுக்கு உதவி புரியும் டிடெக்டிவ் ஆட்களை அழைத்து, இந்துவின் போட்டோவைக் கொடுத்துத் தேடச் சொன்னார்.

பிரேமின் கைப்பிடித்து இழுத்துச் சென்று தன் அப்பாச்சியில் அமர வைத்து, அதைக் கிளப்பிக் கொண்டு சென்னை மாநகர வீதியில் இரவு நேரத்தில் இந்துவை எங்கே தேடுவது என்ற குழப்பமும், எங்கு சென்று யாரிடம் மாட்டியிருப்பாளோ என்ற அச்சமும் சூழத் தேடிக் கொண்டு இருந்தார்கள் மாமனும் மச்சானும்.

## 24

அதிகாலை ஐந்து மணியளவில் முரளியின் போன் அழைக்க, வேகமாக எடுத்து நம்பரைப் பார்க்க, அது அவனின் இந்திராநகர் வீட்டின் லேண்ட் லைன் எண்ணைக் காட்டியதால், குழப்பத்துடன் போனை ஸ்பீக்கர் மோடில் போட்டான்.

"முரளி, போன் எடுக்க இவ்வளவு நேரமா...? இங்கே இந்திராவுக்கு உடம்புக்கு முடியலை. நீ இங்கே பிரிஜ்ல வைத்திருந்த மெடிசனை நம்ம டாக்டர் ஆனந்தன் வந்து போட்டுட்டார், நீ என்ன செய்றே... பவானியையும் பிரேமையும் கூட்டிக்கிட்டு பெசன்ட் நகர் அபார்ட் மெண்ட்டுக்கு வந்து சேரு.

"இந்திரா ஏற்கெனவே வைத்திக்குப் போன் பண்ணிட்டா. அவன் முதல் பிளைட் பிடிச்சு இங்கே வந்துடறேன்னு சொல்லி இருக்கான். போன்ல எதுவும் பேச வேண்டாம்... நீ நேர்ல வா, பேசிக்கலாம்," என்று சொல்லி ஹரிஹரன் போனை வைத்தார்.

முரளி, பவானியைப் பார்த்து, "அக்கா, கிளம்புங்க. தர்ஷினி வண்டி வெளியிலேதானே நிக்குது...? அதிலேயே எல்லோரும் போயிடலாம்." சொல்லி விட்டுப் பிரேமைப் பார்த்து, "மச்சான், நீயும் கிளம்புடா!" என்றான்.

பிரேம் அசால்ட்டாகத் தலையை திருப்பியபடி, "ம்ம்... இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." சத்தமாக முணுமுணுக்க...

"முரளி, இந்துவுக்கு இன்னும் மெடிசன் ஏதாவது எடுத்துக்கவா? இல்லை, அங்கே இருக்கிறதே போதுமா?"

"வேணாம் அக்கா... நம்ம ஃபேமிலி டாக்டர் குருநாதன் மாப்பிள்ளை ஆனந்தன் வந்து இருக்கார். அவர் அவளுக்குத் தேவையானதை வைத்துத்தான் இருப்பார். அது தவிர, இப்போ நாம போகப் போறது நான் இருந்த அபார்ட்மெண்ட்தான். வாங்க, சீக்கிரம் கிளம்பலாம்."

"முரளி, இவ ஏன் இந்திரா நகர் வீட்டுக்குப் போனா, எதுக்குப் போனா, எப்படிப் போனா? ராத்திரி முழுசும் தேடி இருக்கோம்... நான் இங்கேதான் இருக்கேன் என்று ஒரு போன் பண்ணிச் சொல்லி இருக்கலாமில்லே?" பவானி புலம்ப,

"ம்ம்... வர வர அவளுக்குச் செல்லம் ஓவரா போய்க்கிட்டு இருக்கு. என்னை என்ன செய்யச் சொல் றீங்க? நீங்களும் அப்பா பேசும் போது கேட்டுக்கிட்டு தானே இருந்தீங்க. நீங்களே கேட்க வேண்டியதுதானே

இந்தக் கேள்விகளை உங்க அய்யா கிட்டே? சரி, போன்ல கேட்க வேண்டாம்... நேர்ல போறோமில்லே... அங்கே கேளுங்க." முரளி, பவானிக்குப் பதில் சொல்வது போல் தன்னுடைய மனதிற்கும் சேர்த்துச் சமாதானம் சொல்லிக் கொண்டான்.

இவர்கள் மூவரும் முரளி முதலில் தங்கிருந்த அபார்ட்மெண்ட்டுக்கு வந்த பொழுது, வீட்டு ஹாலில் ஹரிஹரனும், சுபாஷும் தவிர இருவர் அமர்ந்திருந்தனர். அவர்களைப் பார்த்த பவானி, "மீதா, ரோஷினி... நீங்க இரண்டு பேரும் எப்படி இங்கே? அதுவும் ரோஷினி, நீ எப்போ பூனாவிலே இருந்து இங்கே வந்தே...? நீங்க ரெண்டு பேரும் இந்துவை எப்போ பார்த்தீங்க, எப்படிப் பார்த்தீங்க? அவளை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

மீதா, தனக்கு எப்படி இந்துவைத் தெரியும் என்றும், அவள் உதவி செய்ததைப் பற்றியும் சொல்லி, "மீதி எல்லா விஷயத்தையும் நான் அப்புறமா அய்யா கிட்டே சொல்லும் போது சொல்றேன்."

"அவ எங்கே அங்கிள்?" பிரேம் கேட்க...

"அதோ அந்த ரூம்லேதான் படுக்க வெச்சுருக்கேன். போன தடவை வந்த மாதிரி அவ்வளவு சிவியரா இல்லை." பிரேம் கேட்ட கேள்விகளுக்கு, முரளியைப் பார்த்தவாறே பதிலளித்த ஹரிஹரன்,

"எப்படி அப்பா...? அவளுக்கு வலிப்பு வர்ற அளவுக்கு, என்னதான் நடந்தது? உங்களை எப்போ

பார்த்தா? நம்ம வீட்டுக்கு எப்போ வந்தா?" மகன் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கத் தொடங்கினார்.

"இன்னிக்குக் காலை நாலரை மணிக்கு போன் பண்ணினாடா. 'மாமாப்பா, நான் உங்களைப் பார்த்துப் பேசணும்... நான் இப்போ இங்கே தெரு முனையிலே நிக்கிறேன்... வரட்டுமா?'ன்னு கேட்டா. சரின்னு சொன் னேன். ஒரு பத்து நிமிசத்துக்குள்ளே வந்தாடா. அவ வரும் பொழுது இவங்களும் அவ கூடவேதான் வந் தாங்க. வந்தவ என்கிட்டே, 'கேசட் போடற மாதிரியான ஹாண்டிகாம் உண்டே... அதைக் கொடுங்க'ன்னு சொன் னாடா. நானும் கொடுத்தேன்.

"ஏதோ ஒரு கேசட் போட்டுப் பார்த்துகிட்டே இருந்தா... என்னம்மான்னு கேட்டதுக்கு, 'பெரியப்பா வரட்டும்... காலையிலே முதல் பிளைட் பிடித்து வர்றேன்னு சொன் னார். நான் போன் பண்ணிச் சொல்லிட்டேன்'னு சொன்னா. திடீர்னு அந்த கேமிரா உள்ளே இருந்து அந்த கேசட்டை வெளியில் எடுத்து, அந்த டேப் முழுசும் உருவிட்டு கேசட்டை உடைத்து, அந்த எடுத்த டேப்பைக் கொண்டு போய் நம்ம அடுப்படியில் கேஸ்ல போட்டு கொளுத்தினா.

"அது எரிஞ்சுக்கிட்டு இருக்கும் போதே அங்கேயே வலிப்பு வந்து விழுந்துட்டா. நல்ல வேளை, சுபாஷ் அவ பின்னாடி நின்னதால தலையிலே எங்கேயும் அடிபடலை. நான் உடனே நம்ம டாக்டரை வரச்சொல்லி, செட்டக்ஷன் போட்டு, இங்கே தூக்கிட்டு வந்துட்டேன்... வைத்தி வர்ற

வரைக்கும் அவ தூங்கட்டும். பின்னாடி பேசிக்கலாம்." நடந்ததை விவரித்தார்.

எல்லோருக்கும் இரவில் உறக்கம் என்பது இல்லாததால், அங்கே அமர்ந்தது போலத் தூங்க ஆரம்பித்தனர். சில மணி நேரத்துக்குப் பின்னால் விழித்த வர்களுக்குக் காபியை அளித்தபடியே ஹரிஹரன், "ம்ம்... வைத்தி போன் பண்ணினான். 6.45க்கு பிளைட் எடுத்துட்டான். இங்கே 9.45க்கு வெளியிலே வந்துடுவான். இங்கே 10.30 மணிக்குள்ளே இருப்பான். கார் அனுப்ப வான்னு கேட்டேன்... நானே வந்துடறேன்னு சொல்லிட் டான்.

"அவன் வர்றவரைக்கும் அவங்கவங்க வேலை யைப் பாருங்க. ஏதோ அவ மனசைப் பாதிக்கிற மாதிரி யான சம்பவம் நடந்து இருக்கு. அந்தக் கேசட்ல எதுவோ இருக்கு. பார்த்ததைச் சொல்லும்போது அவளுக்கு உடம்புக்கு முடியலை. என்ன செய்ய... அதுதான் நான் சாந்தினியை இங்கே வரச்சொல்லியிருக்கேன்."

தான் செய்து இருக்கும் முன்னேற்பாடுகள் பற்றி விளக்கினார்.

காலை பதினொன்றரை மணிக்கு எல்லோரும் கூடினர். வைத்தி, இந்துவைப் பார்த்து, "என்ன விஷயம் பாப்பா... காலையிலேயே அவசரமாகக் கிளம்பி வரச் சொன்னே?"

"ம்ம்... சொல்றேன் பெரியப்பா. ஒரு மூணு மாசத்துக்கு முன்னாடி நான் பிரசன்னா கிட்டே கேட்டேன்,

'எக்ஸிகியூட்டிவ் ரூம் எப்படி...? பார்க்க முடியுமா?'ன்னு. அப்போ அவன் என்னை அங்கே கூட்டிக்கிட்டு போய் காண்பிச்சான். அந்த நேரம் சுபாஷுக்கு அவன் ஆபீஸ்ல இருந்து கால் வந்தது, ஒரு மாதிரியான கொர கொரன்னு... அதாவது டி.வி. கிட்ட நம்ம செல்போன் கொண்டு போனா ஒரு மாதிரி சத்தம் கேட்குமே... அது போல வந்ததுன்னு வெளியில் வந்து சொன்னான் சுபாஷ்.

"அப்போ நாங்க ரெண்டு பேரும் யோசிச்சோம். அவன் நெட்டுல படிச்சுட்டு வந்து சொன்னான்... அங்கே ஏதோ ஒரு டிவைஸ் ஆபரேட்டிங் இருக்குன்னு. நாங்க நின்னது சுவிட்ச் போர்ட் கீழே. அப்போ அங்கேதான் ஏதோ இருக்குன்னு சொல்லி நாங்க இரண்டு பேரும் அவனுக்கு சந்தேகம் வராத படி ஹோட்டல் போட்டோஸ் வெச்சுருப்பாங்களே, அதைப் பார்த்தோம். எங்களுக்கு எதுவுமே புரியலை.

"நாங்க அங்கே இருக்கும் போதே ஹவுஸ் கீப்பிங்ல இருந்து ஒரு போன் வந்துச்சு. டீலக்ஸ் ரூம்ல இருந்தவங்க காலி பண்ணறதாகவும், அவங்க பாத்ரூம்ல இருக்கிற பிளக் அடாப்டர் காணோம் என்று பிரசன்னா பதறியடிச்சு, ஃப்ரன்ட் ஆபீஸ் நோக்கி ஓடினான். ஒரு பிளக்குக்காக எதுக்கு இந்த ஓட்டம்னு நாங்களும் போனோம். அங்கே ரூமை வெகேட் பண்ணறவங்க, தங்கள் ஊரில் இருந்து அடாப்டர் கொண்டு வரலை. அதுக்குப் பதிலா இதை நாங்க எடுத்துக்கிறோம்... என்ன அமௌண்ட்டோ அதை பே பண்ணறோம்னு சொல்லியும் முடியாதுன்னு சொல்லி பிரசன்னா வாங்கி வெச்சுட்டான்.

“நாங்க கேட்டதுக்கு, இது வேற ஒருத்தவங்க பிராப்பர்ட்டி. அவங்க கிட்டே ஒப்படைக்கும் போது இதெல்லாம் சரியா இருக்கணும்னு சொல்லிச் சப்பை கட்டு கட்டினான். நாங்களும் இதை வந்த உடனே மன்சூர் அண்ணா கிட்டே சொல்ல, அவங்க சரி விசாரிக்கிறேன்னு சொன்னாங்க. நீங்க நிச்சயம் பண்ணின மறுநாள் மன்சூர் அண்ணா சொன்னாங்க... அந்த பிளக்கின் உள்ளுக்குள் ஒரு கேமிரா செட் செய்து இருக்குன்னு கண்டுபிடிச்சுச் சொன்னார்.

“நம்ம ஹோட்டலுக்குள்ளே என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கத்தான் அங்கே வேலைக்குப் போனேன். அப்போதான் நான் கேமிரா பிளாக்கர் போட்டு ஒரு ரூம்ல பார்த்தப்போ, ஏசியிலும் கேமிரா செட் பண்ணியிருக்கிறது கண்டு பிடிச்சேன். அப்போதான் இந்த விஷயத்தை நான் சுபாஷ் கிட்டே சொன்னேன்.

“அவன்தான் எல்லாத்தையும் கண்டுபிடிக்கணும்னு சொல்ல, இப்போ திடீர்னு நவநீதமும் பிரசன்னாவும் இல்லாத இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, எனக்கு அவன் கொடுத்த உரிமையை வெச்சு உள்ளே நுழைந்து பார்த்தோம். எனக்கு உதவுவதற்காக நம்ம மீதா கிட்டே உண்மையைச் சொன்னேன். அவங்க எங்களுக்கு ரோஷினி நெட்வொர்கிங்ல இருக்காங்க... அவங்களும் வந்தா உதவியாக இருக்கும்னு சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போனாங்க.

“மீதாவும் சுபாஷும் இங்கே அடையார்லேயும் நானும் ரோஷினியும் உத்தண்டியிலேயும் உள்ளே

புகுந்தோம். என்னை அடையாளம் தெரியக் கூடாதுன்னு சொல்லி நான் புர்கா போட்டுக்கிட்டேன். முதல்ல அடையார்லே தேடிப் பார்த்தவங்களுக்கு ஒண்ணும் கிடைக்கலை. கம்ப்யூட்டர் ரூம் கன்ட்ரோல் செக்யூரிட்டிக்கு கோக்ல பெயின் கில்லர் மாத்திரை போட்டுக் கொடுத்து போதையில் ஆழ்த்திட்டுதான் தேடினாங்க.

"நம்ம தேவசாகரி அத்தையோட மச்சான் பையன் தனசேகர் அண்ணா உத்தண்டியிலே இருக்கிறாங்கன்னு தெரியும். அவங்களுக்கு நம்ம ஏகாம்பரம் அங்கிள் மூலமா எனக்கு உதவி செய்யச் சொல்ல, அடையார்லே செய்த அதே வேலையை இங்கே செய்து, அவங்களைப் போதையில் ஆழ்த்திப் பார்த்தப்போ தெரிந்தது.

"இந்த கேமிராக்கள் எல்லாமே வயர்லெஸ் முறையில் கனெக்ட் ஆகி, அடையார் சுபா இன்ஸ் செக்யூரிட்டி பேனல் மூலமா நம்மோட உத்தண்டி சுபா ரிசார்ட்ல இருக்கிற செக்யூரிட்டி கன்ட்ரோல் ரூம்ல படமா எடுக்கப்படுகிறது வரைக்கும் கண்டு பிடிச்சாங்க. இனிமேல் இந்த கேமிரா எடுக்கப்படுபவை படமாகாமல் தடுக்க, அந்த செக்யூரிட்டியிலே இருக்கிறவன் கிட்டே இருந்து ஆக்சஸ் பாஸ்வேர்ட், ஏற்கெனவே எடுக்கப்பட்ட படங்கள் ஏதாவது இருக்குதான்னு தேடும் போதுதான், எங்கப்பா இன்ஸ்டால் பண்ணின லாக்கர் இருந்தது.

"அதிலே எதுக்கும் பார்க்கலாமேன்னு ஒரு ஆர்வத்துல அப்பா எப்பவும் யூஸ் பண்ற வார்த்தையை பாஸ்வேர்ட் போட அது ஓபன் ஆச்சு. அதுல தான் அந்த

வீடியோ கேசட் பார்த்தேன்!" மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டு வந்த இந்து தயங்கி நிறுத்த...

"என்னம்மா... எதுவாக இருந்தாலும் சொல்லு. ம்ம்... தயங்காதே!" சாந்தினி சொல்ல, எல்லாரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு,

"அது கைக்குக் கிடைக்கவும் இவங்களும் வேலையை எல்லாம் முடிச்சுட்டு ரெடியா இருந்தாங்க. இந்த வீடியோ கேசட், அது தவிர பென் டிரைவ் சிலது இருந்தது. நாங்க ஆக்சஸ் பண்ணின கம்ப்யூட்டர்ல இருக்கிற எல்லாத்தையும் காப்பி பண்ணிட்டு எடுத்துக் கிட்டோம். இங்கே மாமாப்பா வீட்டுக்கு வந்து அந்த கேசட் பார்த்த பொழுது அப்பாவின் தற்கொலைக்குக் காரணம் என்னன்னு புரிந்தது. அந்தக் கேசட்ல..."

சிறிது நேரம் தயங்கி விட்டுப் பின் மெல்ல, "அம்மா குளிக்கும் போது எடுக்கப்பட்ட காட்சிகளும், மற்றொன்றில் எங்கப்பாவும் எங்கம்மாவும் தனியாக பெட்டில் இருந்த காட்சிகளும் இருந்தன. என்னைத் தவிர வேற யாரும் பார்க்கக் கூடாதுன்னு அதை அழித்தேன்.

"அம்மாவை எவ்வளவு மோசமாகப் பேசினேன். இந்தக் கேசட் மட்டும் அம்மா பார்த்து இருந்தா என்ன செய்து இருப்பாங்கன்னு யோசிச்சப்போதான் எனக்குத் திருப்பியும் வலிப்பு வந்தது."

சோபாவில் அமர்ந்திருந்த முரளி, இந்துவை பார்த்து இரு கைகளை நீட்ட, வேகமாகத் தான் இருக்கும்

இடத்திலிருந்து எழுந்து அவனின் கைகளுக்குள் அடக்க மானாள்.

அவன் இந்துவின் தலையை தடவியவாறே, "ஒண்ணுமில்லடா... எல்லாம் சரியாப் போச்சு. என்ன, நீ தனியாகப் போய் இருக்க வேண்டாம். ஒண்ணுக்கு இரண்டு ஆம்பிளைங்க நாங்க இருக்கோம்... எங்களைக் கூப்பிட்டு இருக்கலாம். ஏதாவது ஏடாகூடமா மாட்டிக் கொண்டு இருந்தால் என்ன செய்யறது சொல்லு, ஜெயலஷ்மி வளர்த்த பொண்ணுடா நீ... உனக்கு இவ்வளவு தைரியம் இருக்கிறது ஒண்ணும் ஆச்சரியம் இல்லை. எங்ககிட்டேயும் சொல்லிட்டுச் செய்து இருக்க லாம்.

"இதுக்கு மேலே உள்ளதை வைத்தி அங்கிள் பார்த்துப்பாங்க. உங்கம்மாவைப் பேசினதுக்கு நீயே அவங்களுக்குப் போன் பண்ணி மன்னிப்புக் கேளு. ரொம்ப மனசைப் போட்டுக் குழப்பிக்காதே!" இந்துவின் தலையைத் தடவியவாறே ஆதரவாகச் சொன்னான்.

கேவல்களுக்கு இடையே, "நான் அம்மா கிட்டே நேர்ல போய்ப் பேசிக்கிறேன்."

"சரி, இப்போ போய் சூட்டிங்குக்கு ரெடியாகு, போ!" இந்துவின் புத்தியைத் திசை திருப்பி விட்டு, அவளைப் பின்தொடர்ந்தான் முரளி.

சூட்டிங் இடத்தில் இவர்கள் உள்ளே நுழைந்தவுடன், அங்கு இருக்கும் ஆர்கனைசர் வந்து இவர்களின் இரு

பாடல்களையும் பாட முடியாது என்று சொல்ல, அதை முரளிக்குத் தெரியப்படுத்தியதையும் சொல்ல, முரளியை முறைத்த இந்து, "ஏன் இதை என் கிட்டே சொல்லலை. சரி, வேற பாட்டை செலக்ட் பண்ணியிருக்கலாமில்லை?" பொரியத் தொடங்கினாள்.

அவளை முறைத்தபடியே, "சொல்றதுக்குத் தேடிய போது தான் உன்னைக் காணோம். தேடுறதுக்கே நேரம் சரியாப் போச்சு... இதிலே நான் எங்கிருந்து பாட்டை செலக்ட் பண்றது...?" திருப்பி அவளிடம் எரிச்சலுடன் சொன்னான்.

இருவரும் ஒருவரை மாற்றி ஒருவர் குற்றம் சொல்லிச் சண்டையிட்டுக் கொண்டு இருக்க, ஆர்கனைசர் அவர்களிடம் அவர்களது பாடல்களைப் பாட வருமாறு அழைக்க... முரளி, இந்துவைப் பார்த்து, "உஷ், சும்மா வா, நான் பார்த்துக்கிறேன்."

"என்ன பாட்டுப் பாடப் போறோம்? லிரிக்ஸ் பார்க்காம எப்படிப் பாட?"

"எல்லாம் நம்ம பாட்டுதான். நமக்கு இந்தப் பாட்டு மனப்பாடமாகத் தெரியும்!" திரும்பி அவளிடம் சொல்லி விட்டு, 'வாராயோ வெண்ணிலாவே' மிஸ்ஸியம்மா படத்தின் பாடலைப் பாட, இந்துவும் அவனுடன் சரியாக இணைந்து கொண்டாள்.

இவர்கள் பாடி முடித்த பிறகு பிரேம் இவர்களிடம் வந்தான். "பாப்பா வா, கொஞ்ச நேரம் வெளியிலே இருக்கலாம்."

"என்னண்ணா?"

"வா, சொல்றேன்." தனியாக அழைத்துச் சென்று சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, இந்துவிடம், "நீ கொண்டு வந்ததை போலீஸுக்குக் கொண்டு போக வேண்டாம்னு முடிவு பண்ணியிருக்காங்க. வெளியிலே தெரிந்தால் ஹோட்டல் பேர் கெட்டுப் போயிடும். அதிலே இருக்கிறது நிறையக் குடும்பப் பெண்கள். அது வெளியில் வந்தால், அந்தப் பெண்களின் குடும்ப வாழ்க்கைப் பாதிக்கப் படலாம்.

"அந்தப் பெண்களைத் தவிர, பெண்ணைப் பெற்றவர்களும் அந்தப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை களும் இந்தச் சமூகத்தில் கேவலமாகப் பார்க்கப்பட்டு நடத்தப்படுவார்கள். நாம் ஒருவர் வாழ்வதற்காக அத்தனைப் பெண்களின் வாழ்க்கையைப் பலியாக்க முடியாது. அதுக்காக வேண்டாம்னு முடிவு பண்ணி இருக்கு... அம்மா அப்பாவோட கேசட் அதுதான் ஒரிஜினலான்னு தெரியலை? அதைப்பத்தி அப்புறமா பேசிக்கலாம்னு சொல்லியிருக்காங்க. இன்னும் மூணு நாள் கழிச்சு நீ, நான், பவானிக்கா அமெரிக்கா போகிறோம். சித்தி கிட்டே இதைப் பத்தி ஒண்ணும் சொல்ல வேண்டாம்னு அப்பா சொன்னாங்க.

"உன்னை மாமா காப்பாத்தின அன்னிக்கு மட்டும் ஹரி அங்கிள் தலையிடாமல் இருந்து இருந்தால் என்ன நடந்து இருக்கும்னு நினைச்சு அப்பாவுக்கு லேசா நெஞ்சு வலி வந்துடுச்சு."

“ஐயோ! பெரியப்பாவுக்கு என்னாச்சு?” இந்து பதட்டத்துடன் சத்தமாக வினவ,

“எதுக்கு இப்போ கத்துறே? மாத்திரை இருந்ததாலே போட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்க வெச்சு இருக்கேன். டாக்டர் வேற கூட இருக்கிறதுனால பிரச்சனை ஒண்ணு மில்ல.”

பிரேம் பேசிக்கொண்டு இருக்க, இந்துவின் பார்வை எங்கோ வெறித்துக் கொண்டு இருக்க, அவள் பேசுவதைக் கவனிக்கவில்லை. அவளின் எண்ணவோட்டம் எங்கோ சுற்றிக் கொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்த பிரேம், இந்துவின் தோளைப் பற்றி உலுக்கிக் கண்களால் என்ன வென்று கேட்க...

“அண்ணா...! நான் அந்த கேசவைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். என்னடா புதுசா இவ ஒரு குண்டைத் தூக்கிப் போடறாளேன்னு நீங்க யோசிக்கிலாம். ஆனால், இன்னிக்கு நான் அந்த நவநீதம் கிட்டே இருந்த கேசட் பார்த்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தேன். என்னோட குடும்ப மானத்தைக் காக்க எங்கப்பா உயிரைக் கொடுத்தார்.

“நான் மீளாத புதைகுழிக்குள்ளே மாட்டக் கூடா துன்னு நினைச்ச எங்கம்மா, என்னை முரளி கிட்டே கொடுத்துத் தப்பிவிக்கச் சொல்லும் போது, கூடவே என்னைப் பத்தி எதுவுமே தெரியாம எனக்காக உயிர் கொடுக்கவும் தயாரான பவானிக்கா, வயதான காலத்தில்

தன்னோட துணையோட இருக்கணும்னு விருப்பப் படுவாங்க.

"ஆனால், எங்க மாமாப்பா தன்னோட அறுபது வயசிலே அத்தையம்மாவையும் பிள்ளையையும் அங்கே விட்டு விட்டு இந்த ஊர்ல இருக்கிற கேடிப் பசங்களுக்குப் பயந்து கிட்டு தனியா உட்கார்ந்து இருந்தாங்களே... அது மட்டுமா... கடைசியா தன் மனைவியின் முகத்தைக் கூடப் பார்க்க வரவில்லையே...! ஏன், எனக்காகத்தானே...! அது மட்டுமா...? எங்கப்பா உண்டாக்கின ஹோட்டல் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக இந்தக் கேடிகளிடம் அடிமை வேலை செய்து கொண்டு... நான் வருவேன் என்ற ஒரே ஒரு நம்பிக்கை மட்டும் வைத்து இருக்கிறார்களே நம்முடைய ஹோட்டல் ஊழியர்கள்...

"தன்னை வளர்த்த குடும்ப வாரிசு, தான் இந்த நாட்டில் இல்லாத பொழுது இறந்து விட்டான் என்ற ஒரே காரணத்துக்காக இன்று வரை அமெரிக்காவுக்கு வராமல் இருக்கிறாரே என் பெரியப்பா... இவங்க எல்லாம் என்னோட கல்யாணம் நடந்தால், இவர்கள் படட துன்பத்திற்கு ஒரு விடிவு காலம் பிறக்கும் என்பதால்தான் இந்தத் திருமணம் செய்யலாம் என்று முடிவு எடுத்து விட்டேன்..."

இடையிட்டான் பிரேம்... "நீயும் அவனும் எவ்வளவு லவ் பண்ணறீங்க... முரளியை மறந்துட்டு நீ கேசவ் கூட வாழ்ந்துட முடியுமா? பொய் சொல்லாமல் உன் மனசைத் தொட்டு உண்மையைச் சொல்லு பார்க்கலாம்!"

"எங்களோட காதலுக்கு நான் மட்டும் போராடினால் போதுமா? இவனும் சேர்ந்துதானே என் கூடப் போராடணும்? அது இல்லையே...! இவன் அவங்க அப்பா கிட்டே நாங்க காதலிக்கிறதை முன்னாடியே சொல்லி இருக்கணும் இல்லே... இவன் மாப்பிள்ளை இல்லைன்னு சொன்னப்போ கூட, உன் கிட்டே சமாதானம் பேசத்தானே ரெடியானான்? நான் முடிவு பண்ணிட்டேன் அண்ணா... கேசவ்வைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, அவன் கிட்டே நடந்த உண்மைகளைச் சொல்லி, என் சொத்து பாதிக்கப்பட்டவங்க எல்லோருக்கும் கிடைக்கணும். இது அந்த நவநீதம் கைக்குப் போகக் கூடாது.

"என்னை எனக்காகவே காதலிக்கிறது உண்மை என்றால் திருமணத்தையும் என்னையும் கோர்ட்டில் நிரூபித்த பிறகு, என் கணவனாக உயிலில் கையெழுத்து மட்டும் போடு. என்னால் உன்னுடன் மனம் விரும்பி வாழ முடியாது. நான் உடலால் மட்டுமில்லை மனதாலும் கற்பிழந்தவள். நான் முரளியின் நினைவில் என் மீதி வாழ்க்கையை வாழப் போகிறேன் என்று சொல்லிப் பிரிந்து விடுவேன்.

"எனக்காக எல்லோரும் ஒவ்வொரு விதமான தியாகம் பண்ணினாங்க. நான் எல்லாருக்காவும் என்னோட வாழ்க்கையைத் தியாகம் பண்றேன்... முரளியை ஒரு நண்பனாக மட்டுமே காண முயற்சி செய்யப் போகிறேன்!" இந்து தன் மனக் குமுறலைக் கொட்ட, அதைக் கேட்ட பிரேம் சில கேள்விகள் கேட்க...

அதற்கு அவள் அளித்த பதில் நிறைவைத் தர, தன் தங்கையை ஆறுதல் அளிப்பது போல் அணைத்தபடி இருக்க, அப்பொழுது அங்கு வந்த முரளி, "அடுத்த பாட்டு என்ன பாடப் போறோம்...? அதுக்கு ஏதாவது ரெடி பண்ணியாச்சா?" இந்துவை விசாரிக்கத் தொடங்கினான்.

அவனையே உற்றுப் பார்த்த இந்து மனதிற்குள் நிகழ்ந்த சம்பவங்கள் வலம் வரத் தொடங்க, அதன் பிரதிபலிப்பாய்க் கண்களில் நீர் கோக்க, "உங்களுக்கு லலிதா ராகம் தெரியுமா? அந்த ராகத்தில் பாட்டு வரும் ஆதி தாளம்... லிரிக்ஸ் மகளிரின் சிறகுகள் என்ற இணையதள கவிதாயினிகள் இருவர் எழுதிய கவிதையைப் பாட்டாகப் பாடப் போறோம். யாராவது ஒருத்தர் ஒரு முறை லிரிக்ஸ் பார்த்துப் பாடலாம் என்ற ஒரு ஆப்சனை நாம் இதுவரைக்கும் உபயோகப் படுத்தலை. அதை நாம இன்னிக்குப் பயன் படுத்திக்க லாம். இந்தாங்க லிரிக்ஸ் பேப்பர்!" சூட்டிங் நடக்கும் அரங்கு நோக்கி நடந்தாள்.

எப்படிச் சொல்வேன் நான் எனது
நன்றியை எப்படிச் சொல்வேன்?
உயிரின் உறவாகி வந்தவன் நீ!
எனதுயிரின் வலி நீக்கி
உயிர்ப்பிக்கச் செய்தவன் நீ!
உனது கரங்களின் துணையின்றி
நான் மீண்டு இருக்க முடியுமா?

ஜென்மங்கள் பல கடந்தாலும் நீ
செய்த தியாகங்கள் மறந்திடுமா?
செய்த உதவியை நீ சொன்னதுமில்லை
செய்நன்றியை நானும் மறக்கவில்லை!
என் வாழ்வின் அர்த்தங்கள் சொன்னவனே...
நீ வர வேண்டும் என்னோடு என்றென்றும்...
நீண்ட நாள் அவாவைச் சொன்னேன் எனதுயிரே
இந்தக் குயில் வாழ விரும்பிக் கூடு தந்த வள்ளலே!
இனி என்றும் உன் நினைவில் வாழும் இக்குயிலே!
சுழன்றடித்த சூறாவளியில் கிளம்பி வந்த புழுதிப் புயலில்
என் கண்மணி  தனைக் காக்க
என் இமைதனை மூடினேன்!
என் கண்ணின் மணி...
எனக்கே நன்றி சொல்லக் கூடுமோ...?
இடது விழி கலங்கி....
வலது விழி கலங்காமல் போகுமோ...?
எனது இன்னுயிரை நானே மீட்க என்னுயிரே
எனக்கு நன்றி சொல்லக் கூடுமோ...?
அனிச்சைச் செயலாய் நான் எனையே காக்க...

உன் இதழ் மலர்ந்த நன்றியில்...
அனிச்ச மலராகிப் போனேன் கண்மணி...!
உனக்கே உனக்கென்று நெஞ்சங்கூட்டைப் பரிசளித்தேன்!
உன்னில் இளைப்பாற மட்டுமே
உளமார விருப்பம் கொண்டேன்...!
வாயில் திறந்தும் நிறைந்து எனை நீ
வரவேற்கும் நாளுக்காய் காத்திருப்பேன்
என் கண்மணியே...!

சூட்டிங் பொழுது அவள் பாட வேண்டியதைக் கண்ணீர் கண்களில் கரை கட்டப் பாட, அவனும் இணைந்து பாட...

இருவரும் பாடி முடித்தவுடன் எல்லோரும் எழுந்து நின்று அரங்கு நிறை கரகோஷம் செய்தார்கள்.

நடுவர்கள் தங்களுக்குள் சிறிது நேரம் பேசிக் கொண்டு, அரவிந்த் இவர்களைப் பார்த்து, "யாரோ இசையமைத்த பாட்டினைப் பாடாமல், நீங்களே இசையமைத்து ஒரு கவிதையைப் பாடலாகத் தந்து இருக்கிறீர்கள், அதற்கு எங்களது வாழ்த்துக்கள். இதில் முதலில் நீங்கள் தேர்வு செய்த பாடல் தவறுதலாகத் தேர்வு செய்ததால், இரண்டாவது பாட்டிற்குப் போதிய அவகாசம் இன்மையால், நீங்கள் இந்தக் கவிதையைப் பாட்டாகப் பாடினீர்கள்,

"ஆனால் குறுகிய நேரத்திற்குள் அருமையாக இசையமைத்து இருந்ததற்கு மிக்கப் பாராட்டுகள். இதில் முரளி லிரிக்ஸ் பார்த்துப் பாடியதை ஒரு மைனஸ் பாயிண்டாக நாங்கள் பார்க்கவில்லை. எனவே உங்களுக்கு எந்த மார்க்கையும் குறைக்காமல் முழுவதை யும் அளிக்கிறோம்!" என்று சொல்ல, முரளி பக்கத்தில் நின்று கொண்டிருந்த இந்துவை தோளோடு இறுக்கி அணைத்துத் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தி னான்.

சிலமணி நேரங்களுக்குப் பிறகு இவர்கள் இரு வரும் இறுதிப் போட்டிக்குச் செல்வதற்கு முதன்மை யாகத் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்க... இந்துவின் முகத்தில் அவ்வளவு நேரமாக இருந்த இறுக்கம் சிறிது தளர்ந்து, சிறு புன்னகை பூத்தது.

திட்டமிட்டபடியே பவானி, பிரேமுடன் இந்து அமெரிக்கா நோக்கிப் பயணித்தாள்.

## 25

திருமண நாளுக்கு நான்கு நாள் களுக்கு முன்னமே இந்துவும் பவானியும் பிரேமின் துணையுடன் அமெரிக்கா வந்து இறங்கினார்கள்.

முரளியின் வீட்டில், ஏற்கெனவே சென்று இருந்த இந்துவின் குடும்பம் பிரேமின் அம்மாவுடன் தங்கியிருக்க, இவர்கள் மூவரும் அங்கேயே சென்றனர்.

மறுநாள் பவானி எல்லோரையும் அழைத்துப் பேச ஆரம்பித்தார்கள். “இந்து, இன்னும் மூணு நாள் தான் கல்யாணத்துக்கு இருக்கு. உனக்குக் கல்யாணப் புடவை வேண்டாம்னு சொல்லிட்டாங்க உங்கம்மா. அதனால் அவங்க ஆசைப்படியே வெள்ளை கவுன்தான். அது எல்லாமே ரெடியாயிடுச்சு. இன்னும் கொஞ்ச நேரத்துல வெட்டிங் ஆர்கனைசர் அந்த டிரஸ் கொண்டு வருவாங்க, போட்டுப் பாரு. சரியாக இருந்தால் பிரச்சனை இல்லை... ஏதாவது ஆல்டரேசன் வேணுமின்னாலும் செய்துடலாம்.”

“ஏம்மா பவானி, இவளோட கல்யாணம் கோவில்ல (சர்ச்) இல்லையாமே! அது மட்டுமில்லை, ஒரு தாலி கட்டு கூட இல்லியாமே! இது என்னம்மா கல்யாணம்?” இந்து வின் பாட்டி அங்கலாய்ப்புடன் கேள்வி கேட்க ஆரம்பிக்க,

“பாட்டி, ஏற்கெனவே ராணி அத்தையும், வைத்தி மாமாவும் எங்க ஐயா கிட்டே பேசிட்டாங்க இதைப் பத்தி. இப்போ இருக்கிற சூழ்நிலையிலே தாலி கட்ட முடியாது. ஊர்ல இந்து முறைப்படி செய்யும் போது தாலி கட்டு வெச்சுக்கலாம்னு முடிவு செய்து இருக்காங்க. இந்த ஊர்ல உள்ள திருச்சபையிலே இவ பேரு பதியலை. கேசவ் ஒரு ஹிந்து, அவர் பாப்டிசம் (ஞானஸ்நானம்) செய்து கொள்ளவில்லை. எனவே இங்கே கோவில்லே கல்யாணம் செய்ய முடியாது. அது மட்டுமில்லை, இவங்க ரெண்டு பேரும் மேரேஜ் கிளாஸ் அட்டன்ட் பண்ணவே யில்லை.

“இந்தப் புரொசிஜர் எல்லாம் முடிந்து இவளுக்குக் கல்யாணம் செய்றது எப்படியும் ஒரு மாதத்திற்கு

மேலேயே ஆகும் பாட்டி. அதனாலதான் ரிஜிஸ்டர் முன்னாடி கிறிஸ்துவ முறைப்படி செய்றோம். ஆயருக்குப் பதிலாக ஜட்ஜ் மாதிரியான ஒருத்தர் இருப்பாங்க. ரெண்டு பேரும் பைபிள் மேலே கை வெச்சு பைபிள்லே சொல்லப் பட்டபடி திருமண உறுதிமொழி எடுக்க ஏற்பாடு செய்திருக்கு!" திருமணத்திற்கான ஏற்பாடுகள் பற்றி விளக்கினர் பவானி.

இவாஞ்சலின், பவானியிடம், "மருமகன் தம்பி என்னிக்கு ஊருக்கு வர்றாங்க? வந்தா எங்கே தங்குவாங்க? இந்த வீட்டுக்குத்தான் வருவாங்களா? இல்லே சுகிர்த்து வீடுங்கள் எதிலேயாச்சும் இருந்துப்பாங்களா? கல்யாணப் பொண்ணும் பையனும் ஒரே வீட்டுலே தங்க வைக்கக் கூடாது... அதுக்குத்தான் கேட்கிறேன்...! அப்புறம் அவங்க உடுப்பு சமாச்சாரம் எல்லாம் எப்படி?"

"அம்மா, நீ இருக்கிறது அமெரிக்கா. இது ஆண்டவர் தோப்பு இல்லை. நல்லா படிச்சவங்க மாதிரிப் பேசும்மா," என்று கடிய...

"ஆஹா! பார்த்தியா ராணி இவளுக்கு, உன் மாப்பிள்ளை மேலே இருக்கிற அன்பை. ரொம்பக் கவலைப்பட்டியே... இப்போ பாத்தியா அவ வாயாலேயே சொல்லாமல் சொல்லிட்டா. மாப்பிள்ளை இங்கேதான் தங்கணும்கிறா. இன்னும் கல்யாணமே நடக்கலை, அதுக்குள்ளே என் பேர மாப்பிள்ளைக்காக உன்னை பட்டிக்காடுன்னு குத்திக்காட்டிட்டா, என் ராசாத்தி...!" இந்துவின் பாட்டி பெருமையும் சந்தோஷமும் பேச்சில் துலங்க இந்துவிற்குத் திருஷ்டி கழித்தார்.

“ஹலோ அம்மம்மா, நான் சொன்னேனா உங்க கிட்டே நீங்க பார்த்துக்கிற மாப்பிள்ளை மேலே எனக்கு அன்பு பிச்சிக்கிட்டு ஊத்துதுன்னு. ஏன் தேவையில்லாத தெல்லாம் யோசிக்கிறீங்க? நான் என் அம்மா பேசின பாஷை பட்டிக்காடு மாதிரி இருக்குன்னு சொன்னேனே தவிர, வேற எதுக்கும் சொல்லலை!” என்று பாட்டியிடம் தன் மனதில் உள்ள எரிச்சலை மறையாமல் உரைத்து விட்டு,

அம்மாவைப் பார்த்து, “அம்மா, உன் மருமகன் வந்து பாஸ்டன் ஏர்போர்ட்ல இருந்துக்குவான்.. இல்லே இந்த ஊர் ரோடு எல்லாம் சுத்தமாகத்தான் இருக்கும்... இப்போ அங்க ஸ்ப்ரிங் வேற ஸ்டார்ட் ஆயிடுச்சு. அவ்வளவா குளிராது. அதனாலே ரோட்டிலேயே படுத்துக்கச் சொல்லு. அவனுக்கு எல்லாம் எதை மாட்டி னாலும் நம்ம கொல்லையிலே இருக்கிற திருஷ்டிப் பொம்மை மாதிரி இருக்கும். அதனாலே அவன் கிட்டே இருக்கிற ஏதாவது ஒண்ணைப் போட்டுக்குவான். நீ தேவையில்லாத விஷயத்தைப் பத்திக் கவலைப்படறதை விட்டுவிட்டு அமைதியா இரும்மா!”

இந்துவின் பதிலில், அவள் தன் அம்மாவின் உடல் நலத்தின் மீது கொண்டுள்ள கவலையும், கேசவ் மீது கொண்டுள்ள வெறுப்பும் அப்பட்டமாகப் பிரதிபலித்தது.

இந்து, தன் அம்மாவைப் பார்த்த சிறிது நேரத்தில் தங்கள் ஹோட்டலில் கண்டு பிடித்ததை எல்லாம் சொல்லி, அவள் அம்மா மேல் கொண்ட சந்தேகத்திற்கு மன்னிப்

பும் கேட்டாள். ஆனால், மறந்தும் கூட அந்த கேசட் விவகாரத்தைப் பற்றி மூச்சு விடவில்லை. மகள் அப்பொழுது என்னதான் அம்மா என்று கூப்பிட்டுப் பேசியிருந்தாலும்... இயல்பாக அம்மா என்று அழைத்து, முதல் முறையாகப் பேசும் மகளிடம் தன் மருமகனுக்காகப் பரிந்து பேச மனமின்றி, அதே சமயம் தன் மகள் வருங்காலக் கணவனின் மீது கொண்டுள்ள வெறுப்பும் மனதில் பயத்தையும் கவலையையும் அளிக்க, அதைக் கண்ட சவேரியார், "பாப்பா, நீ இப்படிப் பேசுறது ரொம்பத் தப்பு!"

குரலை உயர்த்தி இந்துவைக் கண்டித்தார்..

இந்த நிலை தொடர்ந்தால் ஏதாவது பிரச்சனை வருமோ என்று உணர்ந்த பவானி, அதை மாற்றும் பொருட்டு, "அத்தை, உங்க மருமகன் மோட்டல்ல தங்கிக்கிறேன்னு சொல்லிட்டாங்களாம். அதனால இங்கே எல்லாம் வர மாட்டாங்க... கல்யாணம் முடிஞ்ச பிறகு தான் இங்கே வருவாங்க. வெட்டிங் ஆர்கனைசர் நாளைக்கு அவங்க தங்கிருக்கிற மோட்டல் போய் மீட் பண்ணி, எல்லா விஷயத்தையும் பார்த்துப்பாங்க.

"ராதா பக்தி இயக்கம் இருக்கிற பில்டிங் ஹால்ல வர்ற சண்டே பார்ட்டிக்கு அரேஞ்ச் ஆகியிருக்கு... எதைப் பத்தியும் ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்!"

இந்துவைப் பார்த்தபடியே பவானி குறுஞ்சிரிப் போடு சொல்ல, பவானியைப் பார்த்துக் கோணவாய் காட்டி எழுந்து உள்ளே சென்றாள் இந்து.

இந்துவையும் பிரேமையும் தவிர, மற்றவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த திருமண நாளும் வந்தது. அன்று இந்துவிற்கு கிறிஸ்தவ முறைப்படி வெள்ளை வெட்டிங் கவுன் அணிந்து, தலை முடியை அழகாகக் கொண்டையிட்டு, தலையின் முன்பக்கம் கிரீடம் வைக்கப்பட்டு, ரீத்தால் முகம் தொடங்கி பின்னால் கால்களைத் தாண்டியும் வழியும் படியும், கைகளில் லேசால் செய்யப்பட்ட கையுறைகள் அணிவிக்கப்பட்டு, பூச்செண்டு தாங்கி, திருமணம் நடக்க இருக்கும் மேரேஜ் பீரோ எனப்படும் ரிஜிஸ்டர் ஆபீஸ் நோக்கிக் காரில் அழைத்துச் செல்லப்பட்டாள்.

அங்கு காரில் இருந்து இறங்கியவள், யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அருள்ஜோதி, இந்துவின் காதில் அருகில் சென்று, "பாப்பா... பக்கத்திலேதான் தம்பி நிக்கிறாங்க. கொஞ்சம் நிமிர்ந்துதான் பாரேன், அவங்க உன்னையே பார்த்துக்கிட்டு இருக்கிறாங்க, பாரும்மா!" என்று சொல்ல, லேசாக உதடு பிரித்து முணுமுணுப்பாக,

"இப்ப அவன் பார்த்துக்கட்டும்... கல்யாணத்துக்கு அப்புறமா நான் அவனைப் பார்க்கிற விதத்திலே பார்த்துக்கிறேன்!" பதிலுரைக்க, திருமணச் சடங்குகள் ஆரம்பமாகின. இவர்களது வெட்டிங் லைசென்ஸ் காட்டப்பட்டு, பின் அனைத்து ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டவுடன் ரிஜிஸ்ட்ரார் இவர்கள் இருவரிடமும் சம்பிரதாய முறைப்படி சம்மதம் கேட்டபின் உறுதிமொழி எடுத்தபொழுது, பக்கத்தில் கேட்ட குரலைக் கூடக் கவனிக்காமல் இருந்தாள்.

அடுத்து ரிஜிஸ்டர் புத்தகத்தில் கையெழுத்துப் போட்ட அந்தக் கை, இவள் கையில் பேனாவை வைத்து அழுத்திய போது, கையைப் பார்த்து விட்டு வேகமாக அந்தப் புத்தகத்தில் தன்னுடைய கையெழுத்தைப் போட்டவுடன் பரபரப்பாக நிமிர்ந்து பார்த்தவளின் எதிரே நின்று கொண்டு இருந்தவன், அவளைப் பார்த்து விஷம மாகச் சிரித்தபடியே அவள் வலது கையைப் பற்றி, அதில் அணிந்திருந்த கிளவுஸைக் கழற்றி விட்டு, அவளின் மோதிர விரலில் மோதிரம் போட்டு விட... நடக்கும் செயல்கள் கண்டு அதிர்ச்சியில் விதிர் விதிர்த்தவளின் கையில் திணிக்கப்பட்ட மோதிரத்தை வாங்கி, மணமகனின் வலது கை மோதிர விரலில் மணமகனை இமைக்காமல் பார்த்துக் கொண்டே அணிவித்தாள்.

மணமகன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்ட, இன்னும் அதிர்ச்சி கூடுதலாக, தான் காண்பது கனவா அல்லது நினைவா என்ற எண்ணத்தில் அவள் கையை அவளே கிள்ளிப் பார்க்க முனைய, அதைத் தடுத்து அவளின் கையைப் பற்றி முத்தமிட்ட மணமகன், அங்கு நடப்பது கனவல்ல நிஜம்தான் என்பதைத் தன்னுடைய செயல் மூலம் உணர்த்தினான். அதைப் பார்த்த அனை வரும் சிரித்தார்கள்.

“இதோ பாருங்க... இப்படி அண்ணனும் தங்கையு மாகச் சேர்ந்து ஒரு பயந்த சாதுவான பையனை... அதுவும் கல்யாணம் முடிஞ்சு அரை நாள் கூட ஆகாத என்னை ஓட விட்டுத் துரத்தித் துரத்தி அடிக்கிறது நியாயமே

இல்லை, சொல்லிட்டேன்!" மூச்சு வாங்க வீடு முழுக்க ஓடியபடியே தன் மனைவியையும் மச்சானையும் பேசிச் சமாதானப்படுத்த முனைந்தான் முரளி.

அவன் பேசப் பேச ஆத்திரம் கொண்டு வேகமாகத் துரத்த முயன்ற இந்துவின் தலையில் இருந்து கால் வரை நீண்டு இருந்த ரீத்தால் தடுக்கித் தடுமாறி விழப் பார்க்க, "அண்ணா, அவனை விட்டு விடாதே. பிடிச்சுக் கட்டித் தூக்கிட்டு வா. இந்த ரீத்தை ஒரு வழி பண்ணிட்டு வரேன்," என்று சொல்லியபடியே முரளியின் ரூமிற்குள் புகுந்த இந்து, தன் தலை ஒப்பனையைக் கலைத்தாள்.

மேரேஜ் பீரோவில் வெட்டிங் முடிந்தவுடன் பிரேயர் செய்வதற்காகத் திருச்சபை செல்ல உத்தேசித்து எல்லோரும் செல்ல, இவர்கள் மூவர் மட்டும் பிரைடுக்ரூமுக்காக இருந்த காரில் திருச்சபைக்கு வருவதாகச் சொல்லி விட்டு, நேராக வீட்டிற்கு வந்து விட்டனர். மற்றவர்கள் திருச்சபைப் பிரார்த்தனையில் இருந்தார்கள்.

ரீத்தைக் கழற்றி, அங்கிருந்த பெட்டின் மீது தூக்கி எறிந்தவள், அந்த நேரத்தில் வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு முரளி உள்ளே வர, அவனைத் துரத்திக் கொண்டு பின்னாலேயே பிரேமும் ஓடிவந்தான். முரளியைப் பின்னால் இருந்து கட்டிப் பிடித்த இந்துவிடம் தப்பமுயன்ற முரளி திமிற, அவனின் எடையைச் சமாளிக்க இயலாமல் தடுமாறி அங்கிருந்த பெட்டில் இருவரும் விழ, வேகமாக வந்த பிரேம், முரளியைப் பிடிக்க முனையும் பொழுது முரளியின் கால் தடுக்கி,

பெட்டில் விழுந்து கிடந்த முரளியின் மீது முகத்தைப் பார்த்தபடி விழுந்தான்.

சுதாரித்த முரளி, “டேய் பிரேம்... எழுந்திருடா. என் பொண்டாட்டி நசுங்குறாடா. என் மேலே இருந்து எழுந்திருடா தடிப்பயலே!” மூச்சுத் திணறிக் கொண்டே சொல்ல, அவனின் மேல் இருந்து எழுந்த பிரேம், கைகளில் அவனைச் சிறை செய்தாற்போல் ஊன்றிக் கொண்டு, “ஏன் மாமா, உனக்கு கேசவ் சுப்பிரமணியம் என்கிற இன்னொரு பேரு இருக்குன்னு சொல்லலை?” விசாரிக்க ஆரம்பிக்க...

“டேய், நான் எங்கேயும் போகலை. நாம இங்கே உட்கார்ந்து பேசலாம். முதல்ல நீ ஒழுங்கா எழுந்திரு, சொல்றேன்.”

“ம்ம்... அதெல்லாம் முடியாது, நீ சொல்லு மாமா?” பிடிவாதமாகப் பிரேம் கேட்க,

“டேய், உன் சின்னப் பாட்டி கிட்டே போய்க் கேளுடா. இதைப் பத்தி அவங்க ஏன், எதுக்குன்னு விலாவாரியாக விளக்கமாகச் சொல்லுவாங்க,” என்று எரிந்து விழ... பிரேம் லேசாக நகர, “ஐயோ என் காலு!” என்று இந்து அலறத் தொடங்க... பதறியடித்தபடி பிரேமும் முரளியும் விலகி எழுந்து நின்று இந்துவைப் பார்க்க... படேரென்று பிரேம் எதிர்த்திசை நோக்கித் திரும்ப, “என்னடா மச்சான் அந்தப் பக்கம் திரும்பிக்கிட்டே...?” பிரேமிடம் முரளி கேட்டான்.

“மாமா, என் தங்கச்சியைப் பாருடா!”

"என் பொண்டாட்டிக்கு என்னடா... அவ அழகிடா!" என்று சொல்லியபடியே திரும்பிப் பார்த்த முரளி, அங்கே கண்ட காட்சியில் பனி போல உறைந்தான். இந்து ஓடுவதற்குத் தடையாக இருக்கிறது என்று ரீத்தைக் கழற்றியவள், கவுனும் தடுக்கிறது என்ற காரணத்திற்காக ஆண்கள் லுங்கியை மடித்துக் கட்டுவது போல் இவளும் கவுனை முட்டி வரை மடித்துக் கட்டி இருக்க, ஒருவர் பின் ஒருவராக விழும்போது அந்த மடித்து கட்டிய கவுன் இன்னும் மேலே நன்றாக ஏறி இருக்க... பிரேமின் போன் ஓசை எழுப்பியதால் அதை எடுத்தவன், அந்த பக்கத்தில் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தான்.

"அக்கா, நாங்க வீட்டுக்கு வந்துட்டோம். நீங்க பாட்டி கிட்டே இந்துவுக்குக் கொஞ்சம் தலைசுத்தலா இருந்ததாலே அங்கே வரலைன்னு சொல்லிச் சமாளிங்க. ம்ம்... இங்கே நாங்க உங்க தம்பியைக் கொஞ்சம் விசாரிச்சு முடிக்கிறோம். அவசரமாகக் கூட்டிக்கிட்டு வர வேணாம்... நிதானமாக வாங்க... என்னோட பார்வையில்தான் இரண்டு பேரும் இருங்காங்க, கவலையே படாதீங்க. நான் இருக்கேன், ஜாக்கிரதையாகப் பார்த்துக்கிறேன்."

பேசி முடித்து விட்டு, 'ஒரு சத்தமும் இல்லையே!' என்று யோசித்தபடியே திரும்பிப் பார்க்க... அங்கே தம்பதிகள் இருவரும் பெட்டில் கிடந்த ரீத்தை இருவர் தலை வழியாகப் போர்த்திக் கொண்டு, சத்தமின்றி முத்தங்களை மாறி மாறிக் கொடுப்பதும் பெறுவதுமான வேலையில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தனர்.

"பாப்பா, இன்னும் மாமா ஏன் நம்மை ஏமாத்தி னான்னு விளக்கம் சொல்லவேயில்லை!"

தலையைக் குனிந்தபடியே இந்துவிடம் சொல்ல... அதற்கு முரளி,

"அப்புறமா உன் தங்கை வந்து சொல்லுவா!" எனப் பதில் சொல்ல,

"மாமா, அவ அன்னிக்கு ராத்திரிக்கு தனியாக இன்வெஸ்டிகேஷன் போனதுல சில சந்தேகங்கள் இருக்கு. அதுக்கு இன்னும் அவ பதில் சொல்லலை!" எங்கோ பார்த்தபடி முரளி, மறந்து இருந்த விஷயங்களைக் கவனமாக ஞாபகப்படுத்தினான்.

"அண்ணா, அதை நான் முரளி கிட்டேயே சொல்லிக்கிறேன். நீ அவர் கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கோ!" முரளியிடமிருந்து தன் உதடுகளை விலக்கிக் கொண்டு இந்து பதிலளிக்க,

"அப்போ நான் என்ன செய்யறது?" எங்கோ பார்த்தபடி பிரேம் கேட்டான்.

"இப்பத்தான் விசாரணை ஆரம்பிச்சு இருக்கு, முடியற வரைக்கும் வெளியிலே வெயிட் பண்றது!" என்று பதில் சொல்லிய முரளி,

"குடியா, உங்க அண்ணனுக்கு சங்கீதம்தான் தெரியலைன்னு பார்த்தால், இங்கிதம் கூடத் தெரியலை!" என்றான் சத்தமாக.

பிரேம் அங்கிருந்து அவசரமாக வெளியேற, முரளியின் குடியா என்ற விளித்தலில் சுய உணர்வு பெற்ற இந்து, முரளியிடம் இருந்து விலகி அமர்ந்து, "ஆமா... அது என்ன குடியா குடியான்னு கூப்பிடுறீங்க...? அதுக்கு மீனிங் கேட்டா மட்டும் சொல்ல மாட்டேங்கிறீங்க... இப்போ எனக்கு அதுக்கு மீனிங் தெரிஞ்சே ஆகணும்."

"இதோ பாரு, உன்னை எனக்குப் பதினாலு வருஷ மாகத் தெரியும். உன்னை உங்கம்மா என் கிட்டே கொடுத்துட்டுப் போன அன்னிக்கு சில மணி நேரங்கள் மட்டுமே என் கைக்குள்ளே இருந்தே... எவ்வளவோ வருஷத்துக்கு அப்புறம் இப்பத்தான் உன்னை என்னால் உரிமையோட தொட முடிந்து இருக்கு... இப்போ போய் விலகிறியே... உனக்கு அறிவு இருக்கா?

"இங்கே வந்து என் மேலே சாய்ஞ்சுக்கிட்டு கேளு சொல்றேன். இப்போ மட்டுமில்லை... நாம இந்தியா போகிறவரைக்கும் இப்படித்தான் இருக்கணும்... சொல் லிட்டேன்!"

உரிமைப் பார்வையுடன் கொஞ்சல், கெஞ்சல் வார்த்தைகளுடன் முரளி பேச... அவன் அருகில் நெருங்கி அணைத்தாற் போல் அமர்ந்துகொண்டு, மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"அதுவா... நான் உன்னை முதல் முதலா பார்த் தப்போ ஒரு டால் மாதிரி இருந்தியா... அதுதான் குடியான்னு கூப்பிட்டேன். ஹிந்தியிலே குடியான்னா டால்னு அர்த்தம்...!"

## 26

"பேர் வைப்பதற்கு மட்டும் குறைச்சல் இல்லை!" என்று சொல்லி உதடு பிதுக்கிய வளின் உதடுகளின் மீது முரளி தன் உதட் டால் லேசாக முத்தமிட, "ம்ம்... சும்மா யிருங்க முரளி!" என்று சிணுங்கினாள்.

"சும்மா இருக்கவா உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து இருக்காங்க...?" என்று சொல்லிய படியே அவளிடம் அவன் அத்துமீறலைத் துவங்கினான்.

"அதுக்கு எல்லாம் நேரம் காலம் இருக்கு. இப்ப ஆப்டர்நூன், இப்போ எல்லாம் வரம்பு மீறக் கூடாது." மிக மெல்லிய குரலில் தயக்கத்துடன் முரளியின் அத்து மீறல்களை அனுமதித்துக் கொண்டே கூறினாள்.

"ஆமாம், அதை யாரு இல்லைன்னு சொன்னா. ஆனா இப்போ இந்தியாவிலே நைட்தான். வரம்புகள் இருப்பதே மீறுவதற்குத்தான் என்பது உனக்குத் தெரியுமா?" என்று சொல்லியபடியே முரளியின் கைகள் மற்றும் உதடுகள் மேலும் முன்னேற...

"ம்ஹூம்... எனக்கு அதெல்லாம் தெரியாது. இப்படி இருக்கிறது தப்பு இல்லையா?" முரளியின் மீசை குறு குறுப்பில் சிணுக்கக் குரலில் பேசினாள்.

"திருமணத்திற்குப் பிறகு இருவரின் சம்மதத்துடன் நிகழும் தாம்பத்தியம் என்றுமே தப்பு இல்லை தெரியுமா? நானும் சரி, நீயும் சரி... வெறும் தியாரிட்டிகலாக மட்டுமே தெரிந்த தாம்பத்தியத்தை இப்போ பிராக்டிக்கலா தெரிந்து

கொள்ளப் போறோம், அவ்வளவுதான். இதிலே ஒரு தப்பும் இல்லை, தவறுமில்லை. நான் உனக்குக் கஷ்டம் கொடுக்க மாட்டேன். பூப் போலத்தான் கையாளுவேன். ப்ளீஸ், புரிஞ்சுக்கோ!" என்றபடியே அவளின் உடலில் ஒவ்வொரு பாகமாக அவனின் உதடுகளால் வருடியவாறே கேட்க, அவனின் அன்பின் வசத்தாலும் தீண்டல்களாலும் திணறிப் போய் வாய் மூடி மௌனித்து இருந்தாள் இந்து.

அவளின் முகத்தின் அருகில் தன் முகத்தைக் கொண்டு சென்று, "ப்ளீஸ், பல வருடக் கனவு எனக்கு உன்னுடனான வாழ்க்கை. அதை உன்னுடைய சம்'மதத் துடன்தான் தொடங்க வேண்டும்... உனக்குச் சம்மதமா, வாயைத் திறந்து சொல்லும்மா!" தாபத்துடன் கேட்க...

"சம்மதம்!" என்று மெல்லியதாக அவன் காதின் அருகில் சொன்னவுடன், அவளை மிகவும் மென்மையாக வும், கனிவாகவும் கையாளத் தொடங்கினான் முரளி.

இல்லற சாகரத்தில் நீந்திய இருவரில்... நீந்துதலால் ஏற்பட்ட உடல் சோர்வினால் இந்து உறக்கத்தின் வசம் ஆட்பட, சிறிதுநேரம், உறங்கும் அவளையே உற்றுப் பார்த்தபடி இன்ப நினைவில் ஆழ்ந்தவன்... இந்துவின் கை பட்டென்று அவன் முகத்தின் மீது விழுந்தவுடன் சுய உணர்வு பெற்றவன், தங்கள் நிலை உணர்ந்து, பெரிய வர்கள் வரும் முன் அதைச் சீர் செய்வதற்கு முனைந் தான்.

முதலில் அவளின் ரூமுக்குச் சென்று, அவளுக்கு மாற்றுடை எடுத்து வந்து அணிவித்தான். பின் தன்னு

டைய உடுப்புகளை எடுத்து அதன் இடங்களில் வைத்து விட்டு, அவளது உடைகளையும் அவளது ஆக்சரீஸ்களை எடுத்துக் கொண்டு அறையை வட்டு வெளியே வந்த பொழுது, கிச்சனில் இருந்து வெளியே வந்த பிரேம், முரளியைப் பார்த்துச் சிரித்தபடியே, “ஆக மொத்தம் சீக்கிரமாவே ஹஸ்பெண்ட் வேலையில் சேர்ந்தாச்சு. வாழ்த்துக்கள் மாமா.”

‘இவனுக்கு என்ன தெரியும்?’ என்று யோசித்தபடியே முரளி, பிரேமை உக்கிரமாகப் பார்க்க... பிரேம் வாய் விட்டுச் சிரித்தபடியே அவன் கையிலிருந்த பொருட் களையும் முரளியையும் மாறி மாறிப் பார்த்து விட்டுக் கிண்டலடிக்கத் தொடங்க, “மாமா, இந்த முறைப்புக் கெல்லாம் என் தங்கையே பயப்பட மாட்டாள்... நான் மட்டும் பயப்படக் கேணையனா என்ன?”

முரளி அவனின் பேச்சை அசட்டை செய்தபடியே நகர முனைய, வெளியில் வேகமாகக் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

முரளி வேகமாக இந்துவின் அறையை நோக்கி நடக்க முயல... வெளியில் வந்தவர்களில் பவானியும், கல்யாணி (பிரேமின் அம்மா) யையும் தவிர ஏனையோர் உள்ளே நுழைந்தவர்கள், முரளியின் கோலம் கண்டு ஒரு பக்கம் சிரிப்பு வர, அதை மறைக்க முயன்று தோற்றுக் கொண்டு இருந்தனர்.

ஆண்கள் அணியும் ரோப்ஸ் மட்டும் அணிந்து கொண்டு, ஒரு பக்கத் தோளில் ரீத்தும் மறுபக்கத் தோளில் அவளின் திருமணக் கவுனையும், ஒரு கையில் அவளின் ஆக்சரீஸ்களும் மற்றொரு கையில் அவள் அன்று போட்டு இருந்த செருப்பையும் வைத்துக் கொண்டு காட்சியளித் தான்.

அவன் கையில் இந்துவின் செருப்பைப் பார்த்த இவாஞ்சலின், பதறியபடியே வேகமாக முன்னே வந்து, "என்ன தம்பி... நீங்க போய் அவளோட செருப்பை எல்லாம் தூக்கிட்டு... கீழே போடுங்க!" முரளியின் கையிலிருந்து செருப்பை வாங்கி அங்கே ஒரு ஓரமாக வைத்தார்.

இந்துவின் பாட்டி, "ஆமாம்... இதையெல்லாம் உங்களைச் செய்ய வெச்சுட்டு அவ எங்கே போனா...? சத்தத்தையே காணோம்...?" இந்துவைப் பற்றி விசாரிக்கத் தொடங்க...

"சின்ன பாட்டி, வீடு அமைதியாக இருக்கும்போதே உங்களுக்குத் தெரியலையா... அவ தூங்குகிறாங்கிறது?" முரளியிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பிரேம் பதில் அளித்தான்.

அங்கு வந்த பவானி நிலைமையை உணர்ந்து அதைச் சீராக்கும் பொருட்டு, "பாட்டி, அவ காலையில் எழுந்ததிலிருந்து ஒரே அலைச்சல். அதான் தூங்கிட்டா போல. இரண்டு பேரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்..."

முரளியைப் பார்த்து, "முரளி, என்ன அப்படியே நின்னுக்கிட்டு இருக்கே? அவளோட சாமான்களை எல்லாம் என்கிட்டே கொடு. நான் உள்ளே வைக்கிறேன்... நீ நம்ம அம்மாவோட ரூம்ல போய் ரெஸ்ட் எடு!" என்று முரளியின் கையில் இருந்தவற்றை வாங்கிக் கொண்டு, அவனை அவ்விடத்தை விட்டு அனுப்பி வைத்தார்.

மாலையில் இந்து, பவானி, பிரேம், முரளி நால்வர் மட்டும் லானில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

பவானி, இந்துவைப் பார்த்து, "நீ உங்க ஹோட் டல்ல செக் பண்ணப் போனப்போ, எப்படி உன்னோட கார் நம்ம வீட்டுக்கு வந்தது? நீ எப்படி உத்தண்டி போனே? சொல்லு, அவனுங்க உன்னைக் கண்டு பிடிக்கலையா?"

"நான் மதியமே தலைவலிக்குதுன்னு, அங்கு இருந்த நம்ம ஆட்கள் கிட்டே சொல்லிட்டேன், ஆனால், செக்யூரிட்டியில் பிரசன்னாவோட ஆள் இருந்ததாலே, என்ன செய்யலாம்னு யோசிச்சோம். அப்போதான் புர்காவை போட்டுக்கிட்டு மீதா வந்தா... அவளை என் னோட ரூம்ல உட்கார வெச்சுட்டு, ஏகாம்பரம் அங்கிள் கிட்ட சொல்லி நான் புர்காவை மடிச்சுப் பையிலே எடுத்து கிட்டு, அந்த பிரண்ட்ல ஆபீஸ் பார்க்கிறவங்க மற்றும் செக்யூரிட்டி முன்னாடி வெளியேறினேன்...

"வீட்டிலே கொண்டு வந்து காரை நிறுத்திட்டுப் புர்காவைப் போட்டு வெளியிலே வந்தேன். தனசேகர்

அண்ணா பைக்கோட நின்னாரு. அவர் கூட பிரசன்னா வீட்டுக்குப் போய், அவனோட காரை எடுத்துக்கிட்டு நான், ரோஷினி, தனசேகர் அண்ணா மூணு பேரும் உத்தண்டி போனோம்... பிரசன்னாவோட காரைக் கொடுத்தது நம்ம இனியன்தான்... அவன், நான் அங்கே கணக்கு வழக்கு பார்க்க வர்றேன்னு சொன்னான்.

"இரவு நான் அந்தக் கார்ல வெளியிலே போய் திருப்பியும் சுபாஷ், மீதா கூட சுபாஷ் பிரெண்ட் கார்ல பப்புக்கு வர்ற மாதிரி உள்ளே போயிட்டோம்."

"கம்ப்யூட்டர்ல அந்த வீடியோக்கள் பதிவாவதைத் தடுக்க சோஸ்கோட் மாத்தி போடறதுக்கு செக்யூரிட்டி கிட்டே எப்படி நீ பாஸ்வேர்ட் வாங்கினே?" பிரேம் ஆர்வமாகத் தன்னுடைய சந்தேகத்தைக் கேட்டான்.

"கோக்ல பெயின் கில்லர் போட்டுக் கொடுத்து... ஒரு மூணு மணி நேரம் வரைக்கும் தான் போதை இருக்கும்... அடுத்து ஒரு அரை மணி நேரம் கழிச்சு திருப்பியும் கொடுக்கிறப்போ தூக்க மாத்திரையும் ஒண்ணு சேர்த்துப் போட்டோம்... அந்த செக்யூரிட்டி நல்லா தூங்கினான். அந்தத் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டதுல உளறிட்டான். அதை அப்படியே போட்டு சோஸ்கோட் மாத்தி எழுதிட்டு, மறுபடியும் பாஸ்வேர்ட் வேற மாத்தி வெச்சுட்டோம்."

"நல்ல வேளை, உனக்கு அன்னிக்கு உடம்பு முடியாம வந்ததுனாலே தப்பிச்சே... இல்லே மாமா உன்னை அடிச்சிருப்பாங்க. அவ்வளவு கோபத்துல

இருந்தாங்க. பவானிக்கா ராத்திரி முழுசும் மாமா கிட்டே சொல்லிக்கிட்டே இருந்தாங்க... நீ அடிச்சுடாதே முரளி, மிருதங்கம் அடிச்சு காய்ச்சுப் போன கை... நீ ஒரு அடிச்சா அவ சுருண்டு விழுந்துடுவான்னு சொல்லி மாமாவோட கோபத்தைத் தணித்துக்கிட்டே இருந்தாங்க."

இவள் காணாமல் போன அன்று முரளிக்கு ஏற்பட்ட கோபத்தினைப் பற்றி எடுத்துச் சொன்னான் பிரேம்.

"அதெல்லாம் சரி... நீங்க நாலு பேர் மட்டும் போய் இருக்கீங்களே... எங்க கிட்டேதான் சொல்லலை... நாங்க விடமாட்டோம். மன்சூர்க்கு இல்லம்மா நீ ஏன் போன அந்த இடத்துக்கு எல்லாம்...? அதிலேயும் நீதான் கொடுத்து அனுப்பி இருக்கே? ஏன் இப்படிச் செய்தே?" என முரளி கேட்க...

"இந்த நவநீதத்துகிட்டே இருந்து என்னைக் காப்பாத்தறதுக்கு ஃபீஸ்தானே கேசவ் சுப்பிரமணியம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னான். அவனால் இந்த விஷயங்கள் தீர்க்கப்பட்டால் ஒரு நன்றிக் கடன் மாதிரி சிக்கக் கூடாது இல்லை... அதனாலதான் நானே நேரடியாக இறங்கினேன்.

"மன்சூர் அண்ணா இருந்தா அவர் என்னைத் தனியாகச் செய்ய விட மாட்டார். அதே சமயம் உங்க எல்லார்கிட்டேயும் சொல்லிடுவார், அதற்காகத்தான் நாங்க ஹோட்டல் உள்ளே நுழையற நாள் பார்த்து, அவருக்கு லீவு கொடுத்து அனுப்பினேன்!" எனச் சொல்லி முடித்தவள்,

"ஏன் அக்கா, உங்களுக்கு முதலிலேயே தெரியும் தானே, முரளிதான் கேசவ் சுப்பிரமணியம்னு?" பவானி யைப் பார்த்துக் கேட்டாள் இந்து.

"இதோ பார் இந்து, உங்க இரண்டு பேர் இடையே எங்களை இழுக்காதே. இதோ உன் பக்கத்திலேதானே உனக்குப் புருஷன் என்ற உரிமையோடே உட்கார்ந்து இருக்கான். அவன் கிட்டேயே கேளு, சொல்லுவான்!" இந்தப் பிரச்சனையில் தலையைக் கொடுக்காமல் நாசூக்காக விலகினார் பவானி.

இந்து, முரளியைப் பார்க்க... அவன், இந்துவின் பக்கமாகச் சேரை நன்கு இழுத்து ஒட்டிப் போட்டுக் கொண்டு, "நீ எப்போ பார் என்னோட வம்பு பண்ணிட்டே இருப்பே... அதற்குத் துணையாக இந்த வீட்டு ஆட்கள் வேறே. அதற்காகத்தான் உன்னை டீஸ் பண்ண சும்மா விளையாடினேன்."

"ஆமா... உங்க பேரு முரளி கிருஷ்ணன்தானே! அப்புறம் எப்படி கேசவ் சுப்பிரமணியம்...?" சிறிது நேரம் யோசித்து விட்டு, "ஸ்கூல்ல கூட உங்க பேரு முரளி கிருஷ்ணன்தானே! ஒரு வேளை என்னைக் காப்பாற்று வதற்காக உங்க பேரையும் அத்தை மாத்திட்டாங்களா? என்னாலே நீங்க எல்லோரும் எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கீங்க?" குரலில் அழுகையைத் தேக்கியபடியே சொல்ல...

"ஹே, யூ டோன்ட் திங்க் லைக் தட் மா. என்னோட ஃபுல் நேம் என்ன சொல்லு பார்க்கலாம்."

"H.KS முரளிகிருஷ்ணன்."

"H ஃபார் ஹரிஹரன். KSங்கிறது கேசவ் சுப்பிர மணியம். MK இஸ் முரளி கிருஷ்ணன். என்னோட பர்த் சர்ட்டிபிகேட்ல கூட இந்தப் பெயர்கள்தான் இருக்கும். இரண்டுமே என்னோட இரண்டு தாத்தாக்கள் பேரு. மொத்தமா ஒண்ணா எனக்கு வைக்க, அதை எழுதறதுக்கு கஷ்டமாக இருக்குன்னு நான் கேசவ் சுப்பிரமணியம் என்ற பேரை அப்பாவோட பேரை லெட்டரா போடற மாதிரி இதையும் லெட்டர்களா மாத்தினேன்.

"நம்மோட மேகசினில் எழுதத் தொடங்கும் போது அப்பாதான் பென் நேம் ஒண்ணு வெச்சுக்கச் சொல்ல, அதற்காக மட்டுமே கேசவ் சுப்பிரமணியம் என்ற பேரை உபயோகிப்படுத்திக்கிட்டேன். உனக்கு எங்கப்பாவோட இனிஷியல் என்ன தெரியுமா? KS தான் இருக்கும். அதனாலதான் அப்பா இந்தப் பேரை உடைய என்னை எழுத்துலக வாரிசுன்னு சொன்னாங்க.

"இங்கே மேரேஜ் லைசென்ஸ் வாங்க முழுப் பேரும் போடணும்கிறதாலதான் கேசவ் சுப்பிரமணியம் என்ற பேரைப் போட்டது. பின்னாடி இருந்த முரளி கிருஷ்ணன் பேரைப் பார்க்காமல் விட்டுட்டா அழகி. திருப்பி அவளுக்கு நான் போன் பண்ணிச் சொன்னேன்... உன் கிட்டே உண்மையை சொல்லாதே... அவளுக்கு ஒரு ஷாக் மாதிரி இருக்கட்டும்னு!"

முரளி நடந்தவைகளை விலாவாரியாக விவரித் தான்.

“அப்போ, பேசும்பொழுது குரல் மாறுபடுமே எப்படி?”

“அது சுப்ரஜா கொடுத்த ஐடியாபடி, கொஞ்சமா வாய்ஸ் மாத்தி ட்ரை பண்ணினேன். ஆனால், தொண்டை செம வலி வலித்தது. அக்கா கிட்டே முதல் நாளே நான் தான் கேசவ் என்ற உண்மையைச் சொல்லிட்டேன். அப்படி இருந்தும் மன்சூர் மூலமாக உன் கிட்ட மாட்டிக்கப் பார்த்தேன்... நாம இந்தியாவுக்குப் போனவுடனே ஃபர்ஸ்ட் தடவை உன்னைக் கூப்பிடும் போது மன்சூர் வந்தார் தெரியுமா? உன் கிட்டே அவர் உண்மையை உளறிடக் கூடாதுன்னு சொல்லி, உன்னோட காலை கட் பண்ணி, அண்ணாவை போன் மூலமா வெளியிலே கூப்பிட்டு, என்னோட பென் நேம் வெளியிலே தெரிய வேணாம்னு சொன்னேன்.

“எல்லா உண்மைகளும் உனக்குத் தெரிந்தவுடனே அக்கா உன்கிட்டே உண்மையைச் சொல்லச் சொன் னாங்க. நான்தான் கொஞ்சம் விளையாடிப் பார்க்க லாம்னு நினைச்சேன். இவன் வந்து குழப்பம் பண்ண றதுக்கு முன்னாடியே உங்கம்மா பாட்டி, மாமா எல்லோர்கிட்டேயும் உண்மையைச் சொல்லிட்டோம்.

“உங்க பாட்டிதான் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க இரண்டு பேரும் ஒரே வீட்டுக்குள்ளே இருக்கிறதுனாலே, எனக்கு இரண்டு பேரு இருக்கிறது தெரிய வேண்டாம்னு சொன்னாங்க!” மூச்சு விடாமல் நடந்த எல்லாவற்றையும் இந்துவிடம் ஒப்பித்தான் முரளி.

இந்துவைப் பார்த்து, "குடியா, நீ எப்படி கேசவ்வைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சே? உனக்கு நான்தான் கேசவ் என்பது தெரியாதே?" பிடிக்காத கேசவ்வை மணந்து கொண்டு என்ன செய்ய இருந்தாள் என்பதை அறியும் ஆவலில், அவள் அதை அறியாதபடி கேள்விகளாக மாற்றினான்.

அது வரை முரளியின் மீது சாய்ந்து அமர்ந்திருந்த வள், பட்டென்று விலகி அமர்ந்து, முரளியை நேராகக் கண்ணோடு கண்பார்த்து, "என்ன, நீங்க படிச்ச வித்தையை என்கிட்டவே காட்டுறீங்களா? எதுவா இருந் தாலும் நேரடியாகக் கேட்கணும் என் கிட்டே... ஏன் என்னைக் காதலிச்சுட்டு எப்படி வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்க ஒப்புக்கிட்டு அதே மாதிரி செய்தே தானே? இப்படி கேட்காமல் சுத்தி வளைச்சா என்னால கண்டுபிடிக்க முடியாதா என்ன? நானும் எங்கண்ணாவும் போட்டு வெச்ச பிளானே வேற."

"என்ன செய்யப் பிளான் பண்ணியிருந்தீங்க இரண்டு பேரும்?" படபடப்புடன் கேட்டார் பவானி.

"அக்கா, டென்ஷன் ஆகாதீங்க, அப்பா வாக்கு தான் முக்கியம்னு சொன்னவுடனே எனக்குக் கோபம் தான் வந்தது. அதுவும் குறிப்பாக, அந்த நவநீதம் பேர்ல கொலை வெறியே வந்தது..."

இந்து, கேசவ்வைக் கல்யாணம் செய்ய நினைத்துத் தன்னிடம் பேசியவற்றைச் சொன்ன பிரேம்,

“கல்யாணம் முடிந்த பிறகு இருவரும் தனித் தனியாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு... இங்கே இருந்து இந்தியாவுக்குப் போய் ஜுடிஸியரி முன்னாடி நின்னு தன்னை நிரூபிச்சு, சொத்துக்களை வாங்கின உடனே அதைப் பார்க்கிற உரிமை முழுசும் உங்க கிட்ட கொடுத்துட்டு, உங்கள் காலத்துக்குப் பிறகு அதைக் கிறிஸ்டின் மிஷினரிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டு, கேசவ் கிட்டே தனக்குச் சின்ன வயசுல என்ன நடந்ததுங்கிற உண்மையையும் சொல்லி, அவனுடைய காதலுக்குத் தான் தகுதியானவள் அல்ல என்பதைப் புரிய வைத்து... என் கூட இங்கே வந்து யுனிசெப் இல்லை ரெட்கிராஸ் எதிலேயாவது சேர்ந்து சர்வீஸ் பண்ணப் போகலாம்னு முடிவு எடுத்து இருந்தா!”

டிவோஸ் வாங்குவேன் என்று இந்து சொன்னதை இங்கு சொல்லாமல், அவர்களே புரிந்து கொள்ள வேண்டி அமெரிக்கா வந்து சர்வீஸ்க்குப் போகிறாள் என்றும், மனதால் இந்து எப்பொழுதுமே முரளியின் மனைவியாக வாழுபவள் என்பதை மறைமுகமாக உணர்த்தும் விதத்தில் இருந்தது பிரேமின் பேச்சு.

“ஒரு வேளை, அந்தக் கேசவ் இவளைப் பிரிய ஒப்புக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்திருப்பீங்க?” எனப் பவானி ஆர்வமாக வினவ...

“என்னோட பிளாட்சுக்குக் கூட்டிக்கிட்டுப் போய் வர்மத்துல தட்டி மயங்க வெச்சு, மகளிர் மட்டும் படத்துல நாசரைக் கட்டிப் போட்டு இருக்கிற மாதிரி கட்டிப் போட்டு

மிரட்டினா ஒப்புக்கொள்வான் என அதற்கும் பிளான் பண்ணினோம்," என பிரேம் விளக்க, அதைக் காட்சியாக கண்டு மிரண்ட முரளி, இந்த மாதிரி இவள் முடிவு எடுக்கத் தான்தானே காரணம் என்ற குற்ற உணர்வு தாக்க...

"நான் ஏதோ விளையாட்டுக்குச் செய்ய, அது விபரீ தமாகப் போச்சு குடியா. நான் உன்னைச் சந்தேகமே படலைடா... உனக்கு ஞாபகமிருக்கா...? இங்கே நீ மேக்ஸ் டியூசன் போன இடத்துல ரிஷி, உன்கிட்ட லவ் ப்ரபோஸ் பண்ணினப்ப, பதிலுக்கு அவன் கிட்ட ட்ரெயின் வர்ற ட்ராக்லே ட்ரெயின் வரும் பொழுது எதிர்லே போயிட்டு வந்து சொல்லு... அப்புறமா நான் உன்னைக் காதலிக் கிறேன்னு சொன்னே தெரியுமா? அதுபோல் ஏதாவது செய்யறதுக்காக ஐடியா வைத்து இருக்கியான்னு தெரிஞ் சுக்கத்தான் கேட்டேன்.

"உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா? உனக்கு இங்கே சிட்டிசன்ஷிப் வாங்கினதே எப்படித் தெரியுமா? நீயும் நானும் லிவிங் டு கெதர் போட்டு, அதற்கான புரூப் கொடுத்துத்தான். அப்படி இருக்கும் போது நான் எப்படிடா உன்னைச் சந்தேகப்படுவேன்...? சொல்லு..." கொஞ்சல் குழைவுடன் இந்துவைச் சமாதானப்படுத்திய படியே அவளது இடையில் கை வைத்துத் தன்னை நோக்கி இழுத்தான்.

இதைப் பார்த்த பவானி எழுந்து உள்ளே செல்ல, பிரேம் எழுந்து முரளிக்கு அருகில் போய்க் காதருகில் குனிந்து, "மாமா, இன்னிக்குக் காலையிலே உங்களுக்கு

நடந்தது கோர்ட்டுக்காக மட்டும்தான் கல்யாணமாம். ஊர்ல வெச்சு தாலிகட்டுதான் உண்மையான கல்யாணமாம். அதுவரைக்கும் நீங்க இரண்டுபேரும் பொறுமை காக்கணும்னு சின்னப் பாட்டி சொல்லச் சொன்னாங்க. நான் அதை உன்கிட்டே கன்வே பண்ணிட்டேன்... பார்த்து ஜாக்கிரதை. இப்போ நான் உள்ளே போறேன்," என்று சொல்லி நகர,

இந்துவைத் தன்னுடைய சேரில் தன் இரு கால்களுக்கிடையே அவளை உட்கார வைத்து, அவளின் பாட்டி சொன்னதைச் சொல்ல... சிறிது நேரம் அந்த நிலையிலேயே அமர்ந்து இருந்தனர் இருவரும். பின் முரளி அவளை எழுப்பித் தானும் எழுந்து கொண்டு, "குடியா, வா உள்ளே போகலாம்!" என்று கூப்பிட,

"என்னைக் கையிலே தூக்கிட்டுப் போயேன். அதுவும் 'கையில் மிதக்கும் கனவா நீ' பாட்டு பாடிக்கிட்டே தூக் கிட்டு..." சிணுங்கிக் கொண்டே செல்லம் கொஞ்ச...

"அது தளிர்கொடி போல இருந்தால் அந்த மாதிரிச் செய்ய முடியும். உன்னை மாதிரி தர்பூசணி எல்லாம் அப்படிச் செய்ய முடியாது தாயே!" என்று பதில் சொல்ல,

"என்னது...? நான் தர்பூசணியா? உங்களை..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசிவிட்டு, "இன்னிக்கு மத்தியானமே உதைக்காம விட்டது தப்பாப் போச்சு. இப்போ பாருங்க..." அவனின் மேல் பாயச் செல்ல, அவள் கைக்கு அகப்படாமல் உள்ளே வேகமாக

ஓட, ஹாலில் எல்லோரும் இருப்பதைப் பார்த்துவிட்டு மெதுவாக நடந்து அங்கே இருந்த கவுஞ்சில் அமர்ந் தான்.

பின்னாலேயே ஓடி வந்த இந்து, உள்ளே இருந்த நிலையைப் பார்த்து நிதானிக்க, இந்துவைப் பார்த்த அவளின் பாட்டி, "ஏட்டி... இங்கே வா சொல்லுதேன். என்னது, காலையில் உன்னோட மாமிகிட்டே பேர மாப்பிள்ளையைக் கவனிக்கற விதத்துல கவனிச்சுக்கி றேன்னு சொன்னியாமே? என்ன கவனிக்கப் போறே...? ம்ம்... நீ நடந்துக்கிற முறை, பேசுறது ஒண்ணும் சரி யில்லையாக்கும்.

"உன்னோட உடுப்புல இருந்து எல்லாத்தையும் அவரைத் தூக்க விட்டு, நீ நல்லா உறங்கிட்டு கிடக்கே, நாங்க கோவிலுக்குப் போயிட்டு வர்றப்போ... நீ உன்னோட மனசிலே என்னதான் நினைச்சிருக்கிறே சொல்லு...? நீ களைஞ்ச உடுப்பைக் கூட எடுத்து வைக்க உனக்குக் கழியாமப் போச்சோ...?" இந்துவை வார்த்தை களால் வாட்டி எடுத்துக் கொண்டு இருந்தார்.

இந்துவின் முகம் கோபத்தைப் பிரதிபலிப்பதைப் பார்த்த முரளி, எங்கே அவள் ஆத்திரத்தில் மதியம் நடந்த வைகளை உளறி விடுவாளோ என்று பயந்து...

"பாட்டி, சுபியை ஒண்ணும் சொல்லாதீங்க. அவ எல்லாத்தையும் எடுத்து வைக்கிறேன்னு சொன்னா... நான் தான் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருந்துட்டு எடுத்து வைக்கலாம்னு சொன்னேன். பேசிக்கிட்டு இருக்கும்

போதே தூங்கிட்டா. அதுதான் அவ செய்யறேன்னு சொன்னதை நான் செய்தேன். இங்கே எல்லாம் ஆண் பெண் பாகுபாடு பார்க்க மாட்டோம். அதுவும் வீட்டு வேலைகள்லே பார்க்கவே மாட்டோம். அப்படிப் பார்க்கவும் முடியாது." நிலைமை சமாளிக்க, எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க முயன்றான்.

"இதோ பாருங்க பேர மாப்பிள்ளை... அவளுக்கு ரொம்ப இடம் கொடுக்காதீங்க, சொல்லிட்டேன். வேலை செய்யலாம் தப்பில்லை. இவ்வளவு ஏன், அந்தக் காலத்துல இவ பாட்டன் எனக்கு மசாலாவை அம்மி யிலே அரைச்சு எல்லாம் கொடுத்து இருக்காரு. ஆனா செருப்பை எல்லாம் தூக்குறது ரொம்ப ஓவர். ஆமாம், நீங்க ரெண்டு பேரும் அப்படி என்னதான் பேசினீங்க? ஹால்ல உட்கார்ந்து பேச வேண்டியது தானே! எதுக்கு ரூமுக்குள்ளே பேசினீங்க?" என்று பரபரப்பாகப் பாட்டி வினவ,

"சும்மா சாதாரணமாகத்தான் பாட்டி பேசினோம். ஏன், பேசக் கூடாதா பாட்டி?" பாட்டி கேட்க வருவது புரிந்தாலும், புரியாததுபோல் இவன் பக்கம் வந்த வார்த்தை என்ற பந்தை அந்தப் பக்கம் போட்டான்.

"அய்யோ அம்மா... அவங்களே சும்மா இருந்தா லும் நீ விட மாட்டே போலிருக்கு... பேசாம இரும்மா...!" இவாஞ்சலின் தன்னுடைய அம்மாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்க... அப்பொழுது அருள்ஜோதி கையில் போனுடன் வந்து, "பாப்பா, ஏற்கெனவே ஒரு முறை

அடிச்சு முடிஞ்சுருக்கு. இப்போ இன்னொரு முறை அடிக்குது, யாருன்னு பாருங்க?" என்று சொல்லிக் கொடுக்க, அதை வாங்கியவள், அதில் வந்த பெயரைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"என்ன நீ, அந்தப் போனைப் பார்த்துக்கிட்டு இருக்கே, எடுக்காம? போன்ல யாரு?" என்று கேட்டபடியே இந்துவின் கையில் இருந்து போனைப் பிடுங்கி யார் என்று பார்த்தான் பிரேம். போன் பிரேமின் கையில் இருக்கும் போது மீண்டும் அடிக்கத் தொடங்க...

"பாப்பா... அந்த காக்கா மண்டையன் பிரசன்னா தான். ஸ்பீக்கர்ல போடறேன், பேசு!" என்று சொல்லிய படியே ஆன் செய்தான்.

"என்ன இந்திரா, எப்படி இருக்கிறே. இவ்வளவு நேரமா அடிக்கிறேன், இப்பதான் எடுக்கிறே? அமெரிக்கா போனியே, பத்திரமா சேர்ந்து இருப்பேன்னு தெரியும்... சரி, மேரேஜ் மேட்டர் என்னாச்சு? எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடுச்சா?" என்று கேட்க,

கேட்டுக் கொண்டு இருந்த அனைவரும், 'இவனுக்கு எப்படிக் கல்யாண விஷயம் தெரிந்தது...?' என்று அதிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 27

"ஹலோ, ஹலோ... நான் பேசுறது கேக்குதா?" பிரசன்னா அந்தப் பக்கம் இரைய... முரளி, இந்துவின் கையைப் பற்றி உலுக்கிப் பேசு என்று செய்கை செய்தான்.

"கேக்குது பிரசன்னா... நான் டிரைவிங்லே இருக்கேன்... கொஞ்ச நேரம் போய்ப் பேசுறேன்!" மடமடவென்று மறுமொழி பேசியவள்.

போனை வைத்தவுடன் முரளியையும் பிரேமையும் பார்த்து, "எப்படி இவனுக்கு நம்மோட கல்யாண மேட்டர் தெரியும்? நான் சுபாஷைக் காண்டாக்ட் பண்ணறேன். அண்ணா, நீ பெரியப்பாவைப் போன்ல கேளு. அத்தான், நீங்க மாமாப்பாவைப் போன் பண்ணிக் கேளுங்க. எப்படி லீக் ஆகியிருக்கும்? நம்ம ஆளுங்கள் யாராவது அவன் கையிலே மாட்டிக்கிட்டாங்களான்னு விசாரிங்க!" என்று சொல்லியபடியே தன்னுடைய போனில் இருந்து சுபாஷுக்கு அழைத்தாள். மூன்று பேரும் மூன்று பக்கம் போய்ப் பேசி விட்டு வந்தார்கள்.

இந்து, "சுபாஷ் கிட்டே பேசிட்டேன்பா. அவன் பிரசன்னா கிட்டே, ஒரு மாசம் தனக்கு டிரெய்னிங்... பூனா போறதா சொல்லிட்டு ஆபீஸ்லே வேலைக்கு லீவ் போட்டுட்டுப் போய் ஹைதராபாத்லே ஹேமந்த் கூட இருக்கிறான்." தான் கேட்டதைப் பகிர்ந்து கொள்ள,

முரளியும், பிரேமும் தங்கள் அப்பாக்கள் பத்திரமாகவும் தங்கள் ஆட்கள் மூலமாக எந்த ஒரு விஷயமும் பகிரப்படவில்லை என்பதையும் தெரிவித்த பின், "இந்து! நீயே பிரசன்னாவுக்குப் போன் பண்ணி என்ன விஷயம்னு நைஸாக் கேளு. ஆளு ஆளுக்கு என்ன விஷயம்னு குழம்புவதை விட நான் சொல்றது தான் சரியான வழி!" என்று பவானி யோசனை பகிர்ந்தார்.

அதைப் பின்பற்றி இந்து, பிரசன்னாவைப் போனில் அழைத்தாள். "பிரசன்னா, என்ன கேட்டீங்க? சரியாப் புரியலை... ப்ளீஸ், திருப்பிச் சொல்லுங்க!" எனக் கேட்க...

"போய்ச் சேர்ந்து நாலு நாள் ஆயிடுச்சு... நீ என்னைக் கூப்பிட்டுப் பேசவே இல்லையே! இங்கே என் நைனா, உங்கம்மா கிட்ட நம்மோட கல்யாண மேட்டர் பத்திப் பேசினீங்களான்னு கேட்கச் சொன்னாங்க... அதைத் தான் கேட்டேன். பக்கத்துலே அத்தை இருந்தா கொடேன். நான் பேசணும் அவங்க கிட்டே."

"சாரிப்பா, நாங்க இன்னும் எங்கம்மா கிட்டே இந்த விஷயத்தைப் பத்திப் பேசலை.அண்ணன்தான் சமயம் பார்த்துப் பேசலாம்னு சொல்லி இருக்கிறதுனால, நான் இதைப் பத்தி வாயைத் திறக்கலை. இப்போ அம்மாவை டாக்டர் பார்க்க அழைத்து வந்து இருக்கிறோம். இப்போ அம்மா கூட அண்ணாதான் இருக்காங்க. வந்த பிறகு அண்ணா கிட்டே டிஸ்கஸ் பண்ணிட்டு உங்களுக்கு நான் கூப்பிட்டுச் சொல்றேன்."

அந்தப் பக்கத்தில் இருந்து பிரேமும், முரளியும் செய்யும் கையசைவுகளைப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்பப் பிரசன்னாவிற்கு மறுமொழி சொன்னாள்.

"கல்யாணத்தைப் பத்திப் பேசலைன்னாலும் பரவாயில்லை. அத்தையாண்ட ஒரு வார்த்தை சௌக்கிய மாவது கேட்டுப் பேசிக்கிறேன்." மீண்டும் பிரசன்னா இந்து வின் அம்மாவிடம் பேச வேண்டும் என வலியுறுத்த...

"அப்படியா? சரி, அம்மா கிட்டே பேசுங்க, நான் அவங்களிடம் இந்த போனைக் கொடுக்கிறேன். ஆனால், நீங்க என்னோட ஃபிரெண்டுன்னுதான் சொல்லுவேன். நீங்க வேற அத்தைன்னு ஏதாவது கூப்பிடாதீங்க. அம்மாவைச் சமாளிக்க முடியாது. இருங்க, கொடுக்கி றேன்...!" சிறிது நேரம் சும்மாவே போனைக் கையில் வைத்திருந்து போனைக் கல்யாணி வசம் ஒப்புவிக்க... அதை வாங்கி அவரும் சம்பிரதாயமாக ஓரிரு வார்த்தைகள் பேசி வைத்தார்.

**அ**ன்று இரவு தன் அம்மாவின் அறையில் படுத்தி ருந்த முரளியின் போன் ஒலி எழுப்ப, அதை எடுத்தவன்... அந்தப் பக்கம் சாந்தினி கூப்பிட்டார்.

"வாழ்த்துகள் முரளி... நான் தவறான நேரத்துலே கூப்பிட்டுத் தொந்தரவு ஏதாவது பண்ணிட்டேனா?"

"தேங்க்ஸ் டாக்டர். நீங்க வேற டாக்டர், தாலி கட்டி முடியும் வரை நாங்க தனியாகத்தான் இருக்கணும் என்பது பாட்டியின் உத்தரவு."

"அடடா! அப்படியா? சரி, அப்போ இன்னும் ஒரு மாசம் கழித்துதான் என்ன, எப்படின்னு தெரியும் இல்லையா?"

"இல்ல டாக்டர், நாம பயந்த மாதிரி எதுவும் நடக்கலை. இன்று இயல்பாக என்னை ஏற்றுக் கொண் டாள்..."

"பெரியவங்களை ஏமாத்திட்டீங்களே...! எப்படியோ நம்மோட கவுன்சிலிங் நல்ல வேலை செய்து இருக்குன்னு

சொல்லு. அவள் கிட்டே என்னோட வாழ்த்தைத் தெரிவித்து விடு!" எனச் சொல்லிப் போனை வைக்க, போனை அணைத்துவிட்டு இன்ப நினைவுகளில் ஆழ்ந்து, படுக்கையில் புரள ஆரம்பித்தான் முரளி.

**ஞா**யிற்றுக்கிழமை மதியப் பொழுதில் இவர்கள் இருவரும் செல்லும் வகுப்புகளின் நிர்வாகத் தலைவர்கள் மட்டுமே அழைக்கப்பட்ட வரவேற்பு நடைபெற்றது.

ஒரு வாரம் கழித்து வைத்தி இவர்களுக்குப் போன் செய்து, பத்து நாட்களுக்குள் முரளி, இந்து, இவாஞ்சலின், டெல்லியில் இருக்க வேண்டும் என்று சொல்ல...

இவர்கள் அனைவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தும் அந்த நாளின் விடிகாலை 2.40 மணிக்கு டெல்லி வந்தனர்.

காலையில் மூவரும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு இந்து, இவாஞ்சலினுக்கும் செபஸ்டினுக்கும் பிறந்தவள் தான் என்பதை, செபஸ்டினின் எலும்பில் இருந்து எடுக்கப்பட்ட டி.என்.ஏ.க்கள் மூலமாக உறுதி செய்யப்பட, பின்பு நீதிமன்றம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட டாக்டர்கள், இந்துவின் தலையின் பின்பகுதியில் தலை மண்டையோட்டுப் பகுதி இரண்டாகப் பிரிந்து, லேசான குழிவாக நடு விரல் நீளத்துக்குக் காணப்படுவதை உறுதி செய்த பின், இந்துவிற்கும் முரளிக்கும் செய்யப்பட்ட திருமணச் சான்றிதழ்கள், அங்கு எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் அங்கு இவர்கள் அளித்த பார்ட்டிகளின் போட்டோ வீடியோ சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பிறகு வைத்தியின் வசம் இருந்த சொத்துக்கள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் இவளிடம் வழங்கப்பட்டது. இந்து, சுபா இன்ஸ் மற்றும் ரிசார்ட்ஸை ஐவர் கொண்ட குழுவினர் வசம் ஒப்புவிக்கவும், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதைத் தன்னுடைய நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொள்ளவும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, அது நீதிமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட, அதை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளிக்க, அதன்படி ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

ஐந்து உறுப்பினர்களாக, பவானி, பிரேம், சுபாஷ், ஸ்டீபன், பவானியின் சகோதரிகளில் ஒருவரான திலகவதி போன்றோர் தேர்வு செய்யப்பட, அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதில் ஒரு திருத்தமாக சுபாஷுக்குப் பதிலாக ஒரு வருடத்திற்கு மட்டும் சுப்ரஜா என்பவர் அந்தப் பொறுப்பை வகிப்பார் என்று சொல்லப்பட்டது.

ராஜபாண்டியன், நவநீதத்துக்கு எழுதிக் கொடுத்த சுபா இன்ஸ் ரிசார்ட்ஸ் லீஸ் காலம் முடிவடைந்த நிலையில் இருப்பதால், அதை நவநீதம் இந்த ஐவர் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டு, அதையும் ஏற்றுக்கொண்டு நவநீதத்துக்கு நோட்டிஸ் அனுப்பியது நீதிமன்றம்.

நீதிமன்றம் அளித்த நோட்டீஸ் கிடைத்தவுடன் நவநீதம் வைத்தியைப் போனில் அழைத்தார். “பாருங்க வைத்தி, நான் இந்தச் சொத்தின் உரிமைக்காரியான சுபாவிடம் பேசணும்!” என்று சொல்ல,

"இதோ பாரு நவநீதம்... அவ கிட்டே பேச என்ன இருக்கு சொல்லு...? ஒண்ணு நீ என் கிட்டே பேசணும்... இல்லை, அந்த ஐந்து பேர் கிட்டே பேசணும். சுபா கிட்டே பேச உனக்கு என்ன இருக்கு சொல்லு. நானே அவளை உன் கிட்டே பேச வைக்கிறேன்!" நவநீதத்தை, சுபா சந்திக்க முடியாது என மறுத்துத் திட்டவட்டமாகச் சொன்னார் வைத்தி.

"நான் இந்த ஹோட்டலை சுபா அப்பாகிட்டே இருந்து வாங்கினேன். அதே போல நான் சுபா கையிலே தான் ஒப்படைப்பேன்!" என தன்னுடைய நிலையில் நிற்க...

"அப்போ சரி, சுபா மட்டும் தனியாக வரமாட்டாள். அவளோட புருஷன் யார் தெரியுமா...? உன் தலைமையே பார்த்து மிரளும் ஃபேமஸ் ஜர்னலிஸ்ட் கேசவ் சுப்பிரமணியம்... அவரும் அவ கூட வருவார், சரியா? அது மட்டுமில்லை, அந்த ஐந்து பேரும் வருவாங்க. கூடவே ஹரிஹரனும் வருவார். என்ன சொல்றே? எல்லோரும் வரட்டுமா?"

வைத்தி, யார் யார் வருவார்கள் என மிரட்ட, அதற்குப் பதிலாக.

"எவனுங்க வந்தா எனக்கு என்ன? நான் சுபா கிட்டே பேசினபிறகுதான் அந்த ஹோட்டலை ஒப்படைப்பேன். நான் பேசினா உடனே அவ இந்த ஹோட்டலை என் பேருக்கே எழுதிக் கொடுத்துட்டு, அவ புருஷனோட வெளியே போயிடுவா பாருங்க!" என எதிர் சவால் விடுத்தான்.

இந்துவிடம் இதுபற்றிப் பேசப்பட்டது. அப்பொழுது ஹரிஹரன், "வைத்தி, இவங்க பாட்டுப் போட்டி ஃபைனல் நிகழ்ச்சி ஏப்ரல் 15ந் தேதி. மறுநாள் 16ந் தேதி கல்யாணத்துக்கு நாள் குறிச்சு இருக்கு. பெண்ணழைப்புக்கு முதல் நாள் வேண்டாம்னு சொல்லி விட்டேன். கல்யாணத்திற்குக் காலையில வெச்சுக்கலாம். கல்யாணம் உங்க ஊர்லதான் நடக்கும்.

"அன்னிக்கு சாயங்காலம் ஐந்து மணிக்கு பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையிலே... ஏழு மணிக்கு வரவேற்பு வெச்சுக்கலாம்... பத்திரிகையாளர் சந்திப்பு மட்டும் இவங்க ஹோட்டல்ல நடக்கட்டும்... ரிசப்ஷன் ஒய்.எம்.சி.ஏ. இன்டோர் ஸ்டேடியத்தில் வெச்சுக் கலாம்... ஏப்ரல் 14ந் தேதி 3.00 மணிக்கு நவநீதத்தை நாம சந்திக்கப் போகலாம்... அதே நேரம் அந்த ஆள் கமிஷனரைச் சந்திக்கணும்... அங்கே முடிந்தவுடன் மீடியாக்களைச் சந்திக்கணும்!" தன்னுடைய திட்டங்களைச் சொல்ல...

"மாமாப்பா, நவநீதத்தை மீட் பண்ண அம்மாவும் வரணுமா?" சிறிது பயத்துடன் இந்து கேட்க...

"பாப்பா, அதெல்லாம் தேவையே இல்லை. அதைக் காட்டி மிரட்டத்தான் வரச் சொல்றான்... நாங்க அவனுக்கு சரியான நெட் கட்டியிருக்கோம். அதனாலே பயப்படாதே!" என்று வைத்தி தேற்றினார்.

ஏப்ரல் 14ந் தேதி தமிழ்ப் புத்தாண்டு மிக இனிமையாக உலகிற்கு ஆரம்பிக்க, இந்து வீட்டில்

இருந்தவர்களுக்கு அன்றைய தினத்தைப் பற்றிய கவலை களுடன் விடிந்தது.

நவநீதம், தான் ஒரு காசு செலவழிக்காமல் தனக்கு லாபத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் ஹோட்டல் தன் வசமாகப் போவதுடன், மறுநாள் ஜோடியாக பாடுங்கள் நிகழ்ச்சியில் பங்கு பெற்றவளைத் தன்னுடைய மகனுக்கு மணமுடிக்கப் போவதை உலகறிய அறிவிக்கப் போவதைப் பற்றியும் சிந்திப்பதும், அதனால் உண்டான சந்தோஷத்தில் ஆயிரம் ரூபாய் கட்டை எடுத்துக் காய்கறி வாங்கப் பணம் கேட்ட வீட்டு வேலைக்காரனிடம் கொடுக்க, அதைப் பார்த்து மிரண்ட பி.ஏ., நவநீதத்தின் கையைப் பிடித்து உலுக்கிய பிறகே சுய உணர்வு பெற்றார்.

மாலை மூன்று மணியளவில் முதலில் பிரேமும், இந்துவும் நவநீதத்தின் வீட்டிற்குச் சென்றனர். வந்தவர் களை வீட்டு ஹாலில் அமர்த்தி அவர்களிடம் பேசிக் கொண்டு இருந்த பொழுது, நவநீதத்தின் வீட்டு வேலை யாள் வந்து, யாரோ பார்க்க வந்து இருப்பதாகச் சொல்ல...

வேலைக்காரனிடம் "நீ போய், வந்தவர்களைக் கட்சி ஆளுங்களை எல்லாம் பார்ப்பேனே... அந்த வீட்டுல உட்காரவை. நான் இதோ வரேன்!" கூறி அவனை அனுப்பி விட்டுப் பிரேமிடம் திரும்பி,

"நீங்க இங்கே உட்கார்ந்து டி.வி. பார்த்துக்கிட்டு இருங்க. நாங்க இரண்டு பேரும் போய், வந்தவங்க கிட்டே பேசி ஒரு அரை மணி நேரத்துல வந்துடறோம்... என் பையன் உங்க தங்கச்சியைக் கட்டிக்கிறதுக்கு முன்னா

டியே அதிர்ஷ்டத்தை இவன் பக்கம் கொண்டு வந்து சேர்த்து இருக்கா. நல்ல அதிர்ஷ்டக்கார மருமகள்... இப்ப அடையாறுல இருக்கிற ஃபைவ் ஸ்டார் ஹோட்டலும், உத்தண்டி ரிசார்ட்ஸும் இன்னும் இரண்டு நாள்ல என் பையன் பேருக்கு ரிஜிஸ்டர் ஆகிடும்!" முகம் முழுவதும் மகிழ்ச்சி பரவ, குரலில் உற்சாகத்துடன் விடை பெற்றுச் சென்றார்.

"வாங்க... வாங்க... வைத்தி, ஹரிஹரன்... எங்களோட ரூம்ல போய்ப் பேசலாமா? இல்லை, இங்கேயே பேசலாமா?" என்று நவநீதம் வரவேற்க...

"இல்லை, இந்த இடத்துலே வெச்சே பேசலாம். ஹால் நல்லா பெரிசாதானே இருக்கு. அட டி.வி. கூட இருக்குப்பா... தேவைப்பட்டாப் போட்டுப் பார்க்க!" என்று ஹரிஹரன் சொல்ல...

"ஆமாம், நீங்க இங்கே எதுக்கு வந்தீங்க?" பிரசன்னா எகிற ஆரம்பிக்க...

"என்ன நவநீதம், உன் பையன்கிட்டே நீ சொல்லவே இல்லையா? இதோ பாரு பிரசன்னா, நாங்க ஒண்ணும் உங்கப்பாவைப் பார்க்கப் பிரியப்பட்டு இங்கே வரலை. எங்க வீட்டுப் பொண்ணைப் பார்த்துப் பேசணும்னு உங்கப்பாதான் சொன்னார். அதுக்குத்தான் இங்கே வந்து இருக்கோம்... அதுவும் எங்க பொண்ணு பாதுகாப்புக்காக!"

பிரசன்னாவின் கேள்விக்குப் பதிலுரைத்தார் வைத்தி.

“வைத்தி, எங்கே அந்த சுபா பொண்ணு? அது வரலையா?” நவநீதம் கேட்க...

“பாப்பா இன்னும் இங்கே வரலியா? எப்போ கிளம்பினா அவ...? உனக்குத் தெரியுமா பவானி?” வைத்தி, பவானியைப் பார்த்துக் கேட்க...

“மாமா, பாப்பாவும் உங்க பையனும் அப்பவே கிளம்பிட்டாங்களே...! என்னாச்சுன்னு தெரியலை, வந்துடு வாங்க!” பொறுமையாக வைத்தியின் கேள்விக்குப் பதிலளிக்க, பவானியையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்த நவநீதமும் அவனின் மகனும்,

“ஏய், எங்க கிட்டே இருந்து சுபாவைக் கொண்டு கிட்டுப் போன... தானே நீ...? ஆனால், அப்போ உன்னைப் பார்த்தாலே... தெரிந்திடும்... ஆனா இப்போ சும்மா நச்சுன்னு அசல் பொம்பளை மாதிரியே இருக்கே!” விகார இளிப்பு மற்றும் பேச்சுடன் நவநீதம் ஞாபகம் வந்தாற் போல ஹரிஹரனிடம், “சுபாவைக் கட்டிய தியாகி வரலையா? நான் அவனைப் பார்த்துப் பாராட்டணும். எதுக்குத் தெரியுமா? என் பிள்ளை தின்ன எச்சில் இலையில் மீண்டும் சாப்பிடப் போறானே... அதுக்குத் தான்.” நக்கலாகப் பேசி முடிக்க...

“எங்க வீட்டுப் பெண் மகா சக்திடா. அதை உயிரில்லாத ஒரு பொருளோட ஒப்புமை பண்றே? வெறி நாய் கடிச்சா ஆஸ்பத்திரிக்குப் போய் ஊசி போட்டுக் குணப்படுத்திக்கிறோமே தவிர, நாய் கடிச்ச பகுதியை

வெட்டி வீசிடறது இல்லை. அது மாதிரிதான் உன் பிள்ளை என்ற வெறி நாய் கடிச்சதுக்கு ஊசி போட்டுச் சரி பண்ணினோம்... கடிச்ச நாய் பிடிபடற வரைக்கும் பாதுகாப்பாக இருக்கிற மாதிரி, எங்க பொண்ணையும் பாதுகாப்பா வெச்சோம், அவ்வளவுதான். என்ன கேட்டே... கல்யாணம் பண்ணிக்கிட்டவனைத்தானே பார்க்கணும்னு சொன்னே! நான் அவங்க கல்யாணத்தையே காட்டறேன், இதோ பாரு!" எனச் சொல்லிய ஹரிஹரன்,

பவானியிடம் இருந்து கல்யாண சி.டி.யை வாங்கி, அங்கிருந்த நவநீதத்தின் பி.ஏ.விடம் கொடுக்க, அங்கே கோட் சூட்டில் முரளி காட்சியளிக்க, எழுத்துகள் கேசவ் சுப்பிரமணியம் என்ற பெயருடன் மிளிர, நவநீதம் தன்னை அறியாமல், "இவனா கேசவ் சுப்பிரமணியம்?" மனதிற்குள் நினைத்ததை வாய் விட்டு வெளியில் சொல்ல,

"என் பையனைப் பார்த்தே ஆச்சரியப்பட்டா எப்படி? இன்னும் கொஞ்ச நேரத்தில என்னோட மருமகளைப் பார்த்தா உனக்கு ஒரு வேளை மயக்கம் வந்தாலும் வரலாம். எதுக்கும் தண்ணி எல்லாம் எடுத்து பக்கத்துலே வெச்சுக்க!"

நக்கலாகச் சொல்லி விட்டு, டி.வி. திரையைப் பார்க்க, அதில் அழகான எளிமையான அலங்காரத்தில் சுபபிரியதர்ஷினி என்ற எழுத்துகள் மின்ன, அதே போல் பல் வரிசை மின்னலடிக்கச் சிரித்தபடி இந்திரா பிரிய தர்ஷினி! அதில் தோன்றவும், அப்பாவும் பிள்ளையும் இமைக்கவும் மறந்து உட்கார்ந்து இருந்தனர்.

அவர்கள் இருந்த வீட்டின் முன் கதவு திறக்கப்பட, அதில் பிரேம், இந்து என்கிற சுபா மற்றும் முரளி தோன்ற, தங்களின் கண்முன்னே தங்களுடன் இணைந்து உலா வந்தவள், அவர்கள் தேடும் சுபா என்பதை அறிந்த அப்பாவும் பிள்ளையும் ஆத்திரத்தின் உச்சத்திற்குச் சென்றனர்.

அவர்கள் சுபாவைப் பார்த்து, "நாங்க யாருன்னு தெரிஞ்சுதான் உன்னோட பேரை மறைச்சு உலாவினியா? இங்கே பாரு... உன் குடும்பம் மானம் வெளியிலே போகாமல் இருக்கணுமின்னா ஒழுங்கு மரியாதையா அந்த ஹோட்டல் எல்லாத்தையும் என் பிள்ளை பேருக்கு மாத்திக் கொடுத்துட்டுப் போய்க்கிட்டே இரு!" நவநீதம் மிரட்ட... அவர்களைப் பார்த்து அசையாமல் நின்றாள் இந்து.

"என் அப்பா சொன்னது உன் காதிலே விழலையா?" என்ற பிரசன்னா, அங்கு நின்று கொண்டு இருந்த பி.ஏ. வைப் பார்த்து, "டேய், அந்தக் கேசட்டைக் கொண்டு வாடா, அந்த புரொஜக்டர் போடு, இவங்க எல்லோரும் பார்த்து ரசிக்கட்டும்!"

ஆத்திரத்தின் உச்சத்தில் இரைய, பி.ஏ.வும் பிரசன்னாவின் சொற்படி வீடியோ காமிராவில் புரொஜக்டரை இணைத்து, அங்கிருந்த வெள்ளைச் சுவரில் காட்சி களைப் பாய்ச்ச... அந்தத் திரையில் வந்த காட்சியைக் கண்ட நவநீதமும், பிரசன்னாவும் திருதிரு என்று விழித் தனர். மற்றவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து

சிரித்தனர். ஆம், திரையில் வடிவேல் கிணத்தைக் காணோம் என்று ஒரு படத்தில் வரும் காமெடிக் காட்சி ஓடிக் கொண்டு இருந்தது.

“இதுக்கே அதிர்ச்சியானா எப்படி நவநீதம்? இப்போ நீ பார்க்கப் போகிற காட்சியினால் உனக்கு ஹார்ட் அட்டாக்கே வரலாம்!” என்று ஹரிஹரன் சொல்ல...

“அண்ணே, நீங்க வேற... ஹார்ட் இருக்கிறவனுக்குத் தானே ஹார்ட் அட்டாக் வரும். சாக்கடையிலே இருக்கிறவனுக்கு என்ன வரும்?” ஸ்டீபன் பதில் சொல்ல,

ஹரிஹரன், பி.ஏ.விடம், “ஏன்ப்பா அந்த நியூஸ் சானல் போடு!” என்று சொல்ல...

அதில் ஒரு செய்திச் சானலில் ஒரு பெண் நிருபர், “தற்பொழுது சினிமாவின் உச்சபட்ச நடிகையான அஷ்மா தாரிணி அவர்கள் கமிஷனரைச் சந்திக்க வந்து இருப்பதாக மீடியாக்களுக்குத் தகவல்கள் கிடைக்கவே, நாங்கள் அனைவரும் இவ்விடம் வந்து குழுமியிருக்கிறோம். அவர் என்ன காரணத்திற்காக வந்து இருக்கிறார் என்பது அஷ்மா வெளியில் வந்து சொன்னால் மட்டும் தெரியும்!” தன்னுடைய பேரையும், தான் பணிபுரியும் செய்திச் சானலையும் சொல்ல... அதில் விளம்பர இடைவேளை வர...

“ஆமாம்... இது நீ சார்ந்திருக்கிற கட்சியோட செய்திச் சானல் தானே...?” நவநீதத்தைப் பார்த்து ஸ்டீபன் கேட்க, அதற்குப் பதில் சொல்வதற்கும் முன் டி.வி.யில் அஷ்மா

தாரிணி திரையில் தோன்ற, நிருபர்கள் 'ஏன் கமிஷனர் அலுவலகம் வந்தீர்கள்?' என்று கேட்க,

"முன்னாள் நல்வாழ்வுத் துறை மந்திரி நவநீதத்தின் மகன் எனக்கு சில நாட்களாக செக்ஸ் டார்ச்சர் கொடுத்து வந்தார். அதன் பின் ஒரு வீடியோவைக் காட்டி, என்னை அவருடன் இணைந்து வாழ வற்புறுத்தி வந்தார்.

"தற்பொழுது என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்த... என்னால் அதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம், மந்திரி நவநீதத்தின் மகன் பிரசன்னா எய்ட்ஸ் வியாதியால் பாதிக்கப்பட்டவர்.

"அதைச் சொல்லி நான் மறுத்தபொழுது, அவர் என்னுடைய வீடியோவை நெட்டில் விடுவேன் என்று பயமுறுத்துகிறார். அந்த வீடியோவைக் கைப்பற்றி அவரிட மிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கமிஷனரைப் பார்க்க வந்தேன்."

"என்னது நீங்க சொல்றது உண்மையா? அதுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா?" நிருபர்கள் அஷூமாவைப் பார்த்துக் கேட்க,

அதற்கு அவள் அளித்த பதிலும் ஆதாரங்களும் மொத்த மீடியாவும் அதிர்ந்தது மட்டுமல்ல, இங்கு அப்பா வும் மகனும் கூடத்தான் அதைவிட உச்சபட்சமாக அஷூமா சொன்ன கருத்தை ஆமோதித்து, அவளின் கூட இருந்த நபரைப் பார்த்தும், சொன்னதைக் கேட்டும் அதிர்ந்தனர்.

# 28

அங்குக் கூடியிருந்த நிருபர்களை எல்லாம் பார்த்து, “நான் ஆதாரங்களை மட்டும் காட்டினால் போதுமா! அல்லது இந்த உண்மைகள் தெரிந்த ஒரு நபரை உங்கள் முன் நிறுத்தினால் நம்புவீர்களா?” எனக் கேட்டு விட்டு,

தான் சாய்ந்திருந்த தன்னுடைய காரின் மீதிருந்து சிறிது விலகிக் கதவைத் திறக்க, அதில் இருந்து இறங்கிய நபர் பல நிருபர்களுக்குத் தெரிந்தவனாக இருந்தான்.

நிருபர்களிடம், “நான் இனியன். அஷூமா குற்றம் சாட்டும் பிரசன்னாவின் நெருங்கிய தோழனாகவும், அவரின் கம்பெனி லீகல் அட்வைசர்... அது மட்டு மல்ல! அவரது வக்கீலாகவும் இருந்துவந்திருக்கிறேன். பிரசன்னாவின் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எனக்குத் தெரியும்.

“அஷூமா சொன்னது உண்மைதான். இப்ப லேட்டஸ்ட்டா பிரசன்னா ஃபைனான்ஸ் செய்த படத்தில் அஷூமா நடிக்கும்போது அவர்கள் தங்கிருந்த ஹோட் டலில் கேமிரா செட் செய்து, குளிக்கும் காட்சிகளைப் பட மாக்கினான். அதை வைத்து மிரட்டியும் வந்தான். இதைப் பற்றி நிறைய தடவை அஷூமா என்னிடம் சொல்லி அழுதிருக்காங்க...

போன மாதம் மத்தியப் பிரதேசத்தில் நடந்த அவர் சார்ந்திருக்கும் கட்சியின் மாநாடு நடைபெற்றது, நீங்கள் அனைவரும் அறிந்ததே. அதில் ரத்ததான முகாமும்

இருந்தது. அதில் பிரசன்னாவும் ரத்ததானம் செய்ய... அந்த இரத்தத்தில் எச்.ஐ.வி. இருக்கிறதா என்று சோதிக்க எய்ம்ஸ் ஆஸ்பிட்டல் நியூடெல்லி அனுப்ப, அதில் எச்.ஐ.வி. கிருமிகள் இருக்கிறது என்று உறுதி செய்யப்பட, நானும் பிரசன்னாவும் மீண்டும் ஒருமுறை இங்குள்ள அப்போலோ ஆஸ்பிட்டல் மூலமாகவும் சோதனை செய்ததில் அது உறுதி செய்யப்பட்டது.

"பிரசன்னாவின் ரத்தம்தான் அது என்பதற்குச் சான்றாக டி.என்.ஏ.வின் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தனக்கு நோய் இருப்பது தெரிந்தும்... அஷமாவைக் கல்யாணம் செய்து கொள்ளக் கட்டாயப் படுத்தினார் பிரசன்னா. அதனால்தான் என்னுடைய வழி காட்டுதலின்படி அஷமா இன்று இங்கு வந்தார். நீங்கள் கேட்ட ஆதாரங்கள் இதோ" என்று ஒவ்வொரு நிருபர் களுக்கும் ரத்தப் பரிசோதனையின் நகல்கள் வழங்கப் பட்டது.

இதை இங்கே டி.வி. மூலம் கண்ட பிரசன்னாவும், நவநீதமும் தலையில் கைவைத்து அமர,

"ஒரு நாள் அழியப் போகிற சதையை அந்தப் பெண்கள் அறியாமல் எடுத்துக் காசு பார்த்தீங்க இல்ல... அப்பனும் பிள்ளையும் நாளைக்கு நீங்க இரண்டு பேரும் செத்தா கார்பரேஷன் குப்பை லாரிகூட அள்ளிக்கிட்டுப் போக வராது. யாருடா எச்சில் இலை? எச்சில் இலைக்குக் கூட மதிப்பு இருக்குடா. உங்களுக்கு அதுகூட இனிமே இந்தச் சமுதாயத்துல கிடைக்காது.

"நீ சார்ந்திருக்கிற கட்சித் தலைமை உன் பையன் அஷமாவிடம் நடந்துகொண்ட அநாகரிகச் செயலுக்காக நீக்கிவிடும். இப்பவே அப்பனும் பிள்ளையும் உயிரோடு நடமாடும் பிணமடா. எங்களைக் கூட இந்தச் சமுதாயத் தில் சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் உன்னைப் போன்றவனை என்னிக்குமே ஏத்துக்க மாட்டாங்க.

"என்னது... நான் பொம்பளை மாதிரி நச்சுன்னு இருக்கேனா! வயசான உன் புத்தியே இப்படி விகாரமா இருக்கும்பொழுது இளமையில் முடிவில் இருக்கும் உன் பிள்ளை எப்படி இருப்பான்?

"இப்ப சொல்றேன், உண்மையைக் கேட்டுக்க. எங்களைக் கேவலமா சொன்னியே... எங்களின் சக்தி தான்டா உன்னை அழிச்சிருக்கு... எப்படி தெரியுமா? நீ எடுத்து வைத்திருந்த வீடியோக்கள் எல்லாம் அதை என்னோட சகோதரி ஒருத்தியால்தான் ஹோட்டலில் உள்ள கம்ப்யூட்டரில் இருந்து எடுக்கப்பட்டு, மீண்டும் அது பதிவாகாமல் தடுக்கப்பட்டது.

"நிறையப் பெண்கள் உங்கள் இருவரால் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்பது எங்கள் சகோதரிகள் அனை வருக்கும் தெரிவிக்கப்பட்டவுடன்... ஒரு நடிகையின் மேனேஜராக இருக்கும் மற்றொரு சகோதரி மூலம் நாங்கள் அஷமாவைப் பிடித்து இவ்வாறு பேச வைத் தோம். அதிகாரம் நுழைய முடியாத இடத்தில்கூடப் பணம் நுழையும். அந்தப் பணத்தின் மூலம் உன் பிள்ளைக்கு எய்ட்ஸ் என்று சர்டிபிகேட் வாங்கினோம்.

"என்ன வேடிக்கை பார்த்தியா! இந்தப் பணத்துக்காகத்தானே நான் வளர்த்த என்னோட சுபாவை வேசியாக்க முடிவு செய்த... இன்னிக்கு, அந்தப் பணத்தை வைத்தே உன் பிள்ளைக்கு உயிர்க்கொல்லி நோய்னு சொல்ல வைத்தாச்சு. கத்தி எடுத்தவனுக்குக் கத்தியால சாவுன்னு பெரியவங்க சொல்லுவாங்க. பணம் என்ற அச்சிடப்பட்ட தாளைச் சம்பாதிக்க நீ முறையற்ற வழியைப் பயன்படுத்தின... அதே வழியைப் பயன்படுத்தி உன்னைச் செல்லாதவனா ஆக்கிட்டோம்.

"கிருஷ்ண பரமாத்மா சொன்னதுபோல... அதர்மத்தை அழிக்கத் தர்மத்தை நிலைநாட்ட, அதே அதர்மத்தைக் கொண்டு சூழ்ச்சி செய்து தர்மத்தை நிலை நிறுத்த வேண்டும் என்று. அதைத்தான் நாங்க இப்ப செய்தோம். நீ எதைக் காட்டி எங்க சுபாவின் அப்பாவின் மரணத்தைக் கொண்டு வந்தாயோ... அந்த ஆயுதம் நீ கட்சி மாநாட்டிற்காகச் சென்றபொழுது கைப்பற்றி அழித்து விட்டோம்."

கோபம் கொண்ட காளியின் சொரூபம் எப்படி இருக்குமோ, அதே போலக் கோபத்துடன் வார்த்தைகள் என்ற சூலாயுதம் கொண்டு, பவானி நவநீதத்தையும் பிரசன்னாவையும் குத்தினாள்.

"இதோ பாரு நவநீதம்! நீயா ஹோட்டலை எங்க கிட்ட ஒப்படைக்கப் போறியா! இல்லை... உன்மேல நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கட்டுமா...! இதோ

நிக்கிறானே பிரேம் என்னோட பிள்ளை, சுபாஷ், திலகவதி மற்றும் பவானி, ஸ்டீபன் இவங்க ஐந்து பேர் கொண்ட குழுகிட்ட நீ நாளை காலைக்குள்ள ஹோட்டலை ஒப் படைக்கணும்.

"எவ்வளவோ கிரிமினலா யோசிச்ச நீ இரண்டு விஷயங்களைக் கவனிக்கத் தவறின. ஒண்ணு ஹோட் டலில் பணிபுரியும் அத்தனை பேரும் எங்க ஊரைச் சேர்ந்தவர்கள்... அடுத்தது, பேர் மாறி ஆள் மாறி வந்து இருந்தாலும் தோண்டித் துருவி விசாரித்து இருந்தா இந்திராதான் நீ தேடுற சுபா என்பது எப்பவோ தெரிந்து இருக்கும்.

"உன்னுடைய அதிகமான அசட்டைதான் நாங்கள் வெல்வதற்குக் காரணமா இருந்தது... சரி, நாங்க கிளம்ப றோம். நாளைக்கு வந்து கையெழுத்து போட வேண்டிய இடத்துல எல்லாம் உன்னோட கையெழுத்தைப் போட்டுப் போ. நாங்க இப்போ கிளம்பறோம்."

வைத்தி நவநீதத்திடம் சொல்லிவிட்டுப் புறப் பட்டார்.

**வீ**ட்டிற்கு வந்ததும் ஹரிஹரன்... வீட்டில் இருந்த வர்கள் அனைவர் முன்னிலையிலும், "இனிமேல் எந்தப் பிரச்சனையும் கிடையாது. ஏற்கெனவே ஆலப்பியில வாங்கி இருக்கிற வாட்டர் ஃபிரான்ட் ரிசார்ட்க்கு பேர் மாத்திப் பத்திரம் போட பவானி, பிரேம், ஸ்டீபன், சுபாஷ், திலகவதி அங்க போறாங்க..." சொல்லி வரும்பொழுது,

"அப்படின்னா... நாளைக்கு ஈவினிங் எங்களோட ஃபைனல் ஃபங்க்ஷனுக்கு இவங்க வரமாட்டாங்களா?" அவசரமாகச் சுபா கேட்டாள்.

"இன்னிக்கு நைட் ஃபிளைட்க்குப் போயிட்டு நாளைக்கு ஆஃப்டர்நூன் ரிடர்ன் ஃபிளைட் அவங் களுக்கு. நாளைக்கு ஈவினிங் ஃபங்க்ஷனுக்குள்ளே அவங்க எல்லோரும் வந்துடுவாங்க. ஸ்டீபன் நாளன் னிக்குக் கல்யாணம் இருக்கிறதுனால அவர் அப்படியே ஊருக்குப் போயிடுவார்.

"திலகவதி மட்டும் அங்கே தங்கிச் சில வேலைகள் பார்ப்பதற்காக இருப்பாங்க. ஃபங்க்ஷனுக்குப் பெரிய வங்க நாங்க யாரும் வரமாட்டோம்."

"ஏன் மாமாப்பா... பெரியவங்க நீங்க இல்லாம எப்படி?" என இழுக்க,

"அங்கே உனக்குப் போட்டி ஆரம்பிக்கும்போது நான், உன் பெரியப்பா, சவேரியார், சித்தி, உன் அம்மா இவ்வளவு பேரும் ஊருக்குப் போக ஃபிளைட் ஏறி இருப் போம். சில விஷயங்களுக்காகத்தான் சொல்றேன். நீயும் முரளியும் யாரு என்பது இப்போதைக்கு யாருக்கும் தெரிய வேண்டாம். உன்னுடைய வெற்றி உன்னுடைய திறமைக்குக் கிடைத்ததா இருக்கணுமே தவிர, உன்னு டைய பின்பலத்தால் பெறப்பட்ட ஒன்று என்று யாரும் பேசிவிடக் கூடாது.

"நாளை நீங்கள் இருவரும் வெற்றி பெற்றால் எந்த ஒரு பேட்டியும் கொடுக்க வேண்டாம். மறுநாள் மாலை

ஐந்து மணிக்கு சுபா இன்ஸ் ஹோட்டலில் வைத்துப் பிரஸ்மீட் நடைபெறும் என்று சொல்லிட்டுக் கிளம்பிடுங்க."

"ஹரி அங்கிள்! டே ஆஃப்டர் டுமாரோ மார்னிங் இவங்க இரண்டு பேருக்கும் மேரேஜ்தானே. அதுவும் ஊர்ல வைச்சு நடக்குது. அதுக்குள் எப்படிப் போகறது? ஃபிளைட் எதுலயாவது புக் பண்ணியிருக்கீங்களா?" பொறுப்புள்ள அண்ணனாகப் பிரேம் கேட்க,

"ஆமாம் பிரேம், நாளைக்கு நைட் எந்த ஃபிளைட்டும் இல்லை திருவனந்தபுரத்திற்கு. அதனால் தான் சார்ட்டர் ஃபிளைட் எடுத்திருக்கு. அந்த ஃபங்க்ஷன் முடிந்த பிறகு நீங்க எல்லோரும் சார்ட்டர் ஃபிளைட் எடுத்து நம்ம ஊருக்குப் போங்க. நாம் அங்கு விடிகாலை 3.10லிருந்து 3.30க்குள் ரன்வேயில இருந்து வெளி யாகிடணும்.

"நாம ஏற்பாடு பண்ணியிருக்கிற ஃபிளைட் கம்பெனிக்காரங்க சொல்லிட்டாங்க. ஒன்வேக்கு மட்டும் தான் அரேஞ் பண்ணியிருக்கேன். ஃபிளைட் பி–180 பாஸஞ்சர், ஆறு பேர்தான் அதுல ஜர்னி பண்ணமுடியும்.

"நாளை மறுநாள் காலை தாலி கட்டுன பின்னாடி இங்க வர்றதுக்கு ஏர் இந்தியால எல்லோருக்கும் டிக்கெட் போட்டு இருக்கேன். நாம நாலரைக்குள்ள வந்துடலாம்."

"ஏன் அங்கிள்! தர்ஷினியோட ஊர் நாகர்கோவில் தானே! திருவனந்தபுரம் போய் எப்போ உங்க ஊருக்குப் போறது?" சுபாஷ் சந்தேகத்தைக் கேட்க,

“சுபாவோட ஊருக்கும திருவனந்தபுரத்திற்கும் டிராவலிங் டைம் கார்ல இருந்தால் ஒன் அன்ட் ஹாஃப் அவர் போதும்.”

சுபாஷோட கேள்விக்குப் பதில் சொன்ன ஹரிஹரன், “வைத்தி, நாளைக்கு இவங்க போட்டியில வின் பண்ணி வெளியில வர்றபொழுது கூட்டம் சேர்ந்தா ரொம்பக் கஷ்டம். நான் என்னோட பிரைவேட் செக்யூரிட்டிக்குச் சொல்லிடவா! பத்திரமா அவங்க இவங்க இரண்டு பேரை யும் வெளியில அழைத்து வந்து விடுவாங்க.”

சுபாஷ் ஹரிஹரனைப் பார்த்து, “அங்கிள், வேண டாம். நிருபர்கள் தவறா எடுத்து எழுத வாய்ப்புண்டு. அதனால நான் எங்களோட ஸ்கூல் குரூப் ஆட்களுக்கு எஃப்.பி.யில மெசேஜ் போட்டு விடறேன். முரளியை மட்டுமே எல்லோருக்கும் தெரியும். அதனால எல்லோரும் வந்துடுவாங்க. அவங்களை வைச்சு நான் பத்திரமா கார் வரைக்கும் கூட்டிக்கிட்டு வந்துடறேன்...” என்று விளக்க...

அனைவரும் அதற்குச் சம்மதம் அளித்தனர்.

“சுபாஷ், உன்கிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந் துட்டேன். நேத்திக்கு இங்க லேண்ட்லைனுக்கு ஒரு போன் வந்தது. உன்னைக் கேட்டு நான்தான் பேசினேன். உடனே அவங்க ‘என்னை ஆளும் மேரி மாதா’ பாடச் சொன் னாங்க. நானும் பாடிக் காட்டினேன்டா. யாரு தெரியலை, நம்ம கிஸ் குரூப் ஆளுதான் சொன்னாங்க...” இந்து சொல்ல...

“சாரிப்பா. என்னோட போன்ல சார்ஜ் இல்ல. அதனால உங்க லேண்ட்லைனுக்கு ரீடைரக்ட் பண்ணி னேன்.” குற்றவுணர்வுடன் சொல்ல,

“இதுக்கெல்லாம் எதுக்குப்பா சாரி! முன்னாடி இருந்த நிலை இப்ப இல்லியே! எல்லாம் சரியாயிடுச்சுல்ல. விடு விடு...” எனப் பிரேம் சொல்ல,

சோபாவில் ரிலாக்ஸாக அமர்ந்திருந்த இந்துவை யும் முரளியையும் பார்த்து பிரேம், “என்ன... ரெண்டு பேரும் ஹாயா உட்கார்ந்திருக்கீங்க. நாளைக்கு இந்நேரம் நீங்க ரெண்டு பேரும் மேடையில தனித்தனியா உங்க பாடலைப் பாடியிருக்கணும். மொத்தம் மூன்று பாட்டு பாடணும். இப்பப் போய் நல்லா பிராக்டீஸ் பண்ணுங்க. போங்க... போங்க...” என விரட்டினான்.

பட்டென்று எழுந்த முரளி நின்று கொண்டிருந்த பிரேமின் கையைப் பற்றி இழுத்தணைத்துக் காதருகில், “மச்சான், நீ ரொம்ப நல்லவன்டா!” என்று முணுமுணுத்து விட்டு, அவ்விடம் விட்டு ஓடித் தாவிப் படிகளில் ஏறிய வனைப் பார்த்த பிரேம், முரளி செய்த செயலும் பேசிய பேச்சும் புரியாமல் குழம்பி... சென்றவனையே பார்த்தபடி நிற்க, பவானி அவனை அன்று இரவு பயணத்துக்கு ரெடி யாக அழைக்க... தலையை உதறியவாறு உள்ளே சென் றான்.

**ம**றுநாள் மாலை இவர்கள் ரெடியாகும்போது இவாஞ்சலின் வந்து, “பாப்பா! இது தம்பி முதல்ல போட்டு விட்ட கிராஸ் போட்ட செயின். இதைக் கழுத்துல இருந்து

அமெரிக்கா வரும்பொழுது கழட்டி வைச்ச. இன்னும் எடுத்து மாட்டிக்காம இருக்கியே! இந்தா போட்டுக்கோ...” என அவள் கழுத்தில் போட்டுவிட,

அம்மாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிப் போட்டி நடக்கும் இடம் நோக்கிச் சென்றாள்.

முதலில் தனியாகப் பாட இந்து அழைக்கப்பட, பூவெல்லாம் உன் வாசம் படத்தில் வரும் ‘திருமண மலர்கள் தருவாயா’ என்ற பாடலைப் பாடி முடிக்க,

சிறிது நேரத்துக்குப் பின் வந்த முரளி, “இப்ப நான் பாடப் போற பாடல் எனக்கு மிகவும் பிடிக்கும். காரணம் இதில் சொல்லியிருப்பது போலவே என் காதலி இருப்ப தால்...” எனச் சொல்ல, அரங்கம் நிறைய கரகோஷம் எழுந்தது.

“அடி கருப்பு நெறத்தழகி! அடி கருப்பு நெறத்தழகி!
அடி கருப்பு நெறத்தழகி! ஒதட்டு செவப்பழகி!
சில்லறையா செதறிட்டேன்டீ
உன் சிரிப்பில் சில்லறையா செதறிட்டேன்டீ!
உன் குங்கும ஒதட்ட வச்சிக்
குலுங்க சிரிக்கையில
இதழ் ரெண்டும் துடிக்குதடி!
அதைப் பாத்து என் மனசு தவிக்குதடி!
உன் ஒதட்டுக்குச் சொந்தக்காரன்டீ
நான் இன்சூரன்சு பண்ணிருக்கேன்டீ
கட்டுக்கோப்பில் வாழ்ந்தவன்டீ

கட்டுப்பாட்டில் இருந்தவன்டீ
கலைஞ்சது என் தவம்டி
உன்னைப் பாத்து கலைஞ்சது என் தவம்டி!
கூந்தல் அது நீளமில்ல
ஆளும் கூட ஒயரமில்ல
அதான்டி உன் அழகு
என்னை ஆசைப்பட வச்ச அழகு!
ஒல்லியான தேகம் இல்ல
பருமனான பாடி இல்ல
செதுக்கி வச்ச தேர் அழகு
உன்னைத் தேடி வர வச்ச அழகு
பிச்சிப் பூவின் பேரழகு
மொத்தத்தில் நீ தேரழகு
உன்னைப் போல பெண் ஒருத்தி
உலகத்துல பாத்ததில்ல!
உன்னிடத்தில் என்னைத் தந்தேன்டீ
அடி பெண்ணே!
உன்னை விட்டுப் போக மாட்டேன்டி!
காதை மூடும் மாட்டல் இல்ல
தோளைத் தட்டும் தோடு இல்ல
இதான்டி உன் அழகு
உன்னை ஆசைப்பட வச்ச அழகு!
மூக்கு தொடும் முத்துக் கல்லு
காதைக் காட்டும் பச்சக் கல்லு

இதான்டீ உன் அழகு
என்னைத் தேடி வர வச்ச அழகு!
அன்ன நடை உன் அழகு! அதில்
பின்னும் இடை தேர் அழகு
அன்ன நடை உன் அழகு! அதில்
பின்னும் இடை தேர் அழகு
உன்னிடத்தில் என் உயிரை
மொத்தமாக அடகு வச்சேன்
திருப்பிக் கொள்ள வழி இல்லடி
அடி பெண்ணே! திருப்பித் தந்தா
வாங்க மாட்டேன்டி!"

பிறகு இருவரையும் பாட அழைக்க... இருவரும் வந்து சதிலீலாவதி படத்தில் வரும் 'தர்பாரிகன்னடா' ராகத்தில் அமைந்த 'மாருகோ மாருகோ' என்ற பாடலைப் பிசகாமல் பாட... அவர்கள் பாடி முடித்த பிறகு அரங்கமே எழுந்து நின்று கைதட்டியது.

சீஃப்கெஸ்ட்டாக வந்த இசையமைப்பாளர் இருவரையும் பார்த்து, பக்கத்தில் அமர்ந்திருந்த மந்தாகினியிடம் ஏதோ கேட்க, அதற்கு அவர் பதில் சொல்ல...

சரி சரி என்று தலையாட்டியபடியே இருவரையும் பார்த்து, "அந்தப் படத்தில் எப்படி ஒரிஜினல் கம்போஸர் பாடினாங்களோ, அப்படியே பாடியிருக்கீங்க. அதுவும் இந்த மாதிரியான பாட்டுகளை ஓபன் ஸ்டேஜ்ல பாடறது ரொம்பக் கஷ்டம். நீங்க அப்படியே 100% கொடுத்து இருக்கீங்க... வாழ்த்துக்கள்."

ஓட்டெடுப்புகள் மற்றும் ஜட்ஜ் மார்க் எல்லாம் போட்ட பிறகு, மேடை ஏறிய மந்தாகினி ரிசல்ட்டை அறிவிக்க வருமாறு சீஃப்கெஸ்ட்டை அழைத்துவிட்டு,

"எனக்கு வந்த ஒரு செய்தியை உங்கள் எல்லோருடன் பகிர்ந்து கொள்கிறேன். சங்கீத நக்கீரர் என்று சாஸ்திரிய சங்கீதத்தை விமர்சித்து எழுதும் சங்கீத விமர்சகர் இன்று நமக்குள் ஒருவராக அமர்ந்திருக்கிறார்," என்றவுடன், சிறிய பரபரப்பு அங்கு வந்திருந்த சங்கீதத் துறையைச் சார்ந்தவர்களிடம் ஏற்பட்டது.

போட்டி முடிவுகள் அறிவிக்க ஆரம்பிக்கும் முன் மேடையில் சீஃப்கெஸ்ட் பேசிக் கொண்டிருக்க, மேடையின் பின்புறம் கிஸ் குரூப் நிற்க, அதற்கு இடையில் நின்று முரளியும் இந்துவும் பேசிக் கொண்டு இருக்கும்போது ஒரு மாது வர,

அங்கிருந்தவர்கள் "வாங்க கிரேஸி மிஸ்!" கூப்பிட,

அவர் இந்துவைப் பார்த்து, "நீங்க ரெண்டு பேரும் செமி ஃபைனல்ல பாடின 'வாராயோ வெண்ணிலாவே' கேட்டேன். எனக்கு ஒரு டவுட் வந்தது. அதுதான் இந்தக் குரூப்கிட்ட சுபாஷ் போன் நம்பர் வாங்கிப் போன் பண்ணா... நீயே எடுத்த. எனக்கு வந்த டவுட் கிளியர் பண்ணிக்கத்தான் உன்னை முந்தா நாள் மேரி மாதா பாட்டு பாடச் சொன்னேன்.

"அந்தக் குரல் சொல்லிடுச்சும்மா... பன்னிரண்டு வயசுல எங்க ஸ்கூலை விட்டுப் போன சுபபிரியதர்ஷினி தான் நீயின்னு... என்ன தர்ஷினி சரிதானே!"

இந்துவின் குட்டை உடைக்க,

"என்னது... இது நம்ம தர்ஷினியா!" கோரஸாகக் கேட்க, அங்கு ஒலிபெருக்கி மூலம் இவர்களை ஸ்டேஜுக்குக் கூப்பிடவும் சரியாக இருந்தது.

வெற்றி பெற்றவர்களாக இவர்கள் இருவரையும் அறிவிக்க, அதுவரை படபடப்புடன் முரளியிடம் இருந்து இரண்டு ஆட்கள் தள்ளி நின்றிருந்த இந்து, முடிவு அறிவித்தவுடன் வேகமாக முரளியை நோக்கிக் குதித்தபடி ஓட, அவளை அப்படியே முரளி கையில் தூக்கிச் சுற்ற,

"அத்தான் ஜெயிச்சுட்டோம்... அத்தான் ஜெயிச்சுட்டோம்."

அத்தனை நாட்களாக மன இறுக்கத்தில் இறுகி இருந்தவள், எல்லாம் நல்லபடியாக முடிந்த சந்தோஷத்தில் பொதுமேடையிலே அவனை அணைத்துக் கொண்டாள், மனம் நிறைந்த புன்னகையுடன்.

சிறிது நேரம் அமைதியும் பரபரப்பும் தோன்ற, பின் நிலைமை சீரான பிறகு, இவர்களிடம் அந்த ஒரு கோடி ரூபாய்க்கான செக் எழுதியிருக்கும் பேனர் கொடுக்கப்பட,

அதை வாங்கியவள், "இந்தத் தொகை எங்களுக்குச் சொந்தமானது இல்லை. இதை நாங்கள் இருவரும் சேர்ந்து திருநங்கைகளின் சுய நல்வாழ்வு அமையவும், அவ்வாறு இருப்பவர்களுக்குப் பாதுகாப்பான ஒரு இருப்பிடம் அமைக்கவும், அதற்கான முயற்சியில் வெற்றி கண்டு ஒரு ஹாஸ்டல் போன்ற கட்டிடத்தைத் தன் சுய முயற்சியில் எழுப்பிக் கொண்டிருக்கும் பவானி அவர்

களிடம் இதை ஒப்படைக்கிறேன். நாளை பிரஸ் மீட் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கிறேன்," எனச் சொல்லி அங்கு நின்றிருந்த பவானியின் வசம் ஒப்படைத்தனர்.

பவானியும் அவளின் கூட வந்திருந்த சில சகோதரி களும் அதிர்ந்து நிற்க, கரகோஷத்தால் அரங்கம் அதிர, கிஸ் குரூப் அவர்களைச் சுற்றிப் பாதுகாப்பு வளையம் அமைத்துத் தர, தானும் தன் தாயும் தந்தையும் பிறந்த தாய்மண்ணை நோக்கித் தன்னுடைய இணையின் பாது காப்புடன் பறந்தாள்.

## 29

அதிகாலை தங்களின் பரம்பரை இல்லத்தில் பிரேமுடன் நுழைந்தவளை இவாஞ்சலின் அமைதியாக வரவேற்க, அங்கே படங்களின் மூலம் வரவேற்றார்கள் அக்குடும்பத்தின் பெரியவர்கள்.

இவளை எதிர்பார்த்து ஆண்டவர் தோப்பு கிராமமே அந்த வீட்டிற்குள் இருந்தது.

ஊர் முழுவதும் சொந்தக்காரர்கள் எல்லோரும் சூழ்ந்து கொள்ள, அங்கிருந்த தேவசாகரி எல்லோரிடமும் "அவள் கண்ணுல தூக்கம் சொக்குது. போய்க் கொஞ்ச நேரம் தூங்கி எழுந்து வரட்டும். அப்போதான் கல்யா ணத்துல முகம் பளிச்சுன்னு இருக்கும்." தன் கருத்தைக் கூறி அனைவரையும் விலக்க வைத்தார்.

இந்து தன் அம்மாவைப் பார்த்து, "அம்மம்மா... மாமா எங்கேம்மா?" கேட்க,

"அதுவா பாப்பா! அவங்கதான் இப்ப பிள்ளை வீட்டுக்காரங்க. அதனால கல்யாணம் நடக்கப் போற பெரிய வீடான ஈத்தமொழியில இருக்கிறாங்க." இவாஞ்சலின் மறுமொழி சொன்னார்.

அங்கிருந்த பாட்டி ஒருவர், "ஏட்டி! தாலிகட்டு வரைக்கும் நம்ம முறை. அதுக்குப் பிறகு அவங்க முறை யில நடக்குமாடி கல்யாணம்?"

ஊரின் சந்தேகத்தை அவர் ஒருத்தரே வார்த்தை யாக்க,

"அத்தை! முதல்ல கச்சேரிக்காக (நீதிமன்றத்துக்கு) நடந்த கல்யாணம் வெளிநாட்டுல நம்ம முறைப்படி நடந்தது. இப்ப மாப்பிள்ளை வீட்டுப் பக்கம் முறை தான் நடக்கப் போகுது. ஆனா, அந்த அண்ணனுக்கு எப்படின்னு அவங்க வீட்டு முறை தெரியாது. அதனால வைத்தி மாமா வீட்டு வழக்கப்படி நடத்தப் போறாங்க." நடக்க இருக்கும் திருமணத்தைப் பற்றி விளக்க...

"ஏட்டி! மாப்பிள்ளைக்குச் சொந்த ஊர் நம்ம பூதப்பாண்டி பக்கத்துலதானே சொன்னே... பின்னாடி என்னடி கல்யாண முறை தெரியாதுன்னு சொல்றாங்க..." நீட்டி முழக்கி மற்றொருவர் ஆரம்பிக்க...

"சித்தி, மாப்பிள்ளை பையன் அவங்க அப்பா வுக்கு நாற்பது வயசுக்கு மேல பிறந்தவன். அவருக்குப் பதினைந்து வயசுல கல்யாணம் முடிந்து, இருபது வயசில பொண்டாட்டியோட வாழத் தொடங்கின மனுசனுக்குத் தன் கல்யாணம் எப்படி நடந்ததுன்னு ஞாபகம் இல்ல.

"இருந்து சொல்ல வேண்டிய அண்ணி இரண்டு வருஷத்துக்கு முன்னாடி போய்ச் சேர்ந்துட்டாங்க. அது தான் இந்து முறைப்படி செய்யுறாங்க."

தங்கள் பக்க நியாயத்தை விளக்கிவிட்டு, இவாஞ்சலின் தன் மகளை அவளின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

பவானி பெண் அழைக்க வந்து, இந்துவை எழுப்பித் தாங்கள் கொண்டு வந்த புடவை உடுத்தச் செய்து, அலங்கரித்துக் கல்யாணம் நடக்கும் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அதற்கு இந்து முறைப்படியான திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடந்திருந்தன.

பெண்ணிற்குத் தகப்பன் தாயாக வைத்தியநாதனும் கல்யாணியும் அமர, எதிர்ப்புறத்தில் ஸ்டீபனும் அருள் ஜோதியும் மணமகனின் பெற்றவர்கள் இடத்தில் அமர்ந்தனர்.

எல்லாச் சடங்குகளும் நடைபெற்றுக் கொண்டு இருந்தன.

திடீரென்று பதறி எழ முயன்றவளைக் கைப்பற்றி இழுத்து அமரவைக்க முரளி முயல, எழுந்தவள் காலை மடித்துக் கொண்டு முரளியை நெருங்கி அமர,

எல்லோரும் "என்ன என்ன..." என்று பரபரக்க, தான் அமர்ந்திருந்த பலகையில் இருந்து சிறிது தூரத்தில் காட்ட, அங்கே ஒரு பல்லி இருந்தது.

பார்த்த அனைவரும் சிரிக்க... சிலர் துரத்த முனைய...

ஜான்சன் சொன்னான், "அது ரப்பர் பல்லி. யாரோ சின்னப் பசங்க விளையாடக் கொண்டு வந்து தவற விட்டுட்டாங்க. அவ்வளவுதான், நீங்க நல்லா உட்காரலாம், அண்ணாவை விட்டுத் தள்ளி...."

வெட்கத்துடன் தள்ளி அமர்ந்தவள் கழுத்தில் குலவையும் கெட்டிமேளமும் இணைந்து ஒலிக்க, முதலில் கயிற்றில் இணைத்த இந்து முறை தாலியும், அதன் பிறகு கிறிஸ்துவ முறையில் தாலி கோர்க்கப்பட்ட செயினையும் அணிவித்து, உற்றமும் சுற்றமும் சூழ இந்துவைத் தன் மனைவியாக்கிக் கொண்டான் முரளி.

தாய்மாமன் சுருள் பணம் வைத்து முடித்தவுடன்...

"சுருள் பணம் வைக்க நாத்தனார் இருக்கிறார்களா?" என்று கேட்க...

ஹரிஹரன் பவானியை அழைத்து, "நாத்தனார் சுருள் பணம் கேட்கறாங்க பாரு... வை!" என்று சொல்ல,

"நானா?"

"ஏம்மா! நீதானே முரளிக்கு அக்கா. போ... போய் திருநீறு பூசிப் பணத்தைக் கொடுத்து ஆசிர்வாதம் செய்."

'உடன் பிறந்தவர்கள்... ஏன் பெற்றவள் கூட தான் திருநங்கையானவுடன் தன்னை ஒதுக்கி வைத்தது மட்டுமல்ல... தன்னை உறவு என்று சொல்லக் கூட விரும்பவில்லை. ஆனால் ரோட்டில் ஒரு சந்தர்ப்பத்தில்

திருநங்கை என்று சந்தித்த தன்னை வாய்மொழியாக உறவு என்று சொல்லாமல் செயல்களாலும் அதைச் செய்த ஹரிஹரனையும் முரளியையும் நினைக்கப் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்ந்தவர்... கண்கள் கலங்க மணமக்களின் அருகில் சென்று வாழ்த்த,

அதைப் பார்த்த பிரேம், "பவானிக்கா! நாங்க தான்... இந்து எங்க வீட்டில் இருந்து உங்க வீட்டுக்குப் போகப் போறதை நினைத்துக் கண்கலங்குவோம். ஆனா இங்க தலைமாத்தி நடக்குது...".கிண்டலடிக்க,

அதைப் பார்த்த இந்து பவானியின் கையைப் பிடித்து, "அக்கா! கவலையே படாதீங்க. நான் உங்க தம்பியைக் கண்கலங்காமப் பார்த்துக்கிறேன். ஆனா வெங்காயம் வெட்டும்போது கண்கலங்கினா என்னைக் குத்தம் சொல்லக் கூடாது."

சமாதானம் செய்வது போல் இவள் பங்கிற்குக் கிண்டலடித்தாள்.

"அடி..." என்று சிரித்தபடியே கையை லேசாக உயர்த்த,

முரளி உரக்கச் சிரித்து, "அக்கா, என்னோட பழைய தர்ஷினி திரும்பிட்டா அக்கா!" இந்துவை அணைத்தப்படி கூறினான்.

எல்லா நிகழ்வுகளும் முடிந்தபின் பிரேம், இந்து - முரளியின் அருகில் வந்து, "மாமா, கல்யாணத்துக்கு ஒரு பல்லி போதும். முதல் ராத்திரிக்கு ஒரு டஜன் பல்லி

போதுமா?" என்று மெல்லிய குரலில் இவர்கள் இருவர் மட்டுமே கேட்கும்படி முணுமுணுக்க,

"அடப் பாவி! நீதானா இந்த வேலையைச் செய்தது? இருடி, உனக்கும் கல்யாணம் நடக்குமில்ல. நிஜ நல்ல பாம்பையே முதலிரவு அறைக்குள்ள விடறேன்," எனப் பதிலுக்கு இந்து பிரேமிடம் அவன் சொன்ன குரலிலேயே சொல்ல...

"யம்மா தங்கச்சி! நான் அப்பிராணிம்மா. எல்லாம் உன் அத்தான்... அதுதான் என்னோட மாமாவின் ஐடியா தான். அடப்பாவி சொல்றதா இருந்தா இங்க சொல்லாதே, அங்க சொல்லு!" பிரேம் பதிலளிக்க...

இந்து இரு கைகளையும் இடுப்பில் ஊன்றிக் கொண்டு, இருவரையும் பார்த்து முறைக்க, "இவன் சொல்றதை நம்பாதே குடியா! அவன் பொய் சொல்றான்," எனக் கெஞ்சத் தொடங்கிய முரளியின் காதில்,

"முந்தா நேத்திக்கு ராத்திரி என்ன சொன்ன... மாமா, மச்சான் நீ ரொம்ப நல்லவன்டா. இப்ப பாத்த இல்ல இந்த மச்சானோட வேலையை!"

கிசுகிசுத்து விட்டுச் சிறிது சத்தமாக, "ம்ம்... ரெடி, ஸ்டார்ட் மாமா! உக்கி போட ஆரம்பிங்க. பாப்பா, மாமா போடும் உக்கியை நீ எண்ணுகிறாயா... இல்லை நான் எண்ணட்டுமா?"

"அடிங்க... முதல்ல நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து உன் எலும்பை எண்ணுறோம்."

இருவரும் அவனின்மீது பாய, அவர்களிடமிருந்து தப்பி வேகமாக ஓடினான் பிரேம்.

**பி**ரஸ் மீட் நடக்கும் ஹாலின் வெளியில், எல்லா பிரஸ் மற்றும் மீடியா ரிப்போர்டர்களும் குழுமியிருக்க, எம்.டி. அறையின் உள்ளே அமர்ந்திருந்த இந்துவும் முரளியும் அங்கே பிரஸ் மீட் வைக்கும் இடத்தில் நடப்பவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"ஹலோ மணி! என்னப்பா உங்க ஓனர் மகனுக்கு இன்னிக்குக் காலையில ஊர்ல கல்யாணம். ராத்திரி இங்க ரிசப்ஷன். எல்லாப் பத்திரிகையிலும் அரைப் பக்கத்துக்கு ஃபிரண்ட் பேஜ்ல விளம்பரம் கொடுத்து இருந்தாங்க. நீங்க ரிசப்ஷன் ஹாலுக்குப் போகலையா? இங்க இருக்கீங்க!" என சக பத்திரிகையாளர் ஒருவர் ஹார்ட் பிட் ஆஃப் இந்தியா பத்திரிகையின் நிருபரைக் கேட்க,

இவரைச் சுற்றியிருந்தவர்கள், இவர் என்ன சொல்லப் போகிறார் எனப் பார்த்தனர்.

"அதைவிட இங்க இருக்கிற நியூஸ்தானே முக்கியம். நேத்திக்கு வரைக்கும் ஒண்ணுமேயில்லைன்னு சொன்ன முரளிகிருஷ்ணனும் இந்திரா பிரியதர்ஷினியும் மேடையில் ஒட்டிக்கிட்டு இருந்ததைப் பத்தி ஏதாவது சொல்றாங்களா... கிடைச்ச மொத்தப் பணத்தையும் திருநங்கைகள் நல்வாழ் விற்காகக் கொடுத்தது ஏன்னு தெரிஞ்சுக்கணும்...

"இப்ப எங்க பத்திரிகையின் சில பிராஞ்ச்லேயும் ஒருத்தரோ இல்ல இரண்டு திருநங்கைகள் இருப்பாங்க. அதுவும் மும்பையில பதினைந்து பேர் இருக்காங்க.

அதுவும் இந்த முரளிகிருஷ்ணன் பையன் எங்க பத்திரிகை நிருபர்தானே! இப்பவே எங்க அசிஸ்டண்ட் எடிட்டர் சொல்லி அனுப்பிச்சு இருக்கார். இந்தப் பையனுக்கும் அந்தப் பொண்ணுக்கும் லவ்னா... அதைப் பத்தி ஒரு ரொமான்ஸ் கட்டுரை எங்களுக்குத்தான் முதல்ல கொடுக்கச் சொல்லணும்."

"அப்ப எப்பதான் நீ ரிசப்ஷனுக்குப் போவே?" மற்றொருவர் கேட்க...

"இந்த முரளிப் பையன் எப்படி இருந்தாலும் போவான். அவன்கூட தொத்திக்க வேண்டியதுதான்!" சிரித்துக் கொண்டே சொல்ல,

சிறிது நேரத்தில் பிரஸ் மீட் ஆரம்பமாகியது.

அதில் மீடியாக்கள் கேள்வி கேட்கும் முன்னரே இந்து, "நான் ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சிக்குப் பாட வந்த காரணம் நிறைவேறிடுச்சு. பவானிதான் முரளியோட அக்கா. முரளிகிருஷ்ணன்தான் என்னோட அத்தான். சில பல காரணங்களுக்காக இதை வெளி யில சொல்லலை. பவானி தன்னைப் போல இருக்கும் திருநங்கைகளுக்கு இங்கே ஒரு ஹாஸ்டல் கட்டுறாங்க. அது எதுக்குன்னா திருநங்கைகள் என்று தெரிந்தவுடன் தெருவில் துரத்தப்படுபவர்கள் சமூகவிரோதிகள் கையில் சிக்கிப் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகி, அந்தத் தொழி லில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

"அந்த திருநங்கைகளும் அதில் இருந்து மீண்டா லும், நம்ம சமுதாய மக்களோடு ஒன்றாக முடியலை.

அதைவிட அவர்களுக்கு எந்தவிதமான எதிர்காலமும் இல்லை. உடலில் வலு போனபின் பாலியல் வியாதியால் பீடிக்கப்பட்டு துன்பப்படுகிறார்கள். சிலர் வெளியே வந் தாலும் நிரந்தர வருமானம் உள்ள தொழில்கள் அவர் களுக்கு இல்லை.

"அதற்குக் காரணம் சிறு வயதில் தடைப்பட்ட படிப்பு, மற்றும் திறமைகள் இருந்தும் அதைச் சரிவர பயிற்சி செய்ய முடியாமல் ஏற்படும் நிலை, திருநங்கைகள் என்று உணர்ந்தவுடன் வீட்டை விட்டு வெளியேறும் பதின்ம வயது திருநங்கைகள் தங்க பாதுகாப்பான இடமும், படிக்க வசதியும் தரும் இடம்தான்... பவானியும் அவர்களைச் சேர்ந்த சகோதரிகளும் தற்பொழுது கட்டிக் கொண்டிருக்கும் ஹாஸ்டல். அதில் பயிலும் திருநங்கைகளின் நடைமுறைச் செலவுகளுக்காகத்தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது."

ஒரு நிருபர் எழுந்து, "உங்களுக்கும் பவானி என்ற திருநங்கைக்கும் என்ன உறவு?"

"பிறப்பால் எந்த உறவும் இல்லை. ஆனால் என்னு டைய பன்னிரண்டாவது வயதில் இருந்து என்னை வளர்த்தவள், ஒரு தாய்க்கு நிகரானவள். எனக்காகத் தன்னை வருத்திக் கொண்டவள். தன்னுடைய குரல் கொஞ்சம் ஆணின் குரலாக இருக்கிறது என்ற காரணத் திற்காக தொண்டையில் ஆபரேஷன் செய்து அந்தப் புண்ணுடன் ஸ்பீச் தெரப்பியும் செய்தவங்க...

"என்னுடைய வளர்ச்சிக்காக அவர்களைச் செதுக்கிக் கொண்ட சிற்பி... என் அம்மா எனக்காகப் பட்ட கஷ்டத்தை

விட அதிகக் கஷ்டத்தை அனுபவித்தவள். நான் இவர்களை வயிற்றில் பிறக்காவிட்டாலும், என்றும் இந்தத் தாயின் மடியில் சேர்ந்த மலர் என்று சொல்வதில் பெருமையடைகிறேன்."

மற்றொருவர் எழுந்து, "முரளிகிருஷ்ணன்! உங்களிடம் ஒரு கேள்வி. எப்போ கல்யாணம்?"

"ஏங்க.. ஒரே பொண்ணை எத்தனை தடவைங்க கல்யாணம் பண்ணிக்கிறது! இங்க பாருங்க..." என்று சொல்லி புரொஜக்டரை ஆன் செய்ய, அதில் இவர்களின் இன்று காலையில் அனைத்துப் பத்திரிகையிலும் வந்திருந்த கல்யாண அட்ஸ் வந்தது... பின் கிளிப்பிங் மாற, அதில் இருவருக்கும் அமெரிக்காவில் நடந்த திருமணமும், அன்று காலையில் நடந்த திருமணமும் காட்டப்பட... தி கிரேட் கேசவ் சுப்பிரமணியம் ஒரு சாதாரண நிருபராகத் தங்களிடையே சுற்றியது வந்திருந்த பத்திரிகையாளர்களைத் திகைப்படையச் செய்தது.

"முரளி, உங்க எல்லோருக்கும் இன்னொரு விஷயமும் சொல்லிடுறேன். மணி, நீங்க நம்ம பத்திரிகையில் சங்கீத விமர்சனம் எழுதும் நக்கீரரைப் பார்த்து இருக்கீங்களா?" எனக் கேட்க...

மணி வாயைத் திறக்காமல், 'இல்லை' என்று தலையாட்ட, "இதோ இந்த இந்திரா பிரியதர்ஷினி என்கிற சுபபிரியதர்ஷினிதான் அந்தப் பெயரில் எழுதி வருகிறார்" எனச் சொல்ல, ஃபிளாஷ்கள் மின்னின.

"எனிமோர் குவஸ்டின்?" என பிரேம் கேட்க,

ஒருவர், "ஆமாம் இருக்கிறது. இந்த ஹோட்டலின் ஓனராக இவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இது இவ் வளவு நாட்களாக எக்ஸ் மந்திரி நவநீதத்தின் கையில் தானே இருந்தது. எப்பொழுது உங்கள் கைக்கு மாறியது?" கேள்வியினை வீசினார்.

இந்து கேட்டவரைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்து விட்டு, "எங்கப்பாவோட திடீர் இறப்பால் எங்கம்மாவுக்குச் சித்த சுவாதீனம் இல்லாம ஆயிடுச்சு. வயசான தாத்தா வால இதைத் தனியாப் பார்க்க முடியாது என்கிற காரணத் தினால் என்னுடைய திருமணம் முடியும்வரை நவநீதத் துக்கு லீஸுக்கு விட்டு இருந்தார். என்னுடைய திருமணம் முடிந்தவுடன், அதை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்த, நவநீதமும் இதை என்னிடம் கொடுத்துவிட்டு விலகி விட்டார்."

"அப்போ நீங்க இங்கே இருந்து இந்த ஹோட்டலை ஏற்று நடத்தப் போகிறீங்களா?" அடுத்த கேள்வி வர...

"இல்லீங்க... ஒரு பத்து வருஷத்துக்கு இதை ஒரு ஐந்து பேர் கொண்ட குழுகிட்ட இந்த ஹோட்டலை நிர்வகிக்கக் கொடுத்திருக்கிறோம். அந்தக் குழு உறுப் பினர்கள், எங்கள் ஹோட்டலின் போர்ட் ஆஃப் டைரக் டர்கள், அதன் பிறகு நான் இதன் எம்.டி. பொறுப்பை ஏற்றுக்கொள்வேன்" பொறுமையாகப் பதிலளித்தாள்.

ஒரு நிருபர், "சரிங்க. அந்தப் பத்து வருஷம் நீங்க என்ன செய்யப் போறீங்க?"

முரளி அதற்கு, "புதிய எம்.டி.களை உருவாக்கு வோம்." கிண்டலாகப் பதிலளிக்க...

வந்திருந்த பத்திரிகையாளர்கள் அனைவரும் சிரித்துக்கொண்டே வாழ்த்து சொல்லி விடை பெற்றனர்.

ரிசப்ஷனிலும் முரளி, இந்துவின் உற்சாகம் கரை புரண்டு இருந்தது,

நாட்டில் உள்ள முக்கியப் பிரமுகர்களும், திரை உலகமும், பத்திரிகை உலகின் ஜாம்பவான்களும், அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர்.

இவர்களின் கிஸ் குரூப்பில் இருந்த அனைவரும் மற்றும் ஜோடியாகப் பாடுங்கள் நிகழ்ச்சியில் பங்குபெற்ற சக போட்டி பாடகர்கள் ஐம்பது பேரும் சேர்ந்து ஹார்ட் பீட் ஆஃப் இந்தியா பத்திரிகையில் பணிபுரிபவர்களுடன் கை கோர்த்து, தங்கள் வீட்டுத் திருமணம் போல ஓடியாடி வேலைகள் செய்தது... இவர்களின் மீது வைத்திருந்த நட்பின் திண்மையை எடுத்துரைப்பதாக இருந்தது.

ரிசப்ஷன் மேடையில் ஒரு மூத்த சக பத்திரிகை எழுத்தாளர் முரளியிடம், "தம்பி! உன்னோட எழுத்தை எல்லாம் நல்லா எழுதுற. நான் சொல்ற தலைப்புல ஒரு புத்தகம் எழுது. 'ஹஸ்பெண்ட் இஸ் எ பாஸ் ஆஃப் தி ஹவுஸ்' நல்லா இருக்கும்..." என்று சொன்னவுடன்,

அவரைப் பார்த்து இந்து, "அங்கிள், இவருக்கு ஃபிக்சன் அண்ட் காமெடி எல்லாம் எழுத வராது அங்கிள்" என்றவுடன், அந்தப் பத்திரிகையாளர் உட்பட பட்டென்று சிரிக்க,

முரளி நிலையோ அங்கே அந்தோ பரிதாபமாக இருந்தது.

ரிசப்ஷனில் தன் நட்புகளோடு பேசிக் கொண்டு இருக்கும்போது, “குடியா, ஏன் அந்த அங்கிள்கிட்ட அப்படிச் சொன்ன?”

முகத்தைச் சாதுவாக வைத்துக் கொண்டு முரளியைப் பார்த்து, “சிடுமூஞ்சி சிக்கந்தர் சிங்கான உங்களைக் குஷ்வந்த் சிங்காக மாத்த முயற்சி பண்ணினா என்னால எப்படி அத்தான் பொறுக்க முடியும்?” எனத் திருப்பிக் கேட்டாள்.

அங்குக் கூடியிருந்த நட்புவட்டம் முரளியின் தோளில் தட்டிச் சிரிக்க... ரமணன், “டேய்! அவ அவளோட பத்து வயசுல இருந்து உன்னைப் போட்டுத் தாக்க ஆரம் பிச்சதை இன்னும் முடிக்கலை போல... அனுபவி ராஜா அனுபவி” எனச் சொல்ல, மீண்டும் சிரிப்பலை எழுந்தது.

அலைகளற்ற கடல்நீரில் இரண்டு பக்கமும் பசுமையான தாவரங்களைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு மெதுவாக அசைந்து, அமைதியாகப் படகு வீடு சென்று கொண்டிருக்க, அதில் ஜன்னல் அருகே முரளியின் கால்களுக்கிடையே அமர்ந்து அவனின் அணைப்பில் இருந்தாள் இந்து.

இருவரும் அவர்களின் ஆலப்புழை பக்கம் இருந்த அவர்களின் ஹோட்டலுக்குச் சொந்தமான ஹனிமூன் படகு வீட்டில் தங்களுடைய ஹனிமூனைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

“குடியா, இப்ப இந்த மாதிரி ஒரு சீனரி பார்க்கும் போது உனக்கு என்ன பாட்டு ஞாபகத்துக்கு வருது?” ஆர்வமாகக் கேட்க,

அமைதியான நதியினிலே ஓடம் - ஓடும்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்

எனப் பாடியவளின் வாயை அவசரமாகக் கையை வைத்து மூடியவன்...

"இப்படியான பாட்டைப் பாடுவாங்க இப்ப... நல்ல ரொமாண்டிக் சாங் பாடுவேன்னு பார்த்தா... உனக்குத் தெரியாத ரொமான்ஸ் சாங்கா? அதுல இருந்து ஏதாவது பாடும்மா."

அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு,

நெஞ்சினிலே நெஞ்சினிலே ஊஞ்சலே
நாணங்கள் என் கண்ணிலே

எனப் பாடத் துவங்க, நாலு வரி பாடியவுடன்... அவன் அவள் உடலில் கைகளால் சேட்டை செய்யத் துவங்க,

"இதோ பாருங்க முரளி! நீங்க இப்படிப் பண்ணினா நான் பாட மாட்டேன்... சொல்லிட்டேன். இப்பத்தான் ஃபைனலுக்குப் பிராக்டிஸ் பண்றோம். வெளியில எல்லோர்கிட்டேயும் சொல்லிட்டு, ரொமான்ஸ் பண்ணீங்க... இப்ப இங்க பாடச் சொல்லிட்டு இப்படிப் பண்றீங்களே!" எனப் போலியாக அலுத்துக் கொண்டாள்.

"ஹேறு! நாம புதுமணத் தம்பதிகள்டா. நாம் எல்லாம் இப்படித்தான் பண்ணணும். அப்படி பண்ணலைன்னா தான் தப்பு!" என விளக்கம் வாய் சொல்ல, கைகள் அது செய்ய வேண்டிய வேலைகளைச் செவ்வனே செய்யத் துவங்கின.

இந்து அதைத் தடுப்பது போல பாவ்லா காட்டிய படியே, "முன்னாடி எல்லாம் நான் கிட்ட வந்தாக் கூட கண்ணியமா இருக்கிற முரளியா நீங்க?"

"முன்னாடி எல்லாம் நீ பக்கத்துல இருக்கும்போது கை கட்டிக்கிட்டு சும்மா இருக்கணுமேன்னு இருப்பேன், ஆனா என் மனசுக்குள்ள என்ன ஓடும் தெரியுமா? இங்க வா சொல்றேன்."

இந்துவைப் பக்கத்தில் இழுத்து அணைத்து, அவள் காதில் அப்பொழுது மனதில் தோன்றிய எண்ணங்களை எல்லாம் வார்த்தைகளால் சொல்லச் சொல்ல...

அதைக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு வெட்கமும் கூச்சமும் தோன்றி, அது உடல்மொழியாக வெளிப்பட்டு முரளியை விட்டு விலகிச் செல்ல எத்தனித்தவளை விடாது அவன் தன் கைகளுக்குள் கொண்டு வர முயல, "ச்சீ, நாட்டி பாய்'' என இந்துவின் உதடுகள் சொற்களை உதிர்த்தது.

"ஒவ்வொரு ஆம்பிளையும் அவனோட மனைவி கிட்ட மட்டும் நாட்டி பாயாத்தான் இருக்கணும். இல்லாட்டா அவன் நாஸ்டி பாய். நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி தான் நான் உன்கிட்ட அம்பி மாதிரி இருந்தேன். ஆனா கல்யாணத்துக்குப் பிறகு உன்கிட்ட ஒரு ரெமோவா இருக்கேன் பாரு... அதுதான் டூப்பு, இதுதான் ஒரிஜினல். இனிமே இந்த முரளியை ஒரு ரெமோவா தான் பார்ப்பே" எனச் சொல்லியவன், அவளைத் தூக்கிச் சென்று படுக்கை மேல் விட்டு அத்துமீறத் துவங்கினான்.

"ம்ம்... என்ன முரளி இது! அரைமணி நேரத்துக்கு முன்னாடி நூறு ப்ளீஸ் போட்டு வேண்டியதை வாங்கி யாச்சு. இப்பவும் உடனேவா! கொஞ்ச நேரம் சும்மா இருந்து வெளியில் வேடிக்கை பார்க்கலாம்."

"வேடிக்கைதானே! எடுத்த வேலையை முடிச்சுட்டு பார்க்கலாம். இப்ப நீ பேசாம இரு" என்று சொல்லியபடியே தன்னுடைய காரியத்தில் முன்னேறத் துவங்கியவன்... திடீரென்று இந்துவை விட்டு இரண்டு அடி தள்ளி எழுந்து அமர்ந்தான்.

அவசரமாக ஆரம்பித்தவன் அமைதியான காரணம் புரியாமல் இந்து விழிகளால், 'என்ன' என்று கேட்க,

"உன் கழுத்துல இருக்கிற கிராஸ்சை அமெரிக் காவுக்குப் போகும்போது கழட்டி வைச்ச நீ எப்ப எடுத்துத் திருப்பி மாட்டின?" எனக் கேட்க,

இவன் எதற்கு இப்போது இந்தக் கிராஸ் சங்கிலியைப் பற்றி விசாரிக்கிறான் என்ற யோசனை யுடன்...

"நாம ஜோடியாகப் பாடுங்கள் ஃபைனல் நிகழ்ச் சிக்குக் கிளம்பும்போது அம்மாதான் முதன்முதல்ல நீங்க போட்டதுன்னு சொல்லி போட்டு விட்டாங்க."

"போ, சரிதான் கெட்டது குடி" என்று சொல்லித் தலையில் கை வைத்து முரளி அமர...

"கிராஸ் செயினால என்ன பிரச்சனை வந்தது? சொல்லுங்க முரளி" இந்து அவனை வற்புறுத்த,

முரளி அவள் கழுத்தில் இருந்து அந்தச் செயினைக் கழற்றி கிராஸ்ஸைத் தனியாகப் பிரித்து அதை ஓபன் செய்தான்.

கிராஸின் முன்பக்கம் சிவப்புக்கல் போல் இருந்தது, காமிராவின் லென்ஸாக இருக்க, உள்ளே மைக்ரோ கேமிராவும் அது இயங்க பாட்டரியும் இருந்தது.

“குடியா... நான் இந்தக் கேமிராவை வைத்தது பிரேம், பவானிக்கா, அப்பா, வைத்தி மாமாவுக்குத் தெரியும். உன்னோட பாதுகாப்புக்காகத்தான் அதைச் செய்தோம். இது உன்னோட போன்ல இருக்கிற விஃபி மூலமாக கனெக்ட் ஆகும். இதுல எடுக்கப்பட்ட படங்கள் நேரடியா என்னோட லேப்பி மூலமா ஐபாட்ல இருக்கிற மெமரி கார்டுல ஸேவ் ஆகும்.

“இதுக்காகத்தான் ராத்திரி கழற்றி வைச்சுக் குளித்த பிறகு போடச் சொன்னது... இப்ப புரிஞ்சுதா! நான் ஏன் தலையில கை வைச்சேன்னு...” என இந்துவைப் பார்த்துக் கேட்க, அவளுக்கு ஏற்பட்ட கூச்சத்தினால் தலையைக் குனிந்து கொண்டு தலையாட்டினாள்.

மீண்டும் சரியாக அந்த கிராஸ்ஸை சரி செய்தவன் அதைச் செயினில் மாட்டி வெளியே எடுத்துச் சென் றவன்... சிறிது நேரத்தில் திரும்பினான்.

“குடியா, அந்தச் செயினை இங்க டைனிங் ஹால்ல இருக்கிற ஜீசஸ் படத்துல போட்டுட்டேன். திரும்பிப் போகும் போது எடுத்துக்கலாம்,” என்று சொல்லிவிட்டு விட்ட இடத் தில் இருந்து வேலையைத் தொடர்ந்தான் முரளி.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு சென்னையில் வந்திறங்கியவர்களை வரவேற்ற பிரேம், “ஏன் மாமா, ஒரு மாசம்னு சொல்லிட்டு பதினைந்து நாள்ல வந்திட்ட?”

“ம்ம்... உன் தங்கைக்கு ஸீ சிக்னஸ். ஒரே வாந்தி. அதனாலதான் திரும்பிட்டோம்” என்று சொல்லியவன்...

அங்கு சோபாவில் அமர்ந்திருந்த தன் அப்பாவிடம் தங்களின் அலுவலகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்க....

சிறிது நேரம் கழித்து அங்கே வந்த பவானி... ஹரிஹரனைப் பார்த்து, “ஐயா! நீங்க தாத்தாவாகப் போறீங்க...” என்றாள்.

“அப்பபடியா! ரொம்ப சந்தோஷம், எப்படிம்மா தெரியும்? டாக்டர் யாரும் வரலையே...! இன்னிக்கு ஈவினிங்தானே டாக்டர் அப்பாயிண்ட்மென்ட் வாங்கி யிருக்கு?”

“இந்துவுக்குச் சுரம் மாதிரி உடம்பு சுடுது. ஆனா முகத்துல சுரத்துக்கான வேதனையில்ல. முகம் பளபளப்பா இருக்கேன்னு சந்தேகப்பட்ட பாட்டி அவகிட்ட கேட்டும் பிரக்னென்சி கிட் வாங்கி டெஸ்ட் பண்ணினோம். பாசிடிவ் வந்தது.” மகிழ்ச்சியுடன் சொல்ல...

முரளி இந்துவைப் பார்க்க... அவள் அறைக்கு வேகமாகச் செல்ல... அங்கு தன் தாயின் மடியில் ஒரு மலர் போல் கிடந்தாள்... பன்னிரண்டு வருடங்களுக்கு முன் தாயின் மடியிலிருந்து விலகிச் சென்ற அந்த மலர்... தன் மகவை மடி தாங்கி தன் தாயின் மடி சேர்ந்திருந்தது.

முரளியிடம் தன் வாழ்த்தைச் சொன்ன பிரேமின் காதில் ஏதோ பதில் சொன்ன முரளியைப் பார்த்து, "ஏன் மாமா! என்னைப் பார்த்து அப்படி ஒரு கேள்வி கேட்ட? நான் உனக்கு ஃபிரெண்ட், ஒரு முறைக்கு மச்சான், வருங்கால உங்க கம்பெனிக்கு எல்லாம் லீகல் அட்வைசர், போர்ட் ஆஃப் டைரக்டர்களில் ஒருவன்.... இவ்வளவு பதவி வகிக்கிற என்னைப் பார்த்து எப்படி மாமா இப்படி ஒரு கேள்வியைக் கேட்ப!"

"அப்படி என்னதான் அண்ணா... அத்தான் உங்க கிட்ட கேட்டாரு, சொல்லுங்க. நான் கண்டிக்கிறேன் அவரை!" இந்து வாக்குக் கொடுக்க,

"மாமா, எனகிட்ட கேட்கிறாரு... எம்.டி-களை உருவாக்கப் போறோம்னு அன்னிக்குப் பிரஸ் மீட்ல சொல்லிட்டேன்... மொத்தம் எங்களுக்கு எத்தனை கம்பெனி இருக்கு? அதுக்கு நாங்க இன்னும் எத்தனை எம்.டி-களை உருவாக்கணும்னு கேட்கிறான்ம்மா..." என இழுத்தபடி பிரேம் சொல்ல,

தன் தாயின் மடியில் சோர்ந்து படுத்திருந்தவள் வாய் விட்டு மலர்ந்து சிரிக்க... அந்த மலரின் சிரிப்பு சூழ்ந்திருந்த சொந்தங்களின் முகத்திலும் பிரதிபலித்தது.

தாய் மடியில் சேர்ந்த மலர்... இனி இதுபோல் என்றும் சந்தோஷமாக இருக்கட்டும் எனச் சொல்லி வாழ்த்தி விடைபெறுவோம்.


தாய்மடி சேர்ந்த
மலர்
ராதா கிருஷ்